Aṣṭādaśarahasyaṅkaḷ of
Piḷḷailōkācārya

78

G. Raghuraman,

Native High School

[illegible].

Kumbakonam

XIV B

56

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸாஸ்த்ரஜந்ய யோகஜந்ய ஜ்ஞாநங்களைவிட

அதிஸயித்த பகவத்ப்ரஸாத ஜந்யஜ்ஞாநமுடைய

ஆழ்வாருடைய அபராவதாரராய்

அவர்

திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாக

ஈடு முப்பத்தாறாயிர மருளிச்செய்த

ஸ்ரீநம்பிள்ளை திருவருளால்

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருக்குமாரராய்

திருவவதரித்த தேவப்பெருமாளுடைய அபராவதாரரான

ஸ்ரீபிள்ளைலோகாசாரியர்

திருவாய்மலர்ந்தருளிய

அஷ்டாதஸ ரஹஸ்யங்கள்.

இவை

பெருமாள்கோவில் - ஸ்ரீமத். பரமஹம்ஸ

பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீமான் - வாதிகேஸரி

அழகிய மணவாள ராமானுஜஜீயர் ஸ்வாமிகளால்

அனேக ஸ்ரீகோஸங்களைக்கொண்டு

பரிசோதிக்கப்பட்டு,

காணை - நம்பெருமாள்நாயுடு அவர்கள்

பெருதவியால்

சென்னை:

ஸிட்டி முத்ராக்ஷர ஸாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1904.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

முமுக்ஷுப்படி.

ரஹஸ்யத்ரயம்.

தனியன்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே,
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:.

லோககுரும் குருபிஸ்ஸஹபூர்வை: கூரகுலோத்தமதாஸமுதாரம்,
ஸ்ரீநகபத்யபிராமவரேசம் தீப்ரசயம் வரயோகிநமீடே. †

கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாசர்
தீதில்திருமலையாழ்வார் செழுங்குரவைமணவாளர்
ஓதரியபுகழ் * த்திருநா வீறுடையபிரான்தாதருடன்
போதமணவாளமுனி பொன்னடிகள்போற்றுவனே.

ஜீயர் திருவடிகளே சரணம்

(*)

திருமந்த்ரப்ரகரணம்.

முமுக்ஷுவுக் கறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று. அதில் ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம். திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப்போரும்படி ப்ரேமத்தோடே பேணி யநுஸந்திக்கவேணும். மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்குள் ளீடான வஸ்துவிலும், மந்த்ரப்ரதனை

† தீப்ரசயானகுருஞ்சபஜேஹம் என்றும் பாடாந்தரம்.

* புகழ்நாவீறுடையபிரான் என்றிருப்பின் செப்பலோசைமிகாது. சில ஸ்ரீகோசங்களிலும் இப்படியிருக்கின்றன.

வாசார்யன்பக்கலிலும், ப்ரேமங் கநக்க வுண்டானால் கார்யகரமாவது, ஸம்ஸாரிகள் தங்களையும், ஈஶ்வரனையும் மறந்து, ஈஶ்வர கைங்கர்யத்தையுமிழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே, ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேஶ்வரன் தன் க்ருபையாலே, இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய், நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான். ஶிஷ்யனாய் நின்றது, ஶிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டாரறியாமையாலே அதனை யறிவிக்கைக்காக ஸகல ஶாஸ்த்ரங்களாலும், பிறக்கும் ஜ்ஞானம் ஸ்வயமார்ஜிதம்போலே, திருமந்த்ரத்தாற் பிறக்கும் ஜ்ஞானம் பைத்ருக தனம்போலே ஸமவங்மந்த்ரங்கள் தான நேகங்கள். அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்று மிரண்டுவர்க்கம் அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றுமஶ்ரேஷ்டங்கள் இவைமூன்றிலும் வைத்துக்கொண்டு பெரியதிருமந்த்ரம் ப்ரதானம் மற்றைய விரண்டுக்கும் அஶிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியுமுண்டு. இத்தை வேதங்களும் ருஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பினார்கள். வாச்யப்ரபாவம்போலன்று வாசகப்ரபாவம். அவன் தூரஸ்தனானாலுமிது கிட்டிநின்றுதவும். த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே. சொல்லுங் க்ரமமொழியச் சொன்னாலுந் தன் ஸ்வரூபங்கெட நில்லாது. இதுதான் (குலந்தருமென்கிறபடியே) எல்லா வபேக்ஷிதங்களையுங் கொடுக்கும் ஐஶ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக்கொடுக்கும். கர்மஜ்ஞாந பக்திகளிலே யிழிந்தவர்களுக்கு விரோதியைப்போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும். ப்ரபத்தியிலே யிழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும். (மற்றெல்லாம்பேசிலும்) என்கிறபடியே, அறியவேண்டு மர்த்தமெல்லா மிதுக்குள்ளேயுண்டு. அதாவது அர்த்தம். பூர்வாசார்யர்கள் இதில் அர்த்த மறிவதற்குமுன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள். இதிலர்த்தஜ்ஞாநம் பிறந்தபின்பு (பிறந்தபின் மறந்திலேன்) என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றாற் காலக்ஷேபம்பண்ணியறியார்கள். வாசகத்திற் காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி, ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை. இது தன்னிற் சொல்லுகிற அர்த்தம், ஸ்வரூபமும் - ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும், ஸ்வரூபமும் - உபாயமும் - பலமுமென்னவுமாம். பலமிருக்

கும்படி ப்ரமேயசேகரத்திலும், அர்ச்சிராதிகதியிலுஞ் சொன்னோம். இதுதான் எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாயிருக்கும். மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது. அதாவது, சேஷத்வமும் - பாரதந்த்ர்யமும் - கைங்கர்யமும். இதில் முதற்பதம் ஏகாக்ஷரமான ப்ரணவம். இது, அ - என்றும், உ - என்றும், ம - என்றும், மூன்று திருவக்ஷரம். மூன்றுதாழியிலே தயிரை நிறைத்துக்கடைந்து வெண்ணெய் திரட்டினாற்போலே மூன்றுவேதத்திலும், மூன்றக்ஷரத்தையு மெடுத்தது. ஆகையாலிது ஸகலவேதஸாரம். இதில் அகாரம் ஸகல ஶப்தத்துக்குங் காரணமாய், நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே, ஸகலஜகத்துக்குங் காரணமாய் - ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது. ரக்ஷிக்கையாவது - விரோதியைப்போக்குகையும் - அபேக்ஷிதங்களைக் கொடுக்கையும். இவையிரண்டும் சேதனர் நின்றநின்ற வளவுகளுக்கீடாயிருக்கும். ஸம்ஸாரிகளுக்கு விரோதி ஶத்ருபீடாதிகள் - அபேக்ஷிதம் அந்நபாநாதிகள். முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்ஸார ஸம்பந்தம் - அபேக்ஷிதம் பரமபதப்ராப்தி. முக்தர்க்கும் - நித்யர்க்கும் - விரோதி கைங்கர்யஹாநி அபேக்ஷிதங் கைங்கர்யவ்ருத்தி. ஈஶ்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம். ரக்ஷிக்கும்போதுபிராட்டி ஸந்நிதிவேண்டுகையாலே, இதிலே ஸ்ரீஸம்பந்தமு மநுஸந்தேயம். அத்ர பகவத்ஸேநாபதி மிஶ்ரவாக்யம்- (அவன்மார்பைவிட்டுப்பிரியி லிவ்வக்ஷரம்விட்டுப்பிரிவது) பர்த்தாவினுடைப் படுக்கையையும்-ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாத மாதாவைப்போலே ப்ரதமசரம பதங்களைவிடாதே யிருக்குமிருப்பு. ஸ்ரீநந்தகோபனையுங் க்ருஷ்ணனையும் விடாத யஶோதைப் பிராட்டியைப்போலே. ஒருவனடிமை கொள்ளும்போது, க்ருஹணிக்கன்றென்றே ஆவணையோலை யெழுதுவது ஆகிலும் பணிசெய்வது க்ருஹணிக்கிறே. அதுபோலே - நாம் பிராட்டிக்கடிமையா யிருக்கும்படி ஆகப்பிரித்து நிலையில்லை. ப்ரபையையும்-ப்ரபாவானையும் - புஷ்பத்தையும்-மணத்தையும்போலே. ஆகவிச்சேர்த்தி யுத்தேஶ்யமாய்விட்டது, இதிலே சதுர்த்தியேறிக்கழியும். சதுர்த்தியேறினபடி யென்னென்னில், நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே இத்தால் ஈஶ்வரனுக்குசேஷமென்கிறது. சேஷத்வந் துக்கரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில். அந்த நியமமில்லை. உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கு மிருப்புஸுகமாகக் காண்கையாலே, அகாரத்

திலே கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே இந்த ஶேஷத்வமும் குணத்தாலே வந்தது. ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம். ஶேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை ஆத்மாபஹாரமாவது ஸ்வதந்த்ரமென்கிற நினைவு ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும். ஸ்தானப்ரமாணத்தாலே உகாரமவதாரணார்த்தம். இத்தாற் பிறர்க்கு ஶேஷமன்றென்கிறது. பெரியபிராட்டியார்க்குச் சேஷமென்கிற தென்றுஞ் சொல்லுவர்கள். அதிலும் அந்யஶேஷத்வங் கழிகையே ப்ரதானம். தேவர்களுக்கு ஶேஷமான புரோடாஶத்தை நாய்க்கிடுமாப்போலே ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை. பகவத்ஶேஷத்வத்திலும் அந்யஶேஷத்வங் கழிகையே ப்ரதானம். (மறந்தும்புறந்தொழாமாந்தர்) என்கையாலே, இத்தால் தனக்கும் பிறர்க்குமுரித்தன்றென்கிறது. மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய், ஜ்ஞானவாசியுமா யிருக்கையாலே, ஆத்மாவைச்சொல்லுகிறது, இதுதான் ஸமஷ்டிவாசகம் - ஜாத்யேகவசனம். இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லித்தாயிற்று. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வஶேகரத்திலே சொன்னோம். மணத்தையும் ஒளியையுங்கொண்டு - பூவையும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, ஶேஷமென்று ஆத்மாவை யாதரிக்கிறது. அல்லாதபோது (உயிரினாற் குறைவிலம்) என்கிறபடியே த்யாஜ்யன். அதுதோன்ற ஶேஷத்வத்தைச்சொல்லிப் பின்னை ஆத்மாவைச்சொல்லுகிறது. ஆகப்ரணவத்தாற் (கண்ணபுரமொன்றுடையானுக்கடியேனொருவர்க்குரியேனோ) என்கிறபடியே ஜீவபர ஸம்பந்தஞ்சொல்லிற்று. இத்தால் (தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு) என்றதாயிற்று. அகாரத்தாலும் மகாரத்தாலும் ரக்ஷகனையும் ரக்ஷ்யத்தையுஞ்சொல்லிற்று. சதுர்த்தியாலும், உகாரத்தாலும் ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் ஃபலத்தையுஞ் சொல்லிற்று. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது, உகாரத்தை விவரிக்கிறது, நமஸ்ஸு. அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம். மகாரத்தை விவரிக்கிறது சதுர்த்தி, நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள், இடையே விவரியாதொழிகிறது. விரோதிபோயநுபவிக்கவேண்டுகையாலே. நமஸ்ஸு-ந - என்றும், மஃ - என்றும், இரண்டுபதம், மஃ - என்கிற வித்தால் தனக்குரியனென்கிறது. ந - என்றதைத்தவிர்க்கிறது. ஆக - நமஃ என்கிற வித்தால் தனக்குரியனன்றென்கிறது. பிறர்க்குரியனான வன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம். தனக்கென்றவன்று யோக்யதையுங்கூட வொழியும் இத்

தால் விரோதியைக் கழிக்கிறது. விரோதி தான் மூன்று. அதாவது ஸ்வரூபவிரோதியும் உபாயவிரோதியும்ப்ராப்யவிரோதியும். ஸ்வரூபவிரோதி கழிகையாவது, (யானேநீ யென்னுடைமையுந்நீயே) என்றிருக்கை. உபாயவிரோதிகழிகையாவது, (களைவாய்துன்பங்களையா தொழிவாய்களைகண்மற்றிலேன்)என்றிருக்கை. ப்ராப்யவிரோதிகழிகையாவது, (மற்றைநங்காமங்கள்மாற்று) என்றிருக்கை. ம:-என்கை ஸ்வரூபநாஶம். நம:-என்கைஸ்வரூபோஜ்ஜீவனம். இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், ஃபலத்தையுங்காட்டும். (தொலைவில்லிமங்கலந்தொழும்)என்கையாலேஸ்வரூபஞ்சொல்லிற்று. (வேங்கடத்துறைவார்க்குநம:) என்கையாலே உபாயஞ்சொல்லிற்று (அந்திதொழுஞ்சொல்லொன்கையாலே) ஃபலஞ்சொல்லிற்று. (உற்றதுமுன்னடியார்க்கடிமை) என்கிறபடியே யிதிலே பாகவதஶேஷத்வமும் அநுஸந்தேயம். இது அகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள். உகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள். ஈஶ்வரன் தனக்கேயாயிருக்கும், அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும், ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும், என்று முற்பட்டநினைவு. அங்ஙனன்றிக்கே அசித்துப்போலே தனக்கேயாகவெனைக் கொள்ளவேணுமென்கிறது, நமஸ்ஸால். அதாவது:-மோக்ஷதஶையில் ஈஶ்வரனழிக்கும்போதுநோக்கவேண்டுமென்று, அழியாதொழிகை. அழிக்கைக்குஹேதுச்சொல்லிற்று. மேலுஞ் சொல்லும். இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன். இந்நினை வில்லாதபோது எல்லாஸுக்ருதங்களுந் துஷ்க்ருதம். இந்நினைவிலேயெல்லா ஸுக்ருதங்களுமுண்டு. இதன்றிக்கே யிருக்கப்பண்ணும் யஜ்ஞாதிகளும், ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள். இதுதன்னாலே எல்லாபாபங்களும் போம், எல்லா ஃபலங்களுமுண்டாம், நாராயண வென்றது, நாரங்களுக்கயனமென்றபடி, நாரங்களாவன-நித்ய வஸ்துக்களினுடைய திரள். அவையாவன ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநஶக்தியாதிகளும், வாத்ஸல்ய ஸௌஶீல்யாதிகளும், திருமேனியும், காந்திஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணாதிபரும், முக்தரும், பரமாகாஶமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களும், அயனமென்றது, இவற்றுக்காஶ்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே யிவைதனனே

யாஶ்ரயமாகவுடையனென்னவுமாம். இவையிரண்டாலுமஃலித்தது பரத்வ ஸௌலப்யங்கள். அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம். (எம்பிரானெந்தை) என்கையாலே, ஈஶ்வரனே யெல்லாவுறவும் முறையுமென்று சொல்லும். நாம்பிறர்க்கானவன்றும் அவன நமக்காயிருக்கும். இராமட மூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து,ஸத்தைபேபிடித்து நோக்கிக்கொண்டுபோரும் ஆயவென் கிறவித்தத்தால்(சென்றாற்குடையாம்) என்கிறபடியே யெல்லாவடிமை களுஞ் சய்யவேண்டுமென் றபேக்ஷிக்கிறது. நமஸ்ஸாலே தன்னே டுறவில்லையென்று வைத்துக்கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கைக்கூடுமோ வென்னில், (படியாய்க்கிடந்துன் பவளவாய்காணபேனே)என்கிறபடியே கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறியன்று ஸ்வரூப ப்ரயுக்தம். ஆகையால்(வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்)என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.(கண்ணாரக்கண்டுகழிவதோர்காதலுற்றார்க்குமுண்டோ கணகடுஞ்சுதல்) எனனுமாப்போலே காண்பதற்குமுன் புறக்கமில்லை. கண்டால்(ஸஹாபஶ்யந்தி) ஆகையாலேயுறக்கமில்லை. (பழுதேபலபக லும்போயினவென்று) இழந்தநாளைக்குக் கூப்பிடுகிறவனுக் குறங்க விரகில்லை (அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்) என்று நின்றாகளிறே. இவ்வடிமைதான், (ஒழிவில்காலமெல்லா முடனாய்ம ன்னி என்கிறபடியே ஸர்வதேஶ, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும், எட்டிழைபாய் மூன்றுசரடாயிருப்பதொருமங்கல ஸூத்ரம்போலேதிருமந்த்ரம். இத்தாலீஶ்வரன், ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்று ரக்ஷிக்குமென்கிறது, ஆகத்திருமந்த்ரத்தால் எம்பெருமானுக்கே யுரியேனான நான் எனக்குரியனன்றிக்கே யொழியவேணும், ஸர்வஶேஷியான நாராயணனுக்கே யெல்லாவடிமைகளுஞ்செய்யப்பெறுவேனாக வேணுமென்றதாயிற்று.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளேஶரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முமுக்ஷுப்படி

ரஹஸ்யத்ரயம்.

த்வயப்ரகரணம்.

---:o:---

புறம்புண்டான பற்றுக்களை யடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாளுகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் மங்களாஸாஸந கைங்கர்யங்களே பொழுது போக்காகையும் இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமறிந் துகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் - த்வயத்திலும் - நியதனாகையும், ஆசார்ய ப்ரேமங் கநத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் - எம்பெருமான் பக்கலிலுங் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும், விரக்தியும், ஶாந்தியும் உடையனா யிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும், வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம். இந்தவதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமு மநுஸந்தேயம், எல்லாப்ரமாணங்களிலும் ஈஶ்வரனாலே பேறென்கிறது திருமந்த்ரத்தில்ஆத்மாவாலேபேறென்கிறது. சரமஶ்லோகத்தில் ஈஶ்வரனாலேபேறென்கிறது, த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது. பெரிய பிராட்டியாராலே பேறுகையாவது, இவள் புருஷகாரமாகவல்லது ஈஶ்வரன்கார்யஞ்செய்யானென்கை. த்வயத்துக்கதிகாரி ஆகிஞ்சந்யமும், அநந்ய கதித்வமும் உடையவன் இவையிரண்டும் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம். இதில் முற்கூற்றால் பெரியபிராட்டியாரைமுன்னிட்டு ஈஶ்வரன் திருவடிகளை உபாயமாகப்பற்றுகிறது. பிற்கூற்றால்அச்சேர்த்தியிலே யடிமையையிரக்கிறது. ஸ்ரீ, என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம், ஸ்ரீயதே, ஶ்ரயதே, இதுக்கர்த்தம், எல்லார்க்கு மிவளைப்பற்றி ஸ்வரூபலாபமாய் இவள் தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூபலாபமாயிருக்குமென்று இப்பேதிவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக. நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே குளிர்ந்ததிருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பிக்குமவளாகையாலே, இவள் தாயாய் இவர்கள் க்லேஶம் பொறுக்க மாட்டாதே அவனுக்குப்பத்நியாய் இனியவிஷயமாயிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரம், திருவடியைப்பொறுப்பிக்குமவள் தன் சொல்வழிவருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே, மது

ப்பாலே இருவர்சேர்த்தியும் நித்யமென்கிறது. இவளோடே கூடியே வஸ்துவினுடைய வுண்மை, ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும், சேதனனுடைய வபராதத்தையும், கண்டகலமாட்டாள். சேதநனுக் கிவையிரண்டையும் நினைத்தஞ்சவேண்டா. இத்தால் ஆஶ்ரயிக்கைக்கு ருசியேவேண்டுவது, காலம்பார்க்கவேண்டா வென்கிறது. இவள் ஸந்நிதியாலே காகந்தலைபெற்றது அதில்லாமையாலே ராவணன் முடிந்தான், புருஷகாரபலத்தாலே ஸ்வாதந்த்ர்யந் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம். அவையாவன, வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஶீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநமும், ஶக்தியும், குற்றங்கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம், கார்யஞ்செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம், ஸ்வாமித்வங்கண்டகலாமைக்கு ஸௌஶீல்யம், கண்டுபற்றுகைக்கு ஸௌலப்யம், விரோதியைப்போக்கித் தன்னைக்கொடுக்கைக்கு ஜ்ஞாநஶக்திகள். இங்குச் சொல்லுகிற ஸௌலப்யத்துக் கெல்லைநிலம் அர்ச்சாவதாரம், இது தான் பரவ்யூஹ விபவங்கள்போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படியிருக்கும். இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சலென்ற கையும், கவித்தமுடியும், முகமும், முறுவலும் ஆஸந பத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம், ரக்ஷகத்வபோக்யத்வங்க ளிரண்டும் திருமேனியிலே தோற்றும். சரணௌ-திருவடிகளை, இத்தால் சேர்த்தியழகையும், உபாய பூர்த்தியையுஞ் சொல்லுகிறது. பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது. (திண்கழல்) ஆயிருக்கும். ஶேஷிபக்கல் ஶேஷபூதனிழியுந்துறை. ப்ரஜை முலையிலே வாயவைக்குமாப்போலே. இத்தாற் பிராட்டிக் கிருப்பிடமாய், குணப்ரகாஶகமுமாய், ஶிஶுபாலனையுமகப்படத் திருத்திச்சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது. ஶரணம் - இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்ட நிவாரணத்துக்குந், தப்பாத உபாயமாக, இத்தால் ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது. கீழ்ச் சொன்ன மூன்றும், ப்ராப்யமிறே. இவன் செயலறுதியாலே உபாயமாக்குகிறானித்தனை, சரணௌஶரணம் - என்கையாலே உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயமென்கிறது. ப்ரபத்யே - பற்றுகிறேன் வாசிகமாகவும், காயிகமாகவும், பற்றினாலும் பேற்றுக் கழிவில்லை. (ஜ்ஞாநாந்மோக்ஷம்) என்கையாலே மாநஸமாகக்கடவது. உபாயமவனாகையாலும் இவை நேரே யுபாயமல்லாமையாலும், இம்மூன்றும்

வேண்டுமென்கிற நிர்பந்தமில்லை: வர்த்தமாந நிர்லேபமும் ஸத்வந தலையெடுத் தஞ்சினபோ தநுஸந்திக்கைக்காக, உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும், இனிமையாலே, விடவொண்ணாமையாலும், நடக்கும். பேற்றுக்குப்பலகாலும் வேணு மென்று நினைக்கில் உபாயம் நழுவும்.

உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது. ப்ராப்யாந்த ரத்துக்கன்றென்கை. உபாயாந்தரங்களைவிட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாப்போலே உபேயாந்தரமான வைஶ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை யர்த்திக்கிறது. இவனர்த்திக்க வேணு மோ, ஸர்வஜ்ஞன் நினைவறியானோ வென்னில், இவன்பாசுரங் கேட் டவாறே திருவுள்ளமுகக்கும். ஸ்ரீமதே - பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு, அவனுபாயமாமிடத்தில் தான் புருஷகார மாயிருக்கும். அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் ப்ராப்யையுமாய் கை ங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும். இதிலே திருமந்த்ரத்திற் சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக வநுஸந்திக்கிறது. இளையபெருமாளைப்போ லே யிருவருமான சேர்த்தியிலே யடிமைசெய்கைமுறை. இவ்வடிமை தான்ஸித்திப்பதும், ரஸிப்பதும், அச்சேர்த்தியிலே, நாராயணாய-ஸர் வஶேஷியா யுள்ளவனுக்கு, இதிலே திருமேனியையும் குணங்களை யும்சொல்லும். ஶேஷித்வத்திலே நோக்கு: ப்ராப்தவிஷயத்தில் கைங் கர்யமிறே ரஸிப்பது இந்த சதுர்த்தி கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக் கிறது. கைங்கர்யந்தான் நித்யம். நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவே ணும். ஶேஷிக்கதிசயத்தை விளைக்கை ஶேஷபூதனுக்கு ஸ்வரூப லாபமும் ப்ராப்யமும். நமः - கைங்கர்யத்தில் களையறுக்கிறது. களை யாவது தனக்கென்னப் பண்ணுமது. இதிலே அவித்யாதிகளுங் கழி யுண்ணும். (உனக்கேநாமாட்செய்வோம்) என்னும்படியே யாகவே ணும். ஸௌந்தர்யமு மந்தராயம். கீழ்ச்சொன்ன கைங்கர்யமு மப்ப டியே. கைங்கர்யப்ரார்த்தனைபோலே யிப்பதத்தில் ப்ரார்த்தனையு மெ ன்றுமுண்டு (மருந்தேநங்கள் போகமகிழ்ச்சிக்கு) என்றுநின்றதிறே.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முமுக்ஷுப்படி

ரஹஸ்யத்ரயம்

சரமஸ்லோகப்ரகரணம்.

:o:

கீழே சில உபாயவிசேஷங்களை யுபதேசிக்க, அவை துஸ்ஸகங்களென்றும், ஸ்வரூபவிரோதிகளென்றும், நினைத்துசோகாவிஷ்டனான வர்ஜுநனைக்குறித்து அவனுடைய சோகநிவர்த்யர்த்தமாக இனி யிதுக் கவ்வருகில்லை யென்னும்படியான சரமோபாயத்தை யருளிச்செய்கையாலே சரமஸ்லோகமென்று இதுக்குப் பேராயிருக்கிறது. இதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை யருளிச்செய்கிறான். உத்தரார்த்தத்தாலே உபாய க்ருத்யத்தை அருளிச்செய்கிறான். அதிகாரிக்கு க்ருத்யமாவது உபாய பரிக்ரஹம். அத்தை ஸாங்கமாக விதிக்கிறான். ராகப்ராப்தமான வுபாயந்தானே வைதமானால் கடுகப்பரிக்ரஹிக்கைக் குடலாயிருக்குமிறே. இதில்பூர்வார்த்த மாறுபதம் ஸர்வதர்மாந் - எல்லாதர்மங்களையும், தர்மமாவது ஃபலஸாதநமாயிருக்குமது, இங்குச்சொல்லுகிற தர்மசப்தம் த்ருஷ்டஃபலஸாதநங்களைச் சொல்லுகையன்றிக்கே மோக்ஷஃபலஸாதநங்களைச் சொல்லுகிறது. அவைதான் ஸ்ருதி, ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாயிருக்கையாலே, பஹுவசநப்ரயோகம் பண்ணுகிறது, அவையாவன, கர்மஜ்ஞாநபக்தியோகங்களும், அவதார ரஹஸ்ய ஜ்ஞாநம், புருஷோத்தம வித்யை, தேசவாஸம், திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை. திருமாலையெடுக்கை, தொடக்கமான உபாயபுத்த்யாச் செய்யுமவையும். ஸர்வசப்தத்தாலே அவ்வோஸாதந விசேஷங்களை யநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதா பாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது. ஆகஸ்ருதி, ஸ்மிருதி சோதிதங்களாய் நித்யநைமித்திகாதி ரூபங்களான கர்ம யோகாத்யுபாயங்களை யென்றபடி, இவற்றை தர்மமென்கிறது ப்ரமித்த வர்ஜுநன் கருத்தாலே, பரித்யஜ்ய- த்யாகமாவது, உக்தோபாயங்களை யநுஸந்தித்து, ஸுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவானைப்போலேயும், விபரீத திக்கமநம் பண்ணுவானைப்போலேயும். அநுபாயங்களிலே யுபாயபுத்தி பண்ணினோமென்கிற புத்திவிசேஷத்தோடே த்யஜிக்கை, பரி, என்கிற

உபஸர்ஜத்தாலே பாதகாதிகளை விடுமாப்போலே ருசிவாஸநைகளோடுங், லஜ்ஜையோடுங்கூட மறுவலிடாதபடி விடவேணுமென்கிறது. ல்ய ப்பாலே-(ஸ்நாத்வாஹ-ஞ்ஜீத)என் னுமாப்போலே உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணுமென்கிறது. (சசாலசாபஞ்ச முமோசவீர:) என்கிறபடியே இவை யநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால்க்கட்டென்கிறது. சக்ரவர்த்தியைப்போலே யிழக்கைக்குறுப்பு, ஸர்வதர்மங்களையும் விட்டென்று சொல்லுகையாலே சிலர் அதர்மங்கள் புகிருமென்றார்கள். அதுகூடாது, அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே, தன்னடையே சொல்லிற்றாகாதோ வென்னில், ஆகாது, தர்மஶப்தம் அதர்ம நிவர்த்தியைக் காட்டாமையாலே, காட்டிலுமத்தையொழிந்தவற்றைச் சொல்லிற்றுமித்தனை. தன்னையும், ஈஶ்வரனையும், ஃபலத்தையும் பார்த்தா லவைபுகிர வழியில்லை. மாம் - ஸர்வரக்ஷகனாய், உனக்குக் கையாளாய், உன்னிசைவுபார்த்து, உன் தோஷங்களை போக்யமாகக்கொண்டு, உனக்குப்புகலாய், நீர்சுடுமாப்போலே, சேர்ப்பாரே பிரிக்கும்போதும். விடமாட்டாதே ரக்ஷிக்கிறவென்னை, இத்தால் பரவ்யூஹங்களையும், தேவதாந்தர்யா மித்வத்தையும் தவிர்க்கிறது. தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன்தானே ஸர்வதர்மங்களையும் விட்டென்னைப் பற்றென்கையாலே, ஸாக்ஷாத்தர்மந் தானே யென்கிறது. இத்தால் விட்டஸாதநங்களி லேற்றஞ் சொல்லுகிறது. அதாவது ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வஶக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமா யிருக்கை. மற்ற வுபாயங்கள் ஸாத்யங்களாகையாலே ஸ்வரூபஸித்தியில் சேதநனை அபேக்ஷித்திருக்கும், அசேதநங்களுமாய் அஶக்தங்களுமா யிருக்கையாலே கார்யஸித்தியில் ஈஶ்வரனையபேக்ஷித்திருக்கும். இந்தவுபாயம் அவற்றுக் கெதிர்த்தட்டா யிருக்கையாலே யிதரநிரபேக்ஷமாயிருக்கும். இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ, ஸௌஶீல்ய, ஸௌலப்யங்களாகிற குணவிஶேஷங்கள் நேராக ப்ரகாஶிக்கிறது - கையு முழவுகோலும் பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும், தேருக்குக்கீழேநாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை மாமென்று காட்டுகிறான். ஏகம் - இந்த ஏகஶப்தம் ஸ்தாந ப்ரமாணத்தாலே அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது. (மாமேவயேப்ரபத்யந்தே, தமேவசாத்யம, த்வமேவோபாயபூதோமேபவ,) (ஆறெனக்குநின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்) என்

றுஞ் சொல்லுகிறபடியே, இத்தால் வ்ரஜ என்கிற ஸ்வீகாரத்திலுபாய ஹாவத்தைத்தவிர்க்கிறது. ஸ்வீகாரந்தானு மவனாலேவந்தது. ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே பண்ணின க்ருஷிபலம், (அதுவுமவனதின்னருளே) இத்தையொழியவுந் தானே கார்யஞ்செய்யு மென்று நினைக்கக் கடவன். அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யஞ் ஜீவியாது. இது ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தம், ஸாத்யஸமாதானார்த்தம், சைதந்ய கார்யம், ராகப்ராப்தம், ஸ்வரூபநிஷ்டம், அப்ரதிஷேதத்யோதகம். கீழ்த்தானும் பிறருமான நிலையைக்கொலைத்தான். இங்குத்தானு மவனுமான நிலையைக் கொலைக்கிறான். அவனை யிவன் பற்றும் பற்று அஹங்கார கர்பம், அவத்யகரம், அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம். மற்ற வுபாயங்களுக்கு நிவ்ருத்திதோஷம் இதுக்கு ப்ரவ்ருத்திதோஷம், (சிற்றவேண்டா) நிவ்ருத்தி கீழேசொல்லிற்று. உபகாரஸ்ம்ருதியுஞ் சைதந்யத்தாலே வந்தது, உபாயத்தி லந்தர்பவியாது. ஶரணம் - உபாயமாக, இந்த ஶரணஶப்தம் - ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும். உபாயத்தையும் காட்டக்கடவதே யாகிலும் இவ்விடத்தி லுபாயத்தையே காட்டுகிறது, கீழோடே சேரவேண்டுகையாலே, வ்ரஜ-ஸாத்யபண்ணு. கத்யர்த்தமாவது-ஸாத்யர்த்தமாய் அத்ய்வஸியென்றபடி, வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களாயிருக்கச்செய்தேயும் (ஜ்ஞாநான்மோக்ஷம்) ஆகையாலே மாநஸமான வநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது. ஆக-த்யாஜ்யத்தைச்சொல்லி, த்யாக ப்ரகாரத்தைச் சொல்லிப் பற்றப்படுமுபாயத்தைச்சொல்லி, உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ்சொல்லி உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது. அஹம் - ஸ்வக்ருத்யத்தை யருளிச்செய்கிறான். ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனான நான் கீழ்நின்ற நிலையையும், மேற்போக்கடி யறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும், ஏகாந்தங்களான குணவிஶேஷங்களையும் தன்பேறாகச் செய்து, தலைக்கட்டுகைக்கீடான ஶக்திவிஶேஷத்தையுங் காட்டுகிறது. தனக்காகக்கொண்ட ஸாரத்யவேஷத்தை அவனையிட்டுப் பாராதே தன்னையிட்டுப் பார்த்தஞ்சின வச்சந்தீரத் தானான தன்மையை யஹமென்று காட்டுகிறான். கீழிற்பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே. த்வா - அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை: ஸர்வபாபேப்ய:-மத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களென்று யாவை யாவை சில பாபங்களைக்குறித்தஞ்சுகிறாய், அவ்வோபாபங்களெல்லாவற்றில் நின்

றும் (பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்) என்கிறபடியே இதிலே அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ர்தி ஸம்பந்தங்களைச் சொல்லுகிறது. தர்ணச்சேத கண்டூயநாதிகளைப்போலே ப்ரக்ர்திவாஸனையாலே அநுவர்த்திக்குமவையென்ன, லோகாபவாத பீதியாலும், கருணையாலும், கலக்கத்தாலும், செய்யுமவையென்ன, இவை எல்லாவற்றையும்நினைக்கிறது. உன்மத்த ப்ரவர்த்திக்கு ஸ்ரீ ராம ப்ராப்திபோலே த்யஜித்த வுபாயங்களிலே யிவையந்விதங்களாமோ வென்று நினைக்கவேண்டா, கலங்கியுபாய பு்த்தியாபண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடொக்கும். மோக்ஷயிஷ்யாமி - முக்தனும்படி பண்ணக்கடவேன். ணிச்சாலே நானும்வேண்டா, நீயும்வேண்டா, அவை தன்னடையேவிட்டுப் போங்காணென்கிறான். என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவைநானிரங்கினால் கிடக்குமோ வென்கை. அநாதிகாலம் பாபங்களைக்கண்டு நீபட்டபாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன். இனியுன்கையிலு முன்னைக் காட்டித்தாரேன். என்னுடம்பி லழுக்கை நானேபோக்கிக்கொள்ளேனோ, மாஶுச:- நீயுன் கார்யத்திலே அதிகரியாமையாலும் நானுன்காரியத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், உனக்கு ஶோகநிமித்த மில்லை காணென்று, அவனுடைய ஶோகநிவர்த்தியைப் பண்ணிக்கொடுக்கிறான். நிவர்த்தக ஸ்வரூபத்தைச்சொல்லி, நிவர்த்யங்களுன்னை வந்து மேலிடாதென்று சொல்லி உனக்கு ஶோகநிமித்த மில்லைகாணென்கிறான். (எத்தினாலிடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே) என்கிறான்; பாபங்களை நான்பொறுத்துப் புண்யமென்று நினைப்பட்டாநிற்க நீஶோகிக்கக்கடவையோ. "உய்யக்கொண்டார் விஷயமாக உடையவரருளிச்செய்தவார்த்தையை ஸ்மரிப்பது." இதுக்கு ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு. (இதுதான் அநுவாதகோடியிலே) என்று வங்கிப்புரத்து நம்பி வார்த்தை அர்ஜுநன் க்ர்ஷ்ணனுடைய ஆணைத்தொழில்களாலும், ருஷிகள் வாக்யங்களாலும், க்ர்ஷ்ணன் தன் கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், இவனேநமக்குத் தஞ்சமென்று துணிந்தபின்பு தன்னைப்பற்றச் சொல்லுகையாலே புறம்பு பரந்தவையெல்லா மிவன்நெஞ்சை ஶோதிக்கைக்காக, வேதபுருஷனுபாயாந்தரங்களை விதித்தது. கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டிவிடுவாரைப்போலே அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூபஜ்ஞானம் பிறப்பிக்கைக்காக, ஸந்யாஸி முன்புள்ளவற்றை விடுமா

ப்போலே, யிவ்வளவு பிறந்தவனிவற்றைவிட்டால் குற்றம்வராது. இவன்தா னிவைதன்னை நேராகவிட்டிலன். கர்மம் கைங்கர்யத்திலே புகும், ஜ்ஞாநம் ஸ்வரூபப்ரகாஶத்திலே புகும், பக்திப்ராப்யம் ருசியிலே புகும். ப்ரபத்தி ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும். ஒரு ஃபலத்துக்கரிய வழியையும், எளியவழியையும், உபதேஶிக்கையாலே யிவையிரண்டுமொழியபகவத்ப்ரஸாதமே யுபாயமாகக்கடவது. பேற்றுக்கு வேண்டுவது விலக்காமையும், இரப்பும், சக்கரவர்த்தித் திருமகன் பாபத்தோடேவரினு மமையுமென்றான். இவன் புண்யத்தைப் போகவிட்டு வரவேணுமென்றான். (ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசிவிஶ்வாசங்களுடையவனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நஶித்தலொழிய நடுவில் நிலையில்லை) என்று பட்டர்க்கெம்பாரருளிச்செய்த வார்த்தை. வ்யவஸாயமில்லாதவனுக்கு இதிலந்வயம் ஆமதத்தில் ஹோமம் போலே. (விஷ்ணுசித்தர்கேட்டிருப்பர் என்கிறபாட்டும், (அத்தனாகி) என்கிறபாட்டும், இதுக்கர்த்தமாக வநுஸந்தேயம்.

உலகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

தத்வத்ரயம்.

சித்ப்ரகரணம்.

முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரயஜ்ஞாந முண்டாகவேணும். தத்வத்ரயமாவது - சித்தும், அசித்தும், ஈஶ்வரனும். சித்தென்கிறது ஆத்மாவை. ஆத்மஸ்வரூபந்தான் (சென்றுசென்று பரம்பரமாய்) என்கிறபடியே தேஹேந்த்ரியமந:, ப்ராணபுத்தி விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாஶ்ரயமாய், ஈஶ்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், ஶேஷமாயிருக்கும். ஆத்மஸ்வரூபம் - தேஹாதி விலக்ஷணமானபடியென்னென்னில், தேஹாதிகள் என்னுடையதேஹாதிகளென்று ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், இதமென்று தோற்றுகை

யாலும், ஆத்மா நானென்று தோற்றுகையாலும், இவையொருக்கால்
தோற்றி ஒருக்கால் தோற்றாமையாலும், ஆத்மா எப்போதுந் தோற்று
கையாலும், இவை பலவாகையாலும், ஆத்மா ஒருவனாகையாலும்,
ஆத்மா இவற்றில் விலக்ஷணனென்று கொள்ளவேணும். இந்த யுக்தி
களுக்குக் கண்ணழிவுண்டேயாகிலும், ஶாஸ்த்ரபலத்தாலே ஆத்மா
தேஹாதி விலக்ஷணனாகக்கடவன் அஜடமாகையாவது - ஜ்ஞாநத்
தை யொழியவுந்தானேதோற்றுகை. ஆநந்தரூபமாகையாவது-ஸுக
மாக உறங்கினே னென்கையாலே ஸுகரூபமாகக்கடவது. நித்யமா
கையாவது – எப்போதுமுண்டாயிருக்கை. எப்போது முண்டாகில்,
ஜந்மமரணங்களுண்டாகிறபடி யென்னென்னில், ஜந்மமாவது தேஹ
ஸம்பந்தம். மரணமாவது -தேஹவியோகம் அணுவானபடி யென்
னென்னில், ஹ்ருதய ப்ரதேஶத்திலே நின்றும் உத்க்ரமித்துப்போவது
வருவதாமென்று ஶாஸ்த்ரஞ் சொல்லுகையாலே ஆத்மா அணுவாகக்
கடவது. அணுவாய் ஹ்ருதயத்தளவிலே நிற்குமாகில் ஶரீரமெங்கு
மொக்க ஸுகது:க்கங்களை புஜிக்கிறபடி யென்னென்னில், மணி
த்யுமணி தீபாதிகளோரிடத்திலேயிருக்க, ப்ரபையெங்கும் வ்யாபிக்கி
றாப்போலே ஜ்ஞாநமெங்குமொக்க வ்யாபிக்கையாலே அவற்றை பு
ஜிக்கத்தட்டில்லை. ஒருவன் ஏககாலத்திலே அநேக தேஹங்களைப்
பரிக்ரஹிக்கிறதும், ஜ்ஞாநவ்யாப்தியாலே, அவ்யக்த மாகையாவது.
கடபடாதிகளை க்ரஹிக்கிற, சக்ஷுராதிகளால் தோற்றாதிருக்கை.
அசிந்த்ய மாகையாவது. அசித்தோடு ஸஜாதீயமென்று நினைக்க
வொண்ணாதிருக்கை, நிரவயவமாகையாவது - அவயவஸமுதாய மின்
றிக்கேயிருக்கை. நிர்விகார மாகையாவது - அசித்துப்போலே விகா
ரிக்கையன்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை - இப்படி யிருக்கையாலே
ஶஸ்த்ரம், அக்நி, ஜலம், வாதம், ஆதபம், தொடக்கமானவற்றால் சே
தித்தல், தஹித்தல், நனைத்தல், ஶோஷிப்பித்தல், செய்கைக்கு அயோ
க்யமாயிருக்கும், ஆர்ஹதர்-ஆத்மாவை தேஹபரிமாண மென்றார்கள்.
அது ஶ்ருதிவிருத்யம். அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிற யோகி
கள் ஸ்வரூபத்துக்கு ஶைதில்யம்வரும். ஜ்ஞாநாஶ்ரயமாகையாவது,
ஜ்ஞானத்துக் கிருப்பிடமாயிருக்கை. ஆத்மா ஜ்ஞாநத்துக் கிருப்பிட
மின்றிக்கே ஜ்ஞாநமாத்ரமாகில் நானறிவென்று சொல்லவேணும், நா
னறியா நின்றே னென்னக்கூடாது, ஜ்ஞாதா வென்றபோதே கர்த்தா,
போக்தா, என்னுமிடஞ் சொல்லிற்றாயிற்று. கர்த்ருத்வ போக்த்ருத்வ

ங்கள் ஜ்ஞாநாவஸ்தா விஶேஷங்களாகையாலே - சிலர் குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக் கில்லையென்றார்கள். அப்போதிவனுக்கு ஶாஸ்த்ரவஶ்யதையும் போக்த்ருத்வமுங்கொலையும், ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூப ப்ரயுக்தமன்று, குணஸம்ஸர்க க்ருதம். கர்த்ருத்வந்தான் ஈஶ்வராதீநம், ஜ்ஞாநாஶ்ரயமாகில் ஶாஸ்த்ரங்களிலே யிவனை ஜ்ஞானமென்று சொல்லுவானென்னென்னில், ஜ்ஞானத்தை யொழியவுந் தன்னை யறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபகதர்மமாயிருக்கையாலும் சொல்லிற்று. நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களு முண்டாம்படியிருக்கை. தார்யமாகையாவது - அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன் ஸத்தை யில்லையாம்படி யிருக்கை, ஶேஷமாகையாவது - சந்தந குஸும தாம்பூலாதிகளைப்போலே அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கை. இதுதான் க்ருஹக்ஷேத்ர புத்ரகளத்ராதிகளைப்போலே ப்ருதக் ஸ்தித்யாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கையன்றிக்கே ஶரீரம்போலே அவற்றுக் கயோக்யமாயிருக்கை. ஆத்மஸ்வரூபந்தான் - பத்த, முக்த, நித்ய, ரூபேண மூன்றுபடிபட்டிருக்கும் பத்தரென்கிறது - ஸம்ஸாரிகளை, முக்தரென்கிறது-ஸம்ஸார ஸம்பந்த மற்றவர்களை, நித்யரென்கிறது, ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷ ஶேஷாஶநாதிகளை, ஜலத்துக் கக்நிஸம்ஸ்ருஷ்ட ஸ்தாலீ ஸம்ஸர்கத்தாலே ஔஷ்ண்யஶப்தாதிக ளுண்டாகிறாப்போலே ஆத்மாவுக்கு அசித் ஸம்பந்தத்தாலே அவித்யாகர்ம வாஸநா ருசிகளுண்டாகின்றன. அசித்துக்கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள். இம்மூன்றுந் தனித்தனியே அநந்தமாயிருக்கும். சிலர் ஆத்மபேதமில்லை, ஏகாத்மாவேயுள்ள தென்றார்கள். அந்தபக்ஷத்தில் ஒருவன் ஸுகிக்கிறகாலத்திலே வேறேயொருவன் து:கிக்கக் கூடாது. அதுதேஹ பேதத்தாலே யென்னில், ஸௌபரி ஶரீரத்திலுமதுகாணவேணும், ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனாகையும் ஒருவன் ஶிஷ்யனாகையும், ஒருவனாசார்யனாகையும்கூடாது. விஷம ஸ்ருஷ்டியுங் கூடாது. ஆத்மபேதஞ் சொல்லுகிறஶ்ருதியோடும் விரோதிக்கும். ஶ்ருதி ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது, மோக்ஷதஶையிலும் பேதம் உண்டாகையாலே, அப்போது தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதி

பேதமும், கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம், அத்யந்தம் ஸமமாய், ஒருபடியாலும் பேதஞ்சொல்லவொண்ணாதபடி யிருந்ததேயாகிலும், பரிமாணமும், இடையும், ஆகாரமும், ஒத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள், தொடக்கமானவற்றிற்கு பேதமுண்டாகிறாப்போலே ஸ்வரூபபேதமும்ஸித்தியம். ஆகையால் ஆத்மபேதங்கொள்ள வேணும். இப்போது இவர்களுக்குலக்ஷணம் சேஷத்வத்தோடே கூடினஜ்ஞாத்ருத்வம். இவர்களுடைய ஜ்ஞாநந்தான் ஸ்வரூபம்போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமா யிருக்கும். ஆனால் ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசியென்னென்னில், ஸ்வரூபம் - தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக்கு அயோக்யமாய்த், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாசிப்பியாமலே தனக்குத்தான் ப்ரகாசிக்கக்கடவதாய், அணுவாயிருக்கும். ஜ்ஞாநம் தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய்த், தன்னையொழிந்தவற்றை ப்ரகாசிப்பிக்கக்கடவதாய்த், தனக்குத்தான் ப்ரகாசியாதே ஆத்மாவுக்கு ப்ரகாசிக்கக்கடவதாய், விபுவாயிருக்கும். அதில் சிலருடைய ஜ்ஞாநம்-எப்போதும் விபுவாயிருக்கும். சிலருடைய ஜ்ஞாநம் - எப்போதும் அவிபுவாயிருக்கும். சிலருடைய ஜ்ஞாநம் - ஒருக்கால் விபுவாய் ஒருக்கால் அவிபுவாயிருக்கும். ஜ்ஞாநம் நித்யமாகில் எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நசித்ததென்கிறபடி யென்னென்னில், இந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது, மீளுவதாகையாலே அப்படி சொல்லக்குறையில்லை, இதுதானேகமா யிருக்கச்செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது, ப்ரஸரண பேதத்தாலே. த்ரவ்யமானபடி யென்னென்னில் - க்ரியாகுணங்களுக் காச்ரயமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், இருக்கையாலே, த்ரவ்யமாகக்கடவது. அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ வென்னில், ப்ரஸரண மில்லாமையாலே தோற்றாது. ஆநந்தரூபமாகையாவது—ஜ்ஞாநம் ப்ரகாசிக்கும்போது? அநுகூலமாயிருக்கை. விஷசஸ்த்ராதிகளைக்காட்டும்போது, ப்ரதிகூலமாயிருக்கைக்கடி தேஹாத்ம ப்ரமாதிகள். ஈச்வராத்மக மாகையாலே எல்லாப்பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம். ப்ராதிகூல்யம் வந்தேறி மற்றை ஆநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில், ஒருவனுக்கொருக்கால் ஓரிடத்திலே அநுகூலங்களான சந்தநகுஸுமாதிகள் தேசாந்தரே காலாந்தரே-இவன் றனக்கும், அத்தேசத்திலே அக்காலத்திலே வேறேயொருவனுக்கும் ப்ரதிகூலங்களாகக் கூடாது.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்.

—:o:—

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தத்வத்ரயம்.

அசித்ப்ரகரணம்.

அசித்து ஜ்ஞாநஶூந்யமாய், விகாராஸ்பதமா யிருக்கும். இது ஶுத்த ஸத்வமென்றும், மிஶ்ர ஸத்வ மென்றும், ஸத்வஶூந்ய மென்றும், த்ரிவிதம். இதில் ஶுத்த ஸத்வமாவது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே கேவல ஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்த ஜநகமாய், கர்மத்தா லன்றிக்கே கேவல பகவதிச்சையாலே விமாந, கோபுர, மண்டப, ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய், நிரவதிக தேஜோரூபமாய், நித்ய முக்தராலும் ஈஶ்வரனாலும் பரிச்சேதிக்க வரியதாய் அத்யத்புதமாயிருப்பதொன்று. இதைச் சிலர் - ஜடமென்றார்கள். சிலர் - அஜடமென்றார்கள். அஜடமானபோது - நித்யர்க்கும், முக்தர்க்கும், ஈஶ்வரனுக்கும், ஜ்ஞாநத்தை யொழியவுந் தோற்றும், ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது. ஆத்மாவிலும், ஜ்ஞாநத்திலும், பின்னமானபடி யென்னென்னில், நானென்று தோற்றாமையாலும், ஶரீரங்களாய்ப் பரிணமிக்கையாலும், விஷயங்களை யொழியவும் தானே தோற்றுகையாலும், ஶப்த ஸ்பர்ஶாதிக ளுண்டாகையாலும், பின்னமாகக்கடவது. மிஶ்ர ஸத்வமாவது - ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடி பத்த வேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய், விபரீத ஜ்ஞாந ஜநகமாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேஶ பேதத்தாலும், காலபேதத்தாலும், ஸத்ருஶமாயும், விஸத்ருஶமாயு மிருக்கும். விகாரங்களை உண்டாக்கக் கடவதாய், ப்ரக்ருதி, அவித்யை, மாயை, என்கிற பெயர்களை உடைத்தா யிருக்கும். அவித்ய விஶேஷம். ப்ரக்ருதி யென்கிறது - விகாரங்களைப் பிறப்பிக்கையாலே. அவித்யை யென்கிறது - ஜ்ஞாந விரோதி யாகையாலே - மாயை யென்கிறது - விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. இதுதான் (பொங்கைம் புலனும் பொறியைந்துங் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்கார மநங்கள) என்கிறபடியே, இருபத்துநாலு தத்வமாயிருக்கும். இதில் ப்ரதம தத்வம் - ப்ரக்ருதி. இது அவிபக்த தமஸ்ஸென்றும், விபக்த தமஸ்ஸென்றும், அக்ஷரமென்றும், சில அவஸ்தைகளை உடைத்தா யிருக்கும். இதில் நின்றும் குணவைஷம்யத்தாலே மஹதாதி விகாரங்கள் பிறக்கும். குணங்களாகின்றன - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள். இவை ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளான

ஸ்வபாவங்களாய், ப்ரக்ருத்யவஸ்தையில் அநபிபூதங்களாய், விகாரதசையி லபிபூதங்களா யிருக்கும். ஸத்வம் - ஜ்ஞாநஸுகங்களையும், உபய ஸங்கத்தையும், பிறப்பிக்கும். ரஜஸ்ஸு - ராகத்ருஷ்ணா ஸங்கங்களையும், கர்ம ஸங்கத்தையும், பிறப்பிக்கும். தமஸ்ஸு - விபரீத ஜ்ஞாநத்தையும், அநவதாநத்தையும், ஆலஸ்யத்தையும், நித்ரையையும், பிறப்பிக்கும். இவை ஸமங்களானபோது - விகாரங்கள் — ஸமங்களுமாய், அஸ்பஷ்டங்களுமாய் இருக்கும். விஷமங்களானபோது, விகாரங்கள் - விஷமங்களுமாய், ஸ்பஷ்டங்களுமாய் இருக்கும். விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் - மஹாந். இது ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று த்ரிவிதமாய், அத்யவஸாய ஜநகமாய் இருக்கும். இதில் நின்றும்-வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்று த்ரிவிதமான அஹங்காரம் பிறக்கும். அஹங்காரம் - அபிமாந ஹேதுவா யிருக்கும். இதில் - வைகாரிகத்தில் நின்றும் ஶ்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ராணங்களென்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் வாக் பாணி பாத பாயூபஸ்தங்க ளென்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், மநஸ்ஸும், ஆகிற பதினொரு இந்த்ரியங்களும் பிறக்கும். பூதாதியில் நின்றும் ஶப்த தந்மாத்ரை பிறக்கும். இதில் நின்றும் ஆகாஶமும், ஸ்பர்ஶ தந்மாத்ரையும்பிறக்கும். இதில்நின்றும் வாயுவும், ரூப தந்மாத்ரையும் பிறக்கும். இதில் நின்றும் தேஜஸ்ஸும், ரஸதந்மாத்ரையும் பிறக்கும். இதில் நின்றும் அப்பும், கந்த தந்மாத்ரையும் பிறக்கும், இதில் நின்றும் ப்ருதிவி பிறக்கும். ஸ்பர்ஶ தந்மாத்ரை தொடக்கமான நாலு தந்மாத்ரைகளும், ஆகாஶம் தொடக்கமான நாலு பூதங்களுக்கும் கார்யமாய், வாயு தொடக்கமான நாலு பூதங்களுக்கும் காரணமாய் இருக்கு மென்றுஞ் சொல்லுவர்கள். தந்மாத்ரைகளாகின்றன - பூதங்களினுடைய ஸூக்ஷ்மா வஸ்தைகள். மற்றை யிரண்டஹங்காரமும் ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கும்போது, ராஜஸாஹங்காரம் - ஸஹகாரியா யிருக்கும். ஸாத்விகாஹங்காரம் - ஶப்த தந்மாத்ராதி பஞ்சகத்தையும் அடைவே ஸஹகாரியாய்க் கொண்டு, ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்க ளைந்தையும் ஸ்ருஷ்டிக்கும், தத்ஸஹக்ருதமாய்க் கொண்டு வாகாதி கர்மேந்த்ரியங்க ளைந்தையும் ஸ்ருஷ்டிக்கும். இவற்றை யொழியத் தானே மநஸ்ஸை ஸ்ருஷ்டிக்கு மென்றுஞ் சொல்லுவர்கள். சிலர் இந்த்ரியங்களிலே சிலவற்றை பூதகார்ய மென்றார்கள்.

அது சாஸ்த்ரவிருத்தம். பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை. இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே, மண்ணையும்-மணலையும்-நீரையுஞ் சேர்த்தொரு த்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே, ஈஶ்வரனிவற்றை யெல்லாம் தன்னிலே சேர்த்தொரு அண்டமாக்கி, அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும் அண்டத்தையும், அண்டகாரணங்களையும், தானே யுண்டாக்கும். அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்த வஸ்துக்களைச் சேதநர்க்கந்தர்யாமியாய் நின்றுண்டாக்கும். அண்டங்கள்தான் அநேகங்களாய்ப், பதிநாலு லோகங்களோடேகூடி ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான ஏழாவரணங்களாலுஞ் சூழப்பட்டு, ஈஶ்வரனுக்கு க்ரீடாகந்துக ஸ்தாநீயங்களாய், ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும். பூதங்களில். ஆகாஶம் - அவகாஶஹேது, வாயு வஹநாதி ஹேது, தேஜஸ்ஸு .. பசநாதிஹேது, ஜலம்-ஸேசநபிண்டீகரணாதி ஹேது. ப்ருதிவி தாரணாதி ஹேது என்பர்கள். ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்துக்கும், அடைவே ஶப்தாதிகளைந்தையும் க்ரஹிக்கை தொழில். வாகாதிகர்மேந்த்ரியங்களைந்துக்கும் விஸர்கஶில்ப, கதி, உக்திகள், தொழில், மநஸ்ஸு-இவையித்தனைக்கும் பொது. ஆகாஶாதிபூதங்களுக்கு-அடைவே ஶப்தாதிகள் குணங்களாயிருக்கும். குணவிநிமயம் பஞ்சீகரணத்தாலே. ஆகாஶம் கறுத்துத்தோற்றுகிறதும் அத்தாலே. முன்புற்றை தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு, உத்தரோத்தர தந்மாத்ரைகள் - ஸ்வவிஶேஷங்களைப் பிறப்பிக்கையாலே, குணாதிக்யமுண்டாயிற்றென்றுஞ் சொல்லுவர்கள். ஸத்வஶூந்யமாவது-காலம், இது, ப்ரக்ருதி-ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய், கலாகாஷ்டாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடா பரிகரமாய், ஶரீரபூதமாயிருக்கும். மற்றை யிரண்டசித்தும், ஈஶ்வரனுக்கும் ஆத்மாவுக்கும், போக்ய போகோபகரண போக ஸ்தாநங்களா யிருக்கும். போக்யங்களாகிறன - விஷயங்கள். போகோப கரணங்களாகிறன - சக்ஷுராதி கரணங்கள். போகஸ்தாநங்களாகிறன - சதுர்தஶ புவநங்களும், ஸமஸ்த தேஹமும். இதில் முற்பட்ட அசித்துக்குக் கீழெல்லையுண்டாய்ச் சுற்றும் மேலும் எல்லையின்றிக்கே யிருக்கும்; நடுவில் அசித்துக்குச் சுற்றுங் கீழுமெல்லையின்றிக்கே மேலெல்லையுண்டாயிருக்கும்; காலமெங்குமொக்க உண்டாயிருக்கும். காலந்தான்

பரமபதத்திலே நித்யம்; இங்கு அநித்யமென்றுஞ் சொல்லுவர்கள். பப்ர - காலத்தை இல்லை யென்றார்கள். ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும், ஸித்தியிக்கையாலே அது சொல்லவொண்ணாது. பலரும் திக்கென்று தனியே ஒருத்ரவ்யம் உண்டென்றார்கள்; பலஹேதுக்களாலும், ஆகாஶாதிகளிலே அந்தர்பூதமாகையாலே அதுவுஞ் சேராது. சிலர், ஆவரணாபாவம் - ஆகாஶமென்றார்கள். பாவரூபேண தோற்றுகையாலே அதுவுஞ்சேராது. வேறே ஶிலர் - இது தன்னை நித்யம், நிரவயவம், விபு, அப்ரத்யக்ஷ மென்றார்கள்; பூதாதியிலே பிறக்கையாலும், அஹங்காராதிகளில்லாமையாலும், கண்ணுக்கு விஷயமாகையாலும், அவ்வவநாலுஞ் சேரா. த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகையாலே, வாயு அப்ரத்யக்ஷ மென்கிறவதுவுஞ்சேராது. தேஜஸ்ஸு-ஸௌமாதிபேதத்தாலே பஹுவிதம்-அதில் ஆதித்யாதி தேஜஸ்ஸு ஸ்திரம், தீபாதிதேஜஸ்ஸு அஸ்திரம். தேஜஸ்ஸுக்கு நிறம் - சிவப்பு; ஸ்பர்ஶம்-ஔஷ்ண்யம். ஜலத்துக்குநிறம்-வெளுப்பு. ஸ்பர்ஶம்-ஶைத்யம்ரஸம்-மாதுர்யம். பூமிக்கு நிறமும்-ரஸமும்-பஹுவிதம். ஸ்பர்ஶம்-இதுக்கும், வாயுவுக்கும், அநுஷ்ணாஶீதம். இப்படி அசித்து மூன்றுபடிப் பட்டிருக்கும்.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

———:o:———

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:,

தத்வத்ரயம்-ஈஶ்வரப்ரகரணம்.

ஈஶ்வரன் அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய், ஜ்ஞாந ஶக்த்யாதி கல்யாண குணகண விபூஷிதனாய், ஸகல ஜகத் ஸர்கஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய், ஆர்த்தோஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ - என்கிறசதுர்விதபுருஷர்களுக்கு ஆஶ்ரயணீயனாய், தர்மார்த்தகாம மோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதனாய், விலக்ஷண விக்ரஹ யுக்தனாய், லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாயிருக்கும். அகிலஹேய ப்ரத்யநீகனாகையாவது-தமஸ்ஸுக்குத் தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும், விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடனாயிருக்கை. அநந்தனாகையாவது-நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியாய் இருக்கை. அந்தர்யாமியானால் தோஷங்கள் வாராதோவென்னில், ஶரீரகதங்களான பால்யாதிகள் ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே, த்ரி

வியசேதநாசேதநதோஷமும், ஈஶ்வரனுக்கு வாராது. ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாகையாவது-ஆநந்தரூப ஜ்ஞாநனாயிருக்கை. அதாவது கட்டடங்க அநுகூலமாய் ப்ரகாஶமுமாயிருக்கை. இவனுடைய ஜ்ஞாந ஶக்த்யாதி கல்யாணகுணங்கள் நித்யங்களாய், நிஸ்ஸீமங்களாய், நிஸ்ஸங்க்யங்களாய், நிருபாதிகங்களாய், நிர்தோஷங்களாய், ஸமாநாதிகரஹிதங்களா யிருக்கும். இவற்றில் வாத்ஸல்யாதிகளுக்குவிஷயம்-அநுகூலர். ஶௌர்யாதிகளுக்குவிஷயம்-ப்ரதிகூலர். இவற்றுக்குக் காரணமானஜ்ஞாந ஶக்த்யாதிகளுக்கு எல்லாரும் விஷயம். ஜ்ஞாநம்-அஜ்ஞர்க்கு. ஶக்தி-அஶக்தர்க்கு. க்ஷமை-ஸாபராதர்க்கு. க்ருபை-துக்கிகளுக்கு. வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு. ஶீலம்-மந்தர்க்கு. ஆர்ஜவம்-குடிலர்க்கு, ஸௌஹார்தம் - துஷ்டஹ்ருதயர்க்கு. மார்தவம் - விஶ்லேஷபீருக்களுக்கு. ஸௌலப்யம்-காண ஆசைப்பட்டவர்களுக்கு. இப்படியெங்குங் கண்டுகொள்வது. இப்படி ஈஶ்வரன் கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே, பிறர் நோவுகண்டால் ஐயோ வென்றிரங்கி அவர்களுக்கெப்போது மொக்க நன்மையே சிந்தித்துத், தனக்கேயாயிருத்தல், தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே பிறர்க்கேயாய்த், தன்னை ஆஶ்ரயித்தவர்கள் பக்கல் ஜந்மஜ்ஞாந வ்ருத்தங்களாலுண்டான நிகர்ஷம் பாராதே, தாங்களும் பிறருந் தஞ்சமல்லாதபோது தான் தஞ்சமாய், ஸாந்தீபநிபுத்ரனையும், வைதிகன் புத்திரர்களையும், மீட்டுக்கொண்டு வந்தாற்போலே அரியனசெய்தும், அவர்கள் அபேக்ஷிதங்களைத்தலைக்கட்டியும் அவர்களுக்குத்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையும் உண்டாக்கியும் தந்தாம் ஸ்வம்தாந்தாம் விநியோகங்கொண்டாற்போலே யிருக்கத் தன்னையும், தன்னுடைமையையும் வழங்கி, அவர்கள் கார்யந் தலைக்கட்டினால் தான் க்ருதக்ருத்யனாய்த், தான்செய்த நன்மைகளொன்றையும்-நினையாதே அவர்கள்செய்த ஸுக்ருத லவத்தையேநினைத்து, அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி எல்லாதஶையிலும் இனியனாய், பார்யா புத்ரர்கள் குற்றங்களைக் காணக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே, அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால் நினையாதே, குற்றங்களைப் பெரிய பிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமிநியுடைய அழுக்குகக்கும் காமுகனைப்போலே, அவர்கள்

ஷோஷங்களை ஹோமீயமாகக்கொண்டு, அவர்கள்பக்கல் கரணத்ரயத்தாலும் செவ்வியனாய்ப், பிரிந்தால்-அவர்கள் வ்யஸநங் குளப்படி யென்னும்படி தானீடுபட்டு, அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத்தாழவிட்டு, அவர்களுக்குக்கட்டவும் அடிக்கவுமாம்படி எளியனாய், அன்றீன்ற கன்றுக்குத்தாயிரங்கி முன்னணைக்கன்றையும், புல்லிட வந்தவர்களையும், கொம்பிலுங் குளம்பிலும் ஏற்குமாபோலே பெரிய பிராட்டி-யாரையும், ஸூரிகளையும், விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும். இவனே ஸகல ஜகத்துக்குங் காரணபூதன். சிலர் பரமாணுவைக்காரணமென்றார்கள். பரமாணுவில் ப்ரமாணமில்லாமையாலும்,ஶ்ருதிவிரோதத்தாலும்,அதுசேராது.காபிலர்-ப்ரதாநம் காரணமென்றார்கள். ப்ரதாநம் அசேதநமாகையாலும், ஈஶ்வரன் அதிஷ்டியாதபோது பரிணமிக்கமாட்டாமையாலும்,ஸ்ருஷ்டி ஸம்ஹார-வ்யவஸ்தைகூடாமையாலும்,அதுவுஞ்சேராது. சேதநனுங் காரணமாகமாட்டான்,கர்மபரதந்த்ரனுமாய்,து:க்கியுமாயிருக்கையாலே. ஆகையால் ஈஶ்வரன் தானே ஜகத்துக்குக்காரணம், இவன் காரணமாகிறது - அவித்யாகர்ம பரநியோகாதிகளால் அன்றிக்கே, ஸ்வேச்சையாலே - ஸ்வஸங்கல்பத்தாலே - செய்கையாலே இது தான் வருத்தமற்றிருக்கும். இதுக்கு ப்ரயோஜநம் கேவல லீலை. ஆனால் ஸம்ஹாரத்தில் லீலைகொலையாதோ வென்னில், ஸம்ஹாரந் தானும் லீலையாகையாலே கொலையாது. இவன்தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதாநமுமா யிருக்கும். ஆனால் நிர்விகாரனென்னும்படி யென்னென்னில், ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே நிர்விகாரனென்னக் குறையில்லை. ஆனால் பரிணாமம் உண்டாம்படி யென்னென்னில்; விஶிஷ்ட விஶேஷண ஸத்வாரகமாக. ஒரு ஶிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வ ஶக்திக்குக் கூடாதொழியாதிறே. ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது - அசித்தைப்பரிணமிப்பிக்கையும், சேதநர்க்கு ஶரீரேந்த்ரியங்களைக் கொடுத்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணுகையும். ரக்ஷிப்பிக்கையாவது - ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே பயிருக்கு நீர்நிலைபோலே, அநுகூலமாக ப்ரவேஶித்து நின்று ஸர்வரக்ஷைகளையும் பண்ணுகை. ஸம்ஹரிக்கையாவது-அவிநீதனான புத்ரனைப் பிதா விலங்கிட்டு வைக்குமாபோலே, விஷயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களைக் கொலைத்திட்டுவைக்கை. இம்மூன்றுந் தனித்தனியே நாலுப்ரகாரமா யிருக்

கும். ஸ்ருஷ்டியில் ஸ்ரீ ரம்ஹாவுக்கும், ப்ரஜாபதிகளுக்கும், காலத்துக்கும், ஸகலஜந்துக்களுக்கும் அந்தர்யாமியாய் ரஜோகுணத்தோடேகூடி ஸ்ருஷ்டிக்கும். ஸ்திதியில் விஷ்ண்வாதி ரூபேண அவதரித்து மந்வாதி முகேந ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து, நல்வழி காட்டிக், காலத்துக்கும், ஸகலபூதங்களுக்கும், அந்தர்யாமியாய் ஸத்வகுணத்தோடே கூடிஸ்திதிப்பிக்கும். ஸம்ஹாரத்தில் - ருத்ரனுக்கும், அக்நியந்தகாதிகளுக்கும், காலத்துக்கும், ஸகல பூதங்களுக்கும், அந்தர்யாமியாய் தமோகுணத்தோடே கூடிஸம்ஹரிக்கும். சிலரை ஸுகிகளாகவும், சிலரை துக்கிகளாகவும், ஸ்ருஷ்டித்தால் ஈஶ்வரனுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்கள் வாராதோ என்னில் கர்ம மடியாகச் செய்கையாலும் மண்தின்ற ப்ரஜையை நாக்கிலேகுறியிட்டு அஞ்சப்பண்ணும் மாதாவைப்போலே ஹிதபரனாய்ச் செய்கையாலும் வாராது. இவன்தான் (முந்நீர்ஞாலம் படைத்தவெம் முகில்வண்ணன்) என்கிறபடியே ஸவிக்ரஹனாய்க்கொண்டு, ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணும். விக்ரஹந்தான் - ஸ்வரூபகுணங்களில்காட்டில் அத்யந்தாபிமதமாய், ஸ்வாநுரூபமாய், நித்யமாய், ஏகரூபமாய், ஶுத்த ஸத்வாத்மகமாய்ச், சேதநதேஹம்போலே ஜ்ஞாநமயமான ஸ்வரூபத்தை மறைக்கையன்றிக்கே, மாணிக்கச்செப்பிலே பொன்னை யிட்டுவைத்தாற்போலேயிருக்கும், பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குப்ரகாஶகமாய், நிரவதிக தேஜோரூபமாய், ஸௌகுமார்யாதிகல்யாணகுணநிதியாய், யோகித்யேயமாய், ஸகலஜநமநோஹரமாய், ஸமஸ்த ஹேய விராகஜநகமாய், நித்ய முக்தாநுபாவ்யமாய், வாசத்தடம்போலே ஸகல தாபஹரமாய், அநந்தாவதாரகந்தமாய், ஸர்வரக்ஷகமாய், ஸர்வாபாஶ்ரயமாய், வஸ்த்ரபூஷண பூஷித மாயிருக்கும். ஈஶ்வரஸ்வரூபந்தான்-பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம், என்றஞ்சு ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். அவற்றில் பரத்வமாவது-அகாலகால்யமான நலமந்தமில்லாதோர்நாட்டிலே நித்யமுக்தர்க்கு போக்யனாய்க் கொண்டெழுந்தருளியிருக்கும் இருப்பு வ்யூஹமாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரார்த்தமாகவும், ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும், உபாஸகாநுக்ரஹார்த்தமாகவும், ஸங்கர்ஷண-ப்ரத்யும்ந - அநிருத்த ரூபேண நிற்குநிலை. இதில் பரத்வத்தில்

ஜ்ஞாநாதிகளாலும் பூர்ணமாயிருக்கும் - வ்யூஹத்தில் இவ்விரண்டு குணம்ப்ரகடமாயிருக்கும். அவற்றில் ஸங்கர்ஷணர்-ஜ்ஞாநபலங்களிரண்டோடுங்கூடி-, ஜீவதத்வத்தை அதிஷ்டித்து, அத்தை ப்ரக்ருதியினின்றும் விவேகித்து, ப்ரத்யும்நாவஸ்தையையும் பஜித்து, ஶாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும், ஜகத்ஸம்ஹாரத்தையும், பண்ணக்கடவராயிருப்பர். ப்ரத்யும்நர் - ஐஶ்வர்ய வீர்யங்க ளிரண்டோடுங்கூடி, மநஸ்தத்வத்தை அதிஷ்டித்து, தர்மோபதேஶத்தையும், மநு சதுஷ்டயந் தொடக்கமான ஶுத்தவர்க ஸ்ருஷ்டியையும் பண்ணக்கடவராயிருப்பர். அநிருத்தர் - ஶக்தி தேஜஸ்ஸுக்க ளிரண்டோடுங்கூடி, ரக்ஷணத்துக்கும், ஜ்ஞாநப்ரதாநத்துக்கும், காலஸ்ருஷ்டிக்கும், மிஶ்ரஸ்ருஷ்டிக்கும்கடவராயிருப்பர். விபவம்-அநந்தமாய், கௌண முக்ய பேதத்தாலே பேதித்திருக்கும். மநுஷ்யத்வம், திர்யக்த்வம், ஸ்தாவரத்வம்போலே கௌணத்வமும் இச்சையாலேவந்தது; ஸ்வரூபேண அன்று. அவற்றில்அப்ராக்ருதவிக்ரஹங்களுமாய், அஜஹத்ஸ்வபா விகங்களுமாய், தீபாதுத்பந்ந ப்ரதீபம்போலே யிருக்கக்கடவதான முக்ய ப்ராதுர்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களா யிருக்கும். விதி, ஶிவ, பாவக, வ்யாஸ, ஜாமதக்ந்யார்ஜுந, வித்தேஶாதிகளாகிற கௌணப்ராதுர்பாவங்களெல்லாம் அஹங்கார யுக்த ஜீவர்களை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யங்கள். நித்யோதித ஶாந்தோதிதாதி பேதமும், ஜாக்ரத் ஸம்ஜ்ஞாதியான சாதுராத்ம்யமும், கேஶவாதி மூர்த்யந்தரமும், ஷட்த்ரிம்ஶத் பேத பிந்நமான பத்மநாபாதி விபவமும், உபேந்த்ர, த்ரிவிக்ரம, ததிபக்த, ஹயக்ரீவ, நரநாராயண, ஹரிக்ருஷ்ண, மத்ஸ்ய, கூர்ம, வராஹாத்யவதார விஶேஷங்களும், அவற்றினுடைய புஜாயுத வர்ண க்ருத்ய ஸ்தாநாதி பேதங்களும், துரவதாரங்களுமாய், குஹ்யதமங்களுமாய் இருக்கையாலே சொல்லுகிறிலோம். அவதாரங்களுக்குஹேது இச்சை. பலம்-ஸாது பரித்ராணாதித்ரயம். பலப்ரமாணங்களிலும் ப்ருகுஶாபாதிகளாலே பிறந்தானென்கையாலே, அவதாரங்களுக்குஹேது. கர்மமாக வேண்டாவோவென்னில், அவை தன்னிலே ஶாபம் வ்யாஜம். அவதாரம் ஐச்சிகமென்று பரிஹரித்தது, அந்தர்யாமித்வமாவது-அந்தஃப்ரவிஶ்ய நியந்தாவாயிருக்கை. ஸ்வர்க நரக ப்ர

வேசாதி ஸர்வாவஸ்தைகளிலும் ஸகலசேதநர்களுக்குந் துணையாய், அவர்களை விடாதே நிற்கிற நிலைக்குமேலே ஸௌலப்யமான திருமேனியோடே கூடிக்கொண்டு, அவர்களுக்கு த்யேயனுகைக்காகவும், அவர்களை ரக்ஷிக்கைக்காகவும் வந்யனுதனுய்க்கொண்டு ஹ்ருதய கமலத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பு. அர்ச்சாவதாரமாவது - (தமருகந்ததெவ்வுருவமவ்வுருவம்) என்கிறபடியே சேதநர்க்கபிமதமான த்ரவ்யங்களிலே விபவவிசேஷங்களைப் போலன்றிக்கே, தேசகாலாதிகாரி நியமமில்லாதபடி ஸந்நிதிபண்ணி, அபராதங்களைக் காணக்கண்ணிட்டு, அர்ச்சகபரதந்த்ரமான ஸமஸ்த வ்யாபாரங்களையும் உடையனுய்க்கொண்டு, கோயில்களிலும், திருஹங்களிலும், எழுந்தருளி நிற்கும்நிலை. ருசிஜநகத்வமும், ஸௌலப்யத்வமும், அசேஷலோக சரண்யத்வமும், அநுபாவ்யத்வமும், எல்லாம் அர்ச்சாவதாரத்திலே பரிபூர்ணம். ஸ்வஸ்வாமிபாவத்தை மாறுடிக்கொண்டு அஜ்ஞரைப்போலேயும், அசக்தரைப்போலேயும், அஸ்வதந்த்ரரைப்போலேயும், இருக்கச்செய்தேயும் அபாரகாருண்ய பரவசனுய்க்கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளும்.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

அர்த்தபஞ்சகம்.

ஸம்ஸாரியான சேதநனுக்குத் தத்வஜ்ஞாநம் பிறந்து உஜ்ஜீவிக்கும்போது, அர்த்தபஞ்சக ஜ்ஞாநம் உண்டாகவேணும். அர்த்தபஞ்சகமாவது - ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, புருஷார்த்தஸ்வரூப, உபாயஸ்வரூப, விரோதிஸ்வரூபங்களை, உள்ளபடி அறிகை. இவற்றில் ஒரொரு விஷயந்தான் அஞ்சுபடிப்பட்டிருக்கும். ஸ்வஸ்வரூப மென்கிறது ஆத்மஸ்வரூபத்தை. ஆத்மஸ்வரூபந்தான் - நித்யர், முக்தர், பத்தர், கேவலர், முமுக்ஷுக்களென்றைந்து - பரஸ்வரூபமென்கிறது - பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்றைந்து. புருஷார்த்தஸ்வரூப மென்கிறது - புருஷனாலே அர்த்திக்கப்படுமது புருஷார்த்தம். அந்தப்புருஷார்த்தந்தான் - தர்ம, அர்த்த, காம, ஆத்மாநுபவ, பகவதநுபவ மென்றைந்து. உபாயஸ்வரூப மென்கிறது - கர்ம, ஜ்ஞாந, பக்தி, ப்ரபத்தி, ஆசார்யாபிமாநமென்

றைந்து. விரோதிஸ்வரூப மென்கிறது - ஸ்வரூபவிரோதி, பரத்வ விரோதி, புருஷார்த்தவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்திவிரோதி யென்றைந்து. இவற்றில் நித்யராவார்-ஒருநாளும் ஸம்ஸார ஸம்பந்தமாகிற அவத்யமின்றிக்கே நிரவத்யராய், பகவதநுபவாநுகூல்யைகபோகராய், (வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன்) என்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கு (விண்ணாட்டவர் மூதுவர்) என்கிறபடியே பட்டங்கட்டுகைக் குரியராம்படி மூப்பரான மந்த்ரிகளாய், ஈச்வரநியோகாத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் பண்ணவும் சக்தராய், பரவ்யூஹாதி ஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்தடிமை செய்யக்கடவராய் கோயில்கொள் தெய்வங்களான ஸேனைமுதலியார் தொடக்கமான அமரர்கள், முக்தராவார்-பகவத் ப்ரஸாதத்தாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த க்லேசமலங்களெல்லாம் கழிந்து, பகவத்ஸ்வரூப, ரூப, குண, விபவங்களை அநுபவித்து, அநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே வாயாரப்புகழ்ந்து, மீட்சியின்றி, வைகுந்தமாநகரத்திலே களித்தாநந்திக்கிறமுநிவர்கள். பத்தராவார்-பாஞ்சபௌதிகமாய, அநித்யமாய், ஸுகதுக்காநுபவ பரிகரமாய், ஆத்மவிச்லேஷத்தில் தர்சநஸ்பர்சநயோக்யமில்லாதபடி அசுசியாஸ்பதமாய், அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ஜநகமான ஸ்வதேஹமே ஆத்மாவாகவும், சப்தாதி விஷயாநுபவ ஜநிதமான ஸ்வதேஹ போஷணமே புருஷார்த்தமாகவும், சப்தாதி விஷய லாபத்துக் குறுப்பாக வர்ணாச்ரம தர்மங்களை அழியமாறியும், அஸேவ்யஸேவை பண்ணியும், பூதஹிம்ஸை பண்ணியும், பரதார பரத்ரவ்யாபஹாரம் பண்ணியும், ஸம்ஸாரவர்த்தகராய், பகவத் விமுகரான சேதநர். கேவலனாவான் - தனியிடத்திலே மிகவும் க்ஷுத்பிபாஸைகளாலே நலிவுபட்டவன், பக்ஷ்யாபக்ஷ்ய விவேகம் பண்ணமாட்டாதே தன்னுடம்பைத் தானேஜீவித்து ப்ரஸந்நனுமாபோலே ஸம்ஸார தாபாக்நியாலே தப்தனானவன், ஸம்ஸார துக்க நிவ்ருத்திக்கு உறுப்பாக சாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம்பண்ணி, ப்ரக்ருதி துக்காச்ரயமாய், ஹேயபதார்த்த ஸமுதாயமாய் இருக்கிற ஆகாரத்தையும், ஆத்மா ப்ரக்ருதே:பரனாய் பஞ்சவிம்சகனாய், ஸ்வயம்ப்ரகாசனாய், ஸ்வதஸ்ஸுகியாய், நித்யனாய், அப்ராக்ருதனாய் இருக்கிற ஆகாரத்தையும் அநுஸந்தித்து, முன்பு தான்பட்ட துக்கத்தின் பயத்தாலே இவ்வல்பரஸத்திலே கால்தா

ழ்ந்து உணர்முழுநலமான பரமாத்ம விவேகம் பண்ணமாட்டாதே, (அமுதவெள்ளத்தானுஞ்சிறப்புவிட்டு) அவ்வாத்மப்ராப்திக்குஸாயநமான ஜ்ஞாநயோகத்திலேநிஷ்஠னாய், யோகஃபலமான ஆத்மாநுபவமாத்ரத்தையேபுருஷார்யமாக அநுபவித்துப், பின்புஸம்ஸாரஸம்பந்யமும், பகவத்ப்ராப்தியும் அற்று, யாவதாத்மபாவி அஶரீரியாய்க் கொண்டு திரிவானொருவன். மோக்ஷத்திலே இச்சை யுடையவர்களுக்கு முமுக்ஷுக்களென்று பேராகக்கடவது. இதுதான் முமுக்ஷுக்களாய்உபாஸகராயிருப்பாரும், முமுக்ஷுக்களாய் ப்ரபந்நராயிருப்பாருமாயிரண்டுபடிப்பட்டிருக்கும். ஈஶ்வரவிஷயத்தில் பரத்வமாவது-பரமபதத்திலே (அவாக்யநாதர:) என்றெழுந்தருளி யிருக்கிற ஆதியஞ்சோதி யுருவான பரவாஸுதேவர். வ்யூஹமாவது-ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள். விபவமாவது - ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள். அந்தர்யாமித்வம் - இரண்டுபடிப்பட்டிருக்கும், அதாவது-(அடியேனுள்ளான்) என்றும், (எனதாவி) என்றும், (என்னுயிர்) என்றும், சொல்லுகிறபடியே ஆத்மாவுக்குள்ளும், (போதிற்கமலவென் னெஞ்சம்புகுந்து) என்றும், (அரவிந்தப்பாவையுந் தானுமகம்படி வந்துபுகுந்து) என்றும், (புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன்) என்றும், (உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறிதி) என்றும், சொல்லுகிறபடியே லக்ஷ்மீஸஹிதனாய், விலக்ஷணவிக்ரஹனாய்க்கொண்டு, ஹ்ருதய கமலத்துக்குள்ளே ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் ஸதாவலோகநம் பண்ணிக்கொண்டு, எழுந்தருளியிருக்கு மிருப்பு. அர்ச்சாவதாரமாவது - (தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்த தெப்பேர்மற்றப்பேர்) என்கிறபடியே தனக்கென்ன ஓருருவும், ஓர் பெயரும் இன்றிக்கே ஆஶ்ரிதருகந்தவடிவே வடிவாகவும், அவர்களிட்டபெயரோ பெயராகவும், ஸர்வஜ்ஞனா யிருக்கச்செய்தே அஜ்ஞனைப்போலேயும், ஸர்வஶக்தனா யிருக்கச்செய்தே அஶக்தனைப் போலேயும், அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கச்செய்தே ஸாபேக்ஷனைப் போலேயும், ரக்ஷகனாயிருக்கச்செய்தே ரக்ஷ்யம்போலேயும் ஸ்வஸ்வாமிபாவத்தை மாறுடிக்கொண்டு, கண்ணுக்குவிஷயமாம்படி ஸர்வஸுலபனாய்க்கொண்டு, கோயில்களிலும், க்ருஹங்களிலும், தேஶகாலாவதி இன்றிக்கே எழுந்தருளியிருக்கும் நிலை. புருஷார்யங்களில் தர்மமாவது - ப்ராணிரக்ஷணத்துக் குறுப்பாகப்பண்ணும் வ்ரு

த்தி விஶேஷங்கள். அர்த்தமாவது - வர்ணாஶ்ரமாநுரூபமாக தநதா
ந்யங்களை ஸங்க்ரஹித்து தேவதாவிஷயங்களிலும் பைத்ருகமான
கர்மங்களிலும், ப்ராணிகள் விஷயமாகவும், உத்க்ருஷ்டமான தேஶ
காலபாத்ரங்களையறிந்து, தர்மபுத்தியாவ்யயிக்கை. காமமாவது -
ஐஹலௌகிகமாயும், பாரலௌகிகமாயும், த்விவிதமாயிருக்கும். இஹ
லோகத்தில் காமமாவது - பித்ருமாத்ரு ரத்நதநதாந்ய வஸ்த்ராந்நபாந
புத்ர மித்ர களத்ர பஶுக்ருஹ க்ஷேத்ர சந்தந குஸுமதாம்பூ
லாதி பதார்த்தங்களில் ஶப்தாதி விஷயாநுபவத்தால்வந்த ஸுகவி
ஶேஷங்கள். பரலோகத்தில் காமமாவது - இதில் விலக்ஷணமாய்த்,
தேஜோரூபமான ஸ்வர்க்காதி லோகங்களிலே சென்று, பசி தாஹ
ஶோக மோஹ ஜராமரணாதிகள் இன்றிக்கே, ஆர்ஜித்த புண்யத்
துக்கீடாக அம்ருதபாநம்பண்ணி, அப்ஸரஸ்ஸுக்களோடே ஶப்
தாதி விஷயாநுபவம்பண்ணுகை. ஆத்மாநுபவமாவது - துக்கநிவ்
ருத்தி மாத்ரமான கேவலாத்மாநுபவ மாத்ரத்தையும் மோக்ஷமெ
ன்று சொல்லுவர்கள். இனி பகவதநுபவ ரூபமான பரமபுருஷார்த்த
லக்ஷணமோக்ஷமாவது - ப்ராரப்த கர்மஶேஷமாய் அவஶ்ய மநு
பாவ்யமான புண்யபாபங்கள்நஶித்து, அஸ்தி, ஜாயதே, பரிணமதே,
விவர்த்ததே. அபக்ஷீயதே. விநஶ்யதே,) என்கிறபடியே ஷட்பாவ
விகாராஸ்பதமாய்த், தாபத்ரயாஶ்ரயமாய், பகவத் ஸ்வரூபத்தை
மறைப்பித்து, விபரீதஜ்ஞாநத்தை ஜநிப்பிக்கக்கடவதாய், ஸம்ஸார
வர்த்தகமான ஸ்தூல ஶரீரத்தை உபேக்ஷையோடே போகட்டு,
ஸுஷும்ந நாடியாலே ஶிரஃகபாலத்தை பேதித்துப் புறப்பட்டு,
ஸூக்ஷ்ம ஶரீரத்தோடே (வானேறவழிபெற்று, மன்னுங்கடுங்கதி
ரோன்மண்டலத்தினன்னடுவுள்ளனதோரெல்லையினூடுபோய்) ஸூ
க்ஷ்ம ஶரீரத்தையும், வாஸநாரேணுவையும், விரஜாஸ்நாநத்தாலே
கழித்து. ஸகலதாபங்களுமாறும்படி அமாநவகரஸ்பர்ஶமும்பெற்று
ஶுத்தஸத்வாத்மகமாய்ப் பஞ்சோபநிஷண்மயமாய், ஜ்ஞாநாநந்த
ஜநகமாய், பகவதநுபவைகபரிகரமாய், ஒளிக்கொண்டசோதியுமாய்
இருக்கிற அப்ராக்ருத விக்ரஹத்தைப்பெற்று, முடியுடைவானவர்
முறைமுறை யெதிர்கொள்ள நிரதிஶயாநந்த மயமான திருமாமணி
மண்டபத்தை ப்ராபித்து, லக்ஷ்மீஸஹிதனாய், பூமி நீளாநாயக
னாய் விலக்ஷணவிக்ரஹயுக்தனாய்க் (குழுமித்தேவர் குழாங்கள் கை
தொழச் சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருருவான ஸ்ரீவைகு

ண்டநாயனை நித்யாநுபவம்பண்ணி, நித்யகிங்கரஸ்வபாவனாகை. உபாயங்களில் கர்மயோகமாவது-யஜ்ஞ, தாந, தபோ, த்யாந, ஸந்த்யாவந்தந, பஞ்சமஹாயஜ்ஞாக்நிஹோத்ர, தீர்த்தயாத்ர, புண்யக்ஷேத்ரவாஸ, க்ருச்ச்ர, சாந்த்ராயண புண்யநதீஸ்நாந, வ்ரத, சாதுர்மாஸ்ய, பலமூலாஶந, ஶாஸ்த்ராப்யாஸ, ஸமாராதந, ஜப, தர்பணாதி கர்மாநுஷ்டாநத்தால் வந்த காயஶோஷணத்தாலே பாபநாஶம் பிறந்து, அத்தாலே இந்த்ரிய த்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூத ஜ்ஞாநத்துக்கு ஶப்தாதிகள் விஷயமல்லாமையாலே விஷயஸாபேக்ஷை பிறந்து, யமநியமாஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாநதாரண ஸமாதிரூபமான அஷ்டாங்கயோக க்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும், ஜ்ஞாநத்துக்குஆத்மாவைவிஷயமாக்குகை. இதுதான் ஜ்ஞாநயோகத்துக்குஸஹகாரியாய், ஐஶ்வர்யத்துக்கு ப்ரதாநஸாதநமுமாயிருக்கும். ஜ்ஞாநயோகமாவது-இப்படி யோகஜந்யமான ஜ்ஞாநத்துக்கு ஹ்ருதயகமலம், ஆதித்யமண்டலம்தொடக்கமான ஸ்தலவிஶேஷங்களில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனை விஷயமாக்கி, அவ்விஷயந்தன்னை ஶங்க, சக்ர, கதா தரமாய், பீதாம்பரயுக்தமாய், கிரீடாதி நூபுராந்த திவ்யபூஷணாலங்க்ருதமாய், லக்ஷ்மீஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவகாலத்தைப்பெருக்கி அநவரத பாவநாரூபமாக்குகை. இதுதான் பக்தியோகத்துக்கு ஸஹகாரியுமாய், கைவல்ய மோக்ஷத்துக்கும் ப்ரதாநஸாதநமுமாய் இருக்கும். பக்தியோகமாவது-இப்படி தைலதாராவதவிச்சின்ன ஸ்ம்ருதி ஸந்தாநரூபமான அநுபவம் ப்ரீதிரூபாபந்நமாக்குகையும், அது தன்னை யறியப்பார்த்தால் ப்ராரப்த கர்மங்கழிகையும், ஸாதந ஸாத்யங்களை யநுஸந்தித்து, அதினுடைய ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிப்பிக்கையும். ப்ரபத்யுபாயமாவது - இப்படி கர்ம ஜ்ஞாநஸஹக்ருதையான பக்தியோகத்தில் அஶக்தர்க்கும், அப்ராப்தர்க்கும், ஸுகரமுமாய், ஶீக்ர பலப்ரதமுமாய், உபாயம் ஸக்ருத்தாகையாலே உபாயாநுஷ்டாந ஸமநந்தரமுண்டாகக்கடவதான பகவத்விஷயாநுபவங்களெல்லாம் ப்ராப்யகோடி யடிதங்களாகையாலே ஸ்வரூபாநுரூபமாயிருக்கும். இதுதான் ஆர்த்தரூப ப்ரபத்தியென்றும், த்ருப்தரூப ப்ரபத்தியென்றும், இரண்டுபடிப்பட்டிருக்கும். ஆர்த்தரூபப்ரபத்தியாவது - நிர்ஹேதுக பகவத்கடாக்ஷமடியாக ஶாஸ்த்ராப்யாஸத்தாலும், ஸதாசார்யோப

தேஶத்தாலும், யதாஜ்ஞாநம் பிறந்தவாறே பகவதநுபவத்துக்கு விபரீதமான தேஹஸம்பந்தமும், தேஶஸம்பந்தமும், தேஶிகருடையஸஹவாஸமும், துஸ்ஸஹமாய் பகவதநுபவத்துக்கு ஏகாந்தமாம்படி விலக்ஷணமான வேஷத்தையும், தேஶத்தையும், தேஶிகரையும்ப்ராபிக்கையில்த்வரைவிஞ்சி, (ஓயுமூப்புப்பிறப்பிறப்புப்பிணிவீமாறுசெய்வான் திருவேங்கடத்தான்) ஆகையாலே (திருவேங்கடத்தானே புகலொன்றில்லா வடியேன்) (வேங்கடத்துறைவார்க்குநம:) என்றுபூர்ணப்ரபத்திபண்ணிப், (பலநீகாட்டிப்படுப்பாயோவின்னங்கெடுப்பாயோ,) இக்கரையேறியிளைத்திருந்தே னினியடையவருளாய் (திருவாணை நின்னாணைகண்டாய் இனிநான்போகலொட்டேன்) என்று தடுத்தும், வளைத்தும், பெறுகை. த்ருப்தரூப ப்ரபத்தியாவது - ஶரீராந்தர ப்ராப்தியிலும், ஸ்வர்கநரகாநுபவங்களிலும், விரக்தியும், பீதியும் பிறந்து அதினுடைய நிவ்ருத்திக்கும், பகவத்ப்ராப்திக்கும், உறுப்பாக ஸதாசார்யோபதேஶ க்ரமத்தாலே உபாயஸ்வீகாரம்பண்ணி, விபரீதப்ரவ்ருத்தி நிவ்ருத்தராய், வேதவிஹிதமான வர்ணாஶ்ரமாநுஷ்டாநமும், பகவத்பாகவத கைங்கர்யமும், மாநஸவாசககாயகங்களாலே யதாபலமநுஷ்டித்து, ஈஶ்வரன்ஶேஷியாய், நியந்தாவாய், ஸ்வாமியாய், ஶரீரியாய், வ்யாபகனாய், தாரகனாய், ரக்ஷகனாய், போக்தாவாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ஸர்வஸம்பூர்ணனாய், அவாப்தஸமஸ்தகாமனாய் இருக்கிற ஆகாரத்தையும் தான்அவனுக்குஶேஷமாய், நியாம்யமாய்,ஸ்வம்மாய்,ஶரீரமாய்,வ்யாப்யமாய், தார்யமாய், ரக்ஷ்யமாய், போக்யமாய், அஜ்ஞனாய், அஶக்தனாய், அபூர்ணனாய், ஸாபேக்ஷனாய் இருக்கிற ஆகாரத்தையும், அநுஸந்தித்துக்கொண்டு (களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்) என்று உபாயத்தில் ஸர்வபரங்களையும் அவன் பக்கலிலே பொகட்டு, நிர்பரனாயிருக்கை. ஆசார்யாபிமாநமாவது - இவையொன்றுக்கும் ஶக்தனன்றிக்கே யிருப்பானொருவனைக் குறித்து, இவனுடைய இழவையும், இவனைப்பெற்றால் ஈஶ்வரனுக்குண்டான ப்ரீதியையும், அநுஸந்தித்து ஸ்தநந்தயப்ரஜைக்கு வ்யாதியுண்டானால் அது தன்குறையாக நினைத்து ஔஷதஸேவையைப்பண்ணும் மாதாவைப்போலே யிவனுக்காகத்தான் உபாயாநுஷ்டாநம் பண்ணி ரக்ஷிக்கவல்ல பரமதயாளுவான மஹாபாகவதன் அபிமாநத்திலே ஒதுங்கி (வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்) என்று சொ

ல்லுகிறபடியே ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் அவனிட்ட வழக்காக்குகை. எம்பெருமான் தனித்து நித்ய ஸித்யப்ராப்யனாகா நிற்கச்செய்தே ஸகலதேவதாந்தர்யாமியாய்க்கொண்டு ப்ராப்யனாகிறாப்போலே இவ்வாசார்யாபிமாநமும் தனியே உபாயமாகா நிற்கச்செய்தேயும், எல்லா உபாயங்களுக்கும் ஸஹகாரியுமாய் ஸ்வதந்த்ரமுமாய் இருக்கும். விரோதிவர்க்கத்தில் - ஸ்வரூபவிரோதியாவது தேஹாத்மாபிமாநமும், அந்யசேஷத்வமும்,ஸ்வஸ்வாதந்த்ரமும். பரத்வவிரோதியாவது-தேவதாந்தரபரத்வ ப்ரதிபத்தியும், ஸமத்வப்ரதிபத்தியும் க்ஷுத்ர தேவதாவிஷயத்தில் சக்தியோக ப்ரதிபத்தியும் அவதாரவிஷயத்தில் மாநுஷ ப்ரதிபத்தியும் அர்ச்சாவதாரவிஷயத்தில் அசக்தியோக ப்ரதிபத்தியும். புருஷார்த்தவிரோதியாவது, புருஷார்த்தாந்தரங்களிலிச்சையும், தானுகந்த பகவத்கைங்கர்யங்களிலிச்சையும். உபாயவிரோதியாவது-உபாயாந்தரவைலக்ஷண்ய ப்ரதிபத்தியும், உபாயலாகவமும்,உபேயகௌரவமும்,விரோதிபாஹுள்யமும். ப்ராப்திவிரோதியாவது-ப்ராரப்த சரீரஸம்பந்தமாய் அநுதாபசூன்யமாய், குருவாய், ஸ்திரமாய் இருந்துள்ள பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களும் இவை எல்லாவற்றுக்கும் விரோதியென்று பேரிடக்கடவது. அந்நதோஷம்-ஜ்ஞாந விரோதியாகக்கடவது. ஸஹவாஸதோஷம்-போகவிரோதியாகக் கடவது. அபிமாநம் ஸ்வரூபவிரோதியாகக்கடவது. இப்படி அர்யபஞ்சக ஜ்ஞாநம்பிறந்து முமுக்ஷுவாய் ஸம்ஸாரத்திலே வர்திக்கிற சேதநனுக்கு மோக்ஷஸித்தியளவும் ஸம்ஸாரம் மேலிடாதபடி காலக்ஷேபம்பண்ணும் க்ரமம்-வர்ணாச்ரமாநுரூபமாகவும், வைஷ்ணவத்வாநுரூபமாகவும், அசநாச்சாதநங்களை ஸம்பாதித்து (யதந்நபுருஷோபவதி ததந்நாஸ்தஸ்யதேவதா:) என்கிறபடியே ஸகலபதார்த்தங்களையும் பகவத்விஷயத்திலே நிவேதித்து யதாபலம் பாகவத கிஞ்சித்காரமும்பண்ணி தேஹதாரண மாத்ரத்தையும் ப்ரஸாத ப்ரதிபத்தியோடே ஜீவிக்கையும், வருந்தியும் தத்வஜ்ஞாநம் பிறப்பித்த ஆசார்யன் ஸந்நிதியிலே கிஞ்சித்காரத்தோடே அவனுக்கபிமதமாக வர்த்திக்கையும், ஈச்வரன் ஸந்நிதியிலே தன்னுடைய நீசத்வத்தை யநுஸந்திக்கையும், ஆசார்யன் ஸந்நிதியில் தன்னுடைய அஜ்ஞதையை அநுஸந்திக்கையும், ஸ்ரீவைஷ்ணவ ஸந்நிதியில் தன்னு

டைய பாரதந்த்ரியத்தை அநுஸந்திக்கையும், ஸம்ஸாரிகள் முன்னில் தன்னுடைய வ்யாவ்ருத்தியை அநுஸந்திக்கையும், ப்ராப்யத்தில் த்வரையும், ப்ராபகத்தில் அத்யவஸாயமும், விரோதியில் பயமும், தேஹத்தில் அருசியும், ஆர்த்தியும், ஸ்வரூபத்தில் உணர்த்தியும், ஸ்வரக்ஷணத்தில் அஶக்தியும், உத்தேஶ்யவிஷயத்தில் கௌரவமும், உபகாரவிஷயத்தில் க்ருதஜ்ஞதையும், உத்தாரகப்ரதிபத்தியும், அநுவர்த்திக்கையும் வேணும். இப்படி ஜ்ஞாநாநுஷ்டாநங்களோடே கூடி வர்த்திக்குமவன் ஈஶ்வரனுக்குப் பிராட்டிமாரிலும், நித்யமுக்தரிலும் அத்யந்தாபிமத விஷயமாகக்கடவன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

:o:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:,

ஸ்ரீ வசன பூஷணம்.

முதல் ப்ரகரணம்.

:o:

தனியன்கள்.

புருஷகாரவைபவஞ்ச ஸாதநஸ்ய கௌரவம், தததிகாரிக்ருத்யமஸ்ய ஸத்குரூபஸேவநம், ஹரிதயாமஹேதுகீம் குரோருபாயதாஞ்சயோ, வசநபூஷணேவதஜ் ஜகத்குரும் தமாஶ்ரயே

ஸாங்காவிலத்ராவிடஸமஸ்க்ருதரூபவேதஸாரார்த்தஸங்க்ரஹமஹாரஸவாக்யஜாதம், ஸர்வஜ்ஞலோககுரு நிர்மிதமார்யபோக்யம், வந்தேஸதா வசநபூஷண திவ்யஶாஸ்த்ரம்.

ஆகண்டோத்கண்டவைகுண்ட, ப்ரியாணாங்கண்டபூஷணம்,
குரூணாஞ்ஜகதாமுக்தம், வ்யாப்தம் வசனபூஷணம்.

பேறுதருவிக்குமவள்தன் பெருமைஆறுபெறுவான்மறையவன்
கூறுகுருவைப்பணுவல்கொள்வதிலையாகிய குளிர்ந்தவருள்தான்
மாறில்புகழ்நற்குருவின்வண்மையோடெலாம்வசன பூஷணமதில்
தேறிடநமக்கருண்முடும்பை யிறைவன்கழல்கள்சேரென்மனனே.

திருமாமகள்தன் சீரருளேற்றமும்
திருமால்திருவடி சேர்வழிநன்மையும்

அவ்வழியொழிந்தன வனைத்தின்புன்மையும்
மெய்வழியொன்றிய மிக்கோர்பெருமையும்
ஆரணம்வல்லவ ரமருநன்னெறியையும்
நாரணன்றருள்தரு நற்குருநீதியும்
சோதிவானருள் தூயமாகுருவின்
பாதமாமலர் பணிபவர்தன்மையும்
தீதில்வானவர் தேவனுயிர்களை
ஏதுமின்றி யெடுக்கும்படியையும்
மன்னியவின்பமு மாகதியுங்குரு
என்னுநிலைபெறு மின்பொருடன்னையும்
அசைவிலாவேத மதனுளனைத்தையும்
வசனபூஷண வழியாலருளிய
மறையவர்சிகாமணி வண்பொழின்முடும்பை
இறையவனெங்கோ னேருலகாரியன்
தேமலர்ச்சேவடி சிந்தைசெய்பவர்
மாநிலத்தின்பம தெய்திவாழ்பவரே.

லோகாசார்யக்ருதேலோக ஹிதேவசநபூஷணே
தத்வார்த்தர்ஸநோலோகே தந்நிஷ்டாஸ் சஹுர்லபாஃ
ஜமதாசார்யரசிதே ஸ்ரீமத்வசநபூஷணே
தத்வஜ்ஞாநஞ்சதந்நிஷ்டாம் தேஹிநாதயதீந்த்ரமே.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

---:o:---

முதல்ப்ரகரணம்.

நூல்

வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே. ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது. மற்றை யிரண்டாலும் உத்தரபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது. இவை யிரண்டிலும் வைத்துக்கொண்டு, இதிஹாஸம் ப்ரபலம். அத்தா லே அது முற்பட்டது. இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத் தால் சிறையிருந்தவள் ஏற்றஞ்சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூதுபோனவன் ஏற்றஞ்சொல்லுகிறது. இவையிரண்டாலும் புரு ஷகாரவைபவமும், உபாயவைபவமும் சொல்லிற்றாயிற்று. புருஷ

காரமாம்போது க்ருபையும், பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும். பிராட்டி முற்படப்பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக. நடுவிற்பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக. அநந்தரம்பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக. ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களிரண்டிலும் புருஷகாரத்வந் தோற்றும். ஸம்ஶ்லேஷதஶையில் ஈஶ்வரனைத்திருத்தும். விஶ்லேஷதஶையில் சேதநனைத் திருத்தும். இருவரையும் திருத்துவது முபதேஶத்தாலே, உபதேஶத்தாலே யிருவருடையவும் கர்மபாரதந்த்ர்யமுங் குலையும். உபதேஶத்தால் மீளாதபோது சேதநனை அருளாலேதிருத்தும். ஈஶ்வரனை யழகாலேதிருத்தும். அறியாதன அர்த்தங்களை அடைய அறிவித்து, ஆசார்யக்ருத்யத்தையும், புருஷகாரக்ருத்யத்தையும் உபாயக்ருத்யத்தையும், தானே யேறிட்டுக்கொள்ளுகையாலே மஹாபாரதத்தில் உபாயவைபவமுஞ் சொல்லிற்றாயிற்று. புருஷகாரத்துக்கும், உபாயத்துக்கும், வைபவமாவது, தோஷத்தையும், குணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாத அளவன்றிக்கே, அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சையாக்குகை. இரண்டுமிரண்டும் குலையவேணு மென்றிருக்கில், இரண்டுக்கும் இரண்டுமுண்டாயிற்றும். இரண்டுங் குலைந்தழிதன்றிருக்கில் இத்தலைக்கிரண்டுமுண்டாயிற்றும். ராக்ஷஸிகள் தோஷம் ப்ரஸித்தம். ஜிதேந்த்ரியரில் தலைவனாய், ஆஸ்திகாக்ரேஸரனாய், (கேஶவஸ்யாத்மா) என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு தோஷமேதென்னில், பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும், காருண்யமும், வத்ஸலதையும், த்ரௌபதீபரிபவங் கண்டிருந்ததும், க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரயாணதோஷம். பாண்டவர்களையும் நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க வைத்தது த்ரௌபதியினுடைய மங்கலஸூத்ரத்துக்காக. அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும், ப்ரபத்யுபதேஶம் பண்ணிற்றும், இவளுக்காக. ப்ரபத்திக்கு தேஶநியமமும், காலநியமமும், ப்ரகாரநியமமும், அதிகாரநியமமும், ஃபலநியமமும் இல்லை. விஷயநியமமே உள்ளது. கர்மத்துக்குப் புண்யக்ஷேத்ரம், வஸந்தாதிகாலம், ஶாஸ்த்ரோக்தங்களான தத்தத்ப்ரகாரங்கள், த்ரைவர்ணிகர், என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும். (ஸ ஏவ தேஶஃ ஸ காலஃ) என்கையாலே இதுக்கு தேஶகாலநிய

மமில்லை. இவ்வர்த்தம் மந்த்ரரத்நத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டம். ப்ரகாரநியதி யில்லையென்னுமிட மெங்குங்காணலாம். த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்திபண்ணிற்று. அர்ஜுநன் நீசர்நடுவேயிறே யிவ்வர்த்தங்கேட்டது. ஆகையால் ஶுத்தி யஶுத்தி யிகளிரண்டுந் தேடவேண்டா. இருந்தபடியே யதிகாரியாமித்தனை. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளையருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது, அதிகாரி நியமமின்றிக்கே ஒழிந்தபடி யென்னென்னில், தர்மபுத்ராதிகளும், த்ரௌபதியும், காகமும், காளியனும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானும், ஸ்ரீவிபீஷணாழ்வானும், பெருமாளும், இளையபெருமாளும், தொடக்கமானவர்கள் ஶரணம்புகுருகையாலே அதிகாரிநியமமில்லை. ஃபலநியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னெனில், தர்மபுத்ராதிகளுக்கு ஃபலம் - ராஜ்யம். த்ரௌபதிக்கு ஃபலம்-வஸ்த்ரம். காகத்துக்கும், காளியனுக்கும், ஃபலம் - ப்ராணன். ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு ஃபலம் - கைங்கர்யம். ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு ஃபலம்-ராமப்ராப்தி. பெருமாளுக்கு ஃபலம்-ஸமுத்ரதரணம். இளையபெருமாளுக்கு ஃபலம் - ராமாநுவ்ருத்தி. விஷயநியமமாவது - குண பூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை. பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்திபண்ணிற்றும், அர்ச்சாவதாரத்திலே. பூர்ணமென்கையாலே, எல்லாகுணங்களும் புஷ்கலங்கள். ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாஶிப்பது இங்கே. பூர்த்தியையும், ஸ்வாதந்த்ர்யத்தையும், குலைத்துக்கொண்டு, தன்னை அநாதரிக்கிறவர்களைத்தான் ஆதரித்து, நிற்கிறவிடம். ஸூக்ஷ்ம ஜலம்போலே அந்தர்யாமித்வம், ஆவரண ஜலம்போலே பரத்வம், பாற்கடல்போலே வ்யூஹம், பெருக்காறுபோலே விபவங்கள். அதிலே தேங்கின மடுக்கள்போலே ஆர்ச்சாவதாரம். இதுதான் ஶாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி, விமுகராய்ப்போரும் சேதநருக்கு வைமுக்யத்தைமாற்றி, ருசியை விளைக்கக்கடவதாய், ருசிபிறந்தா லுபாயமாய், உபாயபரிக்ரஹம்பண்ணினால் போக்யமுமாயிருக்கும். இதில் ப்ரபத்திபண்ணும் அதிகாரிகள் மூவர், அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திவிவஶரும் அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள். ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள். பக்திபாரவஶ்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள். இப்படி சொல்

னுகிறதும் ஊற்றத்தைப்பற்ற. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றிவரும். (என்னான்செய்கேன்) என்கிறவிடத்திலே இம்மூன்றுமுண்டு. அங்கொன்றைப்பற்றியிருக்கும் ப்ராதாந்யமுமதுவே. (அவித்யாதஃ) என்கிற ஶ்லோகத்திலே இம்மூன்றுஞ்சொல்லிற்று. (இதம் ஶரணமஜ்ஞாநாம்) பக்தி தன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இதுதான் கொலையக்கடவதாயிருக்கும். தன்னைப் பேணவும் பண்ணும். பரிக்கவும்பண்ணும். இந்த ஸ்வபாவவிஶேஷங்கள் கல்யாணகுணங்களிலும், திருச்சரங்களிலும், திருநாமங்களிலும், திருக்குழலோசையிலும் காணலாம். இது தன்னைப்பார்த்தால் பிதாவுக்குப் புத்ரன் எழுத்துவாங்குமாபோலே யிருப்பதொன்று. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப்பொறுதொழிகை. அங்கந் தன்னை ஒழிந்தவற்றைப் பொறுதொழிகை. உபாயந் தன்னைப்பொறுக்கும். உபாயாந்தரம் இரண்டையும் பொறுக்கும். இது இரண்டையும்பொறுது. பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும், அப்ரதிஷேதமுமே வேண்டுவது. அல்லாதபோது பந்தத்துக்கும், பூர்த்திக்கும், கொத்தையாம், ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ஸம்ப்ரமித்து அத்தை விளைத்துக்கொள்ளாதொழிகையே வேண்டுவது.—ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே. எல்லா உபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்ய கார்யமாகையாலும், ப்ராப்திதஶையிலும், அநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகி அல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்தி வேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாது.—அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம் உபாயத்தில் உபகாரஸ்ம்ருதியும், உபேயத்தில் உகப்பும். (உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்) என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவனினைவு. அதுதானெப்போதும் உண்டு. அது பலிப்பது இவன் நினைவுமாறினால். அந்திமகாலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென்கிற நினைவு கொலைகையென்று ஜீயரருளிச் செய்தார். ப்ராப்தாவும், ப்ராபகனும், ப்ராப்திக்கு உகப்பானும், அவனே. ஸ்வயத்நநிவ்ருத்தி - பாரதந்த்ர்யபலம். ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி - ஶேஷத்வபலம். பரப்ரயோஜந ப்ரவ்ருத்தி - ப்ரயத்நபலம். தத்விஷயப்ரீதி - சைதந்யபலம்.—அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்கநிரூபகம். இதுதான் வந்தேறியன்று. ஸ்வஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும், வந்தேறி. ஶேஷத்வவிரோதி - ஸ்வஸ்வாதந்த்ர்யம். தச்சேஷத்வவி

ரோதி - தநிதரஶேஷத்வம். அஹங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கழியாதபேர் அடியானென்றிறே, நிராமகுலாதிகளால் வரும்பேர் அநர்யஹேது.—(ஏகாந்திவ்யபதேஷ்டவ்ய꞉) உபாயத்துக்குப் பிராட்டியையும் த்ரௌபதியையும், திருக்கண்ணமங்கையாண்டானையும்போலே இருக்கவேணும். உபேயத்துக்கு இளையபெருமாளையும், பெரிய உடையாரையும், பிள்ளைத்திருநறையூர் அரையரையும், சிந்தயந்தியையும் போலே யிருக்கவேணும்.—பிராட்டிக்கும், த்ரௌபதிக்கும் வாசி, ஶக்தியும், அஶக்தியும். பிராட்டி ஸ்வஶக்தியைவிட்டாள். த்ரௌபதி லஜ்ஜையைவிட்டாள். திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்.—பசியராயிருப்பார் அட்டசோறும் உண்ணவேணும், அடுகிறசோறும் உண்ணவேணும், என்னுமாபோலே காட்டுக்குப்போகிறபோது இளையபெருமாள் பிரியில்தரியாமையை முன்னிட்டு அடிமை செய்யவேணும், எல்லா அடிமையுஞ் செய்யவேணும், ஏவிக்கொள்ளவும் வேணும் என்றார். படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே ஒப்பூணுண்ணமாட்டாதே ஒரு திருக்கையாலே திருவெண்கொற்றக்குடையும் ஒரு திருக்கையாலே திருவெண்சாமரமும், தரித்து அடிமை செய்தார். பெரிய உடையாரும், பிள்ளைத்திருநறையூர் அரையரும், உடம்பை உபேக்ஷித்தார்கள். சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையே போயிற்று. உபாயத்துக்கு ஶக்தியும், லஜ்ஜையும், யத்நமும், குலைய வேணும். உபேயத்துக்கு ப்ரேமமும், தன்னைப்பேணுமையும், தரியாமையும்வேணும். இவனுக்கு வையமாய் வருமதிறே த்யஜிக்கலாவது, ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்கவொண்ணாதிறே. உபாயத்வாநுஸந்தாநம் - நிவர்த்தகம். உபேயத்வாநுஸந்தாநம்-ப்ரவர்த்தகம். அப்ராப்தவிஷயங்களிலே ஸக்தனானவன் அதுலஹிக்கவேணு மென்றிராநின்றால், ப்ராப்தவிஷய ப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே.—அநுஷ்டாநமும், அநநுஷ்டாநமும் உபாயகோடியிலே அந்வயியாது. அநந்யோபாயத்வமும், அநந்யோபேயத்வமும், அநந்யதைவத்வமும், குலையும்படியான ப்ரவ்ருத்தி காணாநின்றோமிறே.—ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும். உபாயபலமாய், உபேயாந்தர்பூதமாய், இருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது. ஸாத்யஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸா

தநத்துக்கேற்றம், ஸாத்யப்ராவண்ய மடியாகவிறே ஸாதநத்திலி ழிகிறது. இவனுக்குப்பிறக்கும் ஆத்மகுணங்க ளெல்லாவற்றிற்கும் ப்ரதாநஹேது இந்த ப்ராவண்யம். (மாற்பான்மநஞ்சுழிப்ப, பரமாத்மநியோரக்த:, கண்டுகேட்டுற்றுமோந்து) ஆத்மகுணங்களில் ப்ரதாநம் - ஶமமும், தமமும், இவை இரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுரும், ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரங் கைபுகுரும். திருமந்த்ரங் கைபுகுந்தவாறே ஈஶ்வரன் கைபுகுரும். ஈஶ்வரன் கைபுகுந்தவாறே (வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே) என்கிறபடியே ப்ராப்யபூமி கைபுகுரும் —ப்ராப்யலாபம்-ப்ராபகத்தாலே. ப்ராபகலாபம் திருமந்த்ரத்தாலே. திருமந்த்ரலாபம் - ஆசார்யனாலே. ஆசார்யலாபம் - ஆத்மகுணத்தாலே. இதுதான் ஐஶ்வர்யகாமர்க்கும், உபாஸகர்க்கும் ப்ரபந்நர்க்கும் வேணும். மூவரிலும் வைத்துக்கொண்டு மிகவும்வேண்டுவது ப்ரபந்நர்க்கு. மற்றையிருவர்க்கும் நிஷித்த விஷய நிவ்ருத்தியேயமையும். ப்ரபந்நனுக்குவிஹிதவிஷய நிவ்ருத்தியே தன்னேற்றம். இதுதான் சிலர்க்கு அழகாலே பிறக்கும், சிலர்க்கு அருளாலே பிறக்கும், சிலர்க்கு ஆசாரத்தாலே பிறக்கும். பிறக்குங் க்ரமம் என்னென்னில், அழகு அஜ்ஞாநத்தைவிளைக்கும். அருள்-அருசியைவிளைக்கும். ஆசாரம்—அச்சத்தை விளைக்கும். இவையும் ஊற்றத்தைப்பற்றிச் சொல்லுகிறது. அருசிபிறக்கும்போதைக்கு தோஷதர்ஶநம் அபேக்ஷிதமாயிருக்கும். அது ப்ரதாநஹேதுவன்று. அப்ராப்யதையே ப்ரதாநஹேது. பகவத்விஷயத்தில் இழிகிறதும், குணங்கண்டன்று, ஸ்வரூபப்ராப்தமென்று, இப்படி கொள்ளாதபோது, குணஹீநமென்று நினைத்த தஶையில், பகவத்விஷய ப்ரவ்ருத்தியும், தோஷாநுஸந்தாநதஶையில், ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியுங்கூடாது. (கொடியவென்னெஞ்ச மவனென்றேகிடக்கும் - அடியேனுன் பின்னுமுன்சேவடியன்றிநயவேன்) என்றுநின்றார்களிறே. குணக்ருததாஸ்யத்திலுங் காட்டில் ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம். அநஸூயைக்குப்பிராட்டி அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.—பகவத்விஷய ப்ரவ்ருத்தி பின்னைச்சேருமோவென்னில் அதுக்கடி - ப்ராவண்யம். அதுக்கடி-ஸம்பந்தம். இதுதான் ஔபாதிகமன்று, ஸத்தாப்ரயுக்தம். அந்தஸத்தை ப்ராவண்ய கார்யமான அநுபவமில்லாதபோது குலையும். அது குலையாமைக்காக வருமவையெல்லாம் அவர்ஜநீயங்களுமாய், ப்ராப்தங்களுமாய் இருக்கும். ஆகையாலே பகவத் விஷய ப்ரவ்ருத்தி சேரும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்

———:o:———

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

உ - வது

ப்ராபகாந்தர பரித்யாகப்ரகரணம்.

ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞாநாஶக்திகளன்று, ஸ்வரூபவிரோதமே ப்ரதாநஹேது.—ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்கு உபாயம், ஜ்ஞாநிகளுக்கபாயம், அபாயமாயிற்றது ஸ்வரூப நாஶகமாகையாலே, (நெறிகாட்டிநீக்குதியோ) என்னாநின்றதிறே. வர்த்ததேமே மஹத்பயம்) என்கையாலே பயஜநகம். (மாஶுச:) என்கையாலே ஶோகஜநகம்.—இப்படி கொள்ளாதபோது ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயஶ்சித்த விதிகூடாது. திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணிக்கும்படி மதிராபிந்து மிஶ்ரமான ஶாதகும்ப மயகும்ப கததீர்த்த ஸலிலம்போலே, அஹங்கார மிஶ்ரமான உபாயாந்தரம். ரத்நத்துக்குப் பலகைபோலேயும், ராஜ்யத்துக் கெலுமிச்சம்பழம்போலேயும், ஃபலத்துக்கு ஸத்ருஶமன்று —தான் உரித்ரனாகையாலே தனக்குக் கொடுக்கலாவதொன்றுமில்லை. அவன் தந்தத்தைக் கொடுக்குமிடத்தில் அடைவிலேகொடுக்கில் அநுபாயமாம். அடைவுகெடக்கொடுக்கில் களவு வெளிப்படும். ஶத்ருஹோமத்தை வயிறு வளர்க்கைக் குறுப்பாக்குமாபோலே, இருவர்க்கும் அவத்யம்—வேதாந்தங்களுபாயமாக விதிக்கிறபடி யென்னென்னில், ஔஷதஸேவை பண்ணாதவர்களுக்கு அபிமதவஸ்துக்களிலே அத்தைக்கலசி யிடுவாளைப் போலே ஈஶ்வரனைக்கலந்து விதிக்கிறதித்தனை. இத்தை ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக. இதுதான் பூர்வ விஹிதஹிம்ஸைபோலே, விதிநிஷேதங்க ளிரண்டுக்குங் குறையில்லை. அத்தை ஶாஸ்த்ரவிஶ்வாஸத்துக்காக விதித்தது. இத்தை ஸ்வரூப விஶ்வாஸத்துக்காகவிதித்தது, அதுதோல்புரையேபோம். இது மர்மஸ்பர்ஶி. இதுதான் கர்மஸாத்யமாகையாலே துஷ்கரமுமாயிருக்கும்.—ப்ரபத்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை. ஆத்மயாதாத்ம்யஜ்ஞாந கார்யமாகையாலே, ஸ்வரூபத்துக்குசிதமுமாய் (சிற்றவேண்டா) என்கிறபடியே நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும். பூர்ணவிஷயமாகையாலே, பெருமைக்கீடாகப் பச்சையிடவொண்ணாது. ஆபிமுக்யஸூசகமாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும். பூர்த்திகைவாங்காதே மேல்விழுகைக்கு ஹேதுவி

த்தனை, (பத்ரம் புஷ்பம் அந்யத்பூர்ணாத், புரிவதுவும் புகைபூவே) புல்லைக்காட்டி அழைத்துப் புல்லையிடுவாளைப்போலே ஸாஸாயநங்களுக்கு ஹேதுமில்லை. ஆகையாலே ஸ்வரூபமாயிருக்கும்.— இவன் அவனைப்பெற நினைக்கும்போது இந்தப்ரபத்தியும் உபாயமன்று; அவனிவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று. இவையிரண்டும் ஸ்ரீபரதாழ்வான் பக்கலிலும், ஸ்ரீகுஹப்பெருமாள் பக்கலிலும் காணலாம். ஸ்ரீபரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாயிற்று. ஸ்ரீகுஹப்பெருமாளுக்குத் தீமைதானே நன்மையாயிற்று.—ஸர்வாபராயங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராய கோடியிலேயாய், க்ஷாமணம்பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே. நெடுநாள் அந்யபரையாய்ப்போந்த ஹார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே ஹர்த்ருஸகாசத்திலே நின்று என்னை அங்கீகரிக்கவேணுமென்றபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்று இவன்பண்ணும் ப்ரபத்தி. க்ருபையாலேவரும் பாரதந்த்ர்யத்தைக் காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலேவரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம். இவ்வர்த்தத்தை வேதபுருஷன் அபேக்ஷித்தான். அபேக்ஷாநிரபேக்ஷமாகத் திருவடிக்கும், ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இதுண்டாயிற்று. இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலுங்காணலாம். இருவர் முன்னிடுகிறதும் தந்தாங்குற்றங்களை ஶமிப்பிக்கைக்காக. ஸ்வரூபஸித்தியுமத்தாலே. ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்கும் உண்டிறே, அநித்யமான இருவர் பாரதந்த்ர்யங் குலைவதுமத்தாலே. ஸவாக்ஷிகமாகையாலே இஶ்வர்யத்தை இருவராலும் இல்லை செய்யப்போகாது. (என்னை நெகழ்க்கிலுங் கோலமலர்ப்பாவைக்கன்பாகிய) கர்மணிவ்யுத்பத்தியில் ஸ்வரூபகுணங்களால் வருகிற கர்த்ருஸங்கோச ராஹித்யத்தை நினைப்பது. அதிகாரித்ரயத்துக்கும் புருஷகாரம் அவர்ஜ்ஜநீயம், தனக்குத்தான் தேடும்நன்மை தீமையோபாதி விலக்காயிருக்கும், அழகுக்கிட்டசட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே. (ஆரோபி) புண்யம்போலே, பாரதந்த்ர்யமும் பராநுபவத்துக்கு விலக்கு. குணம்போலே, தோஷநிவ்ருத்தி. ஆபரணம் அநபிமதமாய், அழுக்கு அபிமதமாய், இராநின்றதிறே. (ஸ்நாநம் ரோஷஜநகம்) என்கிற வார்த்தையை ஸ்மரிப்பதும். (வஞ்சக்கள்வன் மங்கவொட்டு) வேர்ச்சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே யாதரிக்கும்.—

பரமார்த்தனான இவனுடைய ஶரீரஸ்திதிக்கு ஹேது, கேவலஸமவ திச்சையிறே. (திருமாலிருஞ்சோலைமலையே) என்கிறபடியே உகந்த ருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை யிவனு டைய ஶரீரைகதேஶத்திலேபண்ணும். அங்குத்தைவாஸம் ஸாதநம; இங்குத்தைவாஸம் ஸாத்யம். (கல்லுங்கனைகடலும்) என்கிறபடி யே இது ஸித்தித்தால், அவற்றில் ஆதரம்மட்டமாயிருக்கும். இள ங்கோயில்கைவிடேல்) என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியா யிரு க்கும். ப்ராப்ய ப்ரீதிவிஷயத்வத்தாலும், க்ருதஜ்ஞதையாலும் பின் பவை அபிமதங்களாயிருக்கும். ஆகையாலே தோஷநிவ்ருத்திபோ லே ஆந்தரகுணமும் விரோதியாயிருக்கும். தோஷநிவ்ருத்திதா னே தோஷமாமிறே. (தன்னால்வரும் நன்மை விலைப்பால்போலே; அவனால்வரும் நன்மை முலைப்பால்போலே) என்று பிள்ளான் வார்த் தை. அவனையொழியத் தான் தனக்கு நன்மைதேடுகையாவது - ஸத நந்யப்ரஜையை மாதாக்கள் கையில் நின்றும் வாங்கி வாதகனான ஆட்டுவாணியன் கையிலே காட்டிக்கொடுக்குமாபோலே யிருப்ப தொன்று. தன்னைத்தானேயிறே முடிப்பான். தன்னைத்தானே முடிக் கையாவது-அஹங்காரத்தையும், விஷயங்களையும்விரும்புகை. அஹ ங்காரம் அக்நிஸ்பர்ஶம்போலே (நகாமகலுஷம்சித்தம், நஹிமேஜீ விதேநார்த:, நதேஹம், எம்மாவீட்டுத்திறமும்)—ப்ரதிகூலவிஷய ஸ்பர்ஶம், விஷஸ்பர்ஶம்போலே அநுகூலவிஷயஸ்பர்ஶம் - விஷமி ஶ்ரஹோஜநம்போலே. அக்நிஜ்வாலையைவிழுங்கி விடாய்கெடநினை க்குமாபோலேயும், ஆடுகிற பாம்பின் நிழலிலே யொதுங்க நினைக்கு மாபோலேயும்—விஷயப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை. * அசுண மாமுடியுமாபோலே-ஸமவதநுஸவைகபரனாய். ம்ருதுப்ரக்ருதியாயி ருக்குமவன்விஷயதர்ஶநத்தாலேமுடியும்படி. (காட்டிப்படுப்பாயோ) என்னக்கடவதிறே. அஜ்ஞனான விஷயப்ரவணன்-கேவல நாஸ்திக னைப்போலே ஜ்ஞாநவானான விஷயப்ரவணன் - ஆஸ்திகநாஸ்திகனை ப்போலே கேவல நாஸ்திகனைத்திருத்தலாம். ஆஸ்திகநாஸ்திகனை யொ ருநாளுந் திருத்தவொண்ணாது.—இவையிரண்டும் ஸ்வரூபேண முடி க்குமளவன்றிக்கே ஸமவதவிரோதத்தையும் விளைத்து முடிக்கும் நாமரூபங்களை யுடையராய் ஸமவத விரோதம் பண்ணிப்போரும

* அசுணமா - பக்ஷிவிஶேஷம்.

வர்கள் உதீயபடம்போலே. மடிப்புடைவைவெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக்கிடக்கும். காற்றடித்தவாறே பறந்துபோம். 'ஈஸ்வர னவதரித்துப்பண்ணின * ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாப சாரம் பொறுமை என்று ஜீயரருளிச்செய்வர். (அவமாநக்ரியா) பாகவதாபசாரந்தான் அநேகவிதம், அதிலேயொன்று, அவர்கள் பக்கல் ஜந்மநிரூபணம். இதுதான் அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருதியிலுங் காட்டில் க்ரூரம், அத்தை 'மாத்ருயோநி பரீக்ஷையோ டொக்கும்' என்று ஸாஸ்த்ரஞ் சொல்லும். த்ரிஸங்குவைப்போலே கர்மசண்டாளனாய், மார்விலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய்வி டும். ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவத னாகைக்கு யோக்யதையுண்டு, அதுவுமில்லை யிவனுக்கு. ஆரூடபதித னாகையா லே,—இது தனக்கு அதிகாரி நியமமில்லை, (தமர்களிற்றலைவராய சாதியந்தணர்களேலும்) என்கையாலே, இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும், பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணி த்தவார்த்தையையும் ஸ்மரிப்பது, ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந் தாலும் பேற்றுக்கவர்கள் பக்கல் ஸம்பந்தமே யமைகிறாப்போலே, அவையுண்டானாலும் இழவுக்கவர்கள்பக்க லபசாரமேபோரும். இதி ல் ஜந்மவ்ருத்தாதி நியமமில்லை. இவ்வர்த்தம் கைஸிகவ்ருத்தாந்தத்தி லும், உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலும் காணலாம். ஸ்ரீராமாயண யம் விலைசெல்லுகிறது, வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாப ஹேதுவென்று. அதுதானே யிழவுக்குறுப்பாகில், த்யாஜ்யமாமிறே. ஜந்மவ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும், அப்ரயோஜகம்; ப்ரயோஜகம் - பகவத்ஸம்பந்தமும் அஸம்பந்தமும்—பகவத்ஸம்பந்த முண்டானா லிரண்டுமொக்கு மோவென்னில், ஒவ்வாது. உத்க்ருஷ்டமாக ப்ரமித்தஜந்மம், ஸரம்ஸ ஸம்பாவனையாலே (ஸரீரேவ) என்கிறபடியே பயஜநகம், அதுக்கு ஸ்வரூபப்ராப்தமான நைச்யம்பாவிக்கவேணும், அபக்ருஷ்டமாக ப்ர மித்த உத்க்ருஷ்ட ஜந்மத்துக்கு இரண்டு தோஷமுமில்லை. நைச்யம் ஜந்மஸித்தம். ஆகையால் உத்க்ருஷ்ட ஜந்மமே ஸ்ரேஷ்டம். (ஸ்வ பசோபிமஹீபால)—நிக்ருஷ்டஜந்மத்தால் வந்ததோஷம் ஸமிப்பது விலக்ஷணஸம்பந்தத்தாலே, ஸம்பந்தத்துக்கு யோக்யதை யுண் டாம்போது ஜந்மக்கொத்தை போகவேணும். ஜந்மத்துக்குக் கொத்

* ஆனைத்தொழில்கள் - அதிமாநுஷசேஷ்டிதங்கள்.

ததையும், அதுக்குப்பரிஹாரமும் (பழுதிலாவொழுகல்) என்கிற பாட்டிலே யருளிச்செய்தார். வேதகப்பொன்போலே யிவர்களோட்டை ஸம்பந்தம், இவர்கள்பக்கல் ஸாம்யபுத்தியும், ஆதிக்யபுத்தியும் நடக்கவேணும். அதாவது-ஆசார்யதுல்யரென்றும், ஸம்ஸாரிகள் தன்னிலும் ஈஶ்வரனிலு மதிகரென்றும் நினைக்கை. ஆசார்ய ஸாம்யத்துக்கடி - ஆசார்யவசநம். இப்படி நினையாதொழிகையும் அபசாரம். இவ்வர்த்தம், இதிஹாஸ புராணங்களிலும், (பயிலுஞ்சுடரொளி, நெடுமாற்கடிமை) யிலும், (கண்சோர வெங்குருதி) யிலும், (நண்ணாத வாளவுண) ரிலும், (தேட்டருந்திறற்றே) னிலும், (மேம்பொருளுக்கு) மேலிற்பாட்டுக்களிலும் விஶதமாகக்காணலாம்.-க்ஷத்ரியனான விஶ்வாமித்ரன் ப்ரம்ஹருஷியானான். ஸ்ரீவிபீஷணனை ராவணன் குலபாம்ஸனென்றான், பெருமாள் இக்ஷ்வாகுவம்ஶ்யராகநினைத்து வார்த்தை யருளிச்செய்தார். பெரிய உடையாருக்குப் பெருமாள் ப்ரம்ஹமேத ஸம்ஸ்காரம் பண்ணியருளினார். தர்மபுத்ரர் அஶரீரி வாக்யத்தையும், ஜ்ஞாநாதிக்யத்தையுங்கொண்டு, ஸ்ரீவிதுரரை ப்ரம்ஹமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார். ருஷிகள் தர்மவ்யாதன் வாசலிலே துவண்டு தர்மஸந்தேஹங்களை ஶமிப்பித்துக்கொண்டார்கள். க்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதிகள் திருமாளிகைகளைவிட்டு ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே யமுதுசெய்தான்; பெருமாள் ஸ்ரீஶபரி கையாலே யமுதுசெய்தருளினார். மாறனேர் நம்பிவிஷயமாகப் பெரியநம்பி உடையவர்க்கருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது—(ப்ராதுர்ஹாவைரித்யாதி) 'ஹாஸவதனன்றிக்கே வேதார்த்த ஜ்ஞாநாதிகளையுடையவன் குங்குமஞ்சுமந்த கழுதையோபாதி' என்று சொல்லாநின்றதிறே. ராஜாவான ஸ்ரீகுலஶேகரப்பெருமாள் திர்யக்ஸ்தாவர ஜந்மங்களை யாசைப்பட்டார்; ப்ரம்ஹணோத்தமரான பெரியாழ்வாரும், திருமகளாரும், கோபஜந்மத்தை ஆஸ்தாநம் பண்ணினார்கள். * கந்தல்கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாமுத்தமையுடைய அவஸ்தை வரக்கடவதாயிருக்கும். ஆறுப்ரகாரத்தாலே பரிஶுத்தியாத்மஸ்வரூபத்துக்கும் தத்ஸாம்ய முண்டாயிருக்கும்.—த்ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்காரத்தாலே,அத்ருஷ்டத்தில்உத்கர்ஷம் அஹங்காரராஹித்யத்தாலே. ப்ரம்ஹாவா யிழந்துபோதல், இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யும்படியாயிருக்கும். இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாஶஹேது

* கந்தல் - கல்மஷம். அதாவது அவித்யாதிதோஷம்.

வான அஹங்காரத்துக்கும், அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளைநிலந்தானாகையாலே, தன்னைக்கண்டால் ஶத்ருவைக்கண்டாற்போலேயும், அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக்கண்டாற்போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் பந்துக்களைக் கண்டாற்போலேயும், ஈஶ்வரனைக்கண்டால் பிதாவைக்கண்டாற்போலேயும், ஆசார்யனைக்கண்டால் பசியன் சோற்றைக்கண்டாற்போலேயும், ஶிஷ்யனைக்கண்டால் அபிமதவிஷயத்தைக் கண்டாற்போலேயும் நினைத்து * அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும், அநுகூலர் பக்கல் அநாதரத்தையும், ப்ரதிகூலர்பக்கல் ப்ராவண்யத்தையும், உபேக்ஷிக்குமவர்கள் பக்கல் அபேக்ஷையையும் பிறப்பிக்குமென்றஞ்சி, ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக்கொள்ள வொண்ணாது. ஸதாசார்ய ப்ரஸாத மடியாகவருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்கு மத்தனையென்று துணிந்து, தேஹயாத்ராயி லுபேக்ஷையும், ஆத்மயாத்ராயி லபேக்ஷையும், ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதாபுத்தி நிவ்ருத்தியும், 'தேஹதாரணம் பரமாத்மஸமாராதந ஸமாப்தி, ப்ரஸாத ப்ரதிபத்தி என்கிற புத்தி விஶேஷமும், தனக்கொரு க்லேஶமுண்டானால் கர்மபலமென்றாதல் க்ருபாபலமென்றாதல் பிறக்கும் ப்ரீதியும், ஸ்வாநுஷ்டானத்தில் ஸாதநத்வபுத்தி நிவ்ருத்தியும், விலக்ஷணனுடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் வாஞ்சையும், உகந்தருளின நிலங்களில் ஆதராதிஶயமும், மங்களாஶாஸநமும், இதரவிஷயங்களில் அருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தந நியதியும், ஆஹாரநியதியும், அநுகூல ஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்,

---

* அர்த்த காமாபிமாநங்கள் மூன்றும் என்று பாடாந்தரம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

௩ - வது,

மங்களாசாஸந ப்ரகரணம்,

———:o:———

மங்களாசாஸநம் ஸ்வரூபவ்ருத்தியமன்றோவென்னில்; ஜ்ஞாந தசையில் ரக்ஷ்யரக்ஷகபாவம் ‡ தன்கப்பிலே கிடக்கும், ப்ரேமதசையில் தட்டுமாறிக்கிடக்கும். அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் † கடகாகக்கொண்டு தன்னை நோக்கும். இவ்வர்த்தம், சக்ரவர்த்தி, ஸ்ரீஜநகராஜன் திருமகள், விஸ்வாமித்ரன், ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ருஷிகள், திருவடி, மஹாராஜர், ஸ்ரீநந்தகோபர் ஸ்ரீவிதுரர், பிள்ளை யுறங்காவில்லிதாஸர் துடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம். இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிஸங்கைபண்ண, இருவரையும் அதிஸங்கைபண்ணி குஹப்பெருமாள் பரிகரம்பெருமாளை நோக்கிற்றிறே. ஒருநாள்முகத்திலேவிழித்தவர்களை வடிவழகுபடுத்தும்பாடாயிற்றிது; இவர்கள் நம்முடைய கோடியிலே என்னும்படியாயிற்று ஆழ்வார்கள்நிலை. ஆழ்வார்களெல்லாரையும்போலல்லர்பெரியாழ்வார். அவர்களுக்கது காதாசித்கம், இவர்க்கிதுநித்யம் அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்குமேடாயிருக்கும். அவர்களுக்கு உபயசேஷத்வத்தையுமழித்து, ஸ்வரூபத்தைக் † குமிழிநீருண்ணப்பண்ணுமது, இவர்க்கு உபயவ்ருத்தியிக்கும்ஹேதுவாய், ஸ்வரூபத்தைக் கரையேற்றும். பயநிவர்த்தகங்களுக்கு பயப்படுவது, ப்ரதிகூலரையும் அநுகூலராக்கிக்கொள்ளுவது, அதீதகாலங்களிலபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரிவது, ப்ராப்திபலமு மிதுவேயென்பது, அநிமிஷரைப்பார்த்து (உறகல், உறகல்) என்பதாய்க்கொண்டு இதுதானே யாத்ரையாய் நடக்கும். அல்லாதவர்களைப்போலே கேட்கிறவர்களுடையவும், சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத்தவிர்க்கையன்றிக்கே, (ஆளுமாளார்) என்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காயிற்று பாஷ்யகாரரும், இவரு முபதேசிப்பது. அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்தியிகள் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே. இவர்க்கு மங்களாசாஸநத்தாலே. உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணுமுறக்கமுமின்றிக்கே, இவருடைய யாத்ரை

---

‡ கப்பு - ஆஸ்ரயம். † கடகு - அநிஷ்டநிவாரகன். ரக்ஷகன்.

† குமிழிநீருண்கை - அமிழ்ந்து தலஸ்பர்ஸியாகை.

யே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாகவேணும். ஆகையால் மங்களாஶாஸநம் ஸ்வரூபாநுரூபணம்.

அநுகூலராகிறார் - ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் இட்டுமாறினாற்போலே வடிவிலே ‡ தொடைகொள்ளலாம்படியிருக்கும் பரமார்த்தர். ஒருசெய்நிரம்ப நீர்நின்றால் அசற்செய்பொசிந்து காட்டுமா போலே இவையில்லாதார்க்கு மிவர்களோட்டை ஸம்பந்தத்தாலே உருவுதல் தீரக்கடவதாயிருக்கும். ஆறுநீர்வரவணித்தானால் அதுக்கீடான அடையாளங்களுண்டாமாபோலே, ப்ராப்தியணித்தானவாறே இந்த ஸ்வபாவவிஶேஷங்கள் தன்னடையே விளையக்கடவதாயிருக்கும். இவற்றைக்கொண்டு சரமஶரீரம் என்று தனக்குத்தானே அறுதியிடலாயிருக்கும்.—ப்ரதிகூலராகிறார் - தேஹாத்மாபிமாநிகளும், ஸ்வதந்த்ரரும், அந்யஶேஷபூதரும், உபாயாந்தரநிஷ்டரும் ஸ்வப்ரயோஜநபரரும், இவர்களுக்கு உத்தேஶ்யரும், உபாயோபேயங்களும் ஸேஷித்திருக்கும். தேஹாத்மாபிமாநிகளுக்கு உத்தேஶ்யர் - தேஹவர்யகரான மநுஷ்யர்கள். உபாயம் - அர்த்தம், உபேயம்- ஐஹிகபோகம். ஸ்வதந்த்ரர்க்கு உத்தேஶ்யர்-ஸ்வர்க்காதிபோகப்ரதர், உபாயம் - கர்மாநுஷ்டாநம், உபேயம் - ஸ்வர்க்காதிபோகம். அந்யஶேஷபூதர்க்கு உத்தேஶ்யர் - ப்ரம்ம ருத்ராதிகள், உபாயம் - தத்ஸமாஶ்ரயணம், உபேயம் - தத்ஸாயுஜ்யம். உபாயாந்தரநிஷ்டர்க்கு உத்தேஶ்யன் - தேவதாந்தர்யாமியான ஈஶ்வரன். உபாயம்-கர்ம ஜ்ஞாந பக்திகள், உபேயம்-ஸ்வஸ்வரூபாநுபவம். ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேஶ்யன்-(நெஞ்சினால்நினைப்பான்யவன்) என்கிறவன், உபாயம் - ஸ்வகீய ஸ்வீகாரம், உபேயம் - ஸ்வார்த்தகைங்கர்யம். முதல்சொன்ன மூவரும்நிக்ரஹத்துக்கிலக்கு, மற்றையிருவரும் அநுக்ரஹத்துக்கிலக்கு. மூவருடையவும் கர்மம் அநுபவ விநாஶ்யம், நாலாமதிகாரிக்கு ப்ராயஶ்சித்த விநாஶ்யம், அஞ்சாமதிகாரிக்கு புருஷகாரவிநாஶ்யம். உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷ ஸாபேக்ஷமுமாய், புருஷகார ஸாபேக்ஷமுமாயிருக்கும்; கார்யகாலத்தில் உபயநிரபேக்ஷமாயிருக்கும். ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோவென்னில்; இங்கு ஸ்வப்ரயோஜந மென்

‡ தொடைகொள்ளாம்படி - அறியலாம்படி.

கிறது-ஆஶ்ரயதோஷஜந்யமானத்தை. ஆகையாலே தோஷமில்லை. விஷயதோஷத்தாலே * வருமவையெல்லாம் உத்தேஶ்யமாயிறேயிருப்பது. (ஊமையரோடு செவிடர்வார்த்தை) (கயமந்யஞிச்ஷதி.) இப்படி இவையித்தனையும் ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கு, வஸ்தவ்யம்-ஆசார்யஸந்நிதியும், பகவத்ஸந்நிதியும்; வக்தவ்யம் - ஆசார்யவைபவமும், ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குருபரம்பரையும், த்வயமும்; பரிக்ராஹ்யம்-பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும்; பரித்யாஜ்யம் - அவைஷ்ணவஸஹவாஸமும், அபிமாநமும்; கர்த்தவ்யம்-ஆசார்யகைங்கர்யமும், பகவத்கைங்கர்யமும்; கீழ்ச்சொன்ன பகவத்கைங்கர்யமறிவது - ஶாஸ்த்ர முகத்தாலே, ஆசார்யகைங்கர்யமறிவது - ஶாஸ்த்ரமுகத்தாலும், ஆசார்யவசநத்தாலும்,—கைங்கர்யந்தானிரண்டு. அதாவது-இஷ்டஞ்செய்கையும், அநிஷ்டம் தவிருகையும். இஷ்டாநிஷ்டங்கள், வர்ணாஶ்ரமங்களையும் ஆத்மஸ்வரூபத்தையு மவலம்பித்திருக்கும். புண்யத்துக் கஞ்சுகிறவன் பாபத்தைப்பண்ணுனிறே. இவன் புண்யத்தைப் பாபமென்றிருக்கும், அவன்பாபத்தைப் புண்யமென்றிருக்கும்; அவனுக்கிதுகிடையாது. கைங்கர்யந்தான் பக்திமூலமல்லாதபோது; ப்ரீதிமூலமாய் வரவேணும்; அதுவுமில்லாதபோது, அதிகாரத்திலும், உபாயோபேயங்களிலு மந்வயமின்றிக்கேயொழியும்.—கைங்கர்யந்தன்னை ஸஃலாபநமாக்காதேஸஃலமாக்கவேணும். அதாவது-தான்கையேற்காதே அவனைக் கையேற்கப்பண்ணுகை. கொடுத்துக்கொள்ளாதே கொண்டதுக்குக் கைக்கூலி கொடுக்கவேணும். ஸ்ரீவிதுரரையும், ஸ்ரீமாலாகாரரையும், கூனியையும்போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம்பெறுவது. மடிதடவாதசோறும், சுருள்நாறாதபூவும், சுண்ணாம்புபடாத சாந்துமிறே இவர்கள் கொடுத்தது.—கைங்கர்யதசைபோலே முன்புள்ள தசைகளிலும் ஸ்வரூபத்தை உஜ்வலமாக்கவேணும். முன்பே நாலுதசையுண்டு. அதாவது-ஜ்ஞாநதசையும், வரணதசையும், ப்ராப்திதசையும், ப்ராப்யாநுபவதசையும். ஜ்ஞாநதசையில் அஜ்ஞாநத்தை முன்னிடும்; வரணதசையில் அபூர்த்தியை முன்னிடும்; ப்ராப்திதசையில் ஆர்த்தியை முன்னிடும், ப்ராப்யாநுபவதசையில் அபிநிவேஶத்தைமுன்னிடும். அஜ்ஞாநம்போவது ஆசார்யஜ்ஞாநத்தாலே.

* வருமது என்று பாடாந்தரம்.

அபூர்த்திபோவது ஈஶ்வரபூர்த்தியாலே, ஆர்த்திபோவது அருளாலே.
அபிநிவேஶம்போவது அநுபவத்தாலே. அஜ்ஞாநத்துக்கடி அபரா
தம். அபூர்த்திக்கடி ஜ்ஞாநபூர்த்தி. ஆர்த்திக்கடி அலாபம். அபிநிவே
ஶத்துக்கடி அழகு. ஆர்த்தியும் அபிநிவேஶமு மிருக்கும்படி அர்ச்
சிராதிகதியிலே சொன்னோம். இவன்றனக்கு நாலுதஶைபோலே
நாலுகுணமுமுண்டு. அதாவது - ஜ்ஞாநமும், அஜ்ஞாநமும், ஶக்தி
யும், அஶக்தியும். இவைதான் அவனுக்குமுண்டு. அவனுடைய ஜ்ஞா
நத்துக்கிலக்கு இவனுடைய குணம், அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனு
டையதோஷம், ஶக்திக்கிலக்கு இவனுடைய ரக்ஷணம், அஶக்திக்கி
லக்கு பரித்யாகம். இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யகு
ணம், அஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யதோஷம், ஶக்திக்கிலக்கு ஆசா
ர்யகைங்கர்யம், அஶக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்,—நிஷித்
தந்தானும் நாலுபடியாயிருக்கும். அதாவது - அக்ருத்யகரணமும்,
பகவதபசாரமும், பாகவதாபசாரமும், அஸஹ்யாபசாரமும். அக்
ருத்யகரணமாவது - பரஹிம்ஸை, பரஸ்தோத்ரம், பரதாரபரிக்ர
ஹம், பரத்ரவ்யாபஹாரம், அஸத்யகதநம், அபக்ஷ்யபக்ஷணந்து
டக்கமானவை. பகவதபசாரமாவது - தேவதாந்தரங்களோடொக்க
ஈஶ்வரனை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்ய
ஸஜாதீயதாபுத்தியும், வர்ணாஶ்ரம விபரீதமான உபசாரமும்,
அர்ச்சாவதாரத்தில் உபாதாநநிரூபணமும், ஆத்மாபஹாரமும், பக
வத்த்ரவ்யாபஹாரமுந் துடக்கமானவை, பகவத்த்ரவ்யத்தைத் தான
பஹரிக்கையும், அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும், அவர்
கள் பக்கலிலே யாசிதமாகவும் அயாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும்
பகவானுக்கநிஷ்டமாயிருக்கும். பாகவதாபசாரமாவது - அஹங்கா
ரார்த்த காமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும்விரோ
தம். அஸஹ்யாபசாரமாவது - நிர்நிபந்தநமாக பகவத் பாகவதவி
ஷயமென்றால் அஸஹமாநனாயிருக்கையும், ஆசார்யாபசாரமும், தத்
பக்தாபசாரமும். இவையொன்றுக்கொன்று க்ரூரங்களுமாய், உபாய
விரோதிகளுமாய், உபேயவிரோதிகளுமாயிருக்கும். தான் ஹிதோ
பதேஶம் பண்ணும்போது, தன்னையும், ஶிஷ்யனையும், பலத்தையும்
மாறாடி நினைக்கை க்ரூரநிஷித்தம். தன்னை மாறாடி நினைக்கையாவது
தன்னை ஆசார்யனென்று நினைக்கை. ஶிஷ்யனை மாறாடி நினைக்கையா
வது-தனக்கு ஶிஷ்யனென்று நினைக்கை. பலத்தை மாறாடி நினைக்

கையாவது - த்ருஷ்டப்ரயோஜநத்தையும், ஶிஷ்யனுடைய உஜ்ஜீவநத்தையும், பகவத்கைங்கர்யத்தையும், ஸஹவாஸத்தையும் ஃபலமாக நினைக்கை.—நினையாதிருக்க, இந்நாலு ஃபலமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; ஶேஷபூதனான ஶிஷ்யன் நினைவாலே த்ருஷ்டஃபலம் ஸித்திக்கும், ஈஶ்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும், ஆசார்யன் நினைவாலே பகவத்கைங்கர்யம் ஸித்திக்கும். உபகாரஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும். ஸாக்ஷாத்ஃபலமும், ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; தன்னினைவாலும், ஈஶ்வரன் நினைவாலும் ஸித்திக்கும், இப்படியொழிய வுபதேஶிக்கில், இருவருக்கும் ஸ்வரூபஸித்தியில்லை. ஆசார்யனுக்கு ஶிஷ்யன்பக்கல் க்ருபையும், ஸ்வாசார்யன்பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும். க்ருபையாலே ஶிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும், பாரதந்த்ர்யத்தாலே தன்ஸ்வரூபம் ஸித்திக்கும்.—நேரே ஆசார்யனென்பது - ஸம்ஸாரநிவர்த்தகமான பெரியதிருமந்த்ரத்தை உபதேஶித்தவனை. ஸம்ஸாரவர்த்தகங்களுமாய், க்ஷுத்ரங்களுமான பகவந்மந்த்ரங்களை யுபதேஶித்தவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை. பகவந்மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்கிறது - ஃபலத்வாரா. ஸம்ஸாரவர்த்தகங்களென்கிறது மத்தாலே, இதுதான் ஔபாயிகம், சேதநனுடைய ருசியாலே வருகையாலே.—ஶிஷ்யனென்பது-ஸாத்யாந்தரநிவ்ருத்தியும், ஃபலஸாதந ஶுஶ்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையையுமுடையவனை மந்த்ரமும், தேவதையும், ஃபலமும், ஃபலாநுபந்திகளும், ஃபலஸாதநமும், ஐஹிகபோகமுமெல்லா மாசார்யனென்று நினைக்கக்கடவன். (மாதாபிதாயுவதய:) என்கிற ஶ்லோகத்திலே, இவ்வர்த்தத்தை பரமாசார்யரு மருளிச்செய்தார். இதுக்கடி உபகாரஸ்ம்ருதி. உபகாரஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞதை. முடிந்தநிலம் ஈஶ்வரன்பக்கல் க்ருதஜ்ஞதை.—ஶிஷ்யனும், ஆசார்யனும், அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்தக்கடவர்கள். ஶிஷ்யன்றான் ப்ரியத்தை நடத்தக்கடவன். ஈஶ்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன், ஆசார்யன் மாறுடி நடத்தக்கடவன். ஶிஷ்யன் உகப்பிலே யூன்றிப்போரும், ஆசார்யன், உஜ்ஜீவநத்திலே யூன்றிப்போரும், ஆகையால், ஶிஷ்யன் ஆசார்யனுடைய ஹர்ஷத்துக் கிலக்காகையொழிய, ரோஷத்துக் கிலக்காகைக்கு அவகாஶமில்லை. நிக்ரஹத்துக்கு பாத்ரமாம்போது அது ஹிதரூபமா

கையாலேயிருவருக்கு முபாதேயம். ஶிஷ்யனுக்கு நிக்ரஹகாரணம் த்யாஜ்யம், நிக்ரஹந்தான் பகவந்நிக்ரஹம்போலே ப்ராப்யாந்தர்கதம். ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப்பேணக்கடவன், ஶிஷ்யன் ஆசார்யனுடைய தேஹத்தைப பேணக்கடவன்; இரண்டு மிருவருக்கும் ஸ்வரூபமுமாய், பகவத்கைங்கர்யமுமாயிருக்கும். ஆசார்யனுக்கு தேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி; ஶிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூபஹாநி. ஆசார்யன் ஆத்மரக்ஷணம் பண்ணுமிடத்தில் அஹங்காரம் விரோதி; ஶிஷ்யன் தேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி. ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன். ஶிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன். ஆசார்யன் ஶிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவனல்லன், ஶிஷ்யன் தன்வஸ்துவைக்கொடுக்கக்கடவனல்லன். கொள்ளில்மிடியனும், கொடுக்கில் கள்ளனும். கொள்கொடையுண்டானால் ஸம்பந்தங் குலையும். இவன் மிடியனுகையாலே கொடான். அவன் பூர்ணனுகையாலே கொள்ளான். அவனுக்கு பூர்த்தியாலே ஸ்வரூபம்ஜீவித்தது இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.—ஆனால் ஶிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணுமுபகார மொன்றுமில்லையோ வென்னில்; ஆசார்யன் நினைவாலேயுண்டு. அதாவது - ஜ்ஞாநவ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள். ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக விவனுக்குத்தவிர வேண்டுவது - பகவத்த்ரவ்யத்தை யபஹரிக்கையும், பகவத்போஜநத்தை விலக்குகையும், குரு மந்த்ர தேவதாபரிபவமும்.—பகவத்த்ரவ்யாபஹாரமாவது ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும். பகவத்போஜநத்தை விலக்குகையாவது-அவனுடைய ரக்ஷகத்வத்தைவிலக்குகை. அவனுடையரக்ஷகத்வக்ரமம்-ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம். குருபரிபவமாவது-கேட்டவர்த்தத்தின்படி அநுஷ்டியாதொழிகையும், அநதிகாரிகளுக் குபதேஶிக்கையும். மந்த்ரபரிபவமாவது-அர்த்தத்தில் விஸ்ம்ருதியும், விபரீதார்த்த ப்ரதிபத்தியும், தேவதாபரிபவமாவது - கரணத்ரயத்தையும் அப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணமாக்குகையும் தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும்,—இவனுக்கு ஶரீராவஸானத்தளவும் ஆசார்யவிஷயத்தில் (என்னைத்தீமனங்கெடுத்தாய், மருவித்தொழும் மனமேதந்தாய்) என்று உபகாரஸ்ம்ருதி நடக்கவேணும். மநஸ்ஸுக்குத் தீமையாவது -ஸ்வலக்ஷணத்தையும், பகவத்பாகவத

தோஷங்களையும் நினைக்கை. தோஷம் நினையாதொழிகிறது குணம் போலே யுண்டாயிருக்கவன்று. இல்லாமையாலே, தோஷமுண்டென்றுநினைக்கில் அதுபரதோஷமன்று, ஸ்வதோஷம்,ஸ்வதோஷமான படியென்னென்னில்; ஸ்வதோஷத்தாலும்,பந்தத்தாலும். ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்திநடக்கும்; நடந்ததில்லையாகில் தோஷஜ்ஞாநமேதோஷமாம். இதுதனக்கவஸரமில்லை. ஸ்வதோஷத்துக்கும், பகவத் பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே, ஸம்ஸாரிகள் தோஷமும் ஸ்வதோஷமென்று நினைக்கக்கடவன். அதுக்கு ஹேது பந்த ஜ்ஞாநம், (இறைப்பொழுது மெண்ணோமே) என்கையாலே அதுதான் தோன்றுது. தோன்றுவது நிவர்த்தநார்த்தமாக. பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கு மறியாதாப்போலே, தனக்குப்பிறர்செய்தகுற்றங்களை பகவத் பாகவத விஷயங்களிலறிவிக்கக்கடவனல்லன். அறிவிக்கவுரியவனகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்னுநின்றதிறே. குற்றஞ்செய்தவர்பக்கல், பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகாரஸ்ம்ருதியும்நடக்கவேணும். ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது, பகவத்குணாநுஸந்தாநம் அபயஹேது: பயாபயங்களிரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும். ஆனால் (நலிவானின்னமெண்ணுகின்றாய், ஆற்றங்கரைவாழ் மரம்போலஞ்சுகின்றேன்) என்கிற பாசுரங்களுக் கடியென்னென்னில்; பந்தாநுஸந்தாநம், ப்ரஜை தெருவிலே யிடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே, நிருபாதிக பந்துவாய் ஶக்தனாயிருக்கிறவன் விலக்காதொழிந்தால்,அப்படிசொல்லலாமிறே. ப்ரஜையக்கிணற்றின்கரையில்நின்றும் வாங்காதொழிந்தால், தாயே தள்ளினாளென்னக்கடவதிறே. இவனுடைய அநுமதி, பேற்றுக்கு ஹேதுவல்லாதாப்போலே, அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று; இரண்டு மிருவருக்கும் ஸ்வரூபம். இழவுக்கடி - கர்மம், பேற்றுக்கடி - க்ருபை; மற்றைப்படி சொல்லி லிழவுக்குறுப்பாம். எடுக்கநினைக்கிறவனைத் தள்ளினானென்கை எடாமைக்குறுப்பிறே. (சீற்றமுள) என்ற வநந்தரத்திலே இவ்வர்த்தத்தைத் தாமேயருளிச்செய்தாரிறே. சீற்றமுண்டென்றறிந்தால்சொல்லும்படி யென்னென்னில்; அருளும், ஆர்த்தியும், அநந்ய கதித்வமுஞ் சொல்லப்பண்ணும். சீறினாலுங் காலைக்கட்டிக் கொள்ளலாம்படி யிருப்பானொருவனைப் பெற்றால்லெல்லாஞ்சொல்லலாமிறே. (க்ருபயாபர்யபாலயத், அரிசினத்தால்)

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

—:o:—

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

௪-வது

த்ரிபாத்விபூதி ப்ரகரணம்.

த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க, அதுண்டதுருக்காட்டாதே, தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமாபோலே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய், இவர்களைப் பிரிந்தாலாற்றமாட்டாதே, இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குக் கரணகளேபரங்களைக்கொடுத்து, அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்கீடான ஶக்திவிஶேஷங்களையுங் கொடுத்து, 'கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்கள்' என்று கண்ணுக்குத்தோற்றாதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாகவிடமாட்டாதே அகவாயிலேயணைத்துக்கொண்டு, 'ஆட்சியில் துடர்ச்சிநன்று என்றுவிடாதே, ஸத்தையேநோக்கி உடன்கேடனாய், இவர்கள் அஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே அநுமதிதாநத்தைப்பண்ணி, உதாஸீநனைப்போலேயிருந்து, மீட்கைக்கிடம்பார்த்து, நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங்காணாதே, நெற்றியைக் கொத்திப்பார்த்தால் ஒருவழியாலும் பசைகாணாதொழிந்தால் அப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது, தனக்கேற விடம்பெற்ற வளவிலே, என்னூரைச் சொன்னாய், என்பேரைச்சொன்னாய், என்னடியாரைநோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய். அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய், என்னுமாபோலே' சிலவற்றையேறிட்டு, மடிமாங்காயிட்டு, பொன்வாணியன் பொன்னை உரைகல்லிலேயுரைத்து மெழுகாலே யெடுத்துக் காற்கழஞ்சென்று திரட்டுமாபோலே, ஜந்மபரம்பரைகள்தோறும், யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருதவிஶேஷங்களைக்கற்பித்துக்கொண்டு, தானேயவற்றையொன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டுபோரும். லளிதாசரிதாதிகளிலே இவ்வர்த்தஞ்சுருக்க, மொழியக்காணலாம். அஜ்ஞாநமநுஷ்யர்கள், * வாளாதந்தானென்ருப்பர்கள்; ஜ்ஞாநவான்கள், (இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென்னுள்வைத்தான், என்னன்றிசெய்தேனா வென்னெஞ்சிற்றிகழ்வதுவே, நடுவேவந்துய்யக்கொள்கின்ற நாதனை, அறியாதன வறிவித்த

* 'வாளார்தந்தார்' என்று பாடாந்தரம்.

வத்தாகீசெய்தன வடியேனறியேனே, பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமைகொண்டாய், என்னைத்தீமனங்கெடுத்தாய், மருவித்தொழும் மனமேதந்தாய்) என்றீடுபடாநிற்பர்கள். ஸாக்ஷியகாரர் காலத்திலே ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந் தனையும்பார்த்துப் பெரியதிருமண்டபத்துக்கீழாக முதலிகளெல்லாரும் திரளவிருந்தவளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்புபிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது. ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றுசாகக்கொண்டு கடாக்ஷியாநிற்கும். இவையுங்கூட விளையும்படியிறே இவன்றன்னை முதலிலே அவன் ஸ்ருஷ்டித்தது. அது தன்னை நிரூபித்தால் இவன் றனக்கொன்றுஞ் செய்யவேண்டாதபடியாயிருக்கும். பழையதாக உழுவது, நடுவது, விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரிமுளைத்து ஃபலபர்யந்தமாமாபோலே, இவைதான் தன்னடையேவிளையும்படியாயிற்று, (பத்தியுழவன் பழம்புனத்தை) ஸ்ருஷ்டித்த கட்டளை. அவைதானெவையென்றால்; பூர்வக்ருத புண்யாபுண்ய ஃபலங்களை சிலகாலம் புஜித்து, உத்தரகாலத்தில் வாஸநைகொண்டு ப்ரவர்த்திக்குமத்தனை யென்னும்படி கையொழிந்த தசையிலே, நாமார், நாம் நின்றநிலையெது, நமக்கினிமேல் பொக்கடியேதென்று பிறப்பன சில நிரூபணவிசேஷங்களுண்டு, அவையாதல் முன்புசொன்னவையாதல். (யதா ஹி மோக்ஷகா: பார்த்தயே) என்று துடங்கி இதினுடைய க்ரமத்தை பகவச்சாஸ்த்ரத்திலே சொல்லிற்று. (வெறிதேயருள்செய்வர்) என்று இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே. செய்வார்கட்கென்று - அருளுக்கு ஹேதுஸுக்ருத மென்று நின்றதேயென்னில்; அப்போது வெறிதேயென்கிற விடஞ்சேராது. பகவதாஸிமுகவீயம் ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத்க்ருபையாலே பிறக்கிறது. அத்வேஷம் ஸுக்ருதத்தாலேயென்னில்; இந்த ஃபலவிசேஷத்துக்கு அத்தைக்காரண மென்னவொண்ணாது. சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிறவித்தை ஸுக்ருதமென்று நாம்பேரிடுகிறபடி யென்னென்னில்; நாமன்று, ஈஶ்வரனென்று கேட்டிருக்கையாயிருக்கும். இவ்வர்த்தவிஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பரவிருத்தியம்போலே தோற்றும். அவற்றிற்சொல்லும் பரிஹாரங்களும், மற்றுமுண்டான வக்தவ்யங்களும், விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம். ஆகையால் இவன்விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷிபண்ணின ஈஶ்வரனையநுஸந்தித்தால், எப்

போதும் நிர்ஹயனுயே யிருக்குமித்தனை. 'எதிர்சூழல்புக்கு என்று ஒருவனைப்பிடிக்கநினைத்து ஊரைவளைவாரைப்போலேவ்யாப்தியும், ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே ஸ்வார்த்தமாக' என்றிறேஜ்ஞாநாயி கரநுஸந்திப்பது, கர்மபலம்போலே க்ருபாபலமு மநுபவித்தேயற வேணும்.—க்ருபைபெருகப்புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலுந் தகையவொண்ணுதபடி யிருகரையு மழியப்பெருகும். பயஹேதுகர் மம். அபயஹேது காருண்யம்; பயாபயங்க ளிரண்டும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கும். நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தக ஜ்ஞாநம் அபயஹேது. ஸ்வதந்த்ரனை யுபாயமாகத் தான்பற்றினபோ திறே இப்ப்ரஸங்கந்தா னுள்ளது. உண்டபோ தொருவார்த்தையும், உண்ணுதபோ தொருவார்த்தையுஞ் சொல்லுவார் பத்துப்பேருண்டி றே. அவர்கள் பாசுரங்கொண்டன் றிவ்வர்த்த மறுதியிடக்கடவது. அ வர்களைச் சிரித்திருப்பா ரொருவருண்டிறே, அவர்பாசுரங்கொண் டி வ்வர்த்த மறுதியிடக்கடவோம். ஸ்வரூபத்துக்கும், ப்ராப்யத்துக்குஞ் சேர்ந்திருக்கவேணுமிறே ப்ராபகம். வடுகநம்பி ஆழ்வானையும், ஆண் டானையும், இருகரையரென்பர். ப்ராப்யத்துக்கு ப்ரதமபர்வம்-ஆசா ர்ய கைங்கர்யம், மத்யமபர்வம் - பகவத்கைங்கர்யம், சரமபர்வம் - பாகவதகைங்கர்யம். ஸ்வரூபப்ராப்தியை ஶாஸ்த்ரம் புருஷார்த்தமா கச் சொல்லாநிற்க ப்ராப்திபலமாய்க்கொண்டுகைங்கர்யம்வருகிறுப் போலே ஸாத்யவிவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம்வரக்கடவ து. இதுதான் தூர்லபம். விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டுபகவத் விஷயத்திலேவருகைக்குள்ளவருமைபோலன்று, ப்ரதமபர்வத்தைவி ட்டு, சரமபர்வத்திலேவருகைக்குள்ளவருமை. அங்குதோஷதர்ஶநத் தாலே மீளலாம், இங்கு அது செய்யவொண்ணுது. தோஷமுண்டா னாலும் குணம்போலே யுபாதேயமாயிருக்கும். லோகவிபரீதமாயி றே யிங்கிருப்பது. குணமுபாதேயமாகைக் கீடானஹேது தோஷ த்துக்குமுண்டிறே. நிர்குணனென்று வாய்மூடுவதற்கு முன்னே ஸகுணவானென்று சொல்லும்படியா யிருந்ததிறே, இப்படி சொல் லும்படி பண்ணிற்று க்ருபையாலேயென்று, ஸ்நேஹமும், உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே, நிர்குணனுக ஶங்கித்துச்சொல்லு மவஸ் தையிலும், காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று. குணதோ ஷங்களிரண்டும், க்ஷுத்ரபுருஷார்த்தத்தையும், புருஷார்த்தகாஷ்டை யையுங் கொலைக்கும் நித்யஶத்ருவாயிறேயிருப்பது. இப்படி ப்ராப்

யத்தை யறுதியிட்டா லதுக்கு ஸத்ருஶமாக வேணுமிறே ப்ராபகம். அல்லாதபோது ப்ராப்யப்ராபகங்களுக்கு ஐக்யமில்லை ஈஶ்வரனைப் பற்றுகை-கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப்பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி, ஆசார்யனிருவர்க்கு முபகாரகன். ஈஶ்வரனுக்கு ஶேஷவஸ்துவை யுபகரித்தான். சேதநனுக்கு ஶேஷியை யுபகரித்தான், ஈஶ்வரன்றானும் ஆசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கும், ஆகையிறே குருபரம்பரையிலே அந்வயித்ததும், ஸ்ரீகீதையும் அபயப்ரதாநமு மருளிச்செய்ததும். ஆசார்யனுக்கு ஸத்ருஶப்ரத்யுபகாரம் பண்ணலாவது - விபூதிசதுஷ்டயமும் ஈஶ்வரத்வயமு முண்டாகில், ஈஶ்வர ஸம்பந்தம் பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும். ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கேஹேதுவாயிருக்கும், பகவல்லாபம் ஆசார்யனாலே, ஆசார்யலாபம் பகவானாலே; உபகார்யவஸ்து கௌரவத்தாலே, ஆசார்யனைக்காட்டில் மிகவுமுபகாரகன் ஈஶ்வரன், ஆசார்யஸம்பந்தங் குலையாதே கிடந்தால், ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுண்டாக்கிக்கொள்ளலாம்; ஆசார்ஸம்பந்தங் குலைந்தால், அவையுண்டானாலும் ப்ரயோஜநமில்லை. தாலிகிடந்தால் பூஷணங்கள் பண்ணிப் பூணலாம், தாலிபோனால் பூஷணங்களெல்லாம் அவத்யத்தை விளைக்கும். தாமரையை யலர்த்தக்கடவ ஆதித்யன்றானே நீர்ப்பிரிந்தா லத்தையுலர்த்துமாபோலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈஶ்வரன்றானே ஆசார்யஸம்பந்தங் குலைந்தா லத்தைவாடப்பண்ணும். இத்தையொழிய பகவத்ஸம்பந்தம் துர்லபம். இரண்டுமமையாதோ, நடுவிற்பெருங்குடியென்னென்னில்; கொடியைக்கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால் வேண்டுமாபோலே ஆசார்யாந்வயத்துக்கு மிதுவேணும். 'ஸ்வாபிமாநத்தாலே ஈஶ்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமாநமொழிய கதியில்லை' என்று பிள்ளை பலகாலு மருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும். ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்திநழுவிற்று, பகவத்ஸ்வாதந்த்ர்யபயத்தாலே ப்ரபத்திநழுவிற்று; ஆசார்யனையுந்தான் பற்றும்பற்று அஹங்கார கர்ப்பமாகையாலே, காலன்கொண்டு மோதிரமிடுமோபாதி. ஆசார்யாபிமாநமே உத்தாரகம். கைப்பட்டபொருளைக் கைவிட்டுப் புதைத்தபொருளைக் * கணிசிக்கக்கடவனல்லன், விடாய்

* கணிசிக்கை - இச்சிக்கை.

பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து ஜீமூதஜலத்தையும், ஸாகரஸலிலத்தையும், ஸரித்ஸலிலத்தையும், வாபீகூப பயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக்கடவனல்லன். பாட்டுக்கேட்குமிடமும் கூப்பீடுகேட்குமிடமும், குதித்தவிடமும், வளைத்தவிடமும், ஊட்டுமிடமுமெல்லாம் வகுத்தவிடமேயென்றிருக்கக்கடவன். இவனுக்கு ப்ரதிகூலர் - ஸ்வதந்த்ரரும், தேவதாந்தரபரரும், அநுகூலர் - ஆசார்யபரதந்த்ரர். உபேக்ஷணீயர் - ஈஶ்வரபரதந்த்ரர், ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் - அல்லாதார்க்கு உபாயாங்கமாயிருக்கும், இவனுக்கு * உபேயாங்கமாயிருக்கும். இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம்- தன்னையும் பிறரையும் நஶிப்பிக்கையாலே த்யாஜ்யம். தான் நஶிக்கிறது - மூன்றபசாரத்திலும் அந்வயிக்கையாலே, பிறர் நஶிக்கிறது - தன்னை அநாதரித்தும் தன் அநுஷ்டாநத்தை அங்கீகரித்தும். விஹிதபோகம் - நிஷித்தபோகம்போலே லோகவிருத்தமுமன்று, நரகஹேதுவுமன்று. ஆயிருக்கச்செய்தே, ஸ்வரூபவிருத்தமுமாய், வேதாந்த விருத்தமுமாய், ஶிஷ்டகர்ஹிதமுமாய், ப்ராப்யப்ரதிபந்தகமுமாயிருக்கையாலே த்யாஜ்யம். போக்யதாபுத்தி கொலைந்து தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபங்கொலையும். (க்ஷேத்ராணிமித்ராணி) என்கிற ஶ்லோகத்திலவஸ்தைபிறக்கவேணும், ஸ்வரூபங்கொலையாமைக்கு ப்ராப்யபூமியில் ப்ராவண்யமும், த்யாஜ்யபூமியில் ஜிஹாஸையும், அநுபவலாபத்தில் ஆத்மதாரண யோக்யதையும், உபாயசதுஷ்டயத்துக்கும் வேணும். (பழுதாகாதொன்றறிந்தேன்) என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்பது. (நல்லவென்தோழி, மாறுயதானவனை) என்கிற பாட்டுக்களையும், ஸ்தோத்ரத்தில் முடிந்த ஶ்லோகத்தையும், (பஶுர்மநுஷ்ய:) என்கிற ஶ்லோகத்தையும், இதுக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்பது. ஆசார்யாபிமாநந்தான், ப்ரபத்திபோலே உபாயாந்தரத்துக்கு அங்கமுமாய், ஸ்வதந்த்ரமுமா யிருக்கும். பக்தியில் அஶக்தனுக்கு ப்ரபத்தி, ப்ரபத்தியில் அஶக்தனுக்கு இது. இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாக்கும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீவசநபூஷணம் முற்றிற்று.

---

* 'உபேயமாயிருக்கும்' என்று பாடாந்தரம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:,

அர்ச்சிராதி

ப்ரதமப்ரகரணம்.

தனியன்.

(கலித்துறை.)

போர்மண்டலஞ்சங்கு தண்டுவில் வாள்புக ராழிவெய்யோன்
கார்மண்டலஞ்சென்று காண்பார் தமக்குக் கதிரொளியோன்
* ஏர்மண்டலந்தன்னை யெய்தும்வழியை யினிதுரைத்தான்
பேர்மண்டலகுரு வென்னு முடும்பை பிறந்தவனே.

நூல்.

ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு விபூதித்வயமும் ஶேஷமாயிருக்கும். அதில் போகவிபூதியிலுள்ளார் - (ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப) என்கிறபடியே அவனுடைய செங்கோலே ஏகாதபத்ரமாக நடக்கும்படி அவனுடைய வபிமாநத்திலே யந்தர்பவித்துப் போருவர்கள். லீலாவிபூதியிலுள்ளார் - அவர்களைப்போலே ஸ்வச்சந்தாநு வர்த்திகளன்றிக்கே ஸங்கல்பாநுவிதாயிகளாய், (நமஇத்யேவவாதிந:) என்கிறதுக் கெதிராக (நநமேயம்,) (ஈஶ்வரோஹம்) என்கிறபடியே, மனையடைவே, (யானேயென்றனதே) என்று, அவர்கள் (பணியா வமரரா) யிருக்கு மிருப்புக்கெதிராக மற்றோர் தெய்வம்பாடி யாடிப்பணிந்து, (மிக்கார்வேதவிமலர்) என்கிறபடியே, அவர்களைப்போலே பெருமக்களாயிராதே (சிறியார் சிவப்பட்டார்) என்கிறபடியே சிறியராய், (அயர்வறுமமரர்கள்) என்கிறபடியே அவர்களைப்போலே திவ்யஜ்ஞாநோபபந்நராயிராதே அறிவிலாமனிசராய், ஒளிக்கொண்டசோதிக்கெதிராக அழுக்குடம்பை பரிக்ரஹித்து, (விபந்யவ: விண்ணோர்பரவுந்தலைமகன்) என்கிறதுக்கெதிராக உலகில் கண்டவா தொண்டரைப்பாடி (உனக்கே நாமாட்செய்வோம்) என்கிறபடியே அவனுக்காட் செய்யாதே ‡ மாரனார்வரி வெஞ்சிலைக் காட்செய்து, தொண்டுபூண்ட முதமுண்ணாதே பாவையர்வா யமுதமு

---

* 'மண்டலந்தன்னிலேகும்படியை' என்றும் பாடங்காண்கிறது.

‡ மாரன் - காமன்.

ண்டு, (ஸஏகயாஹதி, த்வியாஹவதி) என்கிறதுக்கெதிராக குலந்தானெத்தனேயும்பிறந்து, உருவார்சக்கரஞ் சங்குசுமந்தங்கவனோடொருபாடுழலாதே ஆக்கையின்வழி யுழன்று, (ஏதத் வ்ரதம்மம) என்கிறவனுடைய வ்ரதத்துக்கெதிராக யாதானும்பற்றி நீங்கும் விரதத்தையேறிட்டுக்கொண்டு, (அவர்தருங் கலவியேகருதி யோடினேன்) என்கிறபடியே அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கு மெட்டாதபடி கைகழியவோடி, அற்பசாரங்களவை சுவைத்தகன்று போரக்கடவராயிருப்பர்கள்.—இவர்கள் தண்மையைப்பார்த்துக் கைவிடாதே, ஸ்வாபாவிக ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே ‡ எதிர்சூழல்புக்குத் திரிகிறஸர்வஸ்வத ஸுஹ்ருத்தான ஸர்வேஶ்வரனுடைய யத்நவிஶேஷம். ஒருநாள்வளையிலே யோரவகாஶத்திலே ஷலித்து, அத்வேஷாபிஸந்தியையுடையனுய், மோக்ஷ ஸமீக்ஷாயுக்தனுய், ப்ரவ்ருத்தமானவைராக்யனுய், விவேகாபிநிவேஶியாய், ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் பண்ணிச்செய்த வேள்வியனுய், ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை யநுஸந்தித்து, ஸர்ப்பாஸ்யகதமான மண்டூகம் போலேயும், காட்டுத்தீகதுவின மான்பேடைபோலேயும், இருபாடெரிகொள்ளியினுள் ளெறும்புபோலேயும், ஆவாரார்துணையென் றலைநீர்க்கடலுளழுந்தும் † நாவாய்போலேயும், ஆற்றத்துளங்கி, (பலநீகாட்டிப்படுப்பாயோ, இன்னங்கெடுப்பாயோ, ஐவர்திசைதிசை வலித்தெற்றுகின்றனர், கூறைசோறிவைதாவென்று குமைத்துப்போகார்) என்று இந்த்ரியங்களினுடைய கொடுமையை நினைத்துக் கூப்பிட்டு, (எண்ணாராத் துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை, உயிர்மாய்தல் கண்டாற்றேன், ஓஓஉலகினதியல்வே) என்று ஸம்ஸாரிகளிழவுக்கு நொந்தாற்றமாட்டாதே, (பேயரேயெனக்கியாவரும், நாட்டுமானிடத்தோடெனக்கரிது) என்றும் (நாட்டாரோடியல்வொழிந்து) என்றுஞ் சொல்லுகிறபடியே, பிராட்டிக்கு ராக்ஷஸிகளோட்டை ஸஹவாஸமஸஹ்யமானுற்போலே, மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொண்டு உண்டியேயுடையே யுகந்தோடுகிற ஶௌரிசிந்தாவிமுகரான ஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸம் து:ஸ்ஸஹமாய், (இங்கின்ற நீர்மையினியாமுருமை, எங்கினித்தலைப்பெய்வன், நாளேலறியேன், வானுலகந்தெளிந்தே யென்றெய்துவது, தரியேனினி, கூவிக்கொள்ளுங்

---

‡ எதிர்சூழல்புக்கு - ஸஜாதீயாவதாரம்பண்ணி † நாவாய் - ஓடம்.

காலமின்னங்குறுகாதோ) என்று ஹமவஜநுஹவம் பெருமையாலே
பெருவிடாய்ப்பட்டு, தீயோடுடன்சேர்மெழுகாய், காணவாராயென்
றென்று கண்ணும்வாயுந்துவர்ந்து, காணப்பெருமையாலே ஒருபக
லாயிரமூழியாய், (க்ருதக்ருத்யா:ப்ரதீக்ஷந்தே) என்கிறபடியே ஆக்
கைவிடும் பொழுதை மநோரயித்து, மஹிஷியினுடைய உச்ஹிஷ்ட
த்தை விரும்பும் ராஜபுத்ரனைப்போலே தான்த்யஜித்த தேஹத்தை
விரும்புகிற ஈஶ்வரனை (மங்கவொட்டு) என்றபேக்ஷித்து, (உண்டிட்
டாயினி யுண்டொழியாய், முற்றக்கரந்தொளித்தாய், திருவாணைநின்
னாணை கண்டாய், இனி நான் போகலொட்டேன்) என்று தடுத்தும்,
வளைத்தும் பெறவேண்டும்படி பரமபக்திதலையெடுத்தல், அவ்வளவ
ன்றிக்கே யுக்திமாத்ரத்திலே அந்வயித்தல், (நானும் பிறந்தமை பொ
ய்யன்றே, தங்கள் தேவரைவல்லபரிசு வருவிப்பரேலதுகாண்டும் (எ
ன்று சொல்லுகிறபடியே பழுதாகாதவழியை யறிந்து வேறாகவேத்
தியிருக்கு மவனைப்பற்றுதல்செய்து, தெளிவுற்றுவீவின்றி நிற்குமவ
னுக்கு, ஶரீராவஸாநகாலத்திலே, ஈஶ்வரன், தன் திருவடிகளிலே
யிவன்தலைசாய்த்தவன்றுதுடங்கி (ருணம்ப்ரவ்ருத்யம். உன்னடியா
ர்க் கென்செய்வனென்றேயிருத்திநீ) என்கிறபடியே பெருந் * தனி
சாளனாய், ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறித்திருத்திப் பணிகொள்ளநி
னைத்து, பல்வாங்கின பாம்புபோலே ஸம்ஸாரம் ‡ மறுவலிடாதபடி
யடியறுக்கச் செய்தேயும் 'பிணமெழுந்து கடிக்கிறதோ' என்றதிஶங்
கைபண்ணி, அமர்ந்த நிலத்திலே கொடுபோகையிலே விரைந்து, இ
வன் விடாய்குளப்படி யென்னும்படி கடல்போலே முற்றப்பருகவே
ண்டும்படி பெருவிடாயை யுடையனாய், ஒருமாநொடியும் பிரியாதே,
சக்ரவர்த்தி, பெருமாள் திருவபிஷேகத்துக்கு, வஸிஷ்ட வாமதேவா
திகளை யழைத்துப் § பாரித்தாற்போலே, நித்யஸூரிகளை யழைப்பி
த்துவழியைக் ○ கோடிப்பிப்பதாய்க்கொண்டு, (அலங்காரவிதிம் க்ரு
த்ஸ்நம்காரயாமாஸவேஶ்மநி) என்கிறபடியே வீடுதிருத்தி, அநா- கா
லார்ஜ்ஜிதங்களாய் இவனாசார்ய ஸமாஶ்ரயணம்பண்ணின வன்றே

---

* தனிசு - கடன்.

‡ மறுவலிடுகை - திரும்புகை.

பாரித்தல் - உத்யோகித்தல்.

○ கோடிக்கை - அலங்கரிக்கை.

துடங்கி அருளென்னுந் தண்டாலடியுண்டு, மூக்கும்முகமுஞ் சிதைந்து, பண்டுபோலே வீற்றிருக்கை தவிர்ந்து, மடியடக்கி நில்லாதே சரக்குவாங்கி, (மருங்குங்கண்டிலமால்) என்னும்படியொளித்து வர்த்திக்கிற பூர்வாவங்களையும், உத்தரராவங்களையும், அநுகூலர் விஷயமாகவும், ப்ரதிகூலர் விஷயமாகவும், வருணனைக்குறித்துத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே * அசல்பிளந்தேறிட்டு, இவனோடு ஸம்பந்த முடையராய் நரகாநுபவம் பண்ணுகிறவர்களை (ஏதத்ஸம்பந்தி நஶ்சாந்யே) என்கிறபடியே ஸ்வர்ஶஸ்யராம்படி நினைப்பிட்டு, (ஊஷ:பஞ்சாத்மநாதேந தார்க்ஷ்யரூபேண, செழும்பறவைதானேறித்திரிவான்) என்று சொல்லுகிறபடியே (அருளாழிப்புட்கடவீர்) என்று இவனுசைப்பட்டபடியே கொற்றப்புள்ளொன்றேறிவந்து தோன்றி, மஞ்சுயர் பொன்மலைமேலெழுந்த மாமுகில்போன்ற வடிவையநுபவிப்பித்து, ஆதிவாஹிகரை யழைத்தருளி, இவனை ஸத்கரிக்கும் க்ரமத்திலே ஸத்கரிக்க வருளிச்செய்ய; பின்பு (இந்த்ரியைர்மநஸிஸம்பத்யமாநைர்வாங்மநஸிஸம்பத்யதே, மந:ப்ராணே, ப்ராணஸ்தேஜஸி, தேஜ:பரஸ்யாமதேவதாயாம்) என்கிறபடியே வாஹ்யகரணங்கள் அந்த:கர்ணத்திலேசேர்ந்து, அந்த:கரணம் ப்ராணனோடேசேர்ந்து, ப்ராணன் இச்சேதநனோடே ஸம்பந்தித்து இவன் ஸூக்ஷ்மஶரீர விஶிஷ்டனாய்க் கொண்டு பரமாத்மாவின் பக்கலிலேசேரும். பின்பு, வர்மகாலத்திலே ஆதித்யகிரணத்தாலே தப்தனானவன் நிழல்மரத்தைப் பற்றி யிளைப்பாறுமாபோலே, ஸம்ஸாரதாபவர்க்க தாபதாபிதனான விவன் வாசுதேவ தருச்சாயையைக்கிட்டி விஶ்ரமித்து, திருக்கோவலூருக்குப் போம்போது திருமங்கை யாழ்வாருக்கு (தானுகந்த வூரெல்லாந் தன்றாள்பாடி) என்கிற படியே திருவுலகளந் தருளின திருவடிகளே பாதேயமாமாபோலே, (ப்ராணப்ரயாணபாதேயம், பாதேயம் புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்) என்கிறபடியே த்வயவசநமேபாதேயமாகவும், (ஏதேநப்ரதிபத்யமாநா:, தேவயாநபதஸ்ஸர்வே முக்திமார்க்காபிலாஷிண:) என்கிறபடியே அர்ச்சிராதிமார்க்கமே பெருவழியாகவும், அண்டத்தப்புறத் துய்த்திடுமையனாய், ஆப்ததமனாய், படர்கொள் பாம்பணைப்பள்ளிகொண்ட சுரிகுழற்கமலக்கட் கனிவாய்க் காளமேகமான அரங்கத்துறையு மின்துணைவனே வழித்துணையாக

* அசல்பிளந்தேறிடுகை - அர்யத்ரஸங்க்ரமிப்பிக்கை.

வும், விரஜாதீரமும் திவ்யவ்ருக்ஷமும் ஆரம்ஹ்ருதடமுமே விஶ்ரமஸ்தலமாகவும், திருமாமணிமண்டபமே புகலிடமாகவும், அர்ச்சிராதி புருஷர்களே * உசாத்துணையாகவும், சூழ்விசும்பணி முகிலினுடைய முழக்கமே ப்ரயாணபடஹத்வனியாகவுமமைந்து வழியைத்தரும் நங்கள்வானவரீசனான ஹார்தன் வழிபட்டோடவருள, வானேறவழிபெற்று, போக்கிலே யொருப்பட்டு, ப்ரீத்யதிசயத்தாலே, அநாதிகாலம் தன்னைக்குடிமைகொண்டுபோந்த ஸம்ஸாரத்தை, (நரகத்தைநகுநெஞ்சே) என்கிறபடியே புரிந்து பார்த்துச்சிரித்து, மாகவைகுந்தங் காண்பதற்குப் பண்டேயுண்டானவாசை † கொந்தளித்து, மேலேமேலேபெருக, பிராட்டியும் ஸ்ரீவிபீஷணப்பெருமாளு மிலங்கையினின்றும் புறப்பட்டாற்போலே ஹ்ருதயகமலத்தினின்றும் புறப்பட்டு, (சதஞ்சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய:) என்கிறபடியே - ஹ்ருதயத்தைப் பற்றிக்கிடக்கிற நூற்றொருநாடியிலும், ஸுஷும்னை என்று பேரையுடைத்தான மூர்த்தன்யநாடியாலே, வித்யாமாஹாத்ம்யத்தாலும் தேவயாநாநுஸ்ம்ருதியாலும் ப்ரஸந்நனான ஹார்தன் கைவிளக்குப் பிடித்துக்கொண்டுபோகப்போய், சிர:கபாலத்தை பேதித்து, த ஆஸு நாடீஷு ஸ்ருப்தா:, ஆப்யோ நாடீப்ய: ப்ரஜாயந்தே, தேமுஷ்மிந்நாதித்யே ஸ்ருப்தா:, அதைதைரேவ ரஸ்மிபிரூர்த்வ ஆக்ரமதே) என்கிறபடியே அந்நாடியோடே ஸம்பந்தித்து, ஆதித்யரஸ்மியை யநுஸரித்துக்கொண்டு, (ஓங்காரரதமாருஹ்ய) என்கிறபடியே ப்ரணவமாகிற தேரிலேயேறி, மநஸ்ஸு ஸாரத்யம் பண்ணப்போம்போது, கையார்சக்கரத்தினின் றெல்லாவடிவும் ? புதுக்கணிக்குமாபோலே உபயவிபூதியும் புதுக்கணித்து, கடல் தன் காம்பீர்யமெல்லாங் குலைந்து, கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிந்து ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணியார்க்க, உபரிதநலோகங்களி லுள்ளார்களுடைய உபஹாரபாணிகளாய், நெடுவரைத்தோரணம் நிரைத்து, ஆகாசமெங்கும் பூர்ணகும்பங்களாலே பூர்ணமாக்கி, தூபநன்மலர் மழைபொழிந்து, 'இவனொருக்கால் தங்கிப்போமோ' என்கிற நோயாசையாலே எதிரெதிரிமையவ ரிருப்பிடம்வகுக்க, லோகங்களெல்லா மதிரும்படி கடலிரை

* உசாத்துணை - ஸஹாயம்.

† கொந்தளிக்கை - பொங்குகை

? புதுக்கணிப்பு - நவீநகாந்தி.

த்தாற்போலே வாத்யங்களெங்கும் முழங்க, வழியிலுள்ளார்களடைய (போதுமினெமதிடம்புகுதுக) என்கிறபடியே தந்தாம் ஸ்தாநங்களையும் ஐஶ்வர்யங்களையும் ஸமர்ப்பிக்க, சிலர் கீதங்கள்பாட, சிலர் யாநாதிஸம்ஸ்க்ருத ஸலங்களை ஸமர்ப்பிக்க, வேறே சிலர் தூபதீபாதிகளாலே அர்ச்சிக்க, சிலர் காளங்கள் வலம்புரி கலந்தெங்கு மாரவாரிப்ப, வாளொண்கண் மடந்தையரான ஆதிவாஹிகமஹிஷிகள் 'இது அராஜகமாய்க் கிடக்கக்கடவதோ, இத்தையாளவேணும்' என்று மங்களாஶாஸநம்பண்ண, மருதரும் வசுக்களும் இவன் விரைந்துபோனு லீஶ்வரன் நமக்குக்கையடைப்பாக்கின நிலங்கழிந்ததென்றிராதே, லோகாந்தரங்களிலுந் துடர்ந்துசென்று இவன் செவிப்படும்படி ஸ்தோத்ரம்பண்ண, (மற்றெல்லாங்கைதொழப்போய்) என்கிறபடியே பெரியஸத்காரத்தோடே போம்போது (அர்ச்சிஷமேவாபி ஸம்ஸவந்தி, அர்ச்சிஷோஹ, அஹ்ந ஆபூர்யமாணபக்ஷம், அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்லஷண்மாஸா உத்தராயணம் என்று ஸாந்தோக்ய வாஜஸநேய கௌஷீதகி ப்ரஶ்ருதிகளிற் சொல்லுகிறபடியே, அர்ச்சிராதிபுருஷர்கள் வழிநடத்தப்போம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

---:o:---

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

த்விதீயப்ரகரணம்.

---:o:---

அதில் முற்பட அர்ச்சிஸ்ஸைக்கிட்டி, அவன் சிறிதிடம் வழிநடத்த, பின்பு அஹஸ்ஸையும், ஶுக்லபக்ஷாபிமாநியையும், உத்தராயணாபிமாநியையும், ஸம்வத்ஸராபிமாநியையும், வாயுவையுங் கிட்டி, அவர்கள்வழிநடத்த, (ப்ரவிஶ்ய ச ஸஹஸ்ராம்ஶும், மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள்) என்கிறபடியே, ஹிரண்மயமாய் காலசக்ர ப்ரவர்த்தகமான தேரார் நிறைகதிரோன் மண்டலத்திலே, எதிர்விழிக்கவொண்ணாதபடி நிரவதிக தேஜஸ்ஸோடே எதிரேயொரு ஆதித்யன் செல்லுமாபோலேசென்று, அவன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு, அவ்வருகேபோய், (க்ரமாச்சந்த்ரமஸம்ப்ராப்ய)

என்கிறபடியே க்ரஹநக்ஷத்ரதாரகா நிர்வாஹகனாய் அம்ருதாத்மகனாயிருந்துள்ள சந்த்ரனைக்கிட்டி, அவன் ஸத்கரிக்க அவ்வருகே போய், அமாநவனைக்கிட்டி, அவன்வழிநடத்த, ஸர்வாப்யாயகனான வருணனும், த்ரைலோக்ய பாலகனான இந்த்ரனும், முக்தராய்ப்போகுமவர்களை ஸர்வப்ரகாரத்தாலும் மிகவும் ஶ்லாகிக்கக் கடவர்களாய், ஸுராஸுர கந்தர்வ யக்ஷராக்ஷஸ நிர்வாஹகனான ப்ரஜாபதியையுஞ் சென்றுகிட்டி, அவர்கள் லோகங்களையுங் கடந்து, அண்டத்தையும், உத்தரோத்தரமான ஆவரண ஸப்தகத்தையும், முடிவில் பெரும்பாழான மூலப்ரக்ருதியையுங்கடந்து; முன்பு ஸம்ஸாரியான நாளில் அந்தகாராவ்ருதமாய், நீரும் நிழலுமின்றிக்கே (வீதோஷ்ம்யஹம் மஹாஷேவஶ்ருத்வா மார்கமஸ்ய விஸ்தரம்) என்கிறபடியே, கேட்டபோதே துளங்கவேண்டும்படியான கொடியவழியிலே, யமபடர் பாசங்களாலும், புத்ரதாரமய பாசங்களாலுங் கட்டுண்டு, யமதூதராலே யிழுப்புண்டு; தொடைவழி நாய்கள்கவர, ஶக்தி ஶங்கு தோமர ஸாயக ஶூலாதிகளாலே நோவுபட்டு, வ்யாக்ர கிங்கரரான ராக்ஷஸர் முகங்களுக்கிரையாய் உடம்பெங்கும் சீயும் ரக்தமும்வடிய, பசியும் தாஹமும் மேலிட்டு, தூதரைச் சோறும் தண்ணீரும் வேண்டி, மூக்கும் முகமும் உதடும் பல்லுந்தகர்ந்து, கையுங் காலுமொடிந்து கூப்பிட்டுப்போன விழவுதீர, ஸுவோத்தரமான மார்க்கத்தாலே இவ்வெல்லை கடந்தபோதே துடங்கிக் கண்டாருடைய ஸத்கரிக்க, தனக்குபாயமான பாரளந்த பாதப்போதுபோலேயும், அந்தரமேழினூடு செலவுய்த்த பாதம்போலேயுங் கடுநடையிட்டுப்போய், ஶீதோஷ்ண ஸ்பர்ஶாதிகளாகிற ஸிம்ஹவ்யாக்ராதிகளைத் தப்பி, ஸம்ஸாரமாகிற பெருந்தூற்றினின்றும் புறப்பட்டு, தாபத்ரயமாகிற காட்டுத்தீயிலேயகப்பட்டுப் பட்டக்லேஶமெல்லாந்தீர, (ததஸ்துவிரஜாதீரப்ரதேஶம். ஸமச்ஹதி விரஜாம்நதீம்) என்கிறபடியே 'அம்ருதவாஹிநியாய், வைதரணிக்கெதிர்த்தட்டான விரஜையைச் சென்றுகிட்டி, வன்சேற்றள்ளலையும் வாஸநாரேணுவையுங் கழுவி, மேகாவ்ருதமான ஆதித்யமண்டலம்போலேயும், ராஹுக்ரஸ்தமான சந்த்ரமண்டலம்போலேயும், சேற்றிலழுந்தின மாணிக்கம்போலேயும் அழுக்குடம்பிலேயகப்பட்டு திரோஹிதஸ்வரூபனான இவன் அதுவும் நிவ்ருத்தமாய், (தத்தோயஸ்பர்ஶமாத்ரேண) என்கிறபடி

யே விரஜாஜலஸ்பர்ஶத்தாலே திரோதாயகமான ஸூக்ஷ்மஶரீரமும் கழியப்பெறுகையாலே, (ஸூர்யகோடிப்ரதீகாஶ:) என்கிறபடியே அநேகமாயிரமாதித்யர்கள் சேரவுதித்தாற்போலே கண்கொண்டு காணவொண்ணாதபடி நிரவதிக தேஜஸ்ஸை யுடையனாய், (அமாநவம் ஸமாஸாத்ய) என்கிறபடியே சதுர்பூஜனாய், ஶங்க சக்ர கதாதரனாய், விரஜைக்கரையிலே யெழுந்தருளியிருக்கிற அமாநவனைச்சென்று கிட்டி, அவன் திருக்கைகளாலே ஸ்பர்ஶிக்க, பின்பு லாவண்ய ஸௌந்தர்யாதி கல்யாண குணாகரமாய் ஶுத்த ஸத்வமயமாய், பகவதநுபவைக பரிகரமான விக்ரஹத்தைப்பெற்று, இந்த்ராதி பதங்கள்போலே கர்மஸாத்யமாய், நஶ்வரமாய், குண த்ரயாத்மகமாயிருக்கை யன்றிக்கே, பகவத் ப்ரீதிஸாத்யமாய், நித்யமாய், ஶுத்தஸத்வாத்மகமாய், இல்லைகண்டீரின்பம் என்கிறதுக் கெதிர்த்தட்டாக நலமந்தமில்லதோர்நாடாய், இருள்தருமா ஞாலத்துக்கெதிர்த்தட்டாக (தெளிவிசும்பு திருநாடு என்கிறபடியே தெளிதாகிய சேண்விசும்பாய், ஸநகாதிகள் நெஞ்சுக்கும் நிலமன்றிக்கே பகவதாநுகூல்யைக போகரான நித்ய ஸூரிகளாலே 'நெருங்கி' அவர்களாலு மளவிடவொண்ணாதவளவையும், ஐஶ்வர்யத்தையும், ஸ்வபாவத்தையு முடைத்தான திவ்யதேஶத்தைக் கண்களாரளவும் நின்றுகண்டு, (விண்ணைத்தொழுது) என்கிறபடியே தொழுது, அமாநவ பரிஸரத்திலே ஶங்க காஹள பேரிகளினுடைய முழக்கத்தைக்கேட்டு, (ஓடுவார் விழுவாருகந்தாலிப்பார் - நாடுவார்நம்பிரானெங்குற்றானென்பார், கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியனகண்டோம் - தொண்டீரெல்லீரும்வாரீர்) என்பாராய்க்கொண்டு பெரிய * ஆர்ப்பரவத்தைப்பண்ணித் திரள்திரளாகப் புறப்பட்டுவருகிற நித்ய முக்தருடைய ஆநந்த † களகளத்தைக் கண்டநுபவித்துக் கொண்டு பெரிய ப்ரீதியோடே போகிறவளவிலே, (தம்பஞ்சஶதாநி அப்ஸரஸாம்ப்ரதிதாவந்தி, ஶதம் மாலாஹஸ்தா: ஶதமஞ்ஜநஹஸ்தா: ...) என்கிறபடியே திவ்யமால்யம், திவ்யாஞ்ஜநம், திவ்ய சூர்ணம், திவ்யவஸ்த்ரம், திவ்யாபரணந் தொடக்கமானவற்றை யரித்துக்கொண்டு, ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்களும், நித்யஸூரிகளு

* ஆர்ப்பரவம் - ஆரவாரம்.

† களகளம் - பேரொலி.

மெதிரேவந்து, (ஸ்ரீ ரம்ஹாலங்காரேண, ஸ்ரீ ரம்ஹா லங்க்ரியா) என்கிறபடியே அலங்கரித்து, உடுத்துக்களைந்த நின்பீதகவாடை, சூடிக்களைந்ததிவ்யமால்யம், திவ்யாபரணங்கள், திவ்யாங்கராகங்கள்துடக்கமானவற்றாலேயலங்க்ருதனா யிருக்கிறபடியைக்கண்டு, (புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் - நினையும் நீர்மையதன்று) என்று விஸ்மிதராய்க்கொண்டாட; பின்பு அநேகமாயிரங் கொடிகளாலும், முத்துத்தாமங்களாலும், மேற்கட்டிகளாலு மலங்க்ருதமாய், திவ்யஸ்த்ரீபரிவ்ருதமாய், பகவத்ஸங்கல்ப கல்பிதமாயிருப்ப தொரு திவ்யவிமாநத்தைப் பெரியதிருவடி கொண்டுவர, அதிலே யிவனையேற்றி ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு திவ்யகாந்தாரத்தளவிலே சென்றவாறே, நாநாவிதமான உபஹாரங்களை யேந்திக்கொண்டு வேறேசில திவ்யாப்ஸரஸ்ஸுக்க ளெதிரேத்தி ஸத்கரிக்க, பின்பு திவ்யகந்தம், ஸ்ரீ ரம்ஹகந்தந் துடக்கமான அப்ராக்ருத கந்தங்களை ஆஜிக்ராணம்பண்ணி, ஸர்வகந்தனாய் (கொடியணிநெடுமதிள் கோபுரங்குறுகினர்) என்கிறபடியே த்வஜபதாகாதிகளாலே யலங்க்ருதமான திவ்ய கோபுரத்தைக்கிட்டி; திருவாசல்காக்கும் முதலிகள் (வைகுந்தன்றமரெமரெமதிடம்புகுதுக) என்கிறபடியே பெரியவாதரத்தோடே ஸத்கரிக்க, (ஸமதீத்யஜநாகுலம், கவாடங்கடந்துபுக்கு) என்கிறபடியே நெஞ்சையும் கண்ணையும் வருந்தி மீட்டுக்கொண்டு, அயோத்யையென்றும் அபராஜிதையென்றுஞ் சொல்லப்படுகிற ஏர்கொள்வைகுந்தமாநகரத்திலே ஒருவண்ணஞ் சென்றுபுக்கு; (ஸ்ரீவைகுண்டாய திவ்யநகராயநம:) என்று கண்ணன்விண்ணூரைத்தொழுது, வைகுந்தத்தமரரும் முனிவரும், ‘கடலில்நீர் ஸஹ்யத்திலே ஏறக்கொழித்தாற்போலே ஸம்ஸாரஸ்தனான இவனித்தேசத்திலே வரப்பெறுவதே’ என்று விஸ்மிதராய்க்கொண்டாட, பின்பு கோயில்கொள் தெய்வங்களான பெரியதிருவடி, ஸ்ரீஸேநாபதியாழ்வான் துடக்கமானவர்கள் தந்தாந்திருமாளிகைகளிலே கொண்டுபுக்கு, இவனை ஆஸநத்திலே யுயரவைத்து, தாங்கள் தரையிலேயிருந்து, தங்கள் மஹிஷிகள் நீர்வார்க்க ஸ்ரீபாதம்விளக்கி, தங்கள் மஹிஷிகளுக்கு (தேவர்வைகல் தீர்த்தங்களே) என்று இவன் ப்ரபாவத்தைச்சொல்லி, ஸத்கரிக்கும் க்ரமத்திலே ஸத்கரிக்க, பின்பு ஸ்ரீசடகோபனும், திவ்யசூர்ணங்களும், பூர்ணகும்பங்களும், மங்கள தீபங்களு மேந்திக்கொண்டு, தேசாந்தரகதனாய்வந்தபுத்ரனைக்கண்ட தாய்மாரைப்போலே குளிர்ந்த

முகத்தையுடைய மதிமுகமடந்தையர் வந்தெதிர்கொள்ள, பெருந்தெருவாலே யுள்ளேபுக்கு, திவ்யாவரண ஶதஸஹஸ்ரா வ்ருதமான செம்பொன்செய் கோயிலைக்கிட்டி, ஸ்ரீவைகுண்டாய திவ்யவிமாநாய நம:) என்று தெண்டனிட்டு, ஒருபாட்டம்மழை விழுந்தாற்போலே தன்னுடைய வரவாலே தளிர்த்துச் * செருந்தியிலையும் மரமுந் தெரியாதபடி வஸ்துவியமான நிறத்தையும் மந்யத்தையுமுடைய அப்ராக்ருத புஷ்பங்களாலே நெருங்கித் தேன்வெள்ளமிடுகிற கற்பகச் சோலைகளாலும் நாநாவியமான பூக்களாலும் ரத்நங்களாலுஞ் சமைந்த லீலாமண்டபங்களாலும், அபூர்வவத் விஸ்மயஜநகங்களான க்ரீடாஶைலங்களாலும், ஸ்ரீவைகுண்டநாயனுக்கும் பெரியபிராட்டியார்க்கும் லீலாபரிகரங்களாய், செவிகளடைய மயிர்க்கூச்சிடும்படி இனியபேச்சுக்களையுடைய ஶுக ஶாரிகா மயூர கோகிலாதிகளாலும் ஆகுலங்களாய், மாணிக்கம் முத்து பவளந் துடக்கமானவற்றாலே சமைந்தபடிகளையுடைத்தாய். நித்யமுக்தர்களுடைய திருவுள்ளங்கள்போலே குளிர்ந்து, தெளிந்து, அம்ருதரஸங்களான திவ்யஜலங்களாலேநிறைந்து, நாநாவியபக்ஷிஸங்வஸமாகீர்ணமாய்த் துளும்பியெங்குஞ்சொரிகிற தேன்வெள்ளத்தை யுடைத்தாய், (மாதர்கள்வாண்முகமுங் கண்ணுமேந்தும்) என்கிறபடியே மதிமுக மடந்தையருடைய திருமுகங்களுக்குந் திருக்கண்களுக்கும் போலியான தாமரை செங்கழுநீர் துடக்கமான அப்ராக்ருத புஷ்பங்களையுடைய ஓதநெடுந்தடங்களாலும், நாநாவியமான பூம்படுக்கைகளாலும். பரிமளம் போலே பூக்களிலேபடிந்து மதுவெள்ளத்திலேமுழுகிப் பாட்டுக்களாலே அநுமேயங்களான தெய்வவண்டுகளினுடைய திவ்யமாங்யர்வத்தாலும் கிட்டிஞரைப் பிச்சேற்றுகிற திவ்யோத்யாந ஸதஸஹஸ்ரங்களாலும் சூழப்பட்டு, நாநாரத்நங்களாலே சமைந்த ஸ்யலங்களையு முடைத்தாய், அநேகமாயிரம் ரத்நஸ்தம்பங்களாலே யலங்க்ருதமாய். உபயவிபூதியிலுள்ளாரு மொருமூலையிலே யடங்கும்படியிடமுடைத்தாய், தாமரை, செங்கழுநீர், சந்தநம், அகில், கர்ப்பூரந் துடக்கமானவற்றை யளைந்துவருகிற மந்தமாருதனாலே ஸேவ்யமாநமாய், நிரதிஶயாநந்தமயமான திருமாமணிமண்டபத்தைச் சென்றுகிட்டி, (ஆநந்தமயாய மண்டபரத்நாயநம:) என்று தெண்டனிட்டு, அப்பால் முதலாய்நின்ற அளப்பரிய வாரமுதை யெப்போது மொ

* செருந்தி - ஸுரபுந்நை.

க்கப் பருகுகையாலே ‡ இளகிப்பதித்து வைகுந்தக்குட்டனோடு ஸாம்யாபந்நராய் அநுபவஜநிதமான ஹர்ஷப்ரகர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸாமகாநம் பண்ணுவார், (செஞ்சொற்கவிகா ளுயிர்காத்தாட்செய்மின் என்று இன்பவாற்றிலே ஶ்ரீவைஷ்ணவமாகிற ஆழங்காலிலே * கொண்டைக்கோல் நாட்டுவார், ஸ்வாசார்யனைக்குறித்து (இஷழகொள்சோதிச் செந்தாமரைக்கட்பிரா னிருந்தமைகாட்டினீர்) என்பார், (உற்றேனுகந்து பணிசெய்துனபாதம்-பெற்றேனீதே யின்னம் வேண்டுவதெந்தாய்) என்பார், (என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தானைச்-சொன்முடிவுகாணேனான் சொல்லுவதென்சொல்லீர்) என்பார், (நமோநாராயணாயவென்பார்) என்கிறபடியே ஓவாதுரைக்குமுரையான பெரியதிருமந்த்ரத்தைச் சொல்லித் தோள்களை யாரத்தழுவி என்னுயிரையறவிலைசெய்தனன்சோதி) என்று ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவர், உருகுமாலிலே ஆழ்வார்பட்டதுபட்டு, (வல்வினையேனை யீர்கின்ற குணங்களையுடையாய்) என்று அம்புபாடரைப்போலே யுழைப்பார், (பேதைதொண்டுகளித்து) என்கிறபடியே ஊஸ்யரஸந் தலைமணையிட்டு) (நமஇத்யேவவாதிந:) நமஶ்ஶப்தம் ப்ரயுஞ்ஜதே) என்கிறபடியே அந்திதொழுஞ்சொல்லைச் சொல்லுவாராய்க்கொண்டு, இப்படி ப்ரளயஜலதியிலே யலைவாரைப்போலே ஆநந்தஸாகரத்திலே யலைந்து, நித்யமுக்தர் சொல்லுகிற கெவிக்கினிய செஞ்சொற்களாலே, வெஞ்சொலாளர்களுடைய கடுஞ்சொல்லைக்கேட்ட விழவுதீரச் செவிக்கிரையிட்டுக்கொண்டுபோய், திவ்யாஸ்தாநத்தைக்கிட்டி, அப்பேரோலக்கத்தின்நடுவே, தந்தாந்திருமுடிகளிலே திவ்யாயுதங்களை யரித்துக்கொண்டு கூப்பினகைகளுந் தாங்களுமாயிருக்கிற அஸ்த்ரஶஸ்த்ராவீயரான திவ்யபுருஷர்களும், தம்முடைய ஸங்கல்பத்தாலே ஸகலஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணக்கடவ ஸேனைமுதலியார் தொடக்கமான திவ்யபுருஷர்களும் வரிசையடைவே ஸேவித்திருக்க

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

---

‡ இளகிப்பதிக்கை - இளமைவர்ப்பிக்கை.

* கொண்டைக்கோல் - சிலவராயிருப்பார் ஆறுகள் மடுக்களிலே பள்ளங்களுக்கடையாளமாக நடுகிறகோல்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

த்ருதீய ப்ரகரணம்.

உபயவிபூதியையுந் தொழிலாக வகுப்புண்டு, ஸர்வாஶ்சர்யமயமான கோப்புடைய சீரியசிங்காசனத்திலே பன்னிரண்டிதழாய், நாநாஶக்திமயமான திவ்யகமலமாய், அதில்திவ்யகர்ணிகையிலே புஷ்பஸஞ்சயவிசித்ரமான திவ்யயோக பர்யங்கமாய், அதின்மேலே அநேகமாயிரம் சந்த்ரர்களை யுருக்கிவார்த்தாற்போலே குளிர்ந்த புகரையுடைத்தான திருமேனியையுடையனாய் கல்யாணகுணங்களுக் கந்தமில்லாமையாலும், ஸர்வவித கைங்கர்யத்திலு மதிக்ருதனாய் கைங்கர்யபரர்க்கெல்லாம் * படிமாவாயிருக்கையாலும்; அனந்தனென்றும் ஶேஷனென்றும் திருநாமத்தையுடையனாய், பகவதநுபவத்துக்குப் போக்குவீடாகப் பலவாய்த் தலைகளையுமுடையனாய், விஜ்ஞாநபலங்களுக்கும் ஶைத்ய மார்தவஸௌரப்யாதி குணங்களுக்கும் கொள்கலமான திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே, ரஜதகிரிஶிகரத்திலே அநேகமாயிரமாதித்யர்கள் சேரவுதித்தாற்போலேயிருக்கிற ஷணுமண்டலங்களில் ஜ்யோதிர்மண்டலத்தின் நடுவே; (பதிம்விஶ்வஸ்ய) என்கிறவனுக்கும் தன்பூர்த்தியாலே † பொறிபுறந்தடவவேண்டும்படியான பூர்த்தியையும், (வாசஞ்செய்பூங்குழலாள்) என்கிறபடியே நாற்றத்துக்கும் நாற்றங் கூட்டலாம்படியான பூங்குழலையும், புண்டரீகாக்ஷனையுங்கூடக் குட்நீர் வார்ப்பித்துக்கொண்டு ஒருமூலையிலே குமிழ்நீரூட்டும்படியான வடிக்கோல வாணெடுங்கண்களையும், போகத்துக் கேகாந்தமான ஒப்பனைபோலே பால்யமத்யத்திலே ‡ மெய்க்காட்டுகிற யௌவநத்தையும், o பேசிற் பிசகும்படியான ஸௌகுமார்யத்தையும், (பித்தர்பனிமலர்மேற்பாவைக்கு) என்கிறபடியே அல்லாதவர்கள் பக்கல்போலே நூல்பிடித்துப் பரிமாறவொட்டாத போக்யதா ப்ரகர்ஷத்தையும், போகோபோத்காத கேளியிலே பகவத்வைஶ்வரூப்யத்தைச் ‖ சிறுங்கிக்கும்படியான பெருமையையுமுடையளாய், திவ்யபரிஜநங்களை தத்ததவஸ்தாநுரூபமாக திவ்யபரிசர்யையிலே நியோகியாநிற்பாளாய், ஸர்வாத்மாக்களுக்கு

---

* படிமா - உபமாநம். † பொறிபுறந்தடவுகை - பூர்த்திசெய்கை.

‡ மெய்க்காட்டுகை - எண்ணிக்கை கொடுக்கை.

o பேசில் பிசகுகை - வார்த்தைசொல்லில் ஸௌகுமார்யத்தாலே அந்யதாவாகை. ‖ சிறும்புதல் - ஸங்கோசிக்கை.

மென்றுமொக்கச் சார்வாய், ஶீலரூபகுணவிலாஸாதிகளாலே (எனக்கேற்கும் என்னும்படியிருக்கிற ஒசிந்த வொண்மலராளான பெரியபிராட்டியார் வல * வட்டத்திலே யெழுந்தருளியிருக்க; அவளிலுங் காட்டில் விஞ்சின க்ஷமாதயாதிகுணங்களேயும், நாவால்தொகைக்கவொண்ணுத வழகையுமுடையராய், அவளுக்கு நிழல்போல்வனரான மற்றையிரண்டு நாய்ச்சிமாருமிட † வட்டத்திலேஸேவித்திருக்க; இவர்களுக்குநடுவே மூன்றுமின்கொடிகளோடேகூடி, தாமரைபூத்ததொரு காளமேவம் வெள்ளிமலையைக் ‡ கினியப்பட்டிருக்குமா போலே (முடிச்சோதியா யுனது முகச்சோதிமலர்ந்ததுவோ) என்கிறபடியே திருமுகமண்டலத்தி னொளிவெள்ளமானது மேனேக்கிக் கொழித்தாற்போலேயாய், உபயவிபூதிக்கும் நிர்வாஹகனென்னுமிடத்தைக் ¶ கோட்சொல்லித் தரக்கடவதாய், தன்புகராலே அல்லாதபுகரையடைய முட்டாக்கிடுகிற (விண்முதனாயகனீண்முடி) என்கிற திருவபிஷேகத்தையும்; கண்டார் கண்ணும் நெஞ்சுமிருளும்படியிருண்டுசுழன்று, அஷ்டமீசந்த்ரனிலே அம்ருதயாரை விழுந்தாற்போலே திருநெற்றியிலே சாத்தின திருநாமத்தை மறைப்பது காட்டுவதாய்க்கொண்டு அசைந்து விழுகின்ற பூந்தண்டுழாய் விரைநாறுகிற நீலப்பணியிருங்குழல்களேயும்; ஸௌகுமார்யாதிஶயத்தாலே குருவேர்பரம்பினாற்போலேயாய், நயந்தார்கட்கு நச்சிலேயான திருநெற்றியையும்; அலர்ந்து குளிர்ந்திருக்கிற இரண்டு தாமரைப்பூக்களை மத்யத்தாலே யமுக்கியாடுகிற விரண்டு வண்டொழுங்குபோலேயிருக்கிற தன்கைச்சார்ங்கமதுவேபோ லழகியதிருப்புருவங்களேயும்; கலந்துபிரிந்தவர்களுக்கு இணைக்கூற்றங்களாய், அல்லாதவர்களைத் தாயாயளிக்கக்கடவதாய், சேதநர்பக்கல் வாத்ஸல்யாதிஶயத்தாலும், செய்யாளான பிராட்டியை யெப்போதுமொக்க கடாக்ஷிக்கையாலும், உபயவிபூத்யைஶ்வர்யத்தாலும் சிவந்து, (பதிம்விஶ்வஸ்ய) என்கிற ப்ரமாணம் வேண்டாதபடி (அனைத்துலகுமுடையவரவிந்தலோசனனை) என்கிறபடியே ஸர்வேஶ்வரத்வசிஹ்நமாய்வேறோரழகில் செல்ல வொட்டாதே தனக்கே யற்றுத்தீரும்படிபண்ணி (தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவுந்தலைமகன்) என்கிறபடியே த்ரிபாத்விபூதி

---

* அட்டம்—பக்கம்.

† இனிய—மூட.

¶ கோட்சொல்லித்தருசை - காட்டிக்கொடுக்கை.

தியையும் ‡ எழுத்து வாங்கிக்கூப்பிடும்படி பண்ணக்கடவதாய் குளிர்ந்துசெவ்விபெற்று, பெரியபெருமாள் திருக்கண்கள்போலே கரியவாகிப்புடைபரந்துமிளிர்ந்துசெவ்வரியோடி, இலங்கொளிசேர ரவிந்தம் போன்று நீண்டு, ஸியோவஸ்ரீயஸ் பர்யஸ்வ-ரிதஶுவரிதி வந்த லளிதங்களாய், அழகோலக்கங் கிளம்பினுல் அடையாளங்களான தூது செய்கண்களையும்; (மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோகொழுந்தோ வறியேன்) என்று நித்யஸங்க்லேஷஜநகமான கோலநீள்கொடிமூக்கையும், அதினுடைய பல்லவோல்லாஸம்போலே யிருக்கிற திவ்யகபோலங்களையும், அதினுடைய நவகுஸுமம்போலேயாய், (பன்னிலாமுத்தந்தவழ்கதிர்முறுவல்செய்து என்கிறபடியே பூர்ணசந்த்ரன் முழுநிலாவைச் சொரிந்தாற்போலே திருமுத்தினொளியை ப்ரவஹிக்கிற ஸ்மிதத்தையும்; கோலந்திரள்பவளக் கொழுந்துண்டம்போலேயாய், பேச்சில் செல்லவொட்டாதே வாய்கரையிலே நீச்சாம்படி பண்ணி, நட்டாற்றிலே தெப்பத்தைப்பறிப்பாரைப்போலே அநுபவ பரிகரமான சிந்தையைக்கவர்ந்து, கூப்பிடும்படி பண்ணக்கடவதாய், கள்வப்பணி மொழிகளுக்கு ஆகரமான திருவதரத்தையும்; (இலகுவில குமகரகுண்டலத்தன்) என்கிறபடியே ப்ரீத்யதிஶயத்தாலே ஶிரஃகம்பநம் பண்ணுகையாலே யசைந்து, திமந்தங்களிலேமுட்டி தேஜஸ்ஸு அலையெறிந்து, லாவண்யஸாகரத்திலே யேறித்துள்ளுகிற மின்னுமாமணி மகரகுண்டலங்களையும்; காந்தி ஶைத்யமார்த்தவஸௌரபியாதிகுணங்களாலே, (சுற்றுமொளிவட்டஞ்சூழ்ந்து) என்கிறபடியே ஸகலகலாபூர்ணமாய் ஸர்வாஹ்லாதகரமாய் மறுக்கழற்றின சந்த்ரமண்டலத்தையும் அப்போதலர்ந்த செந்தாரைப்பூவையும் தோற்பிக்கக்கடவதாய், கிட்டினாைப்பிச்சேற்றி, மையலேற்றி மயக்கும் மாயமந்திரமான கோளிழைவாண்முகத்தையும்; நாய்ச்சிமாருடைய ஹஸ்தாபரணங்களாலே முத்ரிதமாய், க்ரமுக தருண க்ரீவா கம்பு ப்ரதிமமான திருக்கழுத்தையும்; நாய்ச்சிமாருடைய திருச்செவிப்பூக்களாலும் கர்ணபூஷணங்களாலும், விகஸிதமான திருக்குழற்கற்றையாலுமுண்டான விமர்தத்தாலே (ஸீதயாஶ்ரீஶோபிதம்) என்கிறபடியே அலங்க்ருதங்களாய், இரண் * டட்டத்திலும் மரதககிரியைக்கடைந்து மடுத்தாற்போலே திண்ணியவாய், † கணையத்துக்

* அட்டம் - பக்கம். † கணையம் - கோட்டை.
‡ எழுத்துவாங்குகை - ஸ்வாமிபேரை மார்விலே யெழுதிக்கொள்கை.

குள்ளே யிருப்பாரைப்போலே தன்னையண்டைகொள்ளுகையாலே, ஸம்ஸாரத்திலேயிருக்கச்செய்தேயும் நிர்ப்பரனும்படிபண்ணி, (அலம் புரிந்த) என்கிறபடியே தனக்கு உபயவிபூதியையும் வழங்கி, திவ்யாஸ்த்ர புஷ்பிதங்களாயிருக்கிற கற்பகக்காவனநற்பலதோள்களையும் பெரியபிராட்டியாருக்குக் * கோயிற்கட்டணமாய், நித்யாநுபவம் பண்ண நிற்கச்செய்தேயும் இறையு மகலகில்லேன் என்னும்படி பிச்சேற்றக்கடவதாய், அவள்திருவடிகளிற்சாத்தின செம்பஞ்சுக்குழம்பாலும், ஸ்ரீபூமிப்பிராட்டியாருடைய கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பாலு மலங்க்ருதமாய். வநமாலாவிராஜிதமாய், பெரியபிராட்டியார்க்கு ஹிரண்யப்ராகாரமான கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் ஸ்ரீகௌஸ்துபந்துடக்கமான குருமாமணிப்பூண் குலாவித் திகழுகிற அழகிய திருமார்பையும், காளமேகத்திலே மின்கொடிபடர்ந்தாற்போலே திருமேனிக்கு பரபாகரஸாவஹமாய், அழகுவெள்ளத்துக்கு அணைகட்டினாற்போலே யிருக்கிற வெண்புரி நூலையும், (உள்ளத்துள்நின்றுலாகின்றதே) என்கிறபடியே நித்யமுக்தருடைய திருவுள்ளங்களிலே அழகுசெண்டேறுகிற திருஉதரபந்தநத்தையும், ஸௌந்தர்யஸாகரமிட்டளப்பட்டுச் சுழித்தாற்போலே நெஞ்சையும் கண்ணையும் சுழியாறுபடுத்துகிற திருவுந்தியையும், ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் திருவாழியையும் சந்த்ராதித்யர்களாகக்கருதி, (ஆங்கு மலருங்குவியும்) என்கிறபடியே அலருவதுகுவிவதாய, விகஸிதவநஜாநமான நாபீபத்மத்தையும், துடிசேரிடையையும். ஸந்த்யாராகரஞ்ஜிதமான ஆகாசம்போலேயிருக்கிற திருவரைக்கு பரபாகரஸாவஹமாய், திருவரை பூத்தாற்போலே யிருக்கிற அந்திபோல் நிறத்தாடையையும், ரம்பாஸ்தம்பகம்பீரமான திருத்தொடைகளையும், தாமரைநாளம்போலே கண்டகிதங்களான திருக்கணைக்கால்களையும், ஶங்கசக்ர கல்பக த்வஜாரவிந்தாங்குஶ வஜ்ரலாஞ்சநமாய், நாய்ச்சிமாருங்கூடக் கூசித்தொடவேண்டும்படி அத்யந்தம் ம்ருதுக்களாய், (தேனேமலரும்) என்கிறபடியே நிரதிஶயபோக்யங்களான துயரறுசுடரடிகளையும்; லாவண்யஸாகரத்தினுடைய திரையொழுங்குபோலேயிருக்கிற திருவிரல்களையும், அதிலே அநேகசந்த்ரர்கள் தோற்றினாற்போலேயிருக்கிற திவ்யநகங்களையும், வயிரவுருக்காய், ஆண்களையும் பெண்ணுடையுடுத்தி, ஸங்யக்களோடுறவறுத்து நா

* கோயிற்கட்டணம் - அந்தப்புரம்.

ட்டைப் பகைவிளைத்து, சேனையர்வானத் திருக்குந் தேவபிரான்றன்னை (குதிரையாய்மடலூர்தும்) என்கிறபடியே கண்டபோதே கையும் மடலுமாய்க்கொண்டு புறப்படும்படி பண்ணக்கடவதாய், கண்டபோதே யெல்லாவிடாயுங்கெட்டு, கண்டகண்கள் மயிரெறியும்படியிருண்டுகுளிர்ந்து, ஸாம்யாபந்நரான ஸூரிகளுடைய நெஞ்சையும் கண்ணையும் * படையறுத்து, (இன்னாரென்றறியேன், பண்டிவரைக்கண்டறிவதெவ்வூரில்) என்று மதிமயங்கும்படி பண்ணக்கடவதாய், ஸகலஜந ஜீவாதுவாய், வைதிகீய வித்யாஸீருஹமாய், மநோரதா நாமஸீமியாய், ஸீருத்யந்தவாக்ய ஸர்வஸ்வமாய், மாணிக்கச்செப்பிலே பொன்னையிட்டு வைத்தாற்போலேயிருக்கப் பொன்னுருவான திவ்யாத்மஸ்வரூபத்துக்கு ப்ரகாஶகமாய், ஒன்றுக்கொன்றுதள்ளி, ‡ இட்டளத்தில் வெள்ளம்போலே சுழித்துநின்று, முழாவுகிற ஆயுதாபரணங்களுடைய சோதிவெள்ளத்தினுள்ளே உந்நேயமான கரியகோலத்திருவுருவையும், நித்யஸூரிகளடுத்தடுத்துப் பார்க்கிறபார்வையுங் கூடப்பொறு தென்னும்படியான ஸௌகுமார்யத்தையும், பெரியபிராட்டியாருடைய வடிக்கோலவாணெடுங்கண்களுக்கு நித்யலக்ஷ்யமாகையாலே அரும்பென்றும் மலரென்றும் சொல்லலாம்படியான செவ்வியையும் ¶ கிண்ணகத்துக்குப் படலிட்டாற்போலேயிருக்கிற மெய்யமர்பல்கலன்களையும், நித்யஸூரிகளைக் கொள்ளையூட்டிக்கொண்டு, விடாயர்முகத்திலே நீர்வெள்ளத்தைத் திறந்துவிட்டாற்போலே ஸகலஸீரமங்களுமாறும்படி குளிர்ந்து, தெளிந்து கநககிரியையுருக்கிக் கடலிலேவிளாசினாற்போலே செம்பொனே திகழுகிற ஸீயாமமான திருமேனி யொளியாலே (விஸீவமாப்யாயயந்) என்கிறபடியே ஸகல ஜகத்தையும் ஆப்யாயநம்பண்ணி, தெருவெல்லாங்காவிகமழ்) என்கிறபடியே கண்டவிடமெங்கும் புறப்பட்டு ப்ரவஹிக்கிற திருமேனியில் பரிமளத்தாலே ஸ்ரீவைகுண்டத்தை யெங்குமொக்கப்பரிமளிதமாக்கி, ஆலாங்கட்டியை விட்டெறிந்தாற்போலே உடம்பெங்கும் வவ்வலிடும்படி குளிர்ந்து, அரைக்ஷணமாறில் நித்யமுக்தரை ஒரு நீர்ச்சாவியாக்குகிற கடாக்ஷாம்ருத வ்ருஷ்டிகளாலே திவ்யகோஷ்டியைத் தளிரும் முறியுமாக்கி, காம்பீர்யமாதுர்யாத்ய

* படையறுத்து - வஶீகரித்து.

‡ இட்டளம் - நெருங்கினவிடம்.

¶ கிண்ணகம் - ப்ரவாஹம்.

நவமணிகணாபரண பூஷிதங்களாய் அதிமநோஹர திவ்யஹாவ ஸர்ஸங்களாய், பூவலர்ந்தாற்போலே யிருக்கிற திருமுகத்தை யெங்கு மொக்கச் செவ்விபெறுத்து, வினவான லீலாலாபங்களாலே ஸுந்தரிகளுடைய ஹ்ருதயங்களை யுகப்பியா நின்றுகொண்டு, உபயவிபூதியையும் ஆஸநபலத்தாலே ஜயித்து.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

———:o:———

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

சதுர்த்ய ப்ரகரணம்.

———(:o:)———

ஏழுலகுந் தனிக்கோல்செல்ல, குழுமித்தேவர் குழாங்கள் கை தொழ வெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனை (காண்பதெஞ் ஞான்றுகொலோ, காட்டீராநீர்) என்கிற விழவுதீர, (த்ருஷ்டஏவஹி நஶ்ஶோகம்) என்று இவன் மநோரதித்துக்கொண்டு, சென்றபடியே கண்ணாரக்கண்டு, (ஸமஸ்தபரிவாராயஸ்ரீமதேநாராயணாயநம:) என்று ஹர்ஷபரவஶனாய் விழுந்தெழுந்திருந்து, பெரியப்ரீதியோடேசென்று, பாதபீடத்திலே யடியிட்டு, திவ்ய ஸிம்ஹாஸநத்திலே யேற; அவனும், இவனைக்கண்டு, (அவாக்யநாதர:) என்கிற ஆகாரங்குலைந்து, சந்திரனைக்கண்ட கடல்போலே விக்ருதனாய், தன்னைப் பிரிந்து நெடுநாள் தரைக்கிடைகிடந்த விழவுதீர, (அங்கேஸமாரோப்ய) என்கிறபடியே மடியிலேவைத்து, ஸ்ரீஸ்ரீதராழ்வானையும் அக்ரூரனையு மணைத்தாற்போலே அணைத்து, ப்க்த்யதிஶயத்தாலே (கோஸி) என்கிறபடியே நீயார் என்று கேட்க; (அஹம்ப்ரஹ்மாஸ்மி) என்று நான் ராஜகுமாரனென்ன, நீ யித்தனைகாலமும் செய்ததென்னென்றுகேட்க, (சாந்தேந்துமென்முலையார் தடந்தோள்புணரின்பவெள்ளத்தாழ்ந்தேன்) என்ன, நீ அத்தால் பெற்ற பலமேதென்றுகேட்க, (அருநரகத்தழுந்தும்பயன்படைத்தேன்) என்ன, பின்பு நீ செய்ததென்னென்ன, (போந்தேன்) என்ன, நீ போந்த விரகென்னென்றுகேட்க, (புண்ணியனே) என்ன, நீ யதினின்றும் போந்து செய்ததென்னென்ன, (உன்னையெய்தினேன்) என்ன, நம்மைக்கிட்டினவிடத்தில் நீ பெற்ற ப்ரயோஜநமென்னென்ன, (என்தீவினைகள் தீர்ந்தேன்) என்ன; செய்தது வாய்த்துச் செல்வனாய் நலமந்தமில்ல

தோர் நாட்டிலே வர்த்திக்கப்பெருதே, (இல்லேகண்டீரின்பம்) என்கிற கொடுவுலகத்திலே நெடுங்கால் மலமர்ந்தாயே, பலமுந்து சிரிப்படியாதே, பன்மாமாயப்பல்பிறவியிலேபடிந்து நோவுபட்டாயே, ஈறிலின்பத்திருவெள்ளத்தையிழந்து, தடந்தோள்புணரின்ப வெள்ளத்திலே ஆழ்ந்து, நித்யது:கிதனுனுயே, அதனைப் பிழையெனக்கருதி நம்மைப்பற்றி நம்மைக்காணவேணுமென்ருசைப்பட்டபோதேவந்து முகங்காட்டப்பெற்றிலோமே, (ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவன்) என்கிறபடியே நாமிருந்த தேஶத்தை நோக்கி அழுவது தொழுவதாய், (கூவிக்கொள்ளுங் காலமின்னங்குறுகாதோ, எந்நாள் யானுன்னை யினிவந்துகூடுவன்), என்பதாய்க்கொண்டு நோவுபடும்படி தாழ்ந்தோமே, (துன்பக்கடல்புக்கு வைகுந்த னென்பதோர் தோணி பெரு துழல்கின்றேன்) என்று க்லேஶித்த நீ அதினின்றுங் கரையேறி, (நின்மாதாள்சேர்ந்து நிற்பதெஞ்ஞான்றுகொலோ என்கிற விழவுதீர நம்மைக்கிட்டப்பெற்ருயே, (உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து) என்கிற தாபமாறக் கூடியிருந்து குளிரப்பெற்ருயே, நம்முடைய ஸ்ருஷ்டியாதிவ்யாபாரங்கள் ஸபலமாயிற்றதே,(ப்ரணஷ்டஸ்யயதாலாப:) என்கிறபடியே நமக்குக்கிடையாதது கிடைத்ததே, உன்னுடையவரவாலே யித்தேஶம் ஸநாதமாயிற்றதே, இத்தேஶத்துக்கு நாயகராத நம்போலே யிருக்க நீ கிட்டி ஔஜ்வல்யத்தையுண்டாக்கினுயே, (நடந்தகால்கள் நொந்தவோ) என்று (மநோஹரை ஶ்சாடுபிரார்த்ரயந் முதா) என்கிறபடியே எத்தாளிகளைப்போலேயேத்தி, ஓவமேவஸ்வநத்தாலே மயில்போலே ஆலிக்கும்படிபண்ணி, நோயெல்லாம் பெய்ததோ ராக்கையிலே யகப்பட்டு, நெடுங்காலம் நோவுபட்டு, * மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனைக்கிட்டி, உள்ளநோய்களெல்லாந் துரந்து, திருவருள் மூழ்கினவிவனை, நோய்விட்டுக் குளித்த புத்ரனைப் பிதா பார்த்துக்கொண் டிருக்குமாபோலேயும் மாயக்கூத்தனுக்குப் பிழைத்த வாழ்வாரைப்பார்த்துக்கொண் டிருக்குமாபோலேயும், (லோசநாப்யாம்பிபந்நிவ) என்று ஸ்ரீவிபீஷணப்பெருமாளைப் பெருமாள் பார்த்துக்கொண் டிருக்குமாபோலேயும், என்னை நோக்காதொழிவதே என்கிற விழவுதீரத் தாமரைக்கண்களால் நோக்கி நெடுநாள்பட்ட விடாயெல்லாம் மாற, ஒருங்கே மறிந்துகிடந்தலர்ந்த மென்காற்கமலத் தடம்போலேயிருக்கிற பெருங்கண்மலர்ப் புண்ட

* மருத்துவன் - ஆசார்யன்.

ரீகங்களை யிவன்பக்கலிலே யொருமடைப்படவைத்து, எங்கும் பக்க நோக்கறியாதே, (தாயேதந்தையில்) திருமங்கையாழ்வார் மநோரதி த்தாற்போலேயும், ஆராவமுதிலும், இன்பம் பயக்கவிலும்) நம்மாழ் வார் மநோரதித்தாற்போலேயும், இவன்மநோரதித்த மநோரதங்க ளையெல்லாம் ஸபலமாக்கி, (உருக்காட்டாதே யொளிப்பாயோ) என் கிறவிழவுதீர, (விவ்ருணுதே தநூம்ஸ்வாம்) என்கிறபடியே (காசிநெ ளியிற்றிகழும்வண்ணங்காட்டி, நல்கியென்னைவிடான்) என்கிறபடி யே விடாதே, (ஏஷஸர்வஸ்வபூதஸ்து) என்கிறபடியே விட்டுவிட் டணைத்து, (கிந்நுஸ்யாச் சித்தமோஹோயம், மருள்தானீதோ) என் கிறபடியே நிரதிசய வ்யாமோஹத்தைப் பண்ணி, பெரியபிராட்டி யார் திருக்கையிலே காட்டிக்கொடுக்க; கம்ஸவதாநந்தரம் க்ருஷ்ண னைக்கண்ட தேவகியாரைப்போலே விம்மிப்பாய்கிற ஸ்தந்யத்தாலே யுடம்பெங்கும் நனையும்படி யணைத்து, உபயவிபூத்யை ஸ்ரீவர்யத் தையுங்கொடுக்க, பூவளருந்திருமகளா லருள்பெற்று, மடியில் நின்று மிழிந்து போந்து, (செய்யவுடையுந் திருமுகமுஞ் செங்கனிவாயுங்கு ழலுங்கண்டு) என்கிறபடியே முன்பேபோந்து முன்புத்தையழகை ய நுபவித்து, கிண்ணகத்தை யெதிர்ச்செறிக்க வொண்ணுதாற்போலே நேர்நின்றநுபவிக்க வொண்ணுமையாலே அட்டத்திலேபோந்து அங் குத்தையழகை யநுபவித்து, அதுவிட்டுப் பூட்டாவிடில் தரிக்கவொ ண்ணுமையாலே பின்னே போந்து பின்புத்தையழகை யநுபவித்து, (பூர்வாங்மாதுயிகா பராங்ம கலஹம்) என்று அதில் முன்பு தானே நன்றுயிருக்கையாலே திரியவும் முன்னேபோந்து, 'ஸௌந்தர்ய தரங் மதாஙநதரளசித்தவ்ருத்தியாய், உத்தம் ஸிதாஞ்சலியாய், வளையவளை யவந்து, (முழுசிவண்டாடிய தண்டுழாயின் மொய்மலர்க்கண்ணியு மேனியஞ்சாந்-திழிசியகோல மிருந்தவா றெங்ஙனஞ்சொல்லுகேனே வினல்லா-ரெழுதிய தாமரையன்னகண்ணு மேந்தெழிலாகமுந் தோ ளுமவாயு - மழகியதாமிவரார்கொலென்ன, அச்சோவொருவரழகிய வா) என்று விஸ்மித ஹ்ருதயனாய், அந்தாமத்தன்பு, முடிச்சோதி) துடக்கமானவற்றில் நம்மாழ்வா ரநுபவித்தாற்போலே தன்னைப்பெ ற்ற ப்ரீதியால் வந்த செவ்வியை யநுபவித்து, (யத்ரநாந்யத்பஸ்யதி) என்கிறபடியே புறம்பொன்றில் நெஞ்சுசெல்லாதே (ஹாவு ஹாவு ஹாவு அஹமந்ந மஹமந்ந மஹமந்நம், அல்லிமாமலராள் தன்னொடு மடியேன் கண்டு கொண்டல்லல் தீர்ந்தேனே, ஒண்டொடியாள் திரு

மகளும் நீயுமே நிலாநிற்பக் - கண்டசதிர்கண்டொழிந்தே னடைந்தேனுன் றிருவடியே, இசைவித்தென்னை யுன்றாளிணைக்கீ ழிருத்துமம்மானே, பிறந்துஞ்செத்தும் நின்றிடரும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்) என்று ப்ரீதிக்குப் போக்குவிட்டு வாயாரப்புகழ; ஸ்ரீவைகுண்டநாயனும் வானுடமருங்குளிர் விழிகளாலே கடாக்ஷித்து, ஸஸ்மிதமாக ஸ்நிக்தயமம்ஹீர மதுரமான பேச்சாலே முகப்பேகூவி, (நின்செம்மா பாதபற்புத்தலைசேர்த்து) என்றிவனபேக்ஷித்தபடியே மலர்மகள்பிடிக்கும்கமலமன்ன குரைகழல்களாலே உத்தமாங்கத்தை யலங்கரித்து, தன்றாளின்கீழ்ச்சேர்த்து, நித்யகைங்கர்யத்திலே நியோகிக்க; தொண்டேசெய்தென்றுந் தொழுதுவழி யொழுகப்பெற்று, (வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்) என்கிற அபிநிவேஶாதிஶயத்தாலே நாநாதேஹங்களை பரிக்ரஹித்து, அஶேஷஶேஷ வ்ருத்திகளிலுமந்வயித்து, அஸ்யாநேரகூாவ்யஸநிகளான நித்யஸூரிகளோடேகூடச்சூழ்ந்திருந்து மங்களாஶாஸநம்பண்ணி, (சூழிபட்டோடுஞ்சுடர்ச்சோதி வெள்ளத்தின் புற்றிருந்து) என்கிறபடியே அம்ருத ஸாகராந்தர் நிமக்நஸர்வாவயவனுய்க்கொண்டு யாவத்காலமிருக்கும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

அர்ச்சிராதி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

ப்ரமேயஶேகரம்.

நிர்ஹேதுக பகவத்கடாக்ஷமடியாக அஜ்ஞாத ஸுக்ருதமுண்டாம்; அதடியாக அத்வேஷமுண்டாம்; அதடியாக பகவத்பாகவத விஷயங்களில் ஆபிமுக்யமுண்டாம்; ஆபிமுக்ய முண்டானவாறே த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தில் கௌதுகமுண்டாம்; அத்தாலே ஸாத்த்விக ஸம்பாஷணமுண்டாம்; அத்தாலே ஸதாசார்ய ஸமாஶ்ரயணமுண்டாம்; அதுண்டானவாறே த்யாஜ்யோபாதேய நிஶ்சயமுண்டாம்; அதுண்டானவாறே ப்ராப்யாந்தரத்தில் வைராக்யமும், பரமப்ராப்யத்தில் அபிநிவேஶமு முண்டாம்; அநந்தரம்,

ப்ராப்யாந்தர நிவ்ருத்திக்கும், பரமப்ராப்ய ஸித்திக்கும்மடியான ஸித்த்யோபாயஸ்வீகாரமுண்டாம்; அநந்தரம், பகவத்ப்ராப்தியிலே த்வரையுண்டாம்; அநந்தரம், (அஹம்ஸ்மராமி) என்கிறபடியே-ஈஶ்வரஸ்ம்ருதிக்குவிஷயபூதனும் அநந்தரம் பூதஸூக்ஷ்மஶரீரபரிஷ்வங்கமுண்டா; அநந்தரம், பரமாத்மஸம்ஸர்கமுண்டாம்; பின்பு, ஹார்தாநுக்ரஹத்தாலேமார்கவிஶேஷப்ரகாஶமுண்டாம்; பின்பு ஹ்ருதயகுஹாநிர்கமநமுண்டாம்; அநந்தரம், மூர்தந்யநாடீநிஷ்க்ரமணமுண்டாம்; அநந்தரம், அர்ச்சிராதிமார்க கமநமுண்டாம்; அநந்தரம், ஆதிவாஹிக ஸத்காரமுண்டாம்; அநந்தரம், ஆவரணாதிக்ரமணமுண்டாம்; அநந்தரம், ப்ரக்ருத்யதிலங்கந முண்டாம்; அநந்தரம், விரஜாஸ்நாநமுண்டாம்; அநந்தரம், ஸூக்ஷ்மஶரீரவிஶ்லேஷமுண்டாம்; அநந்தரம், அபஹதபாப்மத்வாதிகுணகணப்ராதுர்பாவமுண்டாம்; அநந்தரம். அமாநவகரஸ்பர்ஶமுண்டாம்; அநநதரம், பகவத் ஸங்கல்ப கல்பிதமான திவ்யதேஹ ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், அகாலகால்ய திவ்யதேஶப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ஆமஹ்ருதஜதடஸ்நாந முண்டாம்; பின்பு, திவ்யாலங்காரமுண்டாம்; பின்பு, திவ்யவிமாநாரோஹணமுண்டாம்; பின்பு, திவ்யகாந்தார ப்ரவேஶ முண்டாம்; அநந்தரம், திவ்யாப்ஸரஸ் ஸத்காரமுண்டாம்; அநந்தரம், திவ்யகந்ய ப்ரவேஶமுண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மகந்ய ப்ரவேச முண்டாம்; அநந்தரம், அப்ராக்ருத கோபுர ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், திவ்யநகர ப்ராப்தி யுண்டாம்; அநந்தரம் ஸூரிபரிஷத் ப்ரத்யுத்கமந முண்டாம்; அநந்தரம், ராஜமார்க கமநமுண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மதேஜः ப்ரவேஶ முண்டாம்; அநந்தரம், திவ்யகோபுர ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மவேஶ்ம ப்ரவேஶமுண்டாம்; அநந்தரம், திவ்யமண்டப ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், திவ்யபாரிஷத் ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ஸபத்நீக ஸர்வேஶ்வர தர்ஶநமுண்டாம்; அந்ந்தரம், ஸ்துதிப்ரணாமாஞ்சலிப்ரமுக ஸம்ப்ரமாநுவர்த்தநமுண்டாம்; அநந்தரம், பரமாத்மஸமீப ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், பாதபீட பர்யங்காரோஹண முண்டாம்; அநந்தரம், பகவதுத்ஸங்க ஸங்க முண்டாம்; அநந்தரம், ஆலோகநாலாபாதி யநுபவமுண்டாம்; அநந்தரம் ஆலிங்கநாதியநுபவமுண்டாம்; அநந்தரம், ஸ்வரூபரூபகுணவிபூ

ரஹா தீயநுபவமுண்டாம்; அநந்தரம், அநுபவஜநிதப்ரீதிப்ரகர்ஷமுண்டாம்; அநந்தரம், நாநாவிய விதிரஹபரிதிரஹமுண்டாம்; அநந்தரம், ஸர்வதேஶஸர்வகாலஸர்வாவஸ்யோசிதமான ஸர்வப்ரகாரகைங்கர்ய முண்டாம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ப்ரமேயஶேகரம் முற்றிற்று.

———:o:———

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ,

ப்ரபந்நபரித்ராணம்.

———:o:———

முமுக்ஷுவாய், மோக்ஷார்யமாக ஸர்வேஶ்வரனைப்பற்றி யிருக்குமவனுக்கு அநந்யஶதித்வமும், ஆகிஞ்சந்யமும்வேணும்.—அநந்யஶதித்வமாவது - (களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்) என்கிறபடியே - ஸர்வேஶ்வரனையொழிய வேறொருரக்ஷகரில்லையென்றிருக்கை.—ஃராதாக்கள், புத்ராகள், மாதாபிதாக்கள், ஸிரஹ்மருதிராதிகள் துட்க்கமானவர்கள் ரக்ஷகராகக் குறையென்னென்னில்; ஃராதாக்கள் ரக்ஷகரல்ல ரென்னுமிடம், வாலிபக்கலிலும், ராவணன் பக்கலிலுங் காணலாம்; புத்ரர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், ருதிரன்பக்கலிலும், கம்ஸன்பக்கலிலுங் காணலாம். மாதாபிதாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், கைகேயிபக்கலிலும், ஹிரண்யன் பக்கலிலுங் காணலாம், மாதாபிதாக்கள், யௌவநவிரோயியென்றுபேக்ஷித்தல், க்ஷாமகாலம் வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலேபொகடுதல், விலைகூறிவிற்றல், ஆபத்துவந்தவாறே நெகிழநினைத்தல், அர்யக்ஷேத்ராதிகளுக்காக வெதிரிட்டுக் கொல்லுதல், முடியுமவஸ்யையிலே (சோர்வினால் பொருள்வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து) என்கிறபடியே, ஈஶ்வரனை ஸ்மரித்துக் கரைமரஞ் சேரவொட்டாதபடி யலைத்தல் முடித்தல் செய்யாநிற்பர்கள். ஸ்த்ரீகளுக்கு ஹர்த்தாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், யர்மபுத்ராதிகள் பக்கலிலும், நளன்பக்கலிலுங் காணலாம்.—இவர்கள்

ரக்ஷகரல்லரேயாகிலும், நாட்டார்க்குக் * கண்காட்டியாய்ப் போரு கிற சந்த்ராதித்யர்கள் ரக்ஷகராகக்குறையென்னென்னில்; அவர்க ளும், ஈஶ்வராஜ்ஞைக்கஞ்சி, தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப் பெ ருதே, நாழிகைகூறிட்டு, உதிப்பது அஸ்தமிப்பதாய்க்கொண்டு போ ருகையாலும், ஹிரண்யராவணாதிகள் கையிலே யகப்பட்டு அவர்க ளுக் கிழிதொழில் செய்து திரிவார் சிலராகையாலும் ரக்ஷகராகமா ட்டார்கள்.—த்ரைலோக்யத்துக்கும் பாலகனான விந்த்ரனும், 'எப் போதோ நம்பதம் நழுவப்புகுகிறது' என்றஞ்சி ஶாபோபஹதனாய், இந்த்ரஜித்தின்கையிலே யகப்பட்டுக் கட்டுண்டு, மஹாபலிபோல் வார்கையிலே ஐஶ்வர்யத்தைப் பறிகொடுத்து. கண்ணுங்கண்ணீரு மாய், கழுத்துங் † கப்படமுமாய்க்கொண்டு திரிவானொருவனாகையா லே அவனும் ரக்ஷகனாகமாட்டான்.—ப்ரஹ்மாவும், மதுகைட பர்கள் கையிலேயகப்பட்டு, வேதங்களைப் பறிகொடுத்து, 'கண்ணி ழந்தேன், தனமிழந்தேன்' என்று நிலந்துழாவுகையாலும், ருத்ரன் கையிலே தலையறுப்புண்கையாலும் ரக்ஷகனாகமாட்டான்.—ருத்ர னும், ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாக வுடைய னாய், விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாப்போலே யிருக் கத் தழல்நிறவண்ணனாய், தன்னையாஶ்ரயித்தவர்களை அறுத்துத்தா யொசித்துத்தா என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக்கொள்ளு கையாலும், தன்னையாஶ்ரயித்தவனை, 'தலையில் பூவாடாதே நோ க்குகிறேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, தன்னைத்தொழுத கைகளைக் கள்ளிக்காடு § சீய்த்தாப்போலே சீய்க்கக்கண்டு, 'உயிருண்டாகில் உப்புமாறி யுண்ணலாம்' என்று நெற்றியில் கணணைப் புதைத்துக் கொண்டு நழுவினவனாகையாலும், லோகமரியாதைக் குருவாய்த் தனக்கு பிதா வான ப்ரஹ்மாவின் தலையைத்திருகி பாதகியாய், * கூறுசெய்தவூரி லே குறும்புசெய்து ¶ கையுங்கைத்தளையுமாய்க்கொண்டு திரிவாரை ப்போலே, கையும்கபாலமுமாய், திறந்துகிடந்த வாசல்கள் தோறும் புக்குத்தன்னை வெளியிட்டுக்கொண்டு திரிவானொருவ னாகையாலும் ரக்ஷகனாகமாட்டான்.—இனி, அர்யம் ரக்ஷகமாமோவென்று நிரூபி

---

* கண்காட்டியாய்ப்போருகிற - பதார்த்தப்ரகாஶகமான, கண்ணுக்கு விஷயங்களைக் காட்டுகிறவென்றபடி.

† கப்படம் - தைந்யஸூசகபடவிஶேஷம். § சீய்த்தல் - வெட்டுதல்.

* கூறுசெய்கை - கூறினதுசெய்கை. புரங்யாதிகளை விபஜிக்கை. மணி யும் பண்ணுகை யென்றபடி. ¶ கைத்தளை - கைவிலங்கு.

த்தால்; கள்ளர்கொள்ளுதல், காமங்கொள்ளுதல், ‡ கோமுற்றவர்கொ ள்ளுதல், ஜ்ஞாதிகொள்ளுதல், வ்யாதிகொள்ளுதல், பிறரோடே யெ திரிட்டு விஷபக்ஷணம்பண்ணித் தன்னைத்தானே முடித்துக்கொள்ளு ம்படி பண்ணுதல் செய்கையாலே அர்த்தமும் ரக்ஷகமாகமாட்டாது. ஈஶ்வரன், மாதாபிதாக்கள் கைவிட்ட வவஸ்தையிலும் (பின்னுநின் றடியேனுக்குற்றானாய் வளர்த்தென்னுயிராகிநின்றான்) என்கிறபடி யே, தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு தாய்முகங்காட்டியும், இன்சொல்லுச்சொல்லியும், ஜ்ஞாதாக்களும் ஸர்த்தாக்களும் நெகிழ நின்றவன்று தானேறிட்டுக்கொண்டு கழுத்திலேயோலைகட்டித் தூது போயும், புருவம் நெறித்தவிடத்திலே தேரை நடத்தியும், மார்விலே யம்பேற்றும், சாவாமல் நோக்கியும், செத்தாரைமீட்டும், நாராயணத் வப்ரயுக்தமான உதரத்தரிப்பாலே அகவாயிலே நின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகையாலே இவனே யெல்லார்க்கும் ரக்ஷக ன்.—இனி ஆகிஞ்சந்யமாவது - கர்மஜ்ஞாந பக்திகளிலும், அவற்று க்கு ஹேதுவான ஆத்மகுணங்களிலு மந்வய மின்றிக்கே, அவற்று க்கு விபரீதங்களானவற்றாலே தான் பரிபூர்ணனாயிருக்கிற விருப்பை யும், தன்னுடைய ஸ்வரூபம் ஸர்வப்ரகாரத்தாலு மீஶ்வரனுக் கத்ய ந்த பரதந்த்ரமாயிருக்கிற விருப்பையு மநுஸந்தித்து, நங்காரியத்து க்கு நாங்கடவோமல்லோ மென்றிருக்கை.—இவையிரண்டையு மு டையனாய், ஈஶ்வரனையே யுபாயமாகப் பற்றுகையாலே நிர்பரனாயி ருக்குமவனுக்கு ஶரீராவஸாநகாலத்திலே ப்ராப்தியணித்தானவாறே, (நயாமி) என்றருளிச்செய்தபடியே. ஈஶ்வரன்தானே ‡ சரக்காளாய் வந்து, அர்ச்சிராதி மார்கத்தாலே பரமபதத் தேறக்கொண்டுபோ ய், நித்யமுக்தரோடே யொருகோவையாக்கி, நித்யகைங்கர்யத்தை யுங் கொடுத்தருளும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

ப்ரபந்நபரித்ராணம் முற்றிற்று.

---

‡ கோமுற்றவர் - ராஜாக்கள்.

‡ சரக்காளாய் - பதார்த்தத்தை யுடையவனாய்.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸாரஸங்க்ரஹம்.

அகிலஜகத்பிதாநுஶாஸந பரமானவேதத்திலும், வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி ஸமஸ்தஶாஸ்த்ரங்களிலு மஹிதமாக ப்ரஸித்தமாய், ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஸ்வமாய் || நம்மாசார்யர்களுக்கு ஆபத்தனமாயிருந்துள்ள அர்த்தத்வயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே-த்வயமென்று திருநாமத்தையுடைத்தாயிருந்துள்ள வாக்யத்வயம், பத்தர்த்தத்தைப்ரதிபாதிக்கிறது. அதாகிறது-ஶ்ரிய:பதித்வமும், நாராயணத்வமும், நாராயணனுடைய ஸர்வலோகஶரண்யமான சரணாரவிந்தயுகளமும், அதினுடைய ப்ராபகத்வமும், தத்கோசரமாய் சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநா கர்ப்பவிஸ்ரம்பமும், லக்ஷ்மீ தத்வல்லபர்களுடைய நிகிலாத்மகைங்கர்ய ப்ரயாநார்த்தமான நித்யஸம்பந்தமும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈஶ்வரனுடைய நிரதிஶயபோக்யதையும், ஸர்வஸ்வாமித்வமும், நித்யகைங்கர்யமும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிஶ்ஶேஷ நிவர்ஹணமுமாகிற அர்த்தவிஶேஷங்கள். ஈத்ருஶார்த்தவிஶேஷப்ரகாஶகமான மந்த்ரவிஶேஷத்தினுடைய விவரணரூபமாய், அபௌருஷேயமாய், உபநிஷத்தாயிருந்துள்ள திருவாய்மொழியில் பத்துப்பத்தாலு மிப்பத்தர்த்தத்தையும், நம்பூர்வாசார்யர்கள் அடைவேசேர்த் தநுஸந்தித்துப் போருவர்கள்.—அதில் முதற்பத்தால் - (மலர்மகள்விரும்பு நமரும்பெறலடிகள்) என்றும், (மலராள்மைந்தன்) என்றும், (திருமகளார்தனிக்கேள்வன்) என்றும், (திருவின்மணாளனென்னுடைச்சூழலுளானே) என்றும், (பூமகளார்தனிக்கேள்வன்) என்றும், (மைந்தனைமலராள்மணவாளனை) என்றும், ஶ்ரிய:பதித்வம் ப்ரதிபாதிதமாயிற்று.—இரண்டாம்பத்தால்-(எம்பெருமான் நாரணற்கு) என்றும், (எம்பிரானெம்மான் நாராயணனாலே) என்றும், (நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்) என்றும், நாராயணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.—மூன்றாம்பத்தால் - (நாண்மலரா மடித்தாமரை) என்றும், (அங்கதிரடியன்) என்றும், (அவன்பாதபங்கயம்) என்றும், (அன்று தேர்கடவியபெருமான் கனைகழல்) என்றும், (மூவுலகுந்தொழுதேத்துஞ்சீரடியான்) என்றும், நாராயணனுடைய ஸர்வலோகஶரண்ய

|| 'ஸர்வாத்மாக்களுக்குமாபத்தனமாயிருந்துள்ள உபாயோபேயங்களை ப்ரதிபாதிக்கையாலே' என்றும் பாடங்காண்கிறது.

மான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாயிற்று.—நாலாம்பத்தால் - (இலங்கைநகரம்பெரியுய்த்தவர்) என்றும், (வல்வினைதீர்க்குங்கண்ணனை) என்றும், (தொல்வினைதீர) என்றும், (வெய்யநோய்கள் முழுதும் வியன்ஞாலத்துவீய)என்றும், (மேவிநின்றுதொழுவார்வினைபோக) என்றும், பிறந்துஞ்செத்தும் நின்றிடரும் பேதைமைதீர்ந்தொழிந்தேன்) என்றும், நோயேமூப்பிறப்பிறப்புப்பிணியே யென்றிவையொழிய) என்றும், வேட்கையெல்லாம்விடுத்து - கூட்டரியதிருவடிக்கள்கூட்டினை) என்றும், (அஃதேயுய்யப்புகுமாறு) என்றும், (உய்வுபாயமற்றின்மைதேறி) என்றும், அநிஷ்டநிவ்ருத்திஷ்டப்ராப்திகரத்வலக்ஷணமான ப்ராபகத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.—அஞ்சாம்பத்தால்-(தமியேனுக்கருளாய்) என்றும், (ஆறெனக்குநின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்) என்றும், (உன்னாலல்லால் யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்) என்றும், (கழல்களவையே சரணாகக்கொண்ட) என்றும், (நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் - சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்) என்றும், (நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கு) என்றும், (நாடொறுமேகசிந்தையனாய்) என்றும், ப்ரார்த்யநாமர்ஹவிஸ்ரம்ஹம் ப்ரதிபாதித மாயிற்று.—ஆறாம்பத்தால் - (திருமாமகளிருந்தாழும்மலிந்திருந்து)என்றும்,(அடிமைசெய்வார்திருமாலுக்கு) என்றும், (ஒசிந்தவொண்மலராள் கொழுநன்) என்றும், (என்திருமார்வற்கு) என்றும், (கோலத்திருமாமகளோடுன்னை) என்றும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி நித்யஸம்பந்தம் ப்ரதிபாதிதமாயிற்று.—ஏழாம்பத்தால் - (கன்னலேயமுதே) என்றும், (கொடியேன் பருகின்னமுதே) என்றும், (அலைகடல்கடைந்தவாரமுதே) என்றும், (திருமாலின்சீரிறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ) என்றும், (இவ்வேழுலகையின்பம்பயக்க) என்றும், கைங்கர்யப்ரதி ஸம்பந்தியான விஶ்வரனுடைய நிரதிஶயபோக்யதை ப்ரதிபாதிதமாயிற்று.—எட்டாம்பத்தால் - (அடியனேன்பெரியவம்மான்) என்றும், (விண்ணவர்கோன் நங்கள்கோனை) என்றும், (அமர்ந்தநாதனை) என்றும், (மூவுலகாளி) என்றும், (நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்) என்றும், ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாயிற்று.—ஒன்பதாம்பத்தால் - (பண்டைநாளாலே நின்றிருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில்சீய்த்து) என்றும், (நின்தீர்த்தவடிமைக் குற்றேவல்செய்து) என்றும், (தொடர்ந்துகுற்றேவல்செய்து) என்றும், (கொடுவினையேனும்பிடிக்க) என்றும், (உறுவதிதுவென்றுனக்காட்பட்டு) என்று

ம், ஆட்கொள்வானொத்து) என்றும், (நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்) என்றும், நித்யகைங்கர்யம்ப்ரதிபாதிதமாயிற்று. பத்தாம்பத்தால் - (துயர்கெடுங்கடிது) என்றும், கெடுமிடராயவெல்லாம்) என்றும், (எழுமையுமேதஞ்சாரா) என்றும், (தீரும்நோய்வினைகளெல்லாம்) (என்றும், (இப்பிறப்பறுக்கும்) என்றும், (உன்றன்றிருவுள்ள மிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதுமெம் பெண்மையாற்றேம்) என்றும், (பிணியொன்றுஞ்சாராப் பிறவிகெடுத்தாளும் என்றும், (பிறவித்துயர்கடிந்தோம்) என்றும், (விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்) என்றும், (அமராவினைகள்) என்றும் (கடுநரகம்புகலொழித்த) என்றும். (பிறவிகெடுத்தேன்) என்றும், (தடுமாற்றவினைகள் தவிர்த்தான்) என்றும், (அந்திதொழுஞ்சொல்லு) என்றும், (அவாவற்றுவீடுபெற்ற) என்றும், கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிவர்ஹணம் ப்ரதிபாதிதமாயிற்று.—இப்படி ஸ்ரீயঃபதித்வப்ரமுவங்களாய் கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிவர்ஹண பர்யந்தங்களாயிருந்துள்ள வுபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருந்துள்ள வாக்யத்வயமும், திருவாய்மொழியும், ஸ்வவச்சரணார்த்திகளாய் அநந்யோபாயராயிருக்கு மதிகாரிகளுக்கு, காலக்ஷேபஹேதுவாகவும், போகஹேதுவாகவும், ஈஶ்வரப்ரீதிஹேதுவாகவும் யாவச்சரீரபாதமநுஸந்தேயம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸாரஸங்க்ரஹம் முற்றிற்று.

——(:o:)——

ஸ்ரீமதேராமாநுஜாயநமঃ.

ஸம்ஸாரஸாம்ராஜ்யம்.

* துன்பக்கடலாய் * இருள்தருமாஞாலமான ஸம்ஸாரத்துக்கு உள்வாயிலே பஞ்சபூதங்களாலே சமைந்து, (நவத்வாரபுரே) என்கிறபடியே - ஒன்பதுவாசலான படைவீட்டுக்கு உள்வாயிலே (கொடுவினைத்தூறு) என்பதொருதூறாய், புகவழிதெரியுமித்தனை யொழியப் புறப்பட வழிதெரியாதிருப்ப தொருகாட்டினுள்ளே, * அநஞ

க்லேஶஹாஜநமான மரத்தையிட்டு, அவித்யையென்கிற தேரைச்சமைத்து, அவஸ்யாஸப்தகங்களென்கிற உருளைகளைச்சேர்த்து, ராகத்வேஷாதிகளாகிற குதிரைகளையணைத்து, குணத்ரயங்களென்கிற திரிக்குரும்பை யுஞ்சலின்மேலே கர்மமென்கிற ஸிம்ஹாஸநத்தையிட்டு, ருசியென்கிற மேல்விரியை விரித்து, (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிறபடியே - அநுபவித்தன்றி மீளவொட்டாதிருக்கிற உருப்பிணிகளாகிற ஹார்யாவர்கம் பக்கத்திலிருக்க, அந்யகாரமாகிற விளக்கையேற்றி, அவஸ்துக்களாகிற ஊாஸவர்கம் பரஜோஷம் பரஹிம்ஸை பராநுவர்த்தநம் துடக்கமான ஹோமங்களை ஹூஜிப்பிக்கஹூஜித்து, அப்ரகாஶித ஸ்வரூப ஸ்வபாவனுன தன்னை வாஸனையென்கிற வீரத்தையிட்டுப்பார்தது, தாபத்ரயங்களென்கிற விடாய்க்குடையின்கீழே பஞ்சவ்ருத்தி ப்ராணங்களாகிற புரோஹிதர் ஸம்ஸாரத்துக்கு மூர்யாபிஷிக்தனுக்கி வியாதிலாஹபூஜைகள் கொண்டாட, புண்யபாபங்களாகிற சாமரமிரட்ட, அநேகவிய ஊழவபரம்பரைகள் அடுக்கொலியல் பணிமாற, அஹங்கார மமகாரங்களாகிற ஆலவட்டம் பணிமாற, ஸுகாஜுூவர்ஷிணி சுழற்றிப்பணிமாற, அஸ்ம்ஜதி ஓட்டிவட்டிலெடுக்க, அஹிநிவேஶம் களாஞ்சியெடுக்க, விஷயாந்தரருசி அடைப்பையெடுக்க, பூர்வோத்தராவங்களென்கிற ஆனை குதிரையோடே வாதபித்தஶ்லேஷ்மங்களாகிற மந்த்ரிகள் ஸேவிக்க, காமக்ரோய லோஹ மோஹ மத மாத்ஸர்யங் துடக்கமான ப்ரஹூக்கள் ஸேவிக்க, ஹமவஜபவார ஹர்மவதாபவார அஸஹ்யாபசார நாநாவியாபவாரமாகிற காலாள்கள் ஸேவிக்க, நித்ராஜேவிஜ்யேஷ்டை துடக்கமான பெண்பிள்ளைகள் ஸேவிக்க, ஆசையாகிற பாசக்கயிற்றாலே பிணைத்து, இந்த்ரியங்களாகிற மதகளிறுகள்வலிக்க, காலமாகிற ஸாரயி நடத்த, 'தேஹாத்மாபிமாநிவந்தான், ஸ்வதந்த்ரன்வந்தான், அந்யஶேஷஹூதன் வந்தான்' என்று காளங்கள் விஹ்நங்கள் கலந்து பணிமாற, (மெல்லியலாக்கைக் கிரிமிக்குருவில் மிளிர்தந்தாங்கே - செல்லிய செல்கைத்துலகையென்காணும்) என்கிறபடியே - தானும் தன் பரிகரஹூதருமாக ஸூவாநுபவம்பண்ணி, யாதானுமோராக்கையிற் புக்கங்காப்புண்டு மாப்பவிழ்ந்து-மூதாவியிற்றடுமாறு முயிர்முன்னமே) என்கிறபடியே - புக்கபுக்க ஶரீரங்கள் தோறும் அஹங்கார மமகாரங்கள்பண்ணி, ஸத்தாயாரகனுன ஸர்வேஶ்வரனை மறந்து, * மொய்த்தவல்வினையுள்நின்று, த்ரிவியகரணங்களாலும் - பாதகம் அதிபாதகம் மஹாபாதகம் துடக்கமானவற்றாலே போதுபோக்கிக்

கொண்டு போருகிறகாலத்திலே, ஈஶ்வரனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலேயிவனுக்கு அத்வேஷம்பிறக்க; அத்தாலே ரக்ஷணத்துக்கு வழிகண்டு, 'களையெடுக்கக்கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கலக்கிக்கொள்ளுவாரைப்போலே நம்பக்கல் சேரக்கொடுத்த வுடம்பைக்கொண்டு அகலுகைக்குறுப்பாக்கினன், (பல்பிறவிக்கு நோற்றேன்) என்று - ஒருஜந்மத்திலே அநேக ஜந்மத்துக்குவேண்டும் பாபங்களை ஆர்ஜித்துக்கொள்ளுகிற விவனை நம்பக்கலிலே சேர்த்துக் கொள்ளும் விரகேதோ' என்று திருவுள்ளம்பற்றி, வலவட்டத்திலே * தூதுசெய்கண்கள்கொண் டொன்றுபேசி, ஆழ்வானும் * கருதுமிடம் பொருதுமவனுகையாலே தன்பரிகரஸஹிதனை யேவிவிட, * நின்றிவ்வுலகிற்கடிவான் நேமிப்பிரான் றமர்போந்து, * அருளென்னு மொள்வாளுருவி, (அடைந்தவருவினையோடல்லல் நோய்பாவம் - மிடைந்தவை மீண்டொழியவேண்டில்-நுடங்கிடையை - முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள் - தன்விலங்கைவைத்தான்சரண்) என்கிறபடியே - விரோதிவர்கத்தையடைய வழிவுசெய்து ஜ்ஞாநத்தைக்கொடுக்க; இவனும் சைதந்யம் குடிபுகுந்து, (தெரிந்துணர்வொன் றின்மையால் தீவினையேன்வாளா - விருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம் - கரந்துருவில் - அம்மானை யெஞ்ஞான்று பின்றுடர்ந்தாழியங்கை - யம்மானையேத்தாதயர்த்து) என்கிறபடியே இழந்தநாளைக்கு அநுதபித்து, ப்ராப்யத்தை யுள்ளபடி யறிவித்த ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞனாய், விரோதி வர்கத்தில் உபேக்ஷை பிறந்து, ஸ்ரீயஃபதியைக்கிட்டி யல்லது தரிக்கவொண்ணுதிருக்கிற ப்ரேமம் விளைந்து, இவ்வளவுங் குலையுங் காட்டில் 'கைக்கொண்டருளவேணும்' என்று பிராட்டி புருஷகாரஞ்செய்ய, அவ்வளவும் பொறுக்கமாட்டாதபடியான வாத்ஸல்யாதிகுண விஶிஷ்டவஸ்து வாகையாலே கீழ்ச்செய்த அம்ஶத்தைத் திருவுள்ளம்பற்றி மேற்செய்ய வேண்டு மம்ஶத்தை ப்ராப்யபர்யந்தமாகத் தலைகக்கட்டிக் கொடுத்தருளும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸம்ஸாரஸாம்ராஜ்யம் முற்றிற்று.

———:o:———

ஸ்ரீமதே ராமாநுஜாய நமः.

நவரத்நமாலை,

ஶரணாகதனானவன், தன்னையும், தனக்கு விரோதியான தேஹத்தையும், தேஹத்தைப்பற்றிவரும் பந்துக்களையும், ஸம்ஸாரிகளையும், தேவதாந்தரங்களையும், ஸ்ரீவைஷ்ணவர்களையும், ஆசார்யனையும், பிராட்டியையும், ஈஸ்வரனையும் நினைத்திருக்கும்படி யெங்ஙனே யென்னில்.—உடம்பில் வேறுபட்டு நித்யனாய், ஒருபடிப்பட்டு அணுவாய், ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகவுடையனாய், ஜ்ஞாநத்துக்கும் ஆநந்தத்துக்கு மிருப்பிடமாய், எம்பெருமானை யொழிய வேறொன்று நினைத்தல் சொல்லுதல் செய்யமாட்டாதே எம்பெருமானுக்கே யுரியனாய், தன்கார்யத்துக்குத் தான் கடவனன்றிக்கே அவனையே ஃபலமாகவுடையனா யிருக்குமென்று தன்னை நினைப்பான்.—தன்னையுள்ளபடி யறியவொட்டாதே விபரீதஜ்ஞாநத்தை ஜநிப்பித்து இருபத்துநாலு தத்துவங்களினுடைய திரளாய், அநித்யமாய், எப்போதுமொக்கப்பரிணமிக்கக்கடவதாய், ஒருநாளும் ஜ்ஞாநத்துக்கிருப்பிடமன்றிக்கே அநந்த து:க்ஙங்களை விளைப்பிக்கக் கடவதாய், ஶப்தாதி விஷயங்களிலே மூட்டி நஶிப்பிக்குமென்று தன் தேஹத்தை நினைப்பான்.—ஆத்மஜ்ஞாநத்தையும், ஃபகவத் ஜ்ஞாநத்தையும், ஃபகவத் விஷயத்தில் ருசியையும், த்வரையையுங்குலைத்து, தேஹாத்மாபிமாநத்தையும், அஹங்கார மமகாரங்களையும், காமக்ரோதாதிகளையும் விளைப்பித்து, பாபமடியாகவந்து அநர்த்தத்தைப் பண்ணுவார்களென்று தேஹத்தைப் பற்றிவரும் பந்துக்களை நினைப்பான்,—ஃபகவதநுஃபவத்துக்கும் ஃபகவத் கைங்கர்யத்துக்கும் விரோதிகளாய் ஸம்ஸாரவர்த்தகராயிருப்பார்களென்று ஸம்ஸாரிகளை நினைப்பான்.—அஜ்ஞராய், அஶக்தராய், எம்பெருமான் பக்கலிலேபிறந்து அவன் கொடுத்த பதங்களையுடையராய், அவனோடே யெதிரிட்டு து:ர்மாநிகளாய், தங்களைப் * போரப்பொலிய நினைத்து நாட்டாரை ஃப்ரமிப்பித்து அநர்த்தத்தைப் பண்ணுவார் சிலரென்று தேவதாந்தரங்களை நினைப்பான்.—ஃபகவத் ஜ்ஞாநத்துக்கும் இதரவிஷய வைராக்ய்யத்துக்கும் ஃபகவத் ஃபக்திக்கும் வர்த்தகராய், ஶேஷிகளாய், உசாத்துணையாய், ப்ராப்யத்துக் கெல்லைநிலமா யிருப்பார்களென்று ஸ்ரீவைஷ்ண

* போரப்பொலிய - மிகவும் பூர்ணமாக.

வர்களை நினைப்பான்.—தன்கடாக்ஷத்தாலே யென்னைத்திருத்தி, ஸர்வேஶ்வரன் கைக்கொள்ளுகைக்கு யோக்யனும்படிபண்ணி, அவன் திருவடிகளிலேசேர்த்து, அறியாதன வறிவித்து, ஸ்வாமியாய், என்று மொக்க வடிமைகொள்ளும் மஹோபகாரகனென்று ஆசார்யனை நினைப்பான்.—நம்முடைய அபராதத்தையும் * ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையுங் குலைத்து, அவனுடைய காருண்ய வாத்ஸல்யாதி குணங்களைக்கிளப்பி, நமக்கு புருஷகார பூதையாய், மாதாவாய், ஸ்வாமினியாய், ப்ராப்யையா யிருக்குமென்று பிராட்டியை நினைப்பான்.—ஸ்ருஷ்டிகாலத்திலே ஶரீரத்தையும் இந்த்ரியங்களையுந்தந்து, அந்தர்யாமியாய்நின்று ஸத்தையைநோக்கி, அத்வேஷத்தையும் ஆபிமுக்யத்தையும் ஸத்ஸங்கதி துடக்கமான ஆத்மகுணங்களையும்பிறப்பித்து ஸதாசார்யனோடேசேர்த்து, நம்முடையஸர்வாபராதங்களையும்பொறுத்து, ஸம்ஸாரஸம்பந்தத்தையுங்கழித்து, அர்ச்சிராதிமார்கத்தையும், பரமபதத்தையும், குணாநுபவத்தையுந்தந்து, யாவதாத்மபாவி நித்யகைங்கர்யங் கொள்ளும் ஸ்வாமியென்று ஸர்வேஶ்வரனை நினைப்பான்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

நவரத்நமாலை முற்றிற்று.

———:o:———

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

நவவிதஸம்பந்தம்.

(பிதாச ரக்ஷகஶ்ஶேஷீ பர்த்தாஜ்ஞேயோ ரமாபதி:-ஸ்வாம்யாதாரோ மமாத்மாச போக்தாசாத்யமநூதித:) என்கிறபடியே—அகாரத்தாலே - பிதாபுத்ர ஸம்பந்தஞ்சொல்லி, (அவரக்ஷணே) என்கிற தாதுவினாலே - ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தஞ்சொல்லி, லுப்தசதுர்த்தியாலே - ஶேஷஶேஷி ஸம்பந்தஞ்சொல்லி, உகாரத்தாலே - பர்த்ருபார்யா ஸம்பந்தஞ்சொல்லி, மகாரத்தாலே-ஜ்ஞாத்ருஜ்ஞேயஸம்பந்தஞ்சொல்லி, நமஸ்ஸாலே - ஸ்வஸ்வாமி ஸம்பந்தஞ்சொல்லி, நாரபதத்தாலே - ஶரீரஶரீரி ஸம்பந்தஞ்சொல்லி, அயநபதத்

தாலே - ஆதாராதேய ஸம்பந்தஞ் சொல்லி; ஆயபதத்தாலே -
போக்த்ருபோக்ய ஸம்பந்தஞ்சொல்லி; ஆக, திருமந்த்ரத்தால்-நவ
விதஸம்பந்தங்களைச்சொல்லித் தலைக்கட்டுகிறது.—*நம்மாசார்யர்
கள், ப்ரதமரஹஸ்ய தாத்பர்யமான நவவிதஸம்பந்தம் ஸ்வரூபஜ்
ஞனுக்கு நித்யாநுஸந்தேயமென்று அநுஸந்தித்தும் உபதேசித்தும்
போருவர்கள். அவையெவையென்னில்; விசேஷணவிசேஷ்ய ஸம்
பந்தம், ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தம், சேஷசேஷிஸம்பந்தம் பர்
த்ருபார்யாஸம்பந்தம், ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம், ஸ்வஸ்வாமி
ஸம்பந்தம், சரீரசரீரிஸம்பந்தம், தார்யதாரக ஸம்பந்தம்,
போக்த்ருபோக்யஸம்பந்தம்.—இதில், விசேஷண விசேஷ்யஸம்
பந்தமாவது - ப்ரக்ருத்யர்த சங்காநிவர்த்தகமாய், ஆச்ரயாச்ர
யியாய், வ்யாவர்த்ய வ்யாவர்த்தகமா யிருப்பதொன்று. ப்ரக்ருத்யர்த
சங்காநிவர்த்தக மாகையாவது - ஸமஸ்தசப்தகாரணமான அகார
ஸ்வபாவத்தாலே தத்வாச்யனும் ஸமஸ்தசப்தவாச்யமான சிதசித்
துக்களுக்குக் காரணமாமிடத்தில், 'நித்யங்களானவை கார்யமாமிடத்
தில் அநித்யங்களாமே' என்கிற சங்கையுதிக்க, அவைநித்யப்ரஹ்ம
விசேஷணமாகையாலே அநித்யத்வம் சங்கநீயமன்றென்று பரிஹரி
க்குமதாகை. ஆச்ரயாச்ரயியாவது-சௌக்ல்யம் படத்தைப்பற்றி
யல்லது நில்லாதாப்போலே, சிதசித்துக்கள் பகவத்ஸ்வரூபத்தைப்
பற்றியல்லது ஸத்தையற்றிருக்கை. வ்யாவர்த்ய வ்யாவர்த்தகமாகை
யாவது - இவைபகவத் ஸ்வரூபத்துக்குண்டான இதரவ்யாவ்ருத்தி
க்கு ப்ரகாசகமாய், வ்யாவர்த்யமான பகவத்ஸ்வரூபம் வ்யாவர்த்தக
மான விவற்றையொழிய ப்ரகாசியாதபடியுமாயிருக்கை, ஆக, நித்ய
கார்யாநாதித்வ ஸூசகமிந்த ஸம்பந்தம்.—ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்த
மாகையாவது—தாதுஸித்தியமாய், ப்ரக்ருத்யர்த்தாநந்தர பாவியாய்,
உபயஸ்வரூபோசிதமா யிருப்பதொன்று. தாதுஸித்திய மாகையாவ
து - (அவரக்ஷணே) என்கிற தாத்வர்த்தமானரக்ஷணம் நிர்விஷயமா
யும் நிராச்ரயமாயும் நில்லாமையாலே, (யேநஜாதாநிஜீவந்தி) இத்
யாதி ப்ரஸித்தியமான ரக்ஷ்யரக்ஷகஸ்வரூப தர்சநமாகை. ப்ரக்ருத்
யர்த்தாநந்தர பாவித்வமாகையாவது - (மூவாத்தனிமுதலாய் மூவுல

* 'நம்முடைய ஸர்வாபராதங்களையும் பொறுப்பித்து' என்றும் பாடங்கா
ண்கிறது.

குங்காவலோன்) என்கிறபடியே, ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வத்துக் கநந்தரம் வேண்டுவதொன்றாகை. உபயஸ்வரூபோசிதமாகையாவது - ரக்ஷ்யரக்ஷக ஸ்வரூபமான பாரதந்த்ர்ய ஸ்வாதந்த்ர்யங்களுக்குச்சேருகை. பாரதந்த்ரனுக்கு ஸ்வரக்ஷணான்வயங் கூடாமையைக்காட்டுமிந்த ஸம்பந்தம்.—சேஷசேஷி ஸம்பந்தமாவது - விபக்திஸித்தமாய், தாத்வர்த்தப்ரார்த்தநா ப்ரகாசகமாய், ஹோமாநுரூபதாதர்சகமா யிருப்பதொன்று. விபக்திஸித்தமாகையாவது- அகாரத்திலேறிக் கழிந்த சதுர்த்தியிலுதித்த சேஷத்வம், (யஸ்யாஸ்மி) இத்யாதிப்ரஸித்தமானசேஷசேஷிகளைக்காட்டுகை. தாத்வர்த்தப்ரார்த்தநாப்ரகாசகமாகையாவது-தாத்வர்த்தமானரக்ஷணம்சரீரியானசேஷிப்ரயோஜநமத்தனையென்று காட்டுகை. ஹோமாநுரூபதாதர்சகமாகையாவது-சேஷவஸ்துஸ்வரூபம்சேஷிவிநியோகாநுகுணமாயிருக்கையாயிற்றுநிலைநின்றவேஷமென்றுகாட்டுகை. அதாவது சேஷிசேஷத்வத்தை யழியமாறி விநியோகிக்குமிடத்தில் பிற்காலியாத முறையுணர்த்தி, ஸ்வமதஸ்வரூப குணத்தையும் ஸஹியாததொருஸம்பந்தம்—பர்த்ருபார்யா ஸம்பந்தமாவது-உகாரஸித்தமாய், விபக்த்யர்த்த சோதகமாய் ஸ்வரூப ப்ராப்தமா யிருப்பதொன்று.உகாரஸித்தமாகையாவது—உகாரார்த்தமான அவதாரணார்த்தமாயுதிக்கை. அதாவது-ரக்ஷகனான புருஷோத்தமனுக்கே ரக்ஷ்யமான ஆத்மஸ்வரூபம் அற்றுத்தீர்ந்திருக்குமென்று தோற்றுகை. விபக்த்யர்த்தசோதகமாகையாவது-பதிவ்ரதையினுடையசேஷத்வமநந்யார்ஹமாயிருக்குமாபோலே, லுப்தசதுர்த்த்யர்த்தமான ஸமவச்சேஷத்வமுமநந்யார்ஹமென்றுமறுக்களைந்திடுகை. ஸ்வரூபப்ராப்தமாகையாவது - பர்த்ருத்வபார்யாத்வங்கள் பும்ஸ்த்ரீத்துவத்துக்கீடாமாபோலே, பர்த்ருபார்யாஸம்பந்தம் ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யங்களுக்கீடாகை. அநந்யார்ஹப்ரஸங்காஸஹமிந்தஸம்பந்தம்.—ஜ்ஞாத்ருஜ்ஞேயஸம்பந்தமாகையாவது-மகாரத்ருஷ்டமாய், உகாரார்த்தாநுஸந்தாநாபேக்ஷிதமாய், அசித்வ்யாவ்ருத்தி வேஷமாயிருப்பதொன்று. மகாரத்ருஷ்டமாகையாவது - (மநஜ்ஞாநே) என்கிற ஜ்ஞாநவாசியான மகாரம் காட்டுகிற ஜ்ஞாத்ருத்வத்துக்கு ஜ்ஞேயம் ஸமஸ்தஸ்வரூபாதிகளாய்த் தோன்றுகை. உகாரார்த்தாநுஸந்தாநாபேக்ஷிதமாகையாவது - உகாரார்த்தமான பர்த்ருபார்யாஸம்பந்தாநுஸந்தாநத்துக்கு ஜ்ஞாத்ருத்வமபேக்ஷிதமாகை. அசித்வ்யாவ்ருத்தி வேஷமாகையாவது - இந்த

ஸம்பந்தங்களை யறிகையும், ஜ்ஞேய ஜ்ஞாதாவாகையும், ஜ்ஞேயா தீநமுமாய், தத்ப்ரயோஜநமுமா யிருக்குமிந்த ஜ்ஞாத்ருத்வமென்று காட்டுமிந்த ஸம்பந்தம்.—ஸ்வஸ்வாமிஸம்பந்தமாவது - நமஶ்ஶப்தார்த்த தாத்பர்யமாய், மகாரார்த்த நிபந்தந ஷ்ரமநாஶகமாய், ஸ்வாபாவிகமாயிருப்பதொன்று. நமஶ்ஶப்தார்த்த தாத்பர்யமாகையாவது - நமஶ்ஶப்தார்த்தமான அஹம்மமதாநிவ்ருத்தி, ஶேஷித்வாபிமாநித்வங்களையும் 'ஸ்வமதமன்று, பரமதம்' என்றுகாட்டி, ஶேஷியுமாய் அபிமாநியுமான வெம்பெருமானுடைமையுமாய்த்தோன்றுகை. மகாரார்த்த நிபந்தநஷ்ரமநாஶகமாகையாவது - மகாரார்த்தமான ஜ்ஞாத்ருத்வ நிபந்தநமாய்வந்தகர்த்ருத்வ ஷ்ரமத்தையறுக்குமதாகை. அதாவது, பராதீநமான ஸ்வரூபத்தின் குணவிஶேஷங்களும் பராதீநமென்று ஸ்வாதீநதாப்ரதிபத்தியைக்கெடுக்கை. ஸ்வாபாவிக மாகையாவது - அஹங்காராதிகளைப்போலே வந்தேறியன்றிக்கே, (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்) என்கிறபடியே ஜீவபரர்களுடைய ஸ்வஸ்வாமி ஸம்பந்தம் ஸ்வதஸ்ஸித்தமாய்ப் போருகை. ஸ்வத்துக்கு ஸ்வரக்ஷணகர்த்ருத்வ மில்லையென்றும், ஸ்வாமிக்கே யதுதொழிலென்றுங் காட்டுகிற திந்தஸம்பந்தம்.—ஶரீரஶரீரி ஸம்பந்தமாவது - நாராயணபதத்தில் ஸமாஸ விஶேஷஸித்தமாய், நமஶ்ஶப்தார்த்தஸ்வரூபப்ரகாஶகமாய், ஸாமாநாதிகரண்யயோக்யமாயிருப்பதொன்று. ஸமாஸவிஶேஷஸித்தமாகையாவது - நாராயணபதத்தில் பஹுவ்ரீஹி ஸமாஸத்திலே வ்யாப்யமான நாரங்கள் ஶரீரமாய், அந்தர் வ்யாப்தியாலே வ்யாபகஸ்வரூபம் ஶரீரியாய்த்தோன்றுகை. நமஶ்ஶப்தார்த்த ஸ்வரூபப்ரகாசக மாகையாவது நமஶ்ஶப்தார்த்தமான ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், த்ருஹ க்ஷேத்ராதிஸம்பந்தங்கள்போ லன்றிக்கே அப்ருதக்ஸித்தமா யிருக்குமென்று காட்டுகை. ஸாமாநாதிகரண்ய யோக்யமாகை யாவது- ஸ்வரூபபேதத்தாலே பிந்நப்ரவ்ருத்தி நிமித்தமான ஜீவபரஸ்வரூபம், ஶரீரஶரீரியான ஐக்யத்தாலே யொன்றென்னலாகை. விஶிஷ்டாத்வைத ப்ரகாஶகமிந்த ஸம்பந்தம்.—தார்யதாரக ஸம்பந்தமாவது - ஸமாஸாந்தர ஸித்தமாய், ஶரீரஶரீரி ஸம்பந்தைகலக்ஷணமாய், அசித்விஶேஷஸ்திதிஹேதுவா யிருப்பதொன்று. ஸமாஸாந்தர ஸித்தமாகையாவது - நாராயணபதத்தில் தத்புருஷஸமாஸஸித்தியையான பஹிர்வ்யாப்தியாலே நாரபதவாச்யங்கள் தார்யமாய், அயநபதவாச்யன் தாரகனாய்த் தோன்றுகை: ஶரீரஶரீரி ஸம்பந்

வைபக லக்ஷணமாகையாவது - ஆதேயத்வவிதேயத்வ ஶேஷத்வரூபமான ஶரீரலக்ஷணங்களிலும், ஆதாரத்வ விதாயகத்வ ஶேஷித்வரூபமான ஶரீரிலக்ஷணங்களிலும், ப்ரதாநமான ஆதேயத்வ தாரகத்வரூபலக்ஷணமொன்றாய்த் தோன்றுகை. அசித்விஶேஷதவ ஸ்திதி ஹேதுவாகையாவது - (அநேநஜீவேநாத்ம நாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி) என்று அந்தர்வ்யாப்திபோலே வேதநஸ்திதி ப்ரதாநமாகை யன்றியே பஹிர் வ்யாப்தியாலே சேதநாசேதநங்களிரண்டினுடையவும் வ்யவஸ்தித ஸ்வரூபஸ்திதிவ்யாபாரங்களுக்குக் காரணமாய்த் தோன்றுகை, சிதசித்ஸ்திதி காரணமிந்தஸம்பந்தம்.—போக்த்ருபோக்யஸம்பந்தமாவது - சரமவிபக்தி ஸித்தமாய், பூர்வஸம்பந்த ப்ரயோஜந ப்ரதர்ஶகமாய், ப்ரதிஸம்பந்திபோகாநுரூபமா யிருப்பதொன்று. சரமவிபக்தி ஸித்தமாகையாவது(ஆய)என்கிற சதுர்த்தீவிபக்தியிலே அநந்யார்ஹஶேஷபூதனான மகாரவாச்யனுடையஸஹஜஶேஷவ்ருத்திதோன்ற, அதில்கர்த்ருத்வபோக்த்ருத்வங்கள்ஶரீரியானபரமஶேஷிக்கேயாய்,ஶரீரமானஶேஷபூதனுக்கன்றென்றிருக்கை; பூர்வஸம்பந்தப்ரயோஜந ப்ரதர்ஶகமாகையாவது ஸர்ப்பவிஷவத் தார்யதாரகத்வங்கள்நிஷ்ப்ரயோஜநமாய்விடாதே, ரஸநாரஸவஸ்துவத் தார்யதாரகங்களுக்குஅநுகூலக்ராஹ்யக்ராஹகரூபப்ரயோஜநத்தைக் காட்டுமதாகை; ப்ரதிஸம்பந்தி போகாநுரூப மாகையாவது - கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஶேஷியினுடைய கைங்கர்ய ரஸாநுபவத்துக்கும், கைங்கர்யாஶ்ரயமான ஶேஷபூதனுடைய ஶேஷிபோகவிருத்த ஸ்வரஸத்வராஹித்யத்துக்கு மிடமாயிருக்கை. ஶேஷித்வத்திலும் ஶேஷத்வத்திலும் மறுக்களேந்ததிந்தஸம்பந்தம்.—இதில், விஶேஷணவிஶேஷ்யஸம்பந்தஜ்ஞாநம்பிறக்கவேகாரணாந்தர ஶங்கையறும்; ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே ரக்ஷகாந்தர ஶங்கையறும்; ஶேஷஶேஷிஸம்பந்த ஜ்ஞாநம்பிறக்கவே ஶேஷ்யந்தர ஶங்கையறும்; பர்த்ருபார்யாஸம்பந்த ஜ்ஞாநம்பிறக்கவே அந்யார்ஹ ஶங்கையறும்; ஜ்ஞாத்ருஜ்ஞேயஸம்பந்த ஜ்ஞாநம்பிறக்கவே ஜ்ஞேயாந்தர

ஶங்கையறும்; ஸ்வஸ்வாமி ஸம்பந்தஜ்ஞாநம்பிறக்கவே ஸ்வாதந்த்ர்யஶங்கையறும்; ஶரீரஶரீரி ஸம்பந்தஜ்ஞாநம்பிறக்கவே ஸ்வரூபைக்ய ஶங்கையறும்; ஆதாராதேயஸம்பந்த ஜ்ஞாநம்பிறக்கவே ஆதாராந்தரஶங்கையறும்; போக்த்ருபோக்ய ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே போக்த்ருத்வ ஶங்கையறும்.—ஆக, நவவிதஸம்பந்தமு மறிந்து ஆநந்தித்திருக்கவும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர்திருவடிகளே ஶரணம்.

நவவிதஸம்பந்தம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

யாத்ருச்சிகப்படி.

———:o:———

யாத்ருச்சிக பகவத்கடாக்ஷத்தாலே பகவதாபிமுக்யம் பிறந்து ஸதாசார்யஸமாஶ்ரயணம்பண்ணின முமுக்ஷுவுக்கு ரஹஸ்யத்ரயமு மநுஸந்தேயம். அதில், ஸ்வரூபஶோதநார்த்தமாகப்ரவ்ருத்தமாகையாலே ப்ரதமத்திலே யநுஸந்தேயமான திருமந்த்ரம், ஸ்வரூபத்தையும், ஸ்வரூபாநுரூபமான பரமபுருஷார்த்தத்தையும் ப்ரதிபாதிக்கிறது; அப்பரம புருஷார்த்தத்துக் கநுரூபமான சரமஸாதந ஸ்வீகாரத்தை விதிக்கிறது சரமஶ்லோகம்; விஹிதோபாய பரிகரத்தையும், ஸப்ரகார புருஷார்த்த ப்ரகாரத்தையும் ப்ரதிபாதிக்கிறது த்வயம். அதில் திருமந்த்ரம், எட்டுதிருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்கும். அதில் முதல்பதமான ப்ரணவம், மூன்றுபதமாயிருக்கும். அதில் ப்ரதமபதமான அகாரம் - ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வாத்மாக்களையும் ரக்ஷித்துக்கொண்டு போருகிற ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது; இரண்டாம்பதமாய், அவதாரணார்த்தமான உகாரம் - வேறேசிலர்க்கு ஶேஷமன்றென்கிறது; மூன்றாம்பதமாய், இருபத்தஞ்சாமக்ஷரமாய்,

ஜ்ஞாநவாசியாயிருந்துள்ள மகாரம்-கீழ்ச்சொன்ன அநந்யார்ஹ ஶேஷத்வத்துக் காஶ்ரயம் ஜேஹாத்விலக்ஷணமான ஆத்மவஸ்துவென்கிறது. இரண்டாம்பதமான நமஸ்ஸு, ந, என்றும், ம, என்றும் இரண்டுபதமாயிருக்கும் ந, என்றது - அன்றென்றபடி. மஃ என்றது-எனக்கென்றபடி. இரண்டுங்கூடி எனக்கன்றென்றபடி. எனக்கன்றென்கையாவது - எனக்கு நான் கடவனல்லனென்றிருக்கை. மூன்றாம்பதமான நாராயணபதம்-ஸர்வஶேஷியான நாராயணனுக்கு நித்யகைங்கர்யம் பண்ணவேணுமென்று ப்ரார்த்திக்கும்படியைச்சொல்லுகிறது. நாராயணனென்றது - நாரங்களுக் கயநமென்றபடி. நாரங்களாவன-நஶியாதவஸ்துக்களினுடைய திரள். அவையாவன - திவ்யாத்மஸ்வரூபத்தை யொழிந்த ஸர்வவஸ்துக்களும். அயநமென்றது - இவற்றுக்காஶ்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாகவுடைய னென்னவுமாம். இத்தால் - மேன்மையும் நீர்மையும் சொல்லிற்றாய்த்து. இதில் சதுர்த்தி ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகார கைங்கர்யங்களையுங் கொண்டருளவேணுமென்று ப்ரார்த்திக்கும்படியைச் சொல்லுகிறது. ஆக, ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹ ஶேஷபூதனாய் எனக்குரியனன்றிக்கே யிருந்துள்ள நான், ஸர்வஶேஷியான நாராயணனுக்கு நித்யகைங்கர்யம்பண்ணப் பெறுவேனாக வேணுமென்று ப்ரார்த்தித்ததாய்த்து.

——(:o:)——

* சரமஶ்லோகம்

ஸர்வதர்மாந் - கர்மஜ்ஞாந பக்திகளை ஸர்வப்ரகாரமாக வுபதேஶிக்கக்கேட்ட அர்ஜுநன், அவற்றினருமையாலும் தன் ஸ்வரூபத்துக்குச் சேராமையாலும் ஸாத்யலாப நிமித்தமாக ஶோகிக்க; நான் முன்புபதேஶித்தவற்றை ஸவாஸநமாகவிட்டு என்னையொருவனையுமே உபாயமாக பரிக்ரஹி, நானுன்னுடைய ஸர்வவிரோதிகளையும் போக்குகிறேன், நீஶோகியாதேகொள் என்று இவனுடைய ஶோகத்தை நிவர்த்திப்பிக்கிறான்.— ஸர்வதர்மாந் - எல்லா தர்மங்களையும்; கீழ்ச்சொன்ன ஸபரிகரங்களான வெல்லாவுபாயங்களையும்; பரித்யஜ்ய - ருசிவாஸனைகளோடேவிட்டு; மாம - உன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு நிற்கிறவென்னை; ஏகம் - ஒருவனையுமே; ஶர

ணம் - உபாயமாக; வ்ரஜ - அத்யவஸி : அஹம் - ஸர்வஶக்தியான நான்; த்வா - என்னையொழிந்த உபாயோபேயங்களை விட்டிருக்கிற வுன்னை; ஸர்வபாபேப்ய:- என்னைக்கிட்டுகைக்கு விரோதியாயிருந் துள்ளவை யெல்லாவற்றில் நின்றும்; மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்சக் கடவேன் : மாஶுச: - நீ ஶோகியாதேகொள்.—ஆக, ஸாங்கமான ஸர்வோபாயங்களையும் ஸவாஸநமாகவிட்டு, வாத்ஸல்யாதி கல்யாண குணவிஶிஷ்டனான வென்னை யொருவனையுமே நிரபேக்ஷஸாதந மாகஸ்வீகரி; ஸர்வஶக்தித்வாதி கல்யாணகுணவிஶிஷ்டனான நான், என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை, ஸமஸ்தப்ரதிபந்த கங்களில் நின்றும் முக்தனுக்குகிறேன், நீ ஶோகியாதேகொள் என்று அர்ஜுநனுடைய ஶோகத்தை நிவர்த்திப்பிக்கிறான்.

* த்வயம்.

த்வயம், உபாயபரிக்ரஹத்தையும், உபேயப்ரார்த்தநத்தையும் ப்ரதிபாதிக்கிறது. இரண்டர்த்தத்தையும், ப்ரதிபாதிக்கையாலே யிரண்டுவாக்யமாயிற்று; இரண்டுவாக்ய மாகையாலே த்வயமென்று திருநாமமாயிற்று. இதில்பூர்வவாக்யம் மூன்றுபதமும், உத்தரவாக்யம் மூன்றுபதமும், ஆக ஆறுபதமாயிருக்கும்.—இதில் முதல்பதம் - பெரியபிராட்டியாருடைய புருஷகாரபாவத்தையும், ஈஶ்வரனுடைய வாத்ஸல்யாதி குணசதுஷ்டயத்தையும், திவ்யமங்கள விக்ரஹயோகத்தையுஞ் சொல்லுகிறது. இதில் ஸ்ரீஶப்தம் - (ஶ்ரீயதே, ஶ்ரயதே) என்கிற வ்யுத்பத்தி த்வயத்தாலும், பெரியபிராட்டியாருடைய மாத்ருத்வப்ரயுக்தமான ஸம்பந்தவிஶேஷத்தாலே இவர்கள் குற்றம் பாராதே யெல்லார்க்கு மொக்கவாஶ்ரயணீயையாயிருக்கு மிருப்பையும், பத்நீத்வமாகிற ஸம்பந்தவிஶேஷத்தாலே - ஸ்வரூபஸித்த்யர்த்தமாகவும் சேதநரக்ஷணார்த்தமாகவும் ஈஶ்வரனை யாஶ்ரயித்துக்கொண் டிருக்குமிருப்பையுஞ் சொல்லுகிறது. மதுப்பாலே-ஈஶ்வரனுக்கும் பிராட்டிக்குமுண்டான நித்யஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. நாராயணஶப்தம் - பிராட்டிதானே அபராதங்களையிட் டகற்றப்பார்த்தாலும், (என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்) என்று நோக்கக்கடவனான ஈஶ்வரனுடைய வாத்ஸல்யஸ்வாமித்வ ஸௌ

---

* த்வயம் முன்னும், சரமஸ்லோகம் பின்னுமாய் சில ஸ்ரீகோஶங்களிற் காண்கிறது.

ஶீல்ய ஸௌலப்யங்களைச் சொல்லுகிறது. சரணஶப்தமும் - ஸ்வரூபகுணங்களிலுங்காட்டில் தானே கார்யஞ்செய்யக் கடவதான விக்ரஹவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. ஶரணம் உபாயமாக. உபாயமாகிறது - அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணித்தருமது. ப்ரபத்யே - பற்றுகிறேன். பற்றுகையாவது - மாநஸாத்யவஸாயம். — ஶ்ரீமதே - பெரியபிராட்டியாரோடே ஸம்ஶ்லிஷ்டனானவனுக்கு. இத்தால் - கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி மிதுநமென்னுமிடத்தைச் சொல்லுகிறது நாராயணாய - ஸர்வஶேஷியாயிருந்துள்ளவனுக்கு. இத்தால் - கைங்கர்யம் பண்ணுகைக்குவகுத்த விஷயமென்கிறது இதில் சதுர்த்தி - தேஶகாலாவஸ்தாப்ரகார நியமரஹிதமான நித்யகைங்கர்ய ப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது. நமஶ்ஶப்தமும் - கீழ்ச்சொன்ன கைங்கர்யத்தில் விரோதிநிவ்ருத்தியைச்சொல்லுகிறது. கைங்கர்யத்துக்கு விரோதியாகிறது - ஹோக்த்ருத்வப்ரதிபத்தியும், மதீயத்வப்ரதிபத்தியும். — ஆக, ஶ்ரிய:பதியாய், ஸர்வஸுலபனான நாராயணன் திருவடிகளையே யபிமதஸித்தியிக்கும் தத்விரோதி நிவ்ருத்திக்கு முபாயமாக வத்யவஸிக்கிறேன்; ஶ்ரிய:பதியாய் ஸர்வஸ்வாமியான நாராயணனுக்கு நித்யகைங்கர்யம் பண்ணப்பெறுவேனாகவேணும், அதுக்குவிரோதியான அஹங்கார மமகாரங்களும் நிவ்ருத்தமாகவேணுமென்று ஸப்ரகாரஸாதந ஸ்வீகாரபூர்வகமாக ஸ்வரூபாநுரூபமான நித்யகைங்கர்ய ப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது.

* [ப்ரணவத்தாலே ஸ்வரூபஞ்சொல்லி, நமஸ்ஸாலே ஸ்வரூபாநுரூபமான வுபாயஞ்சொல்லி, நாராயணபதத்தாலே ஹோமவிஶேஷஞ்சொல்லுகிறது. ப்ரணவத்தாலே அநந்யார்ஹ ஶேஷத்வஞ்சொல்லி, நமஸ்ஸாலே அநந்யஶரணத்வஞ்சொல்லி நாராயணபதத்தாலே அநந்யஹோக்யத்வஞ்சொல்லுகிறது ஶேஷத்வ ஜ்ஞாநமில்லாதார்க்கு ப்ரணவத்தி லந்வயமில்லை; தேஹாத்மாபிமாநிகளுக்கு நமஸ்ஸி லந்வயமில்லை; கைங்கர்யத்தில் ருசியில்லாதார்க்கு நாராயணபதத்தி லந்வயமில்லை ஶேஷத்வ ஜ்ஞாநமிருக்கும்படியை இளையபெருமா ளாசரித்துக்காட்டினார்; தேஹாத்மாபிமாந மஸஹ்யமென்னுமிடத்தை ஶ்ரீஹரதாழ்வா னாசரித்துக்காட்டினார்; கைங்கர்யத்தில் நிஷ்டையிருக்கும்படியை ஶ்ரீஶத்ருக்நாழ்வா னாசரித்துக்காட்டினார். இவ்வர்த்தம். நம்மாழ்வாரும், (கண்கள்சிவந்து, கருமாணிக்கமலை, நெடுமாற்கடிமை) என்கிற திருவாய்மொழிகளிலே யருளிச்செய்தருளினார்.] *

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

யாத்ருச்சிகப்படி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பரந்தபடி.

——:0:——

(நித்யோநித்யாநாம்) என்றும், ஜ்ஞாஜ்ஞௌத்³வாவஜா வீஶநீஶௌ) என்றும், (ப்ரக்ருதிம்புருஷஞ்சைவவித்³த்⁴யநாதீ³) என்றுஞ்சொல்லுகிறபடியே ஆத்மஸ்வரூபம் நித்யமாயிருக்கச்செய்தேயும், அஸந்நேவஸஹவதி) என்கிறபடியே - அநாதி³காலம் அஸத்³வ்யவஹாரத்துக்கு விஷயமாய்ப்போந்தது ஸம்ப³ந்தி⁴விஷய ஜ்ஞாநராஹித்யத்தாலே யாகையாலே, (ஸந்தமேநம்) என்கிறபடியே ஸத்³வ்யவஹாரத்துக்கு விஷயமாம்போது ஸம்ப³ந்தி⁴விஷயஜ்ஞாநஸத்³பா⁴வத்தாலே யாகவேணும். இப்படிப்பட்ட ஜ்ஞாநவிஶேஷமாகிறது, ஈஶ்வரனுடைய ஶேஷித்வவிஷயஜ்ஞாநமும், உபாயத்வவிஷயஜ்ஞாநமும், உபேயத்வவிஷயஜ்ஞாநமுமிறே. ஈத்³ருஶமாநஜ்ஞாந விஶேஷத்துக்கு உத்பாத³கமாயிருப்பது - அபௌருஷேயமாய், நித்யநிர்தோ³ஷமாய், ஸ்வத: ப்ரமாணமான வேத³ம். அந்த வேத³ந்தான், (அநந்தாவைவேதா³:) என்கிறபடியே - அஸங்க்²யாதமா யிருக்கையாலும், (அல்பஶ்ச காலஃ) என்றும், ஸ்வல்பஞ்ச ஜீவிதமத்யல்பம்) என்றும், (நம்முடையநாள்) என்றும், இத்யாதி³களிற் சொல்லுகிறபடியே - சேதநர்பரிமிதகால வர்த்திகளா யிருக்கையாலும், உள்ளகாலந்தன்னிலே வேத³த்திற்சொல்லுகிற வர்த²த்தை யாராயவென்றிழிந்தால், (ஶ்ரேயாம்ஸிப³ஹுவிக்⁴நாநி) என்றும், (ஸஹவஶ்சவிக்⁴நா:)என்றுஞ்சொல்லுகிறபடியே-ஶ்ரேய, ப்ராப்திப்ரத்யூஹ பா³ஹுள்யத்தாலும், அந்த வேத³த்தில் ஸாரபூ⁴தமான அர்த²நிர்ணயம் பண்ணுகைக்கு யோக்³யதை யற்றிருக்கும். ஆனபின்பு, யத்ஸாரபூ⁴தம் தது³பாஸிதவ்யம், என்கிறபடியே - வேத³தாத்பர்ய பூ⁴தமாயிருப்ப தொன்றாலே வேத³த்தில் நிர்ணீதமான வர்த²த்தை யறியவேணும். அதில் (ருசோயஜூம்ஷிஸாமாநிதயைவாயர்வணாநிச-ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ய:ம்) என்கிறபடியே ஸகலவேதா³ந்த தாத்பர்யபூ⁴மியா யிருப்பதொரு மந்த்ரமாகையாலே, இம்மந்த்ரமுவத்தாலே ஶேஷஶேஷிபா⁴வாதி³ஜ்ஞாநம் உபாதே³யமாகக்கடவது. (யதா²ஸர்வேஷுதே³வேஷு) இத்யாதி³ப்ரக்ரியாலே ஸகலதை³வங்களிலும் ஸர்வேஶ்வரன் ப்ரதா⁴நனாகிறாப்போலே ஸகலமந்த்ரங்களிலும் இம்மந்த்ரவிஶேஷம் ப்ரதா⁴நமா யிருப்பதொன்

* இந்த வாக்யங்கள் அநேக ஸ்ரீகோஶங்களிலில்லை.

று. (ஆஸீ தாந்தேதமஹாணராஶிவத்) என்றும், (வஹவோந்ருபகல்யாணமஹாணுஃபுத்ரஸ்யஸந்திதே - தவாநந்தமஹாணஸ்யாபி ஷவைதேப்ரமேமஹாணுஃ, ஈறிலவண்புகழ், வஹூ றிமேவ்யதீதாநி, எங்கின்ற யோனியுமாய்ப்பிறந்தாய், பிறப்பில் பல்பிறவிப்பெருமான்) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே - ஸர்வேஶ்வரனுடைய மஹாணங்களும், மஹாணபரீவாஹங்களான அவதாரங்களும் அஸங்க்யாதங்களாயிருக்குமாபோலே, அவற்றை யநுபவிக்கயித்திருக்கும் மந்த்ரவிஶேஷங்களும், (வஹுஹிர்மந்த்ரை:) என்கிறபடியே வஹுவியங்களாயிருக்கும். இப்படி வஹுவியங்களான மந்த்ரவிஶேஷங்களில்வைத்துக்கொண்டு, (நாராயணாயவித்மஹே வாஸுதேவாயதீமஹி - தந்நோவிஷ்ணுஃப்ரசோதயாத்) என்றுவிஷ்ணுகாயத்ரியிலே யிம்மூன்றுமந்த்ரத்தையும் ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலே, வ்யாபகமந்த்ரத்ரயமும் ப்ரதாநமாகக்கடவது. அந்தவ்யாபகமந்த்ரங்களில் வைத்துக்கொண்டு, ப்ரதமத்திலே நாராயணஶப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும்; மேல்தானும், வாஸுதேவவிஷ்ணுஶப்தங்களை யநாதரித்துப் பலவிடங்களிலும் நாராயணஶப்தத்தையிட்டு ஹமவத்ஸ்வரூபாதிகளை நிர்தேஶிக்கையாலும். இப்படிவேதபுருஷனாதரித்தவளவன்றிக்கே, வேதார்த்தவிஶதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதிபரமருஷிகள் பலரும், வேதார்த்தோப ஸ்ரீம்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலே பலவிடங்களிலும் (ஆர்த்தாவிஷண்ணாஃ,) (ஆபோநாராஃ)மாஹி(முஹுர்முஹுஃ)ஸர்வவேதரஹஸ்யஃ,ஏகோஷ்டாக்ஷரஏவாயம்)என்றுஸகலமந்த்ரப்ரதாநதயா இத்தைப்ரஶம்ஸிக்கையாலும்; ஸ்வயத்நஸாத்யமான ஹமவத்ப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞாநரான ருஷிகளைப்போலன்றிக்கே, (மயர்வறமதிநலமருளினன்) என்கிறபடியே, நிர்ஹேதுக ஹமவத்கடாக்ஷத்தாலே ஸமதிகத ஸமஸ்தவஸ்து வாஸ்தவரான ஆழ்வார்கள் பலரும் ஸ்வப்ரபந்தங்களிலே பலவிடங்களிலும் இத்தையேப்ரஶம்ஸிக்கையாலும; ததநுஸாரிகளான பூர்வாசார்யர்களும், இதர மந்த்ரங்களையநாதரித்து, இத்தையே தந்தாமுக்குத் தஞ்சமாக வநுஸந்தித்து, உபதேஶவேளையிலும் தந்தாமைப் பற்றினவர்களுக்கு இத்தை உஜ்ஜீவநஹேதுவாக வுபதேஶித்துப் போருகையாலும்; ததநுயாயிகளான நமக்கும் இதுவே அநுஸந்தேயமாகக்கடவது. (விட்டுசித்தன் விரும்பியசொல்) என்கையாலேயிறே திருப்பல்லாண்டை நம்மனிச்சராதி

ரிக்கிறது. வாச்யவை஭வம்போலன்று வாசகவை஭வம். அவன் ஊரு ரஸ்யமானாலும் இது ஸந்நிதிபண்ணிக் கார்யஞ்செய்யும். த்ரௌபதிக்கும் ஃபலஸித்தியுண்டாயிற்றது திருநாமவைபவத்தாலேயிறே. (ஸாங்கேத்யம்) என்கிறபடியே, இதுதான்சொல்லும் க்ரமமொழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபங்கெட நில்லாது. (ஓராயிரமாய்) என்கிறபடியே, அவன்றனக்கும்ரக்ஷணபரிகரமிதுவே. ஜ்ஞானஶக்த்யாதிகளைப்போலே அல்லாத திருநாமங்கள்; ஜ்ஞானாநந்தங்களைப்போலேயிது. (நாமமாயிரமேத்தநின்ற நாராயணா, நாமம்பலவுமுடை நாரணநம்பி) என்றுநின்றதிறே. இதுதான் ஸர்வாதிகாரம். ப்ரணவார்யத்துக்கு எல்லாருமதிகாரிகள். இடறினவன் 'அம்மே' என்னுமாபோலே, இது சொல்லுகைக்கு எல்லாரும் யோக்யர்; ப்ராயஶ்சித்தாபேக்ஷையில்லை. இதுதான் ஃபலப்ரதமாமிடத்தில், (ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்காத்யம்பாரலௌகிகம் - கைவல்யம் ஭கவந்தஞ்சமந்த்ரோயம் ஸாதயிஷ்யதி) என்றும், நமோநாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதகஃ) என்றும், குலந்தரும்செல்வந்தந்திடும்) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே - ஐஶ்வர்யகைவல்ய ஭கவச்சரணார்த்திகளாகிற த்ரிவிதாதிகாரிகளுக்கும், தத்தத் ஸ்வாபிமத ஃபலவிஶேஷங்களை ஸாதித்துக் கொடுக்கக் கடவதாயிருக்கும். ஭கவச் சரணார்த்திகளான வதிகாரிகளில், ஭க்தியோக பரனுக்கு, கர்ம ஜ்ஞானங்களினுடைய வுத்பத்திக்கு ப்ரதிவந்தகங்களாயிருக்கிற ப்ரபலகர்மங்களை நிவர்த்திப்பித்து, அவன்றனக்கு உத்தரோத்தரம் அபிவ்ருத்திகளையும் பண்ணிக்கொடுத்து, தத்வாரா உபகாரமாயிருக்கும்; ப்ரபத்யதிக்ருதனுக்கு, ஆத்மயாதாத்ம்யஜ்ஞானஜனகமாய், காலக்ஷேபஹேதுவாய், (எனக்கென்றுந்தேனும்பாலுமமுதுமாய் திருமால்திருநாமம்) என்கிறபடியே, ப்ரதிபாத்ய வஸ்துவைப்போலே ஸ்வயம்போக்யமு மாயிருக்கும். இப்படி அபேக்ஷித ஃபலஸாதகத்வமாத்ரமே யன்றிக்கே, (ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம்) என்றும், (நின்திருவெட்டெழுத்துங்கற்று- மற்றெல்லாம் பேசிலும்) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஜ்ஞாதவ்யங்களான நிகிலத்ரய்யந்தரஹஸ்யபூத தத்வார்த்த விஶேஷங்களையும் ஸாகல்யேந ஜ்ஞாபிக்கக் கடவதாயிருக்கும். ஜ்ஞாதவ்ய ஸகலார்த்தங்களெல்லாமிதிலே புஷ்கலமாக ப்ரதிபந்நமாகில், மற்றைரஹஸ்ய த்வயமு மநுஸந்தேய மாகாதோவென்னில்; அது செய்யாது. இதிலேஸங்க்ஷி

ர்த்திதங்களான வர்த்தங்களை அவை விஸத்ருதங்களாக ப்ரதிபாதிக்கிறன வாகையாலே, ஸகலார்த்தமுமிதிலே கண்டோக்தமாகி லிறே அவையநுஸந்தேயங்களாவன; இதில் ஸ்பஷ்டங்களானவர்த்தங்களை அவை விஸ்த்ருதங்களாக ப்ரதிபாதிக்கிறன வாகையாலே, அவற்றினுடைய வநுஸந்தேயதைக்குக்குறையில்லை, விதேயநுஷ்டாநரூபங்களாகையாலும், அவற்றை யொழிய ஃபலஸித்தி யில்லாமையாலும் அவை யநுஸந்தேயங்கள். இது தன்னிலே, அவை யநுஸந்தேயங்களானபோது இதினுடைய நைரபேக்ஷ்யம்ஸித்தமாகாதோவென்கிற சோத்யம்பரிஹ்ருதம்.—ஆக, இப்படி வேதங்களோடு, வைதிகரான ருஷிகளோடு, ஆழ்வார்களோடு, ஆசார்யர்களோடுவாசியற எல்லாருமித்தையே யாதரிக்கையாலும், எல்லாவதிகாரிகளுக்கும் நின்றநின்ற நிலைகளிலே அபேக்ஷிதப்ரதாநம் பண்ணக்கடவதாயிருக்கையாலும், ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபகமாகையாலும், இம்மந்த்ர விசேஷம் எல்லாவற்றிலும் ப்ரதாநமாயிருக்கும்.

இம்மந்த்ரந் தனக்கு ப்ராதாந்யேந ப்ரதிபாத்யமான வர்த்தமாகிறது - ஈச்வரனுக்கு மாத்மாவுக்கு முண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்த மாகையாலே, ஆத்மபரமாத்ம ஸ்வரூபநிரூபணமும், விரோதிஸ்வரூப நிரூபணமும், கைங்கர்யஸ்வரூப நிரூபணமுமிதுக்கு சேஷதயா வரக்கடவது. அந்தசேஷசேஷிபாவ ஸம்பந்தந்தான் த்விநிஷ்டமா யிருக்கையாலே, பகவத்ஸ்வரூப நிரூபணமும் சேதநஸ்வரூபநிரூபணமும் அபேக்ஷிதமாகக்கடவது. இதுதான் ஸித்தியமாவது, அதுக்கு விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியுண்டானாலாகையாலே, விரோதி நிவ்ருத்தி யபேக்ஷிதமா யிருக்கும். அதுதான் ஸபலமாவது, (அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுப பத்தி.) என்கிறபடியே கிஞ்சித்காரத்துக் கநந்தரமாகையாலே, சேஷத்வவ்ருத்திநிரூபணம் அபேக்ஷிதமாயிருக்கும். ஆக, பதத்ரயமும், ஆத்ம பரமாத்ம ஸம்பந்தத்தையும், தத்ஸம்பந்த விரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியையும், தத்ஸாஃபல்ய ஹேதுபூதமான கிஞ்சித்காரத்தையும் ப்ரதிபாதிக்கிறது.—இது தனக்கு, ஸ்வரூபஞ் சொல்லுகிறதென்றும், ப்ராப்யஞ் சொல்லுகிறதென்றும் வாக்யார்த்தம். ஸ்வரூபஞ் சொல்லுகிற விதுக்கு, விரோதிஸ்வரூபமும், உபாயஸ்வரூபமும்,

ஷலஸ்வரூபமும், அதிகாரிஸ்வரூபமும், ஸாதவத்ஸ்வரூபமுமாகிற அஞ்சர்யமுஞ் சொல்லாநிற்கச் செய்தே, மற்றைநாலும் அதிகாரிக்காகையாலே. அதிகாரிஸ்வரூபமும் ப்ரதமத்திலே அபேக்ஷிதமா யிருக்கையாலும், ப்ரஸித்தி யிப்ராசுர்யத்தாலும் ஸ்வஸ்வரூபத்தைச் சொல்லுகிறதென்று பொருளாகக்கடவது. இதில்ப்ரணவமொன்றிலுமன்றோ ஆத்மஸ்வரூபஞ் சொல்லுகிறது, நமஸ்ஸாலும் நாராயண பதத்தாலும் - உபாயஸ்வரூபத்தையும் உபேயஸ்வரூபத்தையுஞ் சொல்லாநிற்க, திருமந்த்ரம் முழுக்க ஸ்வரூபஞ் சொல்லுகிற தென்று சொல்லும்படி யெங்ஙனே யென்னில்; ப்ரணவத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற ஸாவச்சேஷத்வம் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகிறாப்போலே, உத்தரபதத்திலும் ப்ரதிபாத்யமான ஸாவஷேகஸாதநத்வமும் ஸாவஷேகஸாத்யத்வமும் இவனுக்கு ஸ்வரூபமா யிருக்கையாலே, பதத்ரயமும் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிற தென்னக்குறையில்லை. நாராயணபதத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற சேஷவ்ருத்தி ப்ராப்யமாகிறாப்போலே, முன்பு சொல்லுகிற ஸாவச்சேஷத்வமும், அந்யசேஷத்வராஹித்யமும், ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியும், ஸித்தோபாய ஸ்வீகாரமும், ததீயசேஷத்வமும் இத:பூர்வமப்ராப்தமாய், மேல் ப்ராப்தமா யிருக்கையாலே, தத்ப்ரதிபாதகமான பதத்ரயமும் ப்ராப்ய ஸ்வரூபத்தைப்ரதிபாதிக்கிற தென்னக்குறையில்லை-ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபஞ்சொல்லி, நாராயணபதத்தாலே ப்ராப்யஞ்சொல்லுகிற தென்னவுமாம்—சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்திலே ரக்ஷகத்வசேஷித்வங்கள்சொல்லி, மத்யமாக்ஷரமான உகாரத்திலே - அந்யசேஷத்வ நிவ்ருத்தியைச்சொல்லி, த்ருதீயாக்ஷரமான மகாரத்திலே- ப்ரக்ருதே:பரமான ஆத்மஸ்வரூபத்தி னுடைய ஜ்ஞாநாநந்த லக்ஷணத்வஞ்சொல்லி, நமஸ்ஸாலே - விரோதிஸ்வரூபத்தினுடைய த்யாஜ்யத்வஞ்சொல்லி, ஸாவச்சேஷத்வபௌஷ்கல்யஹேதுவான ஸாவதசேஷத்வஞ்சொல்லி, சேஷத்வாநுரூபமான உபாயஸ்வரூபஞ்சொல்லி, நாராயணபதத்தாலே-ஸர்வாத்ம சேஷியானஸர்வேஶ்வரன் ஸ்வரூபஞ்சொல்லி, சதுர்த்தியாலே-சேஷவ்ருத்தியைப்ப்ரார்த்தித்துத்தலைக்கட்டுகையாலே, ரக்ஷகத்வந்துடங்கி சேஷவ்ருத்திபர்யந்தமான நடுவுண்டான அர்த்தவிசேஷங்க ளெல்லாம் பதார்த்தமாகக்கடவது. ஈஶ்வரனுடைய ஸர்வசேஷித்வ ஸர்வரக்ஷகத்வங்களும் நிரதிஶயபோக்யத்வமும் தாத்பர்யார்த்தம்.—இத்திரு

மந்த்ரந்தான்; அநாதிகாலம் ஈஶ்வரனுக்கு ரக்ஷ்யபூதருமாய் ஶேஷபூதருமாயிருக்கிற சேதநர்பக்கலிலே ரக்ஷகத்வஶேஷித்வ புத்தியைப்பண்ணியும், ஜடமாய் இதம்புத்தியோக்யமாயிருக்கிற ப்ரக்ருதி தத்வத்திலே ப்ரக்ருதே:பரமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கிற ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்துக்குப் பண்ணக்கடவ அஹம்புத்தியைப்பண்ணியும், ஸ்வரூபவிருத்தமான ஸ்வஸ்வாதந்த்ரியத்தையேறிட்டுக்கொண்டு, உபாயாபாஸங்களிலே உபாயபுத்தியும் ப்ராப்யாபாஸங்களிலேப்ராப்யபுத்தியும்பண்ணி ஸம்ஸரித்துப் போந்தசேதநனுக்கு; பகவத்வ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களினுடையவும் ரக்ஷ்யத்வஶேஷத்வஜ்ஞாநத்தைப்பிறப்பித்து, ஆத்மஸ்வரூபம்ப்ரக்ருதே:பரமாய் ஜ்ஞாநாஶ்ரயமா யிருக்குமென்னு மிடத்தையுமறிவித்து, ஸ்வரூபவிரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தினுடை நிவ்ருத்தி பூர்வகமாக பகவச்சேஷத்வ பௌஷ்கல்யத்தைப் பிறப்பித்து, உபாயாபாஸங்களில் உபாயத்வபுத்தி நிவ்ருத்தி பூர்வகமாக ஸம்யகுபாயமான ஸித்தஸாதநத்திலே யதாவத் ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, புருஷார்த்தாந்தர நிவ்ருத்தி பூர்வகமாக 'நிரஸ்தாதிஶயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணமான பகவத்கைங்கர்யமே நிரதிஶய புருஷார்த்தம்' என்னுமிடத்தையு மறிவிக்கிறது.—இத்திருமந்த்ரந்தான், ஸ்வஸ்வரூப பரஸ்வரூப விரோதிஸ்வரூப புருஷார்த்த ததுபாயங்களில் அந்யதாப்ரதிபத்திபண்ணிப்போந்தசேதநனுக்கு, யதாவத் ப்ரதிபத்தியைப்பிறப்பிக்கிறது. ஸ்வஸ்வரூபமாகிறது-தேஹேந்த்ரியாதிகளிற் காட்டில் விலக்ஷணமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மஸ்வரூபம்; அதில் யதாவத் ப்ரதிபத்தியாவது - பகவதநந்யார்ஹ ஶேஷபூதமாய், பகவதேகரக்ஷ்யமாய், பகவதேகபோக்யமா யிருக்குமென்றறிகை. பரஸ்வரூபமாவது ஹேயப்ரத்யநீகமாய், கல்யாணகுணகரமாய், அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹவிஶிஷ்டமான பகவத்ஸ்வரூபம்; அதில்யதாவத் ப்ரதிபத்தியாவது-ஸர்வஶேஷியாய்,ஸர்வரக்ஷகமாய்,நிரதிஶயபோக்யமாயிருக்குமென்றறிகை. விரோதிஸ்வரூபமாவது - ஸ்வஸ்வரூப பரஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநஜநநவிரோதியாய், யதாவத் ஜ்ஞாநஜநநவிரோதித்வ மாத்ரமேயன்றிக்கே, ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞாந ஜநகமாயிருக்கிற ப்ரக்ருதிஸம்பந்தம்; அதில் யதாவத்ப்ரதிபத்தி

யாவது-ஏதத்யங்களான ஸப்தாதிவிஷயங்கள் அல்பாஸ்திரத்வாதி தோஷதூஷிதங்க ளாகையாலே ஜிகுப்ஸாவிஷயமா யிருக்குமென்றும், ஸ்வயத்நத்தாலே கழித்துக்கொள்ள வொண்ணுதாப்போலே பகவதேக நிவர்த்யமாயிருக்குமென்றும் ப்ரதிபத்திபண்ணுகை. புருஷார்த்தஸ்வரூபமாகிறது - அநாதிகால கர்மப்ரவாஹ ப்ராப்த ப்ரக்ருதி ஸம்பந்தம் விச்சேத பூர்வகமாக அர்ச்சிராதி மார்க்கத்தாலே அப்ராக்ருத திவ்யதேசத்தை ப்ராபித்து, பகவத் குணைக தாரகரான ஸூரிகளோடே யொருகோவையாய், பகவதநுபவ ஜநிதஹர்ஷத்தாலே ப்ரேரிதனாய், (காமாந்நீகாமரூப்யநுஸஞ்சரந், ஸர்வேஷுலோகேஷு காமசாரோபவதி, யேநயேநதாதாகச்சதிதேநதேநஸஹகச்சதி) இத்யாதிப்படியே, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் உசிதமாக ஸர்வப்ரகாரத்தாலும் பண்ணும் சேஷவ்ருத்தி; அதில் யதாவத்ப்ரதிபத்தியாவது - தானுகந்த கைங்கர்யமாதல், தானுமவனுமுகந்த கைங்கர்யமாதல் பண்ணுகை அபுருஷார்த்த மென்றும், (தந்நியுக்தஃகரிஷ்யாமி, க்ரியதாமிதிமாம்வத, முகப்பேகூவிப் பணிகொள்ளாய்) என்னும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே - அவனேவச்செய்கையே புருஷார்த்தமென்றும், இப்படி செய்யாநின்றால் வேறேயொரு புருஷார்த்தத்துக்கு ஸாதநதயா சொல்லுகை யன்றிக்கே ஈஸ்வரனுடைய முகவிகாஸமே ப்ரயோஜநமாகச் செய்யுமதென்றும் ப்ரதிபத்திபண்ணுகை. உபாயஸ்வரூபமாகிறது - ஜ்ஞாநஸக்த்யாதி கல்யாணகுண விஸிஷ்டமாய், நித்யமங்கள விக்ரஹோபேதமாய், உபாஸகத்வாதி தோஷஸம்பாவநா கந்தசூந்யமாய், அந்திமஸம்ருதி நிரபேக்ஷமாய், ஏகரூபமாய், பரமசேதநமாய், ஸ்வரூபாநுரூபமாயிருக்கிற ஸித்தோபாயம்; அதில் யதாவத்ப்ரதிபத்தியாவது-இதரோபாயத்யாக பூர்வகமாக ஸ்வீகரிக்க வேணுமென்றும், ஸ்வீகார விஸிஷ்டமானபோது-பலப்ரத மாகாநிற்கச்செய்தே தந்நிரபேக்ஷமாயிருக்குமென்றும் ப்ரதிபத்திபண்ணுகை. அதில், ஸ்வஸ்வரூபஞ் சொல்லுகிறது ப்ரணவம்; பரஸ்வரூபஞ்சொல்லுகிறது நாராயணபதம் விரோதிஸ்வரூபத்தையும் உபாயஸ்வரூபத்தையுஞ் சொல்லுகிறது நமஸ் ஸு; நாராயணபதத்தில் சதுர்த்தி, புருஷார்த்த ஸ்வரூபத்தையுஞ் சொல்லுகிறது.—இவ்வதிகாரிக்கு ஜ்ஞாதவ்யார்த்த ப்ரகாஸகத்வேந அத்யந்தோபாதேயமாயிருக்கிற ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, சரமஸ்லோகத்தாலும் த்வயத்தாலும் ப்ரதிபாதிதமான உபா

யோபேயங்களுக்குமுன்னே ஆத்மஸ்வரூப நிரூபணம் அபேக்ஷிதமாயிருக்கையாலே, ப்ரதமரஹஸ்யமான திருமந்த்ரம் ப்ரதமத்திலே அநுஸந்தேயம். திருமந்த்ரந்தான், (ஓமித்யேகாக்ஷரம் - நமஇதித்வே அக்ஷரே - நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி - ஓமித்யக்ரே வ்யாஹரேத் - நமஇதி பஶ்சாத் - நாராயணாயேத் யுபரிஷ்டாத்) என்றும், நின்திருவெட்டெழுத்துங்கற்று) என்றும், (எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர்வானமாளவே) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாயிருக்கும். பதத்ரயமும் அர்தத்ரய ப்ரகாஶகமாயிருக்கும். இதில், ப்ரதமபதம், ஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதநபரமாயிருக்கும்; மத்யமபதம், உபாயயாதாத்ம்யப்ரதிபாதநபரமாயிருக்கும்; உத்தரபதம், உபேயயாதாத்ம்ய ப்ரதிபாதநபரமாயிருக்கும். ப்ரதமபதம், ஶேஷத்வ ப்ரகாஶகமாயிருக்கும்; மத்யமபதம், பாரதந்த்ர்ய ப்ரகாஶகமாயிருக்கும்; உத்தரபதம், கைங்கர்ய ப்ரகாஶகமாயிருக்கும். ஶேஷத்வாநு ஸந்தாநத்தாலே அந்யஶேஷத்வ நிவ்ருத்தி பிறக்கும்; பாரதந்த்ர்யாநு ஸந்தாநத்தாலே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திபிறக்கும்; கைங்கர்யாநு ஸந்தாநத்தாலே அப்ராப்தவிஷய கிஞ்சித்கார நிவ்ருத்திபிறக்கும். ஈஶ்வரஶேஷத்வஜ்ஞாநத்தாலே தேவதாந்தர பரத்வ நிவ்ருத்தி பிறக்கும; ஸ்வபாரதந்த்ர்யாநு ஸந்தாநத்தாலே ஸாத்ய ப்ரஸாதநஸம்பந்த நிவ்ருத்திபிறக்கும்; ஈஶ்வரஹோத்யதாநு ஸந்தாநத்தாலே ப்ராப்யாந்தரஸம்ஸர்க நிவ்ருத்திபிறக்கும்.—அதில், ப்ரதமபதமான ப்ரணவம், மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய், மூன்றர்தப்ரகாஶகமாய், ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்தப்ரகாஶகமாயிருக்கும். அதில், ப்ரதமபதமான அகாரம், பகவத் வாசகமாயிருக்கும்; மத்யமபதமான உகாரம், அவதாரணவாசியாயிருக்கும். த்ருதீயபதமான மகாரம், ஆத்மவாசியாயிருக்கும். ப்ரணவந்தான் ஆத்மஸ்வரூபத்தையும் பரஸ்வரூபத்தையும் ப்ரகாஶிப்பியா நிற்கச்செய்தேயும், ஆத்மஸ்வரூபத்திலே தத்பரமாயிருக்கும். '(ராஜபுருஷ:) என்கிறவிடத்தில், ராஜாவும் ப்ரஸ்துதனாய்புருஷனும் ப்ரஸ்துதநாயிருக்கச்செய்தே, ஶப்தத்தாலேபுருஷன் ப்ரதாநனாய், அர்தத:ராஜா ப்ரதாநனாயிருக்கும் அப்படியே யிவ்விடத்திலும் ஶப்தத்தாலே சேதனன்ப்ரதாநனாய் அர்தத்தாலே ஈஶ்வரன் ப்ரதாநனாயிருக்கும் என்று ஆழ்வானருளிச்செய்யும். ஆகை

யாலே, ஸாஷீமான சேதநப்ராயாந்யத்தைப்பற்ற, (ஓமித்யாத்மா நம்யுஞ்ஜீத)என்று ஆத்மவாசகமாகச்சொல்லும்; ஆர்யமான ஈஶ்வர ப்ராயாநயத்தைப்பற்ற, (ஓங்காரோஹமவாந்விஷ்ணு:) என்றும், (ப்ரணவஸ்ஸர்வவேஜேஷு) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஹமவதி வாசகமாயிருக்கும். அதில் ப்ரயமாக்ஷரமான அகாரம், (அவரக்ஷணே) என்கிறயாதுவிலே பதமாய் நிஷ்பந்ந மாகையாலே, ரக்ஷகனான ஈஶ்வரனுக்கு வாசகமாகக்கடவது. யாத்வர்யம் ரக்ஷணமாகையாலே, ரக்ஷணமாகிற யர்மம் ஸாஶ்ரயமுமாய் ஸர்வவிஷயமுமாயல்ல திராமையாலே, அதுக்காஶ்ரயதயா ஹமவத்ஸ்வரூபந்தானே புகுந்து. விஷயதயாவதிய முக்த நித்யரூபமான த்ரிவியாத்மவர்மமும் புகுரும். (நஹிபாலநஸாமர்யீய ம்ருதேஸர் வேஶ்வரம் ஹரிம்) என்கிறபடியே - பாலநஸாமர்யீயம் ஸர்வேஶ்வரைகநிஷ்டமா யிருக்கையாலே, ஹமவத்ஸ்வரூபம் ப்ரஸ்துத மாய்த்து. 'இவனின்னார்க்கு ரக்ஷகன்' என்று வ்யவச்ஹேதியாமையாலே, த்ரிவியாத்ம வர்மமும் ப்ரஸ்துதமாம். இன்னதேஶத்திலே ரக்ஷகனென்று சொல்லாமையாலே, ஸர்வதேஶரக்ஷகத்வம் சொல்லிற்று; ஒருகால விஶேஷத்திலே ரக்ஷகனென்று சொல்லாமையாலே, ஸர்வகால ரக்ஷகத்வம் சொல்லிற்று; இன்னப்ரகாரத்திலே ரக்ஷகமென்று சொல்லாமையாலே, ஸர்வப்ரகார ரக்ஷகத்வம் சொல்லிற்று. (ஞாலத்தூடே நடந்து நின்றும்) இத்யாதி - ஜ்ஞாநவிஶேஷமான ஶக்த்யாதிகளில்லாதபோது ரக்ஷகத்வ மநுபபந்ந மாகையாலே, ஜ்ஞாநஶக்த்யாதி குணங்கள் ப்ரஸ்துதமாம். ஜ்ஞாநஶக்த்யாதிக ளுண்டானாலும், ஸம்பந்தவிஶேஷமும் காருண்யாதிகளு மில்லாதபோது பட்டதுபடுகிறனென் றிருக்கலாமிறே; அது செய்யாதே, ரக்ஷிக்கும்போது இவை அபேக்ஷிதமாகையாலே, ஸ்வாமித்வாதிகள் ப்ரஸ்துதங்களாம். ரக்ஷிக்கும்போது கண்காண வந்து ரக்ஷிக்கவேண்டுகையாலே, திவ்யமங்களவிக்ரஹம் ப்ரஸ்துதமாம். ரக்ஷிக்கும்போது திவ்யாயுதங்களபேக்ஷிதமாகையாலே, ரக்ஷணத்துக் கேகாந்தமானபரிகரவத்தையுமநுஸந்தேய மாகக்கடவது. ரக்ஷணமாகிறதுதான் இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரரூபமா யிருக்கையாலே, இஷ்டமும் தத்ப்ராப்தியும் அநிஷ்டமும் தந்நிவ்ருத்தியும் அநுஸந்தேயம். இஷ்டா நிஷ்டப்ராப்தி பரிஹாரந்தான் * அதிகாராநுரூப மாகையாலே, வஶ்யர்க்

* "அதிகாராநுகுணம்." என்றும் பாடம்.

கும் முமுக்ஷுக்களுக்கும் முக்தர்க்கும் நித்யர்க்கும் இஷ்டாநிஷ்டங்களான வஸ்த்ராந்ந பாநாதிபோகங்களும், அப்ராக்ருததிவ்ய தேஶப்ராப்தியும், உத்தரோத்த ராநுபவமும், பகவதநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமும், ஶத்ருபீடாதிகளும், ப்ரதிபந்த கர்மமும், அநுபவவிச்சேத ஶங்கையும் அநுஸந்தேயம். தர்மிஸ்வரூபம் புகுந்தவிடத்திலே ஸ்வரூபநிரூபகதர்மங்களும்ப்ரஸ்துதங்களாகப்ராப்தமாகையாலே, (ஶ்ரீநிவாஸ) என்றும் (ஶ்ரிய:பதி) என்றும் (நித்யஶ்ரீ:) என்றும் இத்யாதிகளிற்சொல்லுகிறபடியே, ஜ்ஞாநாநந்தாமலோபாதி பகவத்ஸ்வரூபத்துக்கு அந்தரங்கநிரூபகமாயிருக்கிற பிராட்டி ஸ்வரூபமும் நிரூபகதயா ப்ரஸ்துதமாக ப்ராப்தமாகையாலே, லக்ஷ்மீஸம்பந்தமும் அநுஸந்தேயம் ஆக, இப்படியாவை சில அர்த்தவிஶேஷங்கள் ஶாப்தமாகவும் ஆர்த்தமாகவும் இதினுடைய விவரணமான நாராயணபதத்திலே அநுஸந்தேயங்களாகிறன, அவையித்தனையும் தத்ஸங்க்ரஹமான இவ்வக்ஷரத்திலேயு மநுஸந்தேயமாகக்கடவது. ஆக, ப்ரதமாக்ஷரத்தாலே-ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபஞ்சொல்லப்பட்டது. இதின்மேலேறிக்கழிந்த விபக்த்யம்ஶம், தத்ப்ரதிஸம்பந்தியான சேதநஶேஷத்வத்தைப்ரதிபாதிக்கிறது. (தாஸபூதாஸ்வதஸ்ஸர்வே) என்றும் (யஸ்யாஸ்மி) என்றும் (பரவாநஸ்மி) என்றும் (தாஸோஹம்) என்றும் இத்யாதி ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே, ஸகலாத்மாக்களுக்கும் ஶேஷத்வமிறே ஸ்வரூபம்; ஸ்வாதந்த்ர்யம் ஔபாதிகமாய் த்யாஜ்யமாயிறேயிருப்பது. (ஸர்வம்பரவஶம்து:கம்) இத்யாதிகளிற்படியே - லோகத்தில் ஶேஷத்வம் து:கரூபமாய்ஸ்வாதந்த்ர்யம் ஸுகரூபமாயன்றோ கண்டுபோருகிறது, லோகத்ருஷ்டிக்கு விருத்தமாக ஸுகரூபமான ஸ்வாதந்த்ர்யத்தை த்யாஜ்யமென்றும் து:கரூபமான ஶேஷத்வத்தை உபாதேயமென்றுஞ் சொல்லுகை அநுபபந்நமன்றோ வென்னவொண்ணாது, லோகத்தில் ஸ்வாதந்த்ர்யமாகில் ஸுகரூபமாய் பாரதந்த்ர்யமாகில் து:கரூபமா யிருக்குமென்று ஒருநியமமில்லாமையாலே, லோகத்தில் ஸ்வதந்த்ரனானவன்றனக்கே யொருவ்யக்தி விஶேஷத்திலே பாரதந்த்ர்யந்தானே போகரூபமாகக் காணாநின்றோமிறே; ஆகையாலே, ஶேஷத்வந்தானே ஸுகரூபமாகில் உபாதேயமாகக்கடவது; ஸ்வாதந்த்ர்யந்தானே து:கரூபமாகில் த்யாஜ்யமாகக்கடவது. (ஸே

வாஸீவவ்ருத்திர்வ்யாவீயாதா தஸ்மாத்தாம்பரிவர்ஜயேத்) என்று நி ஷேபித்தது - நிஷிதீயஸேவையும், அப்ராப்த விஷயத்தில் ஸேவை யும்; ப்ராப்தவிஷயத்தில் ஷேவையை, (ஷாகிமர்யம்நஸேவ்யதே) என்றும் (சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து) என்றும் உபாதே யமாகச் சொல்லாநின்றார்களிறே. ஈஸீவரஸேஷத்வம் விஹிதமாய், (தாஸ்யமஹாரஸஜ்ஞ:) என்றும் (தாஸ்யஸைகஸங்கிநாம்) என் றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஹோமரூபமா யிருக்கையா லே உபாதேயமாகக்கடவது. மத்யமாக்ஷரமான உகாரம், ஸேஷத்வ விரோயியான அந்யஸேஷத்வத்தினுடைய நிவ்ருத்தியை ப்ரதிபாதி க்கிறது. சதுர்யீவிஹக்தியாலே - ஈஸீவரஸேஷத்வம் ப்ரதிபாதிதமா கச்செய்தே, அந்யஸேஷத்வம் ப்ரஸ்துதமாமோவென்னில்; லோக திருஷ்ட்யா ஒரு அந்யஸேஷத்வ ஸங்கையுண்டு அநுவர்த்திப்பது. லோகத்திலே ஒருவனுக்கு ஸேஷமான திருஹக்ஷேத்ரபுத்ர தாஸ தாஸிகள் வேறேயும் சிலர்க்கு ஸேஷமாகக் காணநின்றோம், அப்ப டிப்பட்ட அந்யஸேஷத்வம் இந்த ஸ்தலத்திலுமுண்டோ என்றொரு ஸங்கையுதிக்குமிறே; ஆகையாலே, தாதிருஸமான அந்யஸேஷத்வ மிங்கில்லை யென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிறது உகாரம். (ததேவ ஸூதம் ததுஸவ்யமாஇதம்) என்றும் (ததேவாதிநி ஸ்ததிவாயுஸ்தத் ஸூர்யஸ்தது சந்திரமா:) என்றும் இத்யாதிகளிலே, ஏவகார ஸ்தா நத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, இவ்வுகாரம் ஸியாநப்ரமாணத்தாலே அவதாரணார்த வாசகமாகக்கடவது. (உ காரஸீசைவகாரார்த:) என்று, அவதாரணவாசகமென்னுமிடத்தை யருளிச்செய்தாரிறே ஸட்டர். திருஹக்ஷேத்ர புத்ரகளத்ராதிகளினு டைய ஸேஷத்வம்போலே ஔபாயிகமாய், அநேக ஸாதாரணமா ய், அநித்யமாய், ப்ருதக்ஸித்யமா யிருக்கையன்றிக்கே, நிருபாயிக மாய், அநந்ய ஸாதாரணமாய், நித்யமாய், அப்ருதக் ஸித்யமான ஹவச்ஸேஷத்வத்தை ப்ரதிபாதிக்கிறது. ஏவம்விதஸேஷத்வம் சித சித்ஸாதாரணமா யிருப்பது.

அதில், ஸேஷத்வவிஷயஜ்ஞாநம், தத்கார்யமாயிருக்கிற ததநு குணஸாதநஸ்வீகாரம், தத்கார்யதநுகுண ஸாத்யாநுஹவம், த தநுஹவவிரோதி ப்ரதிவந்தக நிவர்ஹணந் துடக்கமான ஸேஷ

த்வ கார்யங்கள் பிறக்கைக்கு யோக்யதையுண்டாயிருக்கிற ஜீவாத்ம ஸ்வரூபத்தைப்ரயாநதயா ப்ரதிபாதிக்கிறது த்ருதீயாக்ஷரமான மகாரம். (மநஜ்ஞாநே) என்கிற யாதுவிலே பதமாய் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாதாவான ப்ரத்யகாத்மாவினுடைய ஸ்வரூபஞ் சொல்லுகிறது. ஜ்ஞாநவாசக ஶப்தந்தானே ஜ்ஞாநைகநிரூபணீயனான ஆத்மாவை ப்ரதிபாதிக்குமென்றும் சொல்லிற்றிறே, (தத்குண ஸாரத்வாத்தத் வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத்) என்கிற ஸூத்ரத்திலே, அங்ஙனன்றியே, ககாராதி ஹகாராந்தமான இருபத்துநாலு அக்ஷரமும் இருபத்துநாலு தத்த்வத்துக்கும் வாசகமாகச்சொல்லி, இருபத்தஞ்சாமக்ஷரமான மகாரத்தை. பஞ்சவிம்ஶகனான வாத்மாவுக்கு வாசகமாகச் சொல்லுகையாலே, மகாரம் ஆத்மவாசகமாகவுமாம். இம்மகாரம் ஜீவஸமஷ்டி வாசகமாகையாலே, கீழ்ச்சொன்ன அநந்யார்ஹ ஶேஷத்வத்துக் காஶ்ரயமான பத்த முக்த நித்யரூபமான த்ரிவிதாத்மவர்கமும் அநுஸந்தேயமாகக்கடவது. ஆத்மஸ்வரூபம் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கு மென்கையாலே, ஜடமாய் து:கரூபமாயிருக்கிற ப்ரக்ருதி தத்வத்திற் காட்டில் வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. ஜ்ஞாநாநந்தங்களுக்குமுன்னே ஸ்வஶேஷத்வத்தை நிரூபகமாகச் சொல்லிற்றாகையாலே, அவற்றிற்காட்டி லிதுவுமந்தரங்க நிரூபகமாகக்கடவது. ஒளிக்காஶ்ரயமென்று மாணிக்கத்தை விரும்புமாப்போலேயும், மணத்துக்காஶ்ரயமென்று புஷ்பத்தை விரும்புமாப்போலேயும், ஶேஷத்வத்துக் காஶ்ரயம் என்றிறே ஆத்மஸ்வரூபத்தை விரும்புகிறது. கீழ்ச்சொன்னஶேஷத்வம் உபயஸாதாரணமாயிருக்கையாலே, சேதநப்ரகாரமான அசித்தத்வமும் ஸ்வஶேஷத்வாஶ்ரயதயா இவ்விடத்திலே அநுஸந்தேயம். ஆக, ப்ரணவத்தாலே - ஶேஷத்வப்ரதிஸம்பந்திதயா ப்ரஸ்துதனான ஈஶ்வரனை ரக்ஷகத்வதர்மத்தையிட்டு நிரூபித்து, அப்படிப்பட்ட ஈஶ்வரனுக்கு ஶேஷபூதனான ஆத்மாவினுடைய ஜ்ஞாநாநந்த லக்ஷணத்வத்தைச்சொல்லி, ஸர்வஶேஷியான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹஶேஷபூதனான ஆத்மாவென்னு மிடத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

இப்படி ஸ்வாபாவிகமான ஸ்வஶேஷத்வத்தை அநாதிகாலம் அபிபூதமாம்படி பண்ணின விரோதியினுடைய ஸ்வரூபத்தை உபாதாநம் பண்ணிக்கொண்டு தந்நிவ்ருத்தியை ப்ரதிபாதிக்கிறது நம

ஸ்ஸு. இதுதான், சதுர்த்தீயந்தமான அகாரத்திற் சொல்லுகிற ஈஶ்வரஶேஷத்வத்துக்கு விரோதியான அந்யஶேஷத்வத்தை நிவர்த்திப்பிக்கிற உகாரத்திலே அந்யதயா ப்ரஸ்துதமான ஸ்வஸ்வரூபத்தில் ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியை விவரிக்கிறது. இங்கே விஶேஷித்துச் சொல்லுகையாலே இத்தையொழிந்த அந்யஶேஷத்வநிவ்ருத்தியைச் சொல்லுகிறதாகவுமாம். இதுதான் ந - என்றும் ம - என்றும் இரண்டு பதமாயிருக்கிறது. இதில் ப்ரதமஹாவியான நஞ்சாலே, (விடுமின்முற்றவும்) என்னுமாப்போலே, த்யாஜ்யஸ்வரூப நிரூபணம் பண்ணுமதுக்குமுன்னே த்யாகத்தை ப்ரதிபாதிக்கிறது. ஆத்மஸ்வரூபம் ஸமஸ்தந்யார்ஹ ஶேஷத்வைக நிரூபணீயமாயிருக்குமென்னுமிடந்தோற்ற, ப்ரணவத்திலே ஆத்மஸ்வரூபத்தை ப்ரதிபாதிப்பதுக்குமுன்பே ஶேஷத்வத்தைப்ரதிபாதித்தாப்போலே, இவ்விடத்திலும் விரோதிஸ்வரூபம் நிஷித்தியதைக நிரூபணீயமாயிருக்குமென்னுமிடத்தை ப்ரகாஶிப்பிக்கைக்காக நிஷித்திய ஸ்வரூப ப்ரதிபாதநத்துக்கு முன்பே நிஷேத ப்ரதிபாதநம் பண்ணுகிறது. மஃ என்கிறவிது - ஷஷ்டியாகையாலே, எனக்கென்றபடி, எனக்கென்கிறது - தன்னையாதல், தன்னுடைமையாதல். அநுஷங்கத்தாலே கீழ்ச்சொன்ன தன்னை எனக்கென்கையாகிறது - நான் ஸ்வதந்த்ரனென்கை. அத்யாஹாரத்தாலே தன்னுடைமையை யெனக்கென்கையாகிறது - நான் ஸ்வாமியென்கை. ஸ்வாதந்த்ர்யமாவது - அஶேஷத்வம். ஸ்வாமித்வமாவது-ஸ்வாந்யவிஷயமாயிருக்கும் தன்னை யெனக்கென்கிறது; ஸ்வஶேஷத்வமாகவுமாம். ந - என்கிறவிது - ப்ரதிஷேதபத்யோதக மாகையாலே, அத்தை நிஷேதிக்கிறது, ஈஶ்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹாவிஷயமான ஆத்மஸ்வரூபம் அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்தது, (அஹம்க்ருதிர்யாஹ—ஏதாநாம்) என்றும் (அநாத்மந்யாத்மபுத்தி யிர்யா) என்றுஞ் சொல்லுகிறபடியே - அஹங்காரத்தாலும் மமகாரத்தாலுமாக, அந்த ஸம்ஸார நிவ்ருத்தி பிறந்து (அஹமமநம) என்கிறபடியே ஈஶ்வரனுக்கு ஹோத்யமாம்போது, (அச்யுதாஹம்தவாஸ்மீதி) என்றும் (நமமேதிசஶாஶ்வதம்) என்றுஞ் சொல்லுகிறபடியே - அவையிரண்டும் நிவ்ருத்தமாகவேணும். (நீர் நுமதென்றிவை வேர்முதல்மாய்த்திறைசேர்மின்) என்கிறபடியே, அஹங்கார மமகாரராஹித்யமில்லாதபோது, ஈஶ்வரஸம்பந்ய யோக்யதையில்லை. ஸ்வஸ்மிந்ஸ்வத்வாநு ஸந்தாநமில்லாதபோது, ஸ்வாமிஸந்நிதியில் நிற்கைக்கு அநர்ஹனாயிறே யிருப்பது. அஹங்கார

மமகாரங்களிரண்டும் அந்யோந்யம் அவிநாபூத மாகையாலே, அஹங்காரம் வந்தவிடத்தே மமகாரம்வந்து மமகாரம் வந்தவிடத்தே அஹங்காரம் வரும்படியாயிருக்கையாலே, அஹங்கார மமகாரங்களிரண்டும் ப்ரஸ்துதமாய், இரண்டினுடைய நிவ்ருத்தியும் இவ்விடத்தே அநுஸந்தேயம். (யானேயென்றனதே யென்றிருந்தேன்) என்று - அஹங்கார மமகாரங்களிரண்டையும் அநுஸந்தித்து, (யானே நீ யென்னுடைமையும்நீ)என்று அநந்தரத்திலே அவற்றினுடையநிவ்ருத்தியு மநுஸந்தித்தாரிறே; (யஸ்யைதேதஸ்ய தத்தநம்) என்கிறபடியே. அஹங்காரம் போனவாறே மமகாரம்போமிறே. அஹங்கார மமகார நிவ்ருத்திமாத்ரமேயன்றிக்கே, (பகவத ஏவாஹமஸ்மி) என்றும் (தேஷாமபிநமோநம:) என்றும் (த்வதீயபூர்ஶநேப்யேவம்பவேத்) என்றும் (உற்றதுமுன்னடியார்க்கடிமை) என்றும் அடியார்க்காட்படுத்தாய், அடியார்க்கென்னையாட்படுத்த) என்றும், இத்யாதியிற்படியே பகவத்பாரதந்த்ர்யமும் தத்காஷ்டாபூமியான பாகவதபாரதந்த்ர்யமும் அநுஸந்தேயமாகக்கடவது. ததீயஶேஷத்வா நந்யார்ஹஶேஷத்வங்க ளிரண்டினுடையவும் பரஸ்பரவிரோத மடியாகவருகிற ஏகத்ரஸமாவேஶ கடநோப பத்தியாலே அந்யதர பரித்யாகம் ப்ரஸங்கிக்குமென்று சொல்லவொண்ணாது. ததீயஶேஷத்வ விஷயாந்யத்வாபாவ ப்ரயுக்தமான பரஸ்பரவிரோத ராஹித்யமடியாக வருகிறஏகத்ரஸமாவேஶோபபத்தியாலே உபயஸ்வீகாரம் அவிருத்தமாகையாலே இப்படி தர்மத்வயத்தினுடையவும் விரோதஹேதுவான அந்யஶேஷித்வ ததீயஶேஷித்வத்தைப்ரதிக்ஷேபித்துக்கொண்டு, உபயத்துக்கும் ஏகத்ரஸமாவேஶத்தை அங்கீகரித்து, அவ்வழியாலே அந்யதரபரித்யாக ப்ரஸங்கத்தை பரிஹரிக்கும்போது, பகவச்சேஷத்வாபாவத்தையொழிய அந்யஶேஷித்வவ்யக்திக்கு அந்யத்வம் கடியாமையாலே, த்ருதீயாக்ஷரவாச்யரான ஜீவர்களிலே சிலர்க்கு பகவச்சேஷத்வ மின்றிக்கே யொழியாதோ வென்னில்; இங்கு விவக்ஷிதமான தத்யத்வமாகிறது - பாகவதஶேஷத்வ பர்யந்தமான மிதுநஶேஷத்வ ஜ்ஞாநாவஸ்தை யாகையாலும், அந்யத்வமாகிறது-ஈத்ருஶஜ்ஞாநவிஶேஷ ராஹித்யமாகையாலும், சிலர்க்கு ஶேஷத்வமாய் சிலர்க்குஶேஷத்வ மின்றிக்கே யொழியாது. இத்தால் - பகவச்சேஷத்வ ஜ்ஞாநாவஸ்தா மாத்ரம் ததீயஶேஷத்வமென்று நினைத்துப் பண்ணும் அதிப்ரஸங்கமும் பரிஹ்ருதம். இந்த நமஸ்ஸூத்தான், ப்ரணவத்துக்கும் நாராயண பதத்துக்கும்

நடுவே கிடக்கையாலே, இரண்டு பதத்துக்கு அபேக்ஷிதமான விரோதி நிவ்ருத்தியைச் சொல்லக்கடவது. ஆகையாலே, ஸ்வரூபவிரோதியும் ஸாதநவிரோதியும் ப்ராப்யவிரோதியு மாகிற விரோதித்ரயத்தி னுடையவும் நிவ்ருத்தியை இப்பதத்திலே அநுஸந்திக்கக்கடவது. பூர்வோத்தர பதத்வயத்திலும், ஸ்வரூபமும் ப்ராப்யமும் ப்ரதிபாதித மாகையாலே, தத்விரோதி நிவ்ருத்தி இப்பதத்திலே அநுஸந்தேய மாகபராப்தம். ஸாதநஸ்வரூபம் அப்ரஸ்துதமாயிருக்க தத்விரோதி நிவ்ருத்தி யிவ்விடத்திலே யநுஸந்தேய மாம்படி யென்னென்னில்; கீழ்ப்பதத்திலே ஸாதநஸ்வரூபம் ப்ரஸ்துதமாகையாலே, தத்விரோதி நிவ்ருத்தியை அநுஸந்திக்கக் குறையில்லை. மேலிற்பதத்திலே ஶாப்தமாகச் சொல்லும்; இப்பதத்திலே நிஷேத்யதயா ப்ரஸ்துதமான ஸ்வாதந்த்ர்யம் பகவதேகஸாதநதைகவேஷமான ஸ்வரூபத்துக்கு விரோதியாய், ஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயத்துக்கு ஹேதுபூதமா யிருப்பதொன்றிறே; தாத்ருஶமான ஸ்வாதந்த்ர்யம் நிவ்ருத்தமாகையாகிறது - ஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயம் ஸ்வரூபஹாநி யென்றறிகையிறே; ஸ்வஸ்வரூபம் ஈஶ்வரனைக்குறித்து அத்யந்த பரதந்த்ரமா யிருக்கையாலே, ஸ்வரக்ஷணத்தில் தனக்கந்வயமுண்டானல் ஈஶ்வரனைக்குறித்து தனக்கத்யந்த பாரதந்த்ர்யமின்றிக்கே யொழியும். ஆகையாலே, ஈஶ்வரைகபரதந்த்ரதாவிரோதியானஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயம் நிவ்ருத்தமானல் பின்னையுமுள்ளது அகாரத்திலே ஸர்வரக்ஷக தயா ப்ரஸ்துதனன ஈஶ்வரனுக்கே யாகையாலே, அவனுடைய உபாயபாவம் இவ்வழியாலே யிதிலே ப்ரஸ்துதமாம். ஸ்வரக்ஷணத்திலேதான் அதிகரித்தாலிறே ஈஶ்வரன்கை வாங்கியிருப்பது. தன்னுடைய ரக்ஷணத்திலே தான்கைவாங்கினல் கஜேந்த்ரரக்ஷணம்பண்ணினப்போலே த்வரித்துக்கொண்டு இவனுடைய ரக்ஷணத்திலே அதிகரிப்பான் ஈஶ்வரனிறே. இப்படி ஆர்தமாக ஈஶ்வரனுடைய உபாயபாவம் ஸித்திக்கையன்றிக்கே, (நமஶ்சக்ருர்ஜநார்தநம்) என்கிறபடியே ஸ்யாநப்ரமாணத்தாலே நமஶ்ஶப்தத்துக்கு ஶரணஶப்தபர்யாயத்வமுண்டாகையாலே, ஶாப்தமாக ஈஶ்வரனுடைய உபாயபாவம் ஸித்திக்கும். இப்படி நமஶ்ஶப்தம் உபாயஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே, தத்விரோதி நிவ்ருத்தியும் இப்பதத்திலே அநுஸந்தேயம், ஸ்வரக்ஷணேஸ்வாந்வய ஹேதுபூதமான ஸ்வஸ்வா

தந்த்ர்யம் நிவ்ருத்தமாகையாலே ஸாதநவிரோதி நிவ்ருத்தி பிறக்கையாகிறது. அநந்யார்ஹ ஶேஷத்வத்துக்கு ஃபலம்ஶேஷிவிஷய கிஞ்சித்காரமாகையாலே ஶேஷத்வாநுஸந்தாநத்துக்கு அநந்தர பாவியாயிருப்பது ஶேஷத்வவ்ருத்தி ப்ரார்த்தநையன்றோ? ஆனால் ஶேஷத்வவாசகமான பதத்துக்கநந்தரம் ஶேஷவ்ருத்தி ப்ரார்த்தநா ப்ரதிபாதகமாயிருக்கிற உத்தரபதமநுஸந்தேயமாக ப்ராப்தமாயிருக்க அதுக்குமுன்பே நமஸ்ஸு அநுஸந்தேயமாவானென்னென்னில்; அப்பதத்தில் ப்ரதிபாதிதமான கைங்கர்யகரணம் விரோதி நிவ்ருத்தி பூர்வகமாயிருக்கையாலும், ஶேஷத்வ ப்ரார்த்தநைக்கு ஶேஷத்வஜ்ஞாந பௌஷ்கல்யம் பிறக்கவேண்டுகையாலே உபேயஸித்தியிக்கு உபாயாநந்தர பாவித்வமுண்டாகையாலும், விரோதி நிவ்ருத்யாதிகளுக்கு ப்ரதிபாதகமான இந்தபதம் நாராயண பதத்துக்குமுன்னே அநுஸந்தேயம். உபேயஸித்தியிக்கு உபாயாநந்தர பாவித்வமுண்டாகையாலேயிறே உத்தரவாக்யத்துக்குமுன்னே பூர்வவாக்ய மநுஸந்தேயமாகிறது. ஈஶ்வரனுடைய உபாயபாவாநுஸந்தாநத்துக்கு ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வாநுஸந்தாநம் ஸ்வஶேஷத்வாநுஸந்தாநம் துடக்கமானவை அபேக்ஷிதங்களாகையாலே,நமஸ்ஸுக்குமுன்னே தத்ப்ரதிபாதகமான ப்ரணவமநுஸந்தேயம். இப்படியாகாதபோது, நமஸ்ஸு உகாரவிவரண மன்றிக்கே யொழியுமிறே.

ப்ரணவ நமஸ்ஸுக்களாலே-ஸ்வரூப ஶோதநமும் உபாயஶோதநமும் பண்ணப்பட்டது; இனிமேல், சதுர்த்யந்தமான நாராயண பதம் உபேயஶோதநம் பண்ணுகிறது. கைங்கர்யப்ரதி ஸம்பந்திதயா உதிக்கும் பகவத்ஸ்வரூபம் உபயவிபூதி விஶிஷ்டமா யிருக்கையாலே, உபயவிபூதியோகத்தையுஞ் சொல்லுகிறது நாராயண பதம். நர:, நார:, நாரா:, என்று - நித்யபதார்த்தத்தையும், அதினுடைய ஸமூஹத்தையும், ஸமூஹபாஹுள்யத்தையுஞ் சொல்லுகிறது. ப்ரக்ருதி புருஷகாலங்களோடு, பரமபதத்தோடு முக்த நித்யவர்க்கத்தோடு, ச்சத்ரசாமரப்ரமுகமான பரிச்சதங்களோடு, ஆயுதாபரணங்களோடு, பெரியபிராட்டியார் துடக்கமான நாய்ச்சிமாரோடு, திவ்யமங்கள விக்ரஹத்தோடு, ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களோடுவாசியற ஸர்வத்தையும் நாரஶப்தம் ப்ரதிபாதிக்கிறது. (எண்பெருக்கந் நலத்தொண்பொருள்) என்றும் (நாரணன் முழுவேழுலகுக்

கும் நாதன்) என்றும் அருளிச்செய்கையாலே, சேதநா சேதநங்களி ரண்டும் நாரஶப்தவாச்ய மாகக்கடவது. (ஈறிலவண்புகழ் நாரண ன்) என்றும் (வாழ்புகழ்நாரணன்) என்று மருளிச்செய்கையாலே, குணங்களும் நாரஶப்த வாச்யமாகக்கடவது. (செல்வநாரணன்) என்றும் (திருநாரணன்) என்றும் பிராட்டிஸ்வரூபமும் நாரஶப்த வாச்யமாகக்கடவது. (காராயினகாளநன்மேனியினன்-நாராயணன்) என்கையாலே - திவ்யமங்களவிக்ரஹமும், ஆயுதாபரணங்களும், காந்திஸௌகுமார்யாதி குணங்களும் நாரஶப்தவாச்ய மென்னு மிடம் ஸூசிதம். அயநஶப்தம், இவற்றுக்கிருப்பிடமா யிருக்கு மென்று ஈஶ்வரனைப்ரதிபாதிக்கிறது. (நாராணுமயநம்) என்கிற தத் புருஷ ஸமாஸத்தில் நித்யபதார்த்தங்க ளெல்லாத்துக்கும் ஈஶ்வரனி ருப்பிடமென்று பொருள். நாரா: அயநம்யஸ்ய என்கிற பஹுவ்ரீ ஹிஸமாஸத்தில், நாரங்களை ஈஶ்வரனிருப்பிடமாக வுடையனென் னு மர்த்தத்தைச்சொல்லுகிறது. அயநஶப்தம், ப்ராப்யத்துக்கும் வாசகமாய் ப்ராபகத்துக்கும் வாசகமாயிருந்ததேயாகிலும், இவ்விட த்தில் ப்ராப்யபரமாயிருக்கும். பஹுவ்ரீஹிஸமாஸத்தில், அயந ஶப்தம், திவ்யாத்மஸ்வரூபத்தை யொழிந்த ஸகல வஸ்துக்களுக் கும் வாசகமாயிருக்கும்; ஷஷ்டீஸமாஸத்தில், திவ்யாத்மஸ்வரூபமொ ன்றுக்கும் வாசகமாயிருக்கும். ஈஶ்வரனுடைய ஸர்வாத்மத்வ அப ஹதபாப்மத்வ பரமபத நிலயத்வாதியோதகமான குணவிஶேஷங்க ளெல்லாம் இப்பதத்திலே 'யநுஸந்தேயங்களாகக் கடவது. இதில் சதுர்த்தி, ப்ரணவத்திற்சொன்ன அநந்யார்ஹ ஶேஷத்வத்தினுடைய வும் நமஸ்ஸிற்சொன்ன உபாயஸ்வீகாரத்தினுடையவும் ஃபலரூபமான கைங்கர்யப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது. தேஶகாலாவஸ்தாப்ர கார விஶேஷவியுரமாக ப்ரார்த்திக்கையாலே, ஸர்வதேஶ ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளுக்கும் உசிதமான ஸகலஶேஷவ்ருத்தியை யுஞ் சொல்லுகிறது.

ப்ரதமாக்ஷரமான அகாரத்தாலே - ஈஶ்வரனுடைய ரக்ஷகத் வஞ்சொல்லி, சதுர்த்தியம்ஶத்தாலே - ஜீவாத்மாக்களுடைய ஶேஷத் வஞ்சொல்லி, உகாரத்தாலே - அந்யஶேஷத்வ நிவ்ருத்திசொல்லி; மகாரத்தாலே - ஶேஷத்வாஶ்ரயமாய் ப்ரக்ருதே: பரமான ஆத்மஸ் வரூபத்தினுடைய ஜ்ஞாநாஶ்ரயத்வத்தை ப்ரதிபாதித்து நமஸ்ஸா லே - அநாதிகாலம் ஏவம்விய ஶேஷத்வத்துக்கு நிரோதாயகமாய்ப்

போந்த விரோதிஸ்வரூபத்தை நிவர்த்திப்பித்து ஹாஹவதஶேஷத்வ ப்ரதிபாதநத்வாரா ஹஹவச்சேஷத்வத்தை ஸ்திரமாக்கி ஶேஷத்வாநுரூபமான ஸித்தயஸாதந ஸ்வீகாரத்தைச்சொல்லி, நாராயண பதத்தாலே - நித்யவஸ்துஸமூஹ வாஹூல்யஞ்சொல்லி, தததாஶ்ரயமான ஹஹவத்ஸ்வரூபத்தினுடைய ஸர்வஶேஷித்வ ஸர்வரக்ஷகத்வ நிரதிஶயஹோத்யத்வ நிருபாதிக வாந்யவத்வ நியந்த்ருத்வயாரகத்வ ப்ரமுவமான குணவிஶேஷங்களைச்சொல்லி, சதுர்த்தியம்ஶத்தாலே - நிரதிஶயாநந்தரூபமான ஸஹஜகைங்கர்யத்தினுடைய ஆவிர்ஹாவப்ரார்த்தநத்தைச் சொல்லித தலைக்கட்டுகிறது.—ஆக, திருமந்த்ரத்தாலே - ஈஶ்வரனுக்குமாத்மாவுக்கு முண்டான ஸம்வந்தத்தையும், ஸம்வந்தாநுரூபமான உபாயஸ்வீகாரத்தையும், ஸ்வீகாராநுகுணமான உபேயப்ரார்த்தநத்தையுஞ்சொல்லித் தலைக்கட்டுகிறது. (விடையேழன்றடர்த்த) என்கிற பாட்டும், (மூன்றெழுத்ததனை) என்கிறபாட்டும், ப்ரணவார்த்தமாக வநுஸந்தேயம்; (யானே) என்கிறபாட்டு, நமஶ்ஶப்தார்த்தமாக வநுஸந்தேயம்; (எம்பிரானெந்தை) என்கிறபாட்டு, நாராயணஶப்தார்த்தமாக வநுஸந்தேயம்; (ஒழிவில்காலமெல்லாம்) என்கிறபாட்டு, சதுர்த்த்யர்த்தமாக வநுஸந்தேயம்; (அகாரார்த்தாயைவ) என்கிறஶ்லோகம், பதத்ரயத்துக்கும் அர்த்தமாக வநுஸந்தேயம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஶ்ரீமதேராமாநுஜாயநமஃ.

உ-வது. சரமஶ்லோகப்ரகரணம்.

திருமந்த்ரத்தில் மத்யமபதத்தாலும் நாராயணபதத்தாலும் ஆர்த்தமாக ப்ரதிபாதிக்கப்பட்ட அர்த்தத்வயத்தையும், சரமஶ்லோகத்தில் அர்த்தத்வயம் ஶாப்தமாக ப்ரதிபாதிக்கிறது. ஸங்க்ரஹமான பதத்வயத்துக்கும் பூர்வாபர நியமமுண்டாயிருக்கிறுப்போலே, விவரணபதமான விதுவும் பூர்வாபரஹாவேந நியதமாயிருக்கும். திருமந்த்ரம் அநேகார்த்தங்களை ப்ரதிபாதியா நிற்கச்செய்தே ப்ராப்ய ப்ரதிபாதநபரமா யிருக்கிறுப்போலே, இதுவும் அநேகார்த்தங்களை ப்ரதிபாதி

த்ததேயாகிலும், ப்ராபகப்ரதிபாதந பரமாயிருக்கும். தேஹாத்மாபிமாநியாய் ஆத்மபரமாத்ம விவேகஶூந்யனாயிருக்கிற அர்ஜுநனைக்குறித்து, (அமலங்களாகவிழிக்கும்) என்கிறபடியே - ஸகலபாபக்ஷபணநிபுணங்களாயிருக்கிற திவ்யகடாக்ஷங்களாலும், அம்ருதஸிஷ்யந்தியான வசநவிஶேஷங்களாலும், முமுக்ஷுத்வ விரோதிகளான ஸகலப்ரதிபந்தகங்களையும் நஶிப்பித்து, மோக்ஷருசியை யுண்டாக்கி, (தேதம்புக்த்வா ஸ்வர்கலோகம்விஶாலம் க்ஷீணேபுண்யே மர்த்யலோகம்விஶந்தி) இத்யாதியாலே - ஐஶ்வர்யம் அல்பாஸ்திரத்வாதிதோஷதூஷிதமாயிருக்கு மென்னுமிடத்தை யருளிச்செய்து, (ஜராமரணமோக்ஷாய) இத்யாதியாலே-கைவல்யம் க்லேஶஸாத்யத்வாதிதோஷதுஷ்ட மென்னுமிடத்தை யருளிச்செய்து, (மாமுபேத்யது கௌந்தேய) இத்யாதியாலே - ஸ்வப்ராப்திலக்ஷணமான மோக்ஷமே நிரதிஶய புருஷார்த மென்னுமிடத்தை யருளிச்செய்து, (தஸ்மாதஸக்தஸ்ஸததம்) இத்யாதியாலே - கர்மஜ்ஞாநபக்திகளை தத்ப்ராப்திஸாதகமாக வருளிச்செய்தத்தைக்கேட்டு; அர்ஜுநன், ஸர்பாஸ்யகதமான ஜந்துவைப்போலேயிருக்கிற தன்னுடைய துர்கதியையும், (மமமாயாதுரத்யயா) என்கிறபடியே - தன்னால் கழித்துக்கொள்ளவொண்ணாதபடிவிரோதி யம்ஶம்அதிப்ரபலமாயிருக்கிறபடியையும் விஹிதோபாயவிஶேஷம்துரநுஷ்டாநமாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, ப்ராப்யலாப நிமித்தமாக ஶோகாவிஷ்டனாக; அநந்தரத்திலே, 'துஷ்கரங்களான ஸாதநவிஶேஷங்களை ஸவாஸநமாகத்யஜித்து, நிரபாயஸாதநபூதனான வென்னையே நிரபேக்ஷஸாதநமாக ஸ்வீகரி ; ப்ராப்திப்ரதிபந்தகங்களை நிஶ்ஶேஷமாக நானே போக்குகிறேன் ; ஆனபின்பு, ப்ராப்யலாப நிமித்தமாக ஶோகத்தைப்பொகட்டு நிர்பரனாயிருக்க' என்று அர்ஜுநனுக்கு ஶோகத்தை நிவர்த்திப்பிக்கிறான். ஸகலஶாஸ்த்ரங்களிலும் இப்ப்ரபந்தந்தன்னில் இஶ்ஶ்லோகத்துக்குக் கீழடங்கலும் மோக்ஷஸாதநங்களாக விஹிதங்களாய் வைதிகபுருஷர்களாலே அத்யாதரேண வநுஷ்டிதங்களாய்ப் போருகிற ஸாதநவிஶேஷங்களைப் பரக்கவிதியாநிற்க, இஶ்ஶ்லோகத்திலே தத்யாகபூர்வகமாக உபாயாந்தரவிதாநம் பண்ணுகை விருத்தமென்று நினைத்து, விரோதிபரிஹாரார்தமாகப் பல பொருள்களைச் சொன்னார்கள். பரமாப்தனான க்ருஷ்ணன் அருளிச்செய்த வார்த்தை யாகையாலும், (த்ரிராவாணஃப்லவந்தே) என்றும்

(அதி நிராஶிஞ்சேத்) என்றும் இத்யாதியான வைதிகலௌகிகவாக்யம் போலே அநந்விதமாயிருக்கை யன்றிக்கே அந்விதமாய்க்கொண்டு அர்த்தப்ரத்யாயகமா யிருக்கையாலும், ப்ரமிதி ஜநகமன்றென்றும், அநேகப்ரமாண விருத்த்யமாயிருக்கையாலே தத்ப்ரதிபாதிதமான வர்த்தம் அப்ராமாணிகமாய் பரீக்ஷகாநநுஷ்டேயமா யிருக்குமென்றும் சொல்லவொண்ணாது. கர்மபலத்யாக பூர்வகாங்க ப்ரபத்திவிதாநபரம் இஶ்ஶ்லோகமென்று சிலர் சொன்னார்கள்; கர்மபல பரித்யாக கர்மங்களினுடைய லக்ஷணாபுநருக்த ஸந்நிதாநங்களாலே அந்தபக்ஷம் துஷ்டம். உபாஸநம் த்ரைவர்ணிகவிஷயமாகவிஹிதமாகிறது. ப்ரபதநம் தத்வ்யதிரிக்தவிஷயமாக விதிக்கப்படுகிறது, இப்படி வ்யவஸ்திதவிஷயமாகையாலே, உபாயத்வயவிதாநம் அவிருத்த்யமென்று சிலர்சொன்னார்கள்; அந்தபக்ஷம், ப்ரபத்தியினுடைய ஸர்வாதிகாரத்வஶ்ருதியாலும், த்ரைவர்ணிகோபதேஶ்யதாநுபபத்தியாலும், அநுஷ்டாநவிரோதத்தாலும், அநுபபந்நம். ஜ்ஞாநயோகஸாதநகர்மத்யாகபூர்வகாங்க ப்ரபதநவிதாநமபண்ணுகிறதென்கிறபக்ஷம், தர்மஶப்தத்தினுடைய அஸங்குசிதவ்ருத்தித்வத்தாலும், ஜ்ஞாநயோகவாசகஶப்தாஸந்நிதாநத்தாலும்துஷ்டம். கர்மஶப்தத்தினுடைய அப்ரஸ்துதப்ராயஶ்சித்தவிஷயத்வ ஸங்குசிதவிஷயத்வப்ரஸங்கத்தாலும், ஜ்ஞாநவிநஷ்ட கர்மயோக ப்ரதிபந்தகமாகையாலும், ப்ராயஶ்சித்தவிதாந பக்ஷமும் அநுபபந்நம். ஶோகநிவ்ருத்த்யநுபபத்தியாலே ப்ரஶம்ஸாபரமென்கிற பக்ஷமும் அநுபபந்நம். பூர்ணாஹுதி த்ருஷ்டாந்தத்திலே தாத்பர்யம், த்யாகத்தில் தாத்பர்யமில்லையென்கிற பக்ஷமும், ஸாதநாந்தர பரித்யாக லக்ஷணாங்கவையர்த்யத்தில் ப்ரபத்யுபாயம் அநநுவர்த்திதமாகையாலே அஸங்கதம். கர்மயோகாதிப்ரச்யுதிஸம்பாவனையிலே தத்ப்ராயஶ்சித்ததயா ப்ரபத்திவிதாநம் பண்ணுகிறபக்ஷம், (நேஹாபிக்ரமநாஶோஸ்தி) என்று ப்ராயஶ்சித்தநைரபேக்ஷ்ய ப்ரதிபாதகமான பூர்வவசநத்தோடே விரோதிக்கையாலே அஸங்கதம். மோக்ஷஸாதந கர்மவிரோதி ஸ்வர்காதி காம்யகர்ம பரித்யாகமென்கிற பக்ஷமும், மோக்ஷஸாதந கர்மவிதாந தஶையிலே காம்யகர்மம் ப்ரதிஷித்த்யமாகையாலும், (மாமேகம்ஶரணம்வ்ரஜ) என்கிற வாக்யம் கர்மப்ரதிபாதக மல்லாமையாலும் துஷ்டம். (க) பூர்வோக்தஸாதநங்களுக்கு ஶோகஜநகத்வ மில்லாமையாலும், (உ) ஶோகந்தான் ஶ்ருதமல்லாமையாலும், (ங) ஹத்தித்யா

மத்தில் தத்ப்ரதிபாதக ஶாஸ்த்ராந்தரத்துக்கும் இந்தப்ரபந்தந்தன்னில் பூர்வவசநங்களுக்கும்வையர்த்யம் ப்ரஸங்கிக்கையாலும், (௪) ப்ரபத்யுபாயத்துக்கு ஸ்வதந்த்ரஸாதநத்வ ஶ்ரவண மில்லாமையாலும், (ரு) ஸுகரமார்க முண்டானால் வத்ஸலதரமான ஶாஸ்த்ரம் துஷ்கரமார்கோபதேஶம் பண்ணக்கூடாமையாலும், (சு) நிரங்கத்வேநஸாதநத்வம் அவடிதமாகையாலும், விஹிதோபாய பரித்யாக பூர்வகமாக உபாயாந்தர விதாநம் பண்ணுகிற தென்கிறபக்ஷம் அநுபபந்நமென்று சிலர் சொன்னார்கள்.

இப்ரபந்தந்தன்னில் ப்ரதமத்திலே, ஸ்வரக்ஷணேஸ்வாந்வயம் ஸ்வரூபவிரோதித்வேந ப்ரகாஶிக்கும்படி ஆத்மஸ்வரூபத்தை அத்யந்தபரதந்த்ரமாக உபதேஶிக்கக் கேட்டபடியாலும், ஸததகதியான வாயுவினுடைய நிரோதம்போலே விஷயாந்தர ஸஞ்சாரியான மநஸ்ஸினுடைய நிக்ரஹம் துஷ்கரமாயிருக்கையாலும், அப்படிப்பட்ட மநஸ்ஸு தன்னை ப்ரத்யக்ப்ரவணமாக்கப் பார்த்தாலும் அதுக்கு யோக்யதையில்லாதபடி இந்த்ரியங்கள் தந்தாம்வழியிலே இழுத்துக்கொண்டு நலியாநின்றதென்று இந்த்ரிய ப்ராபல்யஜநிதபீதி அநுவர்த்திக்கையாலும், ஸகலஜகத்தினுடையவும் ஸத்தாஸ்திதயாதிகள் மததீநங்களாய் நடக்கிறதென்றும் உபாஸநஸாதநஜ்ஞாநாதிகளுக்கும் நானே ப்ரவர்த்தகனென்றும் அருளிச்செய்யக் கேட்கையாலும், ஸர்வாவஸ்தைகளுக்கு ப்ரபத்தியொழிய புகலில்லையென்னுமிடம் நிழலெழும்படி இந்த்ரியநியமநாதி ஸாதநத்வேந பலவிடங்களிலும் ப்ரபத்திஶ்ருதை யாகையாலும் விஹிதஸாதநங்கள் பஹுதரஸாத்யத்வ ஜந்மஸாபேக்ஷயத்வ ஸாபாயத்வாத்யநேக தோஷாவஹங்களாயிருக்கையாலும், விரோதியம்ஶம்ஸ்வநிவர்த்யமல்லாதபடியவன்கையிலேகிடக்கிறபடியை அநுஸந்தித்தால் ஜ்ஞாநவானாயிருக்கிற இவனுக்கு ஶோகவேகம்பிறக்கை ஸம்பாவித மாகையாலே பூர்வோக்த ஸாதநங்களுக்கு ஶோகஜநகத்வமில்லையென்கிறபக்ஷம் துஷ்டம்.

இவ்விடத்திலே ஶோகம் ஶ்ருதமன்றே யாகிலும், (மாஶுச:) என்கிற ஶோகநிஷேத வசநத்தாலே ஶோகம் அநுமேயமாகக் கடவது.

தச்சாஸ்த்ரங்கள்தன்னிலே ஸாயநாந்தரபரித்யாக பூர்வகமாக ஸிம்யஸாயநஸ்வீகாரம்விஹிதமாகையாலும், இதுதான் ஏகாயிகாரவிஷயமன்றிக்கேஸிந்நாயிகாரவிஷயமாகையாலும், ப்ரஹ்மசர்யகார்ஹஸ்த்யவாநப்ரஸ்யாதியாஸ்ரமங்களிலேபூர்வபூர்வாஸ்ரமவிஹிதயர்மாநுஷ்டாந பரித்யாகபூர்வகமாக உத்தரோத்தராஸ்ரமவிஹிதயர்மம் அநுஷ்டேயமாகிறாப்போலே, இவ்விடத்திலும் பூர்வோபாயபரித்யாக பூர்வகமாக உத்ரோபாயமநுஷ்டிதமாகை அவிருத்யமாகையாலும், ஸாஸ்த்ராந்தரவிரோயமும் பூர்வவசநவிரோயமும் பரிஹ்ருதம். இதுதன்னாலே ஸாகாரஷாஷ்கரமார்க்கதிவய வியாநாநுபபத்திரூபமான சோதியமும் பரிஹ்ருதம் இங்ஙனே கொள்ளாதபோது - ஏகஃலவிஷயமான ஸமாவர்த்தநாதி கர்மவியாயக ஸாஸ்த்ரங்களுக்கும் விரோயம் ப்ரஸங்கிக்கும். க்ருஷ்ணாதி ஸ்மரணாதிகளும் விருயியம்.

அநந்யஸாயியேஸ்வாபீஷ்டே-, அஹமஸ்ம்யபராயாநாமாலயஃ, தஸ்மாந்யாஸமேஷாம்தபஸாம், முமுக்ஷுர்வைஸரணமஹம் ப்ரபதியே, ஸரணம்த்வாம் ப்ரபந்நாயே) இத்யாதிகளிலே ஸ்வதந்ரோபாயத்வேந ஸ்ருதமாகையாலே,

ஸ்வதந்த்ர ஸாயநத்வாநுபபத்தியை த்வாரமாகக் கொண்டு த்யாமோபாயவியாநபரத்வம் அர்யம் என்கிறபக்ஷம் உஷ்டம்.

ஸர்வயர்மாந்பரித்யஜ்ய) என்று - ஸாங்கப்ரபதநம் விஹிதமாகையாலே சரமபக்ஷம் உஷ்டம். ஸ்வரூபாநுரூபமான இந்தஉபாயத்தையேப்ரயமத்திலே உபதேஸியாதேஉபாயாந்தரங்களை உபதேஸித்து அவற்றுக்கநந்தரமாகவித்தை உபதேஸிப்பானென்னென்னில்; த்ரைகுண்யவிஷயமானஸாஸ்த்ரம்;ப்ரயமத்திலேரஜஸ்தமப்ரசுரராய் உர்ஜ்ஞாநஉர்வ்ருத்த ஸம்ருயியரானசேதநருடைய அநீதியைக்கண்டுநெகிழவிடமாட்டாதபடி அத்யந்தவத்ஸலமாகையாலே சேதநருடையஸத்வாதிகுணாநுகுணமாக, ஸத்ருநிரஸநவர்ஷயநலாஹபுத்ரபஸிவந்நஸ்வர்காதிபுருஷார்த்தங்களையும், தத்ஸாயநமான அஹிசாரகாரீர்யாதிஸாயநவிஸேஷங்களையும் உபதேஸித்து பரமபுருஷார்யலக்ஷணமோக்ஷதத்ஸாயநஸ்ரவணத்துக்கு யோக்யனானவஸ்யையி

லேஅத்தையுபதேஶிக்கவேணுமென்று நினைத்து,ப்ரதமத்திலே, நாஸ்திகனாய் பரஹிம்ஸைகபோதனாய் அத்யந்தந்ருஶம்ஸனாய் வர்த்திக்கிறஸமயத்திலே, அபிசாரகர்மத்தை உபதேஶித்து, அவற்றை ஸபலமாகக்கண்டு, ஶாஸ்த்ரவிஶ்வாஸம் பிறந்தஸமயத்திலே தேஹாத்மாபிமாநியாயிருக்கிறவனுக்கு தேஹாத்யுத்தீர்ணமான ஸ்வரூபத்தையறிவிக்கைக்காக, ஸ்வர்காதியாமுஷ்மிக ஸாத்யஸாதநபூத ஜ்யோதிஷ்டோமாதிகளைவிதித்து, ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரதிபத்தி கழன்றவளவிலே பகவத்பாரதந்த்ர்ய ஜ்ஞாநம் பிறக்கும்படி பகவத்கைங்கர்ய லக்ஷணமான மோக்ஷத்தை உபதேஶித்து, தத்ஸாதந பக்தியையும் விதித்து, பாரதந்த்ர்யயாதாத்ம்ய ஜ்ஞாநார்த்தமாக அநந்தரத்திலே ப்ரபத்தி யுபதேஶம் பண்ணுமாப்போலே; இவனும், பந்துவதபுத்தியாலே யுத்தநிவர்த்தனான வர்ஜுநனைக்குறித்து, ப்ரதமத்திலே ஸ்வாநுபவ லக்ஷணமான பரமபுருஷார்த்தத்தையும தத்ஸாதநமான ப்ரபத்தியையும் உபதேஶிக்கச் சேராமையாலே, க்ரமத்திலே தேஹாதி விலக்ஷணமான வஸ்துவிஷயஜ்ஞாநத்தையும் தத்தர்மியான தன்னுடைய ஸ்வரூபாதிவிஷயஜ்ஞாநத்தையும் ஸ்வப்ராப்திலக்ஷணமான மோக்ஷவிஷயஜ்ஞாநத்தையும் ஜநிப்பித்து, தத்ஸாதநமான பக்த்யுபாயத்தைவிதித்து, பூர்வோக்த ஸாதநங்களில் ருசிவிஷயமான ஸாதநத்தை யநுஷ்டிப்பித்து, 'நம்மைப்ராபி, இவ்வுபாயவிஶேஷங்களையொழிய நம்மைப்ராபிக்கைக்கு உபாயங்களில்லை, இவற்றிலே அந்யதமத்தை யநுஷ்டிப்பித்து நம்மைப்பெறப்பார்' என்று சொன்னல், அநந்தரத்திலே யிவனுக்குப்பிறந்த அவஸ்தையைக்கு அநுரூபமாக ஸித்தோபாயத்தை உபதேஶிக்க வேண்டுகையாலே, ப்ரதமத்திலே உபதேஶித்திலன். இவ்விடந்தன்னில் த்யாஜ்யமாகச் சொல்லுகிறது ஸர்வதர்மஸ்வரூபத்தை என்னவொண்ணாது; அஶக்யமாகையாலும், ஸாதநத்வம் ஸித்தியாமையாலும், அவை விருத்த மாகையாலும், உபாயத்வபுத்தி உத்தரகாலத்தில் அநுஷ்டாநம் அநுபபந்ந மாகையாலும், ஃபலத்யாக மாகமாட்டாது; பௌநருக்த்ய ப்ரஸங்கத்தாலும், ப்ரபத்யுபதேஶம் வடியாமையாலும், ஸ்வதந்த்ர ஸாதநத்வம் ஸித்தியாமையாலும், அவைவிருத்தமாகையாலும், உபாயத்வபுத்தி யென்னவொண்ணாது; ப்ரபத்திக்கு தர்மாங்கத்வமும் அகிஞ்சநாதிகாரத்வஹாநியும் உத்தரகாலத்திலநுஷ்டேயகர்மங்களில் கைங்கர்யரூபஹாநியும் ப்ரஸங்கிக்கை

யாலே. ஆகையாலே தர்மத்யாகோபதேஶ மநுபபந்நமன்றோ வென்னில்; அது சொல்லவொண்ணாது. இவ்விடத்தில் த்யாஜ்யதயா உபதிஷ்டையாகிறது ஸாதநத்வ ப்ரதிபத்தியாகையாலேயென்றும், ஸ்வர்கார்த்தமான ஜ்யோதிஷ்டோமாதிகளைப்போலே பலஶ்ருதிவிஶிஷ்டத்தாலே கர்மாந்தரத்வ முபபந்நமாகையாலே ஸ்வரூபத்தை த்யாஜ்யமாகச் சொல்லவுமாமென்று சொல்லுவர்கள். நிஷ்க்ருஷ்டஸத்வநிஷ்டனாய், பரமாத்ம நிரக்தனாய், அபரமாத்மவைராக்யமுடையனாய் ப்ரமாணபரதந்த்ரனாய், பகவத்வைபவம் ஶ்ருதமானால் அது உபபந்நமென்னும்படி யிருக்கிறன விஸ்ரம்பபாஹுள்ய முடையனாய், ஆஸ்திகாக்ரேஸரனாயிருப்பா னொருவனுண்டாகில், அவனே ஶ்ரீலோகார்த்த ஶ்ரவணாநுஷ்டாநத்துக்கதிகாரி. ஸர்வாதிகாரமா யிருக்கச்செய்தே அதிக்ருதாதிகாரமாயிறேயிருப்பது. இங்குச்சொல்லுகிற பரித்யாகம் ஸ்வீகாராங்கதயா உத்தேஶ்யமென்று ப்ரதிபத்தி பண்ணினபோது உஜ்ஜீவநஹேதுவாம். ஸ்வரூபேண உபாதேயமென்று ப்ரதிபத்திபண்ணினால் அநர்த்தஹேதுவாம். அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்தகௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டுபோந்தார்கள் எம்பெருமானார்க்குமுன்புள்ளார். ஸம்ஸாரிகள்துர்கதியைப் பொறுக்கமாட்டாதபடி க்ருபைகரைபுரண்டிருக்கையாலும் அர்த்தத்தின்சீர்மைபாராதே அநர்த்தத்தையேபார்த்து வெளியிட்டருளினாரெம்பெருமானார். தத்வநிர்ணயம்பண்ணின உய்யக்கொண்டார் விஷயமாக வருளிச்செய்தருளின வார்த்தையும், நஞ்சீயர் வீராணத்து அருளாளப்பெருமாளுக் கருளிச்செய்தருளின வார்த்தையும் தொடக்கமான பூர்வாசார்ய வசநங்க ளிவ்விடத்தே அநுஸந்தேயங்கள். உபாயவிதிப்ரகரணமாய் கீழே அநேகஸாதநங்களை விதித்துக்கொண்டு போந்ததுக்கநந்தரமாக ஸித்தோபாய பரிக்ரஹத்தைவிதித்து அதுக்குமேலொரு உபாயவிஶேஷத்தை விதியாதே இவ்வளவிலே பர்யவஸித்து விடுகையாலே இத்தை சரமஶ்லோகமென்கிறது. இப்படி யாகாதபோது அதிப்ரஸங்க முண்டாமிறே. ஸாங்கமாக ஸகலதர்மங்களையும் ஸவாஸநமாகத்யஜித்து ஸௌலப்யாதிகுண விஶிஷ்டனாயிருக்கிற வென்னையே இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும்நிரபேக்ஷஸாதநமாகஸ்வீகரி; ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகண விஶிஷ்டனா யிருக்கிறநான், என்னையே நிரபேக்ஷ ஸாதநமாகப்ரபத்திபண்ணினவுன்னை, அவித்யா

கர்ம வாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தங்களாகிற விரோதிகளினின்றும் முக்தனுக்குகிறேன் நீ உன்காரியம் சுட்டிசோகிக்கவேண்டா என்று உபாயாந்தர த்யாகத்தாலே, சோகாவிஷ்டனை அர்ஜுநனுடையசோகத்தை நிவர்த்திப்பிக்கிறான். இதில் பூர்வார்த்தத்தாலே ப்ரபத்தாவினுடைய க்ருத்யம்சொல்லுகிறது; உத்தரார்த்தத்தாலே ப்ரபத்தவ்யனுடைய க்ருத்யம் சொல்லுகிறது. ப்ரபத்தாவுக்கு க்ருத்யம-உபாயஸ்வீகாரம்; ப்ரபத்தவ்யனுக்கு க்ருத்யம் - விரோதி நிவர்த்தநம், ஈஶ்வரனுக்கு கைங்கர்யத்தி லந்வயமில்லாதாப்போலே, இவனுக்கு விரோதி நிவ்ருத்தியி லந்வயமில்லை. இவனுக்கு சேஷித்வத்தி லந்வயமில்லாதாப்போலே, அவனுக்கும் உபாயஸ்வீகாரத்தி லந்வயமில்லை. (ஸர்வதர்மாந்) தர்மமாகிறது - சாஸ்த்ர விஹிதங்களான இஷ்டஸாதநங்கள், (க) இவ்விடத்தில் இஷ்டஸாதநமாகச்சொல்லுகிற தர்மமாகிறது - ஸ்வர்காதிஸாதநமான ஜ்யோதிஷ்டோமாதிகளாதல் (உ) உபாஸநாங்கமாய்பாபாபநோதநஸாதநமான தர்மமாதல், (ங) அந்யமான உபாஸநந்தானாதல், (ச) அவ்யவஹிதஸாதநமான தர்மமாதலிறே. இவையித்தனையும் அநுபபந்நங்கள். (க) ஜ்யோதிஷ்டோமாதிகளை த்யாஜ்யமாகச்சொல்லவொண்ணாது; அவை அப்ரஸ்துதங்களாகையாலும், அதிகாரிக்குபலாந்தராபேக்ஷையில்லாமையாலும். (உ) பாபாபநோதநஸாதநமான கர்மத்தை த்யாஜ்யமாகச்சொல்லுகிறதென்னவொண்ணாது; ஸாங்கமான தர்மத்துக்கு அங்கத்வம் ப்ரஸங்கிக்கையாலும். (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்கிறது சேராமையாலும். (ங) அந்யமான உபாஸநத்தைத்யாஜ்யமாகச்சொல்லுகிறதென்னவொண்ணாது; ஸர்வஶப்தத்துக்குநைரர்த்த்யம் ப்ரஸங்கிக்கையாலும், அது ஸாதநமாச்சுதேயாகிலும் அவைக்க ப்ரஸங்கமும் அதிப்ரஸங்கமும் துஷ்பரிஹாரமாகையாலும். (ச) பரஸ்பரவிரோதத்தாலே அந்வயமில்லாமையாலே, சதுர்த்தபக்ஷமும் உபபந்நமன்று. ஆனபின்பு, இங்குச்சொல்லுகிற தர்மத்யாகம் ஸங்கதமாகமாட்டாதேயென்னில்; ப்ரதமத்விதீய சதுர்த்தவிகல்பங்கள் அஸம்பந்தங்களில்லாமை நிரஸ்தங்கள, இங்குத்யாஜ்யமாகச் சொல்லுகிறது. ஸகலசாஸ்த்ரங்களிலும் இப்ரபந்தந்தன்னில் இஶ்லோகத்துக்குக் கீழடங்கலும் விஸ்த்ருதமாக ப்ரதிபாதிக்கப்பட்ட மோக்ஷஸாதநமானஉபாஸநரூபதர்மம். ஸர்வஶப்தார்த்தம்யோக்யதாபாதகங்களாகையாலே நைரர்த்த்யமில்லை. நிமித்தாந்தரத்தாலே அநுஷ்டாநமுண்டாகையாலும் விஹிததயா அவர் ஜநீயங்களாகையாலும்,

அவைதிகத்வாதிதோஷமில்லை. ஆகையால் இங்குச்சொல்லுகிற தர்மத்
யாகம் உபபந்நமென்றும் ஸமாதாநம் பண்ணினார்கள். பஹுவசந
த்தாலே - அவதாரரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தமவித்யை, தேஶ
வாஸம் தொடக்கமானவற்றைச் சொல்லுகிறது. ஸத்வித்யாதி பேதத்
தாலே வந்த பஹுத்வத்தைச் சொல்லுகிறதென்னவுமாம். (நெறி
யெல்லாமெடுத்துரைத்த) என்கிறபடியே அருளிச்செய்த உபாயங்
கள் அநந்தங்களாயிறே யிருப்பது. ஆக, தர்மஶப்தத்தாலும் ப
ஹுவசநத்தாலும் - ஸாங்கமான தர்மங்களையும் அதினுடைய ப
ஹுத்வத்தையுஞ் சொல்லுகிறது. ஸர்வஶப்தத்தால் - உபாஸநா
திகாரிகளெல்லாருக்கும் பொதுவாய், முன்புசொன்ன ஸாதநாநுஷ்
டாநத்துக்குயோக்யதா ஸம்பாதகங்களாய், ஶ்ருதிஸ்ம்ருதி ஸித்தங்
களாயிருக்கிற தர்மவிஶேஷங்களைச்சொல்லுகிறது. யோக்யதாஸம்
பாதக தர்மத்யாகம் ஸாதநத்யாகத்தில் அந்தர்ப்பூதமா யிருக்கச்செய்
தேயும்தார்ட்யமாகஸர்வஶப்த ப்ரயோகம்பண்ணுகிறது. ப்ரபதநாத்
மகதர்மத்தினுடைய ஸர்வாதிகாரத்வ ஜ்ஞாபநார்த்தமாக, இங்ஙனே
கொள்ளாதபோது, ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கு அதிகாரமின்றிக்கே
யொழியுமிறே. இதரோபாயங்களுக்கு யோக்யதை அத்யந்தாபேக்ஷி
தமாயிருக்கிறாப்போலே, இவ்வுபாயத்துக்கு தாத்ருஶயோக்யதா நி
வ்ருத்தி அத்யந்தாபேக்ஷிதமா யிறேயிருப்பது ஈத்ருஶயோக்யதாநிவ்
ருத்தி யில்லாமையாலே, ஶரண்யஶரணாகதிநிஷ்டையாயிற்று. ஆக
ஸர்வதர்மாந் என்கிற பதத்தாலே மோக்ஷஸாதநமாக விஹிதங்களா
யிருக்கிற ஸகல தர்மங்களையும் சொல்லிற்று.

பரித்யஜ்ய என்கிறபதத்தாலே - அவற்றினுடைய த்யாகத்தை
ச்சொல்லுகிறது. இங்குச்சொல்லுகிற த்யாகமாகிறது - மோக்ஷ
ஸாதநத்வப்ரதிபத்தியைப்போகடுகை என்று ப்ரவேஶத்திலேசொன்
னோமிறே; ஆகையால், அநுஷ்டாநவிரோதமில்லை. மேல்பரிக்ரஹி
க்கப்படுகிற ஸித்ததர்மம் ஸாத்யதர்ம நிரபேக்ஷமாகையாலும், இ
வற்றை ஸஹியாமையாலும், இவைதான் துரநுஷ்டாநங்களாயிருக்
கையாலும், ப்ராப்யவிஸத்ருஶங்களாகையாலும், பகவதேகஸாத
நதைகவிஷயமான ஸ்வஸ்வரூபத்துக்கு அநநுரூபங்களா யிருக்கை
யாலும், விளம்ப ஸஹங்களாகையாலும், கீழ்ச்சொன்ன தர்மவி
ஶேஷங்கள் த்யாஜ்யங்களா யிருக்கும். ப்ராப்தமுமாய் ஸித்தமு
மாய் ஸர்வஶக்தியுக்தமுமா யிருக்கையாலே, ஸாத்யதர்ம நிரபே

க்ஷமாயிருக்கும். சணற்கயிறு கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே வேறே யொன்றைக் காணில் நெகிழ நிற்குமதாகையாலே, உபாயஸ்வரூபத்தைப்பார்த்தால் ஸாத்யதர்மங்கள் சேராதபடியா யிருக்கும். ஸகல ப்ரவ்ருத்திகளிலும்ஸஹாயாந்தரநிரபேக்ஷமாய் ஸஹாயாந்தராஸஹமுமாயிறே வஸ்துஸ்வரூபமிருப்பது. ஆகையாலேயிறே இவ்வுபாயபரிக்ரஹம்பண்ணுமதிகாரி ஆகிஞ்சந்யத்தை புரஸ்கரித்துக் கொண்டிழிகிறது. ஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயராஹித்யமாகிறது-பகவத்ரக்ஷகத்வப்ரதிபந்தகஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி பிறக்கையிறே. அபாயபாஹுள்யங்களா யிருக்கையாலும், சிரகாலஸாத்யங்களா யிருக்கையாலும், துரநுஷ்டாநங்களா யிருக்கும் ப்ராப்யஸ்வரூபத்தைப்பார்த்தால் அநந்யஸாத்யமாயிருக்கையாலேஅதுக்குவிஸத்ருஶமாயிருக்கும். (ஶரைஸ்துஸங்குலாம்) இத்யாதியிற்படியே-ஶக்தியுண்டேயாகிலும் லங்கைக்குள்ளேபிராட்டியிருந்தாப்போலே, ஸ்வப்ரவ்ருத்தியில் பராங்முகனாய் ஈஶ்வரன்பக்கலிலே ஸமர்ப்பித்த ஸர்வபரனாயிருக்கையிறே அதிகாரிக்குஸ்வரூபம். ஆகையால், அதிகாரிஸ்வரூபத்தைப்பார்த்தால் அநுரூபமன்றிக்கே யிருக்கும். (காலேஷ்வபிசஸர்வேஷு) இத்யாதிப்படியே - ப்ரதிக்ஷணமஞ்ச வேண்டும்படியாயிறே உபாயாந்தரஸ்வரூபத்தை ஆராய்ந்தாலிருப்பது ப்ராந்தி தஶையிலும் ஸாதநாந்தர ஸம்பாவப்ரதிபத்தி ரஹிதனாயிருக்கு மவனுக்கிறே யிஸ்ஸாதநவிஶேஷம் கார்யகரமாவது, (அபாதகஹீதஸ்த்வம்) என்று தர்மதேவதை தர்மபுத்ரனைக்குறித்து பாதகத்வேந உபதேஶித்ததிறே. ஸ்வப்ரவ்ருத்தியாலே ஈஶ்வரனைக்கிட்ட வேணுமென்று நினைக்கிறது, பகவத்விஷயத்துக்கென்றும் புறம்பாகைக்குறுப்பாமித்தனையிறே. அவனுடைய ப்ரவ்ருத்தியாலே அவனைக் கிடடநினைத்திருந்தாலிறே கரைமரஞ் சேரலாவது. ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே எதிர்சூழல்புக்கு இவனைச் சேர்த்துக்கொள்ளுகைக்கு யத்நம்பண்ணித் திரிகிறவனுடைய அநுக்ரஹவிஶேஷத்தாலே அவனைப்பெறுகையிறே உசிதம். (என்னான்செய்கேன்) இத்யாதிப்படியே - ததேகஸாதகனா யிருக்கையிறே யிவனுக்குஸ்வரூபம். பகவதத்யந்த பாரதந்த்ர்யமாகிற உத்தேஶ்யத்துக்கு விரோதியாயிருக்கையாலே அதர்மஶப்த வாச்யங்களாக ப்ராப்தங்களா யிருக்கிற உபாயாந்தரங்களை தர்மஶப்தப்ரயோகம் பண்ணுகிறது அர்ஜுநாபி ப்ராயத்தாலே. துஷ்கரங்களாய் ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு)

என்னும்படி யிருக்குமவை யாகையாலே விளம்பாஸஹையாயிருக்கும். இவைதான் ஓராகாரத்துக்கும் தீவ்யத்தில்ப்ரதிபாதிதமாயிற்று. த்யாகம் ஸ்வீகாராங்கமாகையாலே த்யாகஸாபேக்ஷதை யாகையாலே ஈஶ்வரனுடைய நைரபேக்ஷ்யம் குலையுமென்கிற ஶோத்யமும் பரிஹ்ருதம். அங்கிஸ்வரூபந்தானும் நைரபேக்ஷ்யத்துக்குக் குறையின்றியிலே யிருக்க தத்அங்கம் நைரபேக்ஷ்யத்துக்கு ஹஞ்ஜகமாகப் புகுகிற தன்றிறே. நிரபேக்ஷனான ஈஶ்வரனுக்கு த்யாகஸ்வீகாராதிகளில் வருகிற ஸாபேக்ஷதை தோஷாயவாகாது. ஆக, இந்த ல்யப்பாலே - உபாயாந்தரபரித்யாகம் ஸித்தோபாயஸ்வீகாரத்துக்கு அங்கமென்னுமிடத்தைச் சொல்லுகிறது. 'ப்ரபத்தியாவது - ஒன்றைவிட்டொன்றைப் பற்றுகை' என்று அனந்தாழ்வான் வார்த்தை. இந்தல்யப்பு, (ஹுகத்வா சாந்த்ராயணஞ்சரேத்) என்கிறது போலன்றிக்கே, (ஸ்நாத்வா புஞ்ஜீத) என்கிறதுபோலே. ஸ்வீகாரத்துக்கு ஏகபதமபோலே, த்யாகத்துக்கு இந்த உபஸர்கம். அது, உபாய பௌஷ்கல்ய ப்ரதிபாதகமாயிருக்கும்; இது, த்யாக பௌஷ்கல்ய ப்ரதிபாதகமா யிருக்கும். இப்ரதிபத்தியினுடைய அத்யந்தாபாவமிறே ஹேயமாவது. ப்ரஸீவம்ஸாபாவ முண்டானாலதுவும் தோஷாயவாம்படியிறே யிருப்பது. த்யாகத்தன்னிலும் அந்வயமில்லாதபடியானு லாயிற்று. ஸ்வரூப பூர்த்தியுள்ளது. 'அங்கமான உபாயாந்தராநந்வயம் அத்யந்தாபாவத்திலு முண்டாகையாலே அங்கத்திலந்வயமில்லாமையால் அங்கியிலந்வய மில்லையென்று சொல்லப்பெறாது' என்று நஞ்ஜீயரருளிச்செய்வர். இவ்விடத்திலப்படி சொல்லவேண்டுகிறது ப்ரஸக்தமாகையாலேயிறே. இவ்வாகாரமில்லாமையாலே உபாயாந்தர பரித்யாக வியாபாரமாக ப்ரபதநமான த்யாகத்தைச் சொல்லுகிறது, அவைகிடக்குமாகில் பரிக்ரஹிக்கப்புகுகிற ஸாதநத்தி லந்வயமின்றிக்கே யொழியும். (மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்) என்னுமாப்போலே யிருக்க வேணும். உபாயத்திலும் ஸ்வஸ்வரூபத்திற்போலே உபாயத்தில் ஸ்வஸ்பர்ஶமும் விரோதியாயிருக்கும். (என்னான்செய்கேன் யாரே களைகண்) என்றாரிறே 'அநாதிகாலம் அநுபாயங்களிலே உபாய புத்தி பண்ணிப் போந்தோமென்று லஜ்ஜாபுரஸ்ஸரமான த்யாகத்தைச் சொல்லுகிறது என்றாழ்வான் பணிக்கும். ஸாத்யதாப்ரதிபத்தி பண்ணவேண்டு மதிலேயிறே ஸாதநத்வ புத்தி பண்ணிப்

ம்போந்தது, ஶுக்லமான ஶங்கத்திலே பீதத்வபுத்தி பண்ணுமாப்போலே. ஸ்வீகாரத்துக்கு ஏகபக்ஷம் நிஷேதவிதி த்யாகத்திலாகையாலும், நிஷித்தம் ஸர்வாதிகாரிகளுக்கும் அகர்த்தவ்யமாயிருக்கையாலே இவ்வதிகாரிகளுக்கு அநநுஷ்டேயமா யிருக்கையாலும், அநந்யஸாத்யமாய் அநந்யஸஹாயமான வஸ்துவைப் பற்றியிருக்கிறவிவனுக்கு இதுகூடாமையாலும், அதிப்ரஸங்கம்வருகையாலும், விஶேஷநிஶேஷ்ய விதிபலத்தாலும், நிஷித்த நிவ்ருத்தி மாத்ரம் ஸர்வஸாதாரணமானாலும் விதியந்தர விஹிதங்களான ப்ரவ்ருத்திரூப தர்மங்களே யிங்கு ஸர்வஸாதாரணங்களாக விவக்ஷிதங்க ளாகையாலும், நிஷேதவிதிதர்மத்யாகம் விதியந்தரதர்மத்யாகத்தோபாதி கர்த்தவ்யமன்று; ஆகையாலே நிஷேதவிதித்யாஜ்யமன்று. பரித்யாஜ்யமாகச் சொல்லுகிறது உபாயதாபோதகதையாலே த்யாஜ்யமென்னவுமாம். பரி என்கிற உபஸர்க்கம், வாஸநாருசி ஸஹிதமான தர்மங்கள் வ்யாபாரார்த்தகங்களுமாய் ஸ்வரக்ஷண ஹேதுக்களுமா யிருக்கையாலே, நிஷேதவிதி ஸ்வீகாரத்தில் ஸ்வரக்ஷணார்த்தமான வ்யாபாரம் பரித்யக்தமல்லாமை ப்ரபத்தியிலந்வயம் ஸித்தியாமையாலும், (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்கிற வார்த்தையோடு சேராமையாலும், நிஷேதவிதித்யாகம் அவஶ்யம் கர்த்தவ்யமன்றேயென்ன வொண்ணாது. நியமவிஶேஷாதி விஶிஷ்டவேஷ வ்யதிரேகேண ஸாமாந்யேந நிஷித்த நிவ்ருத்திமாத்ரத்துக்கு தர்மஶப்தார்த்தத்வ மில்லாமையால் விஶேஷணாம்ஶத்தையொழிய விஶேஷ்யாம்ஶத்துக்கு த்யாகவிஷயதாராஹித்யத்தாலே நிஷேதவிதி ஸ்வீகாரத்தில ஸ்வரக்ஷண ஹேதுவானவிதுசேராதொழிய அதுவும் த்யாஜ்யங்களாய் ஓகாரத்தாலே உபாதேயங்களாயிருக்கும்; கர்மாநுஷ்டாநம் தேஹயாத்ரையிலே அந்தர்பூதமாயிருக்கும்; ஸ்வஸ்வரூபஜ்ஞாநவிஷயத்திலே அந்விதமாயிருக்கும் ஜ்ஞாநயோகம்; போஜநத்துக்கு க்ஷுத்துப்போலே, கைங்கர்யத்துக்கு பூர்வக்ஷணத்திலே அநுவர்த்திக்கக் கடவதான ருசிவிஶேஷத்திலே அந்வயிக்கும்பக்தி; இருவர் பக்கலிலும் அநுஷ்டாநம் ஸமாநமாயிருக்கச்செய்தே ஹேதுவைஷம்ய முண்டாயிருக்கும். ஸாதநத்வபுத்தி அநுவர்த்திக்கு முபாஸகனுக்கு ஸாத்யத்வ புத்தி அநுவர்த்திக்கும் ப்ரபந்நனுக்கு, விஹிதகர்மாநுஷ்டாநத்துக்கு முக்யாதிகாரி விதியஸாதநநிஷ்டன். ஸாத்யாந்தரநிஷ்டன் ஸ்வா

மாதிஸாதநமாக நினைத்திருக்கும்; ஸாதநாந்தரநிஷ்டன் மோக்ஷஸாதநமாக நினைத்திருக்கும்; ஸித்தஸாதநநிஷ்டன் ஸ்வயம்ப்ரயோஜநமாக நினைத்திருக்கும்; நிவ்ருத்திரூபமானப்போலேயாய் த்யாகத்திலந்வயமில்லாதபோது ஸ்வீகாரத்தில் அநந்வயத்தை ஸூசிப்பிக்கிறது. ஆக, இரண்டுபதமும் த்யாஜ்ய பௌஷ்கல்யத்தையும் த்யாக பௌஷ்கல்யத்தையும் சொல்லுகிறது.

மேல்பதம் ஸ்வீகார்ய ஸ்வரூபத்தைச்சொல்லுகிறது. (மாம்)— த்யாஜ்யங்களான தர்மத்திற்காட்டில் ஸ்வீகார்யமான தர்மத்துக்குண்டான வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. அவை, ஆஶ்ரயதர்மங்களுமாய் அநித்யங்களுமாய் அநேகங்களுமாய் ஸாத்யங்களுமாய் துர்லபங்களுமாய் ஸ்வரூபவிரோதிகளுமாய் ஸாபேக்ஷங்களுமாய் அசேதநங்களுமாய் ஸாபாயங்களுமாய் துர்லபப்ரமாணங்களுமாய் அஶக்தங்களுமாய் அதிக்ருதாதிகாரங்களுமாய் விளம்பிதபலப்ரதங்களுமாயிருக்கும்; இது, ஸாக்ஷாத்தர்மமுமாய் நித்யமுமாய் ஏகமுமாய் ஸித்தமுமாய் ஸுலபமுமாய் ஸ்வரூபாநுரூபமுமாய் நிரபேக்ஷமுமாய் சேதநமுமாய் நிரபாயமுமாய் ப்ரபலப்ரமாணமுமாய் ஶக்தமுமாய் ஸர்வாதிகாரமுமாய் அவிளம்பிதபலப்ரதமுமாயிருக்கும். வாக்யத்வயத்தில் ப்ரதம பதத்திற்சொன்ன அர்த்தவிஶேஷங்களெல்லாம் இவ்விடத்தே அநுஸந்தேயம். அதாகிறது - ஸ்ரீய:பதித்வமும், வாத்ஸல்யாதிகுண சதுஷ்டயமும், திவ்யமங்கள விக்ரஹமும் (ஏஷநாராயணஸ்ரீமாந்) என்று க்ருஷ்ணஸ்ரீய்வந்த வதீர்ணனானவன் ஸ்ரீய:பதியாகையாலே, பூர்வாபராதக்ஷாபணம்பண்ணி புருஷகாரபூதையாய் நின்று சேர்ப்பிக்கக்கடவ பெரியபிராட்டியாரோட்டைச்சேர்த்தி அநுஸந்தேயம்; அதர்மபூயிஷ்டியாலேஸ்வதர்மத்தில் நின்றும் நிவ்ருத்தனாய் அஸ்தாந ஸ்நேஹகாருண்ய தர்மாதர்மபீதியாகுலனான அர்ஜுநனுக்கு பூஹூத்ஸிதங்களான ஸ்வஸ்வரூபாதிகளைத் தன்பேறாக வருளிச்செய்கையாலே, வாத்ஸல்யமநுஸந்தேயம்; (மத்த:பரதரம்நாந்யத்) இத்யாதிகளாலே தன்னுடைய ஸர்வஸ்மாத்பரத்வத்தைப் பலவிடங்களிலு மருளிச்செய்தவளவன்றிக்கே, அர்ஜுநன்தான் பலப்ரகாரங்களாலும் அபரோக்ஷிக்கும்படி பண்ணுகையாலே, ஸ்வாமித்வமநுஸந்தேயம்; (ஹேக்ருஷ்ணஹேயாதவஹேஸகேதி) என்று இவன்றானே சொல்லும்படி தேவதேவனான தன்னுடைய உத்கர்ஷத்தையும் இவனுடைய நிகர்ஷத்தையும் பார்த்து நெகிழவிடாதே இவனோடே ஏகரஸனாய்க்கலந்து பரிமாறுகையாலும்,

(அந்யேதீருஷீத்வாதுரமஸ்யவைந்யாந்) இத்யாதியிற் சொல்லுகிறபடியே இவனுக்கிழிதொழில் செய்கையாலும், ஸௌஸீல்யமநுஸந்யேயம்; அப்ராக்ருதமான திவ்யமங்களவிக்ரஹத்தை சக்ஷுர்விஷயமாம்படி பண்ணுகையாலே, ஸௌலப்ய மநுஸந்யேயம்; (கம்ஸீரஷீமவம்ஸீரஷீம, ரஸோஸவைஸ:-ரஸம்ஹ்யேவாயம் லஸீஸீவாநந்தீஹவதி,ஸோஸீநுதேஸர்வாந்காமாந்ஸஹ) என்று சொல்லுகிறபடியே நிரதிஸயபஹோக்யங்களான ஸ்வரூபரூபகுணங்களை பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்க வெண்ணாதபடியான (நவநியமிதகண்டஞ்பாண்டவஸ்யந்தநாஸீவாநநுதிநமஹிஷிஞ்சநஞ்ஜலிஸ்ஸுஃபயோஷி: அவதுவிததமாத்ரஸ்தோத்ரஸம்ஸ்யூத மௌளிர்ஜஸந விஸீருதரஸீமிர்ஜேவகீ புண்யராஸி:, அந்யேதீருஷீத்வாதுரமஸ்ய வைந்யா பார்யார்யாதீயமாயு: ருக்மணீ க்ருஷ்ணஜந்மநீ, போதார்தாமரையாள் இத்யாதி) ஹோதீயதாப்ர கர்ஷத்தை யுடைத்தாய், அவற்றிற் காட்டிலும் திருவுள்ளத்துக்கு மிகவும் அபிமதமாய், இச்சாதீருஷீதமாய், அனந்த நாய்ச்சிமாரையும் (அகலகில்லேன்) என்னும்படிபண்ணக்கடவதாய், அப்ராக்ருதமாய், அகாலகால்யமாய்,(யுவாகுமார:, அரும்பினையலரை) என்கிறதிருமேனியையும், சென்னிநீண்முடி)என்றும்(ஸ்ஃபுரத்கிரீடம்)என்றும்,(மெய்யமர்பல்கலன்)என்றும்இத்யாதியிற்சொல்லுகிறபடியேகிரீடாதிநூபுராந்தமாக அஸங்ஸேயமாயிருக்கிறதிவ்யாபரணவர்கத்தையும்,(ப்ரியோஹிமே)என்று தானருளிச்செய்தபடியே தனக்குப்ரியவிஷயமான அர்ஜுனனுக்கு யஸாவத்ப்ரகாஸிப்பித்தபடியை மாம் என்று நிர்தேஸிக்கிறுன். ஆகையலே திவ்யமங்களவிக்ரஹமநுஸந்யேயம்.—(க்ருஷ்ணம்யர்மம்ஸநாதநம், ஸரண்யம் ஸரணஞ்சத்வாமாஹு:, அமிர்தம் ஸாயநம். ஸாஸீயம், யோமோயோமவிஷாந்நேதா, வைப்பாம்மருந்தாமடியனை வல்வினைத்-துப்பாம்புலனைந்துந்துஞ்சக்கொடான்யவன்-எப்பால்யவர்க்கும்நலத்தாலுயர்ந்துயர்ந் - தப்பாலவனெங்களாயர்கொழுந்தே) என்றும் இத்யாதியிற்சொல்லுகிறபடியே, ஸநாதநயர்மஸீஸீய ஸாயநஸ்வரூபஞ் சொல்லுகிறது.

ஏகம்—இவ்வுபாயவிஸேஷத்தைச் சொல்லுகிறவிடத்திலும் அவயாரண ப்ரயோகமுண்டாகையாலே, உகாரம்போலே இந்த ஏகஸஸீமும் ஸ்யாநப்ரமாணத்தாலே அவயாரண வாசகமாயிருக்கிறது. (மாமேவயேப்ரபத்யந்தே, தமேவஸரணம்மச்ச) என்றும் இத்

யாஜ்யான ப்ரபத்தி ப்ரகரணத்திலேதானே ஸாவதாரணமாக வருளிச்செய்தானிறே. (சரணேசரண்) என்றும் (நின்பாதமேசரணாக) என்றும் இத்யாதியாலே ஆழ்வாரருளிச்செய்தார். இது தனக்கு உபாயாந்தரங்கள் வ்யாவர்த்ய மாகமாட்டாது, பௌநருக்த்யம் ப்ரஸங்கிக்கையாலே. அநேகம் ஔஷதங்கூடி ஒன்றாக வேண்டுமாப்போலே அனேகங்கூடி ஒரு ஸாதநமாக வேண்டு முபாயாந்தர வ்யாவ்ருத்தி ஏகவசநத்தாலே சரிதார்த்தம். ஜேவதாந்தர வ்யாவ்ருத்தபரத்வம் சொல்லவொண்ணாது. உக்தரதோநிரஸ்த மாகையாலே. மத்யமபுருஷனில் ப்ரதிபாத்யமான ஸித்தஸாதந ப்ரதிபத்தியில்ஸாதநத்வ புத்தி வ்யாவர்த்தியாக மாட்டாது, ஸாதநத்துக்குயோக்யதை யில்லாமையாலே. உண்டாகில் உபாயாந்தரதுல்யத்வம் ப்ரஸங்கிக்கும். யோக்யதாவையர்த்தில் இதஃ பூர்வமேவகார்யகரத்வம் ப்ரஸங்கியாதோ வென்ன வொண்ணாது. அகார்யகரத்வம் அதிகார்யஸாவப்ரயுக்தமாகையாலே, அதிகாரிஸாபேக்ஷத்வம்ஜோஷாயவன்று. ஆகையாலே ஏகபதம் நிரர்த்தகமாக விருந்ததே யென்னில்; உபாயாந்தரமும் ஜேவதாந்தரமும் அநேகமும் வ்யாவர்த்யமன்றே யாகிலும் ஸித்த ஸாதநத்தில் ஸாதநத்வ புத்தி வ்யாவர்த்ய மாகலாம், அந்வயவ்யதி ரேகத்தாலே ஸாதநமென்று நினைக்கலா யிருக்கையாலே. ஆனால் ஸாதநத்வம் ப்ரஸங்கியாதோவென்ன வொண்ணாது, ஸாதநத்வ முண்டாம்போது உபாயாந்தரவ்யாவ்ருத்தி குலைகையாலே. ஆனாலும் ப்ரபத்தி அபேக்ஷிதை யாகையாலே ஸித்தஸாதநத்வ ஸங்கமுண்டாகாதோ வென்னில்; உண்டாகாது, உபாயம் நைரபேக்ஷ்யமாகையாலே. தஜேகோபாயத்வ ப்ரதிபத்தியாலே அதிகாரியினுடைய உபாஸகவ்யாவ்ருத்திக்கும் குறையில்லை. அதிகார்ய பேக்ஷையாலே யிதுக்குமுன்பு கார்யகரமின்றிக்கே போருகிறது, ப்ரார்த்தனையென்செய்யவென்னில், ஸமுக்ஷையிற்போலே இங்கு ப்ரார்த்தனையுண்டு. ஸமுக்ஷையில் புருஷார்த்தாஸித்யர்த்த மாகப்ரார்த்தநம் அபேக்ஷிதமாகக்கடவது. பாரதந்த்ர்யம் நித்யமாகிறவோபாதி பரதந்த்ரமான வஸ்துதான் சித்வஸ்து வாகையாலே, சைதந்யகார்யமான அந்தப்ரார்த்தநா விஶேஷமும் நித்யஸித்தமா யிருக்கும். இது த்யாஜ்யகோடியிலு மந்வயியாது, உபாயகோடியிலு மந்வயியாது. (அதுவுமவனதின்னருளே) என்கையாலே ப்ரபத்தி விஶேஷத்துக்கு உபாயகார்யத்வ முண்டித்தனையல்லது உபாயத்வமில்லை. ஈஶ்வரன் - உபாயமாகையாலே

இத்தை உபாயமென்ன வொண்ணாது. உபாயாங்கமென்ன வொண்ணாது, உபாயபூதமான ஈஶ்வரஸ்வரூபம் ஸித்தமாய் பரமசேதநமாய் ஸர்வஶக்தியுக்தமா யிருக்கையாலே. அங்கத்வம்கொள்ளில், ஈஶ்வரனுக்கு உத்பாத்யத்வாநித்யத்வாநேகரூபத்வங்களாதல் அசைதந்யாஸாமர்த்ய ஸாபேக்ஷதைகளாதல் உண்டாம். அப்போது, உபாயாந்தர வ்யாவ்ருத்திரூபமான ஸித்தத்வம் ஏகரூபத்வம்பரமசேதநத்வம் ஸர்வஶக்தியோகம்நைரபேக்ஷ்யம்துடக்கமான தர்மங்களும் குலையும். இவ்வுபாயவிஶேஷம் ஸ்வவ்யதிரிக்தமா யிருப்பதொன்றை ஸஹியாமையாலேயிறே ஆநுகூல்யஸங்கல்பாதிகளுக்கு உபாயாங்கத்வமுமின்றிக்கே அவகாதஸ்வேதம்போலே ஸம்பாவிதஸ்வபாவத்வமுண்டாகிறது. ப்ரபத்தவ்யகதங்களான ரக்ஷகத்வாதிகள்போலே ப்ரபந்நகதமான இப்ப்ரதிபத்தி விஶேஷம் ஸ்வரூபாநுபந்தியாய்க்கிடக்குமித்தனை. த்யாகத்துக்குஉபாயாந்தரபாவமுண்டாம்போதாய்த்துஇது உபாயத்திலந்தர்பூதமாவது. இவ்வதிகாரியினுடைய ஜ்ஞாநகார்யமாய், ராகப்ராப்தமாய், ஸ்வரூபநிஷ்டமாய், ப்ராப்யகோடிகடிதமாயிருக்குமத்தனை, பரித்யக்தங்களான தர்மங்கள்போலே ஸ்வீகார்யமான இந்த தர்மமும் ஸாதநமாகில் ஸாங்கமாக விருக்கவேண்டாவோவென்னில்; ஸாதநபூதங்களுக்கெல்லாம்ஸாங்கத்வநியமமில்லை. பக்தியோகத்திலேஅங்கஸாபேக்ஷதைகண்டோமென்னில்; அது ஸாதநத்வப்ரயுக்தமன்று, ஸாத்யத்வப்ரயுக்தம். இந்ததர்ம விஶேஷம் ஸநாதநதர்மமாகையாலே ஜ்ஞாநகர்மஸாத்யமான த்யாஜ்யதர்மம்போலே த்யாகஸ்வீகார ஸாத்யமாயிராது, ஆனால் ஈஶ்வரஸாபேக்ஷமா யிருக்கக் குறையென்னென்னில்; அதுவுமில்லை, ஈஶ்வரவ்யதிரேகமில்லாமையாலே. ஆனாலும் அங்கஸாபேக்ஷதை வேணுமென்னில்; அது உபாயாந்தர்பூதம். ஸித்ததர்மம் போலே ஸாத்யதர்மமு மாகாரத்வயவிஶிஷ்டமாயிருக்கும், இதில் ஸாத்யதர்மத்தில் ஓராகாரம்த்யாஜ்யமாயும்ஓராகாரம்உத்தேஶ்யமாயுமிருக்கும், ஸித்ததர்மத்திலிரண்டு முத்தேஶ்யமாயிருக்கும்.

ஶரணம்—கீழ் ஸ்வீகார்யவஸ்துவைச் சொல்லிற்று; இது ஸ்வீகார ப்ரகாரத்தைச்சொல்லுகிறது. த்வயத்தில்ஶரணஶப்தம்போலே இதுவும் உபாயவாசகமா யிருக்கிறது. (ஸர்வதர்மாந்பரித்யஜ்ய) என்கிறதுக்கு அநந்தரமாக ப்ரயுக்தமான ஶரணஶப்தமாகையாலே ரக்ஷிதாவைச் சொல்லுகிறதாகமாட்டாது, உபாயாந்தர பரித்யா

மத்துக்கு பஶ்சாத்பாவியாய் பாபவிமோசநத்துக்கு பூர்வபாவியாயி ருக்கையாலே உபாயவாசகமாமித்தனை. இவ்வஸ்துவுக்கு ப்ராப்யத யாஸ்வீ கார்யத்வமும் ப்ராபகதயாஸ்வீ கார்யத்வமுமுண்டு. இதில் ப்ராப்ய தாஸ்வீகார்யத்தை வ்யவச்சேதிக்கிறது. ப்ராபகஸமயத்திற் போலே ப்ராப்யஸமயத்திலும் ப்ராபகாந்தர பரித்யாகம் ஸமாகமா கையாலே, தத்விஶிஷ்டமேயாகிலும் ஸ்வீகாரமாத்ரம் வ்யவச்சேதி க்கமாட்டாதென்றும் சொல்லுவர்கள். ஆக, ஶரணஶப்தம் இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்டநிவ்ருத்திக்கும் அவ்யவஹிதமானஸாதநபாவ த்தைச்சொல்லுகிறது.—வ்ரஜ—கீழ் ஸ்வீகாரப்ரகாரத்தைச் சொல் லிற்று; இதில் ஸ்வீகாரத்தைச் சொல்லுகிறது. கீழ்பரித்யாஜ்யங்களா கச் சொல்லப்பட்ட தர்மங்கள் ஸநாதநதர்மவ்யதிரிக்த தர்மங்களாகை யாலும், இந்த தர்மந்தான் அவற்றில் அந்தர்பூதமானாலும் (த்யஜ்ய, வ்ரஜ) என்கிற விது அர்யத்யாகம் பு்யீயித்யாகம் ஸ்வீகாரம் பரித்யாகவிஷயமாவது மோக்ஷஸாதநத்வ வேஷமன்றிக்கே ஸாதநா ங்கத்வமாகையாலும் ஸர்வதர்மபரித்யாக ப்ரதிபாதநத்துக்கும் ஸித்த தர்மஸ்வீகார விதாநத்துக்கும் பரஸ்பரவிரோதமில்லை. வ்ரஜ என்றது - (பு்யீயஸ்வ) என்கிறபடி, அநத பு்த்தியாகிறது - த்யாஜ்ய கோடிலுத்தீர்ணமாய், உபாயகோடியில் அநநுப்ரவிஷ்டமாய், ப்ராப காந்தரபரித்யாக பூர்வகமாய், பகவத் ரக்ஷகத்வாநுமதிரூபமாய், சை தந்யகார்யமாய், ப்ரார்த்தநாகர்பமாய், பகவந்முகவிகாஸஹேதுவாய் ஸ்வரூபாநுரூபமாய், வ்யபிசாரவிளம்ப விதூரமா யிருப்பதொரு அயீயவஸாயாத்மக ஜ்ஞாநவிசேஷம். இதில் ஸாரம்பம் விஸ்ரம்ப விசேஷமென்றும் விஸ்ரம்பவிதூரமானபோது அகார்யகரமென்னு மிடமும் த்வயத்திலே சொன்னோம்; உபாயாந்தர பரித்யாக பூர்வகத் வமும், ஸ்வஸ்மிந் உபாயத்வப்ரதிபத்தி ராஹித்யமும், வாத்ஸல்யாதி குணவிஶிஷ்ட வஸ்துவிஷயத்வமும் துடக்கமானவை, இப்ப்ரதிபத் தி விசேஷத்துக்கு ஸ்வரூபம். (மாமேகம்ஶரணம்வ்ரஜ) என்கிறது தானே ப்ரமாணம். பரித்யக்தஸாயீய ஸாதநனாய் ஸ்வீகாரத்தில் உ பாயத்வப்ரதிபத்திக்கு அயோக்யனாயிருக்கு மவனிதுக்கதிகாரி. இந் தமதிவிசேஷம் ஏககரணயுக்தமாகவுமாம். இதிலுபாயத்வமில்லாமை யாலே பலத்துக்கு வ்யபிசாரமில்லை யென்னுமிடமும் த்வயத்திலே சொன்னோம். த்வயத்திலே சொன்னோமென்றது - தனித்வயத்திலே, வெள்ளைப்யாதி குணவிஶிஷ்டவஸ்து மோசரத்வமிரண்டிலுமுண்டு. த்யாகவிஶிஷ்டத்வமும் நைரபேக்ஷ்யமு மிங்கு அதிரிக்தமானவர்யம்.

ஆக, பூர்வார்த்தத்தாலே - த்யாஜ்யஸ்வரூபத்தையும், தத்விவாஹாஸ்யத்தையும், த்யாகத்தையும், தத்ப்ரகாரத்தையும், அதினுடைய அங்கத்வத்தையும், ஸ்வீகார்யவஸ்து ஸ்வரூபத்தையும், இதினுடைய நைரபேக்ஷ்யத்தையும், ஸ்வீகாரப்ரகாரத்தையும் ஸ்வீகாரத்தையும் சொல்லிற்று.

இனிமேல், ப்ரபத்தவ்யக்ருத்யத்தையும், ப்ரபந்நக்ருத்யத்தையும்சொல்லுகிறது. விரோதிநிவர்த்தகத்வம் ப்ரபத்தவ்யக்ருத்யம், நிர்ஹரத்வம் ப்ரபந்நக்ருத்யம். அஹம்— ஸர்வஜ்ஞத்வாதிகுணவிஶிஷ்டனான நான். கீழ், உபாயபரிக்ரஹத்துக்கு ஏகாந்தங்களான குணவிஶேஷங்களைச்சொல்லிற்று; இங்கு, கார்யகரத்வத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்களைச் சொல்லுகிறது. வாத்ஸல்யாதிக ளில்லாதபோது உபாயபரிக்ரஹமின்றிக்கே யொழியுமாப்போலே, ஜ்ஞாநாதிகளில்லாதபோது கார்யகரமன்றிக்கே யொழியும். அசித்தும் சேதநனும் சேதநாந்தர்யாமித்வமும் பரத்வமும் வ்யூஹமும் துடக்கமானவைகளல்ல வ்யாவர்த்யம் விபவாந்தரங்களும் இவ்விபவந்தன்னில் முன்னும் பின்னும் வ்யாவர்த்யம். தேஹேந்த்ரியமந: ப்ராணாதிகளிலே ஆத்மபுத்தி பண்ணியிருக்குமவனுடைய அஹம்ஶப்தப்ரயோகம் தத்தத்வஸ்துமாத்ரபர்யவஸிதமாயிருக்கும்; தேஹாதிவ்யதிரிக்தவஸ்துமாத்ர விஷயஜ்ஞாநவானுடைய அஹம்ஶப்தப்ரயோகம் சேதநபர்யவஸிதமாயிருக்கும்; ஈஶ்வரனுடைய அஹம்ஶப்தப்ரயோகம் உபயவ்யாவ்ருத்தமாயிருக்கும். ஜ்ஞாநமும் ஶக்தியும் ஶேஷித்வமும்பூர்த்தியும் இவ்விடத்தே அநுஸந்தேயம். இவையில்லாதபோது மேல்சொல்லுகிற விரோதிநிவ்ருத்திகூடாது. இங்கு ஶக்தியாக நினைக்கிறது, (யானுமிசைந்து) என்றும் (இசைவித்தென்னை) என்றும் சொல்லுகிறபடியே சேதநனுடைய அவிவாதிஜநநத்துக்கும் ஸம்ஸாரவிமோசநத்துக்கு மடியான ஸாமர்த்யத்தை, இத்தைப்பற்ற, ப்ரளயாபத்விமோசநமும், ஸர்வஸௌலப்யமும், ஸர்வவஸ்துக்களிலும் பரிஸமாப்யவ்யாபநவ்ருத்தியும் துடக்கமானவை அத்யந்தஸாதகங்ளென்னும்படியிருக்கும். இதில் சொல்லுகிற குணவிஶேஷங்கள்சேதநனுடைய அநந்யஸாதநத்வத்துக்கும் ஈஶ்வரனுடையஃபலப்ரதாத்ருத்வத்துக்கும் உபயுக்தங்களாயிருக்கும். (மாம்)என்று-(உபீருதரயிசரணௌ (என்கிறபடியே இவன்கால் தன்றலையிலேபட நிற்கும் நிலையைச்சொன்னன்; அஹம் என்று - தன்கால் அவன்தலையிலே பட நின்றநிலையைச்சொல்லுகிறுன். (தேர்மன்னர்க்காயன்று தேரு

ர்ந்தாளுகிலும் - தார்மன்னர் தங்கள் தலைமேலான்சாழலே) என்றதிறே. (மாம) என்று-கையுமுழவுகோலுமாய் நின்றவேஷத்தைக்காட்டினான்; அஹம் என்று - கையுந்திருவாழியுமாய்நின்றவேஷத்தைக்காட்டுகிறான். செழுந்தார்விசயனிறே. (பற்றலர்வீயக்கோல்கையிற்கொண்டு, சங்கொடுசக்கரமேந்துந்தடக்கையன்) என்றானின்றதிறே. (மாம்) என்றுயர்மங்களைக் குலைக்கும் நிலையைக்காட்டினான்; அஹமென்று-அயர்மங்களைக்குலைக்கும் நிலையைக்காட்டுகிறான். மாம்என்கிறது உக்திக்கு விபரீதமான நிலையை; அஹமென்கிறது - அநுஷ்டாநத்துக்கு விபரீதமான நிலையை.

(த்வா)—ஸாத்யஸாதநங்களை ஸவாஸநமாகத்யஜித்து ஸித்தோபாய ஸ்வீகாரம்பண்ணியும், தேஹாத்மப்ரமந்தன்னையும், தேஹாத்யுத்தீர்ணமான ஆத்மவஸ்துவில் ஸ்வாதந்த்ர்யபுத்தியையும், அந்யஶேஷத்வ ப்ரதிபத்தியையும் தச்சேஷத்வமாத்ர புத்தியையும், ஸாத்யாந்தரங்களில் ஸாத்யதாபுத்தியையும், ஸாதநாந்தரங்களில் ஸாதநத்வபுத்தியையும், ஸித்தோபாய ஸ்வீகாரத்தில் உபாயத்வபுத்தியையும் க்ஷுத்ரஸாத்யங்களகப்பட ப்ரவ்ருத்தி ஸாத்யமாயிருக்க துர்லபமான மோக்ஷபுருஷார்த்தத்துக்கு நிவ்ருத்திஸாத்யத்வம் அவடிதமென்கிற புத்திவிஶேஷம் துடக்கமானவற்றையும் ஸவாஸநமாக த்யஜித்திருக்கிறவுன்னை. கீழ்ப்பதத்தில் ஈஶ்வரஸ்வரூபஞ்சொல்லிற்று; இப்பதம் அதிகாரிஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறது. அங்கு, ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களும் ப்ராப்தியும்நைரபேக்ஷ்யமும்சொல்லப்பட்டது; இங்கு, அஜ்ஞாநாஶக்திகளையும் அப்ராப்திகளையும் ஆகிஞ்சந்யத்தையும்சொல்லுகிறது. ஸ்வீகாரத்தில் உபாயபுத்தியிலுமகப்படச் சோம்பியிருக்கிறவுன்னை. இந்தப்ரதிபத்திவிஶேஷத்திலும் உபாயபுத்தி அநுவர்த்திக்குமாகில் உபாயாந்தரதோடொக்குமித்தனை ஈஶ்வரனேஉபாயமென்கிற அத்யவஸாயவிஶேஷத்தில் ஸாதநத்வபுத்தியும் அஸக்ருத்கரணமுமுண்டானபோது, ததேகோபாயத்வமில்லை. ஆக எல்லாங்கூட, த்யாகஸ்வீகாரவிஶிஷ்டனான வுன்னையென்றபடி. (ஸர்வபாபேப்யஃ) கீழ் நிவ்ருத்திக்கேகாந்தமான குணவிஶேஷங்களைச்சொல்லிற்று; இது நிவர்த்யஸ்வருபத்தைச் சொல்லுகிறது. பாபமாகிறது. இஷ்டவிரோதியாயிருக்குமதும், அநிஷ்டஹேதுவா யிருக்குமதும். மோக்ஷப்ரகரணமாகையாலே இவ்விடத்தில்இஷ்டவிரோதிகளாகிறன-ஹமவல்லா

ஹவிரோதிகள். ஜ்ஞாநவிரோதியும் ருசிவிரோதியும் உபாயவிரோதியும் பண்டே நிவ்ருத்தமாய்த்து, இனிப்ராப்திவிரோதியிறேயுள்ளது; அத்தைப்ரதிபாதிக்கிறதிப்பதம். (புண்யபாபேவிதூய) என்றும் (சார்ந்தவிருவல்வினைகளும்சரித்து) என்றும் இத்யாதிகளிலே-பாபத்தோபாதி புண்யமும் த்யாஜ்யமாகச்சொல்லிற்றிறே; ஆகையாலே, புண்யபாபங்களிரண்டையும் பாபஶப்தத்தாலேசொல்லுகிறது. பஹுவசநத்தாலே-அவற்றினுடைய பாஹுள்யத்தைச்சொல்லுகிறது. அதாவது - (பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்) என்கிறபடியே-அஜ்ஞாநந்துடங்கி ஶரீரஸம்வந்த மெல்லையாக வுண்டானவை. ஸர்வஶப்தத்தாலே - (ஸர்வதர்மாந்பரித்யஜ்ய) என்று த்யாஜ்யங்களாக விஹிதங்களாய் ஹேதுயபுத்த்யா அநுஷ்டேயங்களாயிருக்கிற தர்மங்களில் உபாயத்வபுத்தியையும் அபுத்திபூர்வகமாக அநுஷ்டிதமான உத்தராவத்தையும், ப்ராரப்தத்தையும், லோகஸங்க்ரஹார்த்தமாக வநுஷ்டேயங்களான தர்மவிஶேஷங்களில் ஸ்வார்த்ததா புத்தியையும், ஆவ்ருத்த ப்ரபத்தியையும் ஹடவத்ஹாஸவதவிஷயங்களில் உபசாரபுத்தியாபண்ணும் அபசாரங்களையும், பரி என்கிற உபஸர்க்கத்தாலும் ஏகஶப்தத்தாலும் சொன்னவற்றினுடைய அநுவர்த்தியையும்சொல்லுகிறது. அதிகாரிகுறையாலேயாதல் உபாயஹேதனை ஈஶ்வரன்குறையாலேயாதலிறே பாபங்களில் சிறிதுகிடப்பது. உபாயாந்தர பரித்யாகமும் ஸித்தோபாயபரிக்ரஹமும் புஷ்கலமாகையாலே, அதிகாரிபக்கல் குறையில்லை; ஜ்ஞாநஶக்த்யாதிபுஷ்கலமாகையாலே, உபாயஹேதனை ஈஶ்வரன்பக்கல்குறையில்லை—மோக்ஷயிஷ்யாமி--ஸ்ரீபூல்மூன்றுபதமும், நிவர்த்தகஸ்வரூபத்தையும் நிவர்த்யாஶ்ரயத்தையும் தத்வாஹுள்யத்தையும்சொல்லிற்று; இந்தபதம், நிவ்ருத்தியையும் நிவ்ருத்திப்ரகாரத்தையும் சொல்லுகிறது (*சும்மெனுதேகைவிட்டோடித்தூறுகள்பாய்ந்தனவே) என்கிறபடியே - அநாதிகாலஸஞ்சிதங்களான கர்மவிஶேஷங்களெல்லாம் உன்னைக்கண்டுகூசி தானேவிட்டுப்போம்படி பண்ணுகிறேன். (வாளேமறிகடலோ) என்றும் (யானுமென்னெஞ்சுமிசைந்தொழித்தோம) என்றும்சொல்லுகிறபடியே- வேறுசிலருடைய விசைவுகொண்டு பஹுப்ரயாஸத்தாலே போக்கவேண்டாதே, தன்னடையே விட்டுப்போம்படிபண்ணுகிறேன். பூர்வாவத்தோடு உத்தராவத்தோடு வாசியறப்ரதிவந்தகங்களெல்லாம், அதிநிஸ்பரு

* சும்மெனாதே - மூச்சுவிடாதே.

ஷ்டமான இஷீகதூலம்போல (ஆயர்குலத்தினில்தோன்றும்மணிவிளக்கை)க்கிட்டினல் (தீயினில்தூசாகும்) என்கிறபடியே பிணமுங்காணவொண்ணுதபடி ஊதீயமாய்ப்போமிறே. பாபங்கள்க்ஷணயீவம்ஸிகளாகையாலே அப்போதேநசித்துப்போம்; அஜ்ஞனுகையாலே கர்த்தாவானவிவன் மறந்துபோம்; ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனனவீஶ்வரன் ஒன்றொழியாமேயுணர்ந்துகொண்டிருந்து ப்ராப்த காலங்களிலே ப்ராப்தஃலங்களைத்தப்பாமேநிறுத்து அநுஃவிப்பிக்கும; ஆகையாலே கர்மங்களாகிறன - அவனுடையநிக்ரஹங்கள். இக்கர்மங்களைப்பண்ணிப்போருகிற சேதநன், ஃஸத்வம் தலையெடுத்து ஒருக்காலவன் றிருவடிகளிலே தலைசாய்த்தால், விலக்காமை பற்றுசாகரக்ஷணஸ்வஃாவனுயிருக்கும், ஈஶ்வரன் இவ்வளவும் பெற்றல்விடானிறே. ஆகையாலே, இவனுடைய பூர்வாவத்சைக்ஷமித்து உத்தராவத்தில் அவிஜ்ஞாதாவாயிருக்கும். இனியாரைக்கைக் கொண்டவைஜீவிப்பது. உணர்ந்தபோது இவன்பக்கல் வ்யாமோஹாதிஶயத்தாலே(நன்றுசெய்தார்) என்று அவைதன்னை ஞாணமாகக்கொள்ளும்; ஆகையாலே, இவ்வதிகாரிக்கு ஒருப்ரகாரத்தாலும் அநாதிகாலார்ஜிதங்களான கர்மவிஶேஷங்களைக்குறித் தஞ்சவேண்டா, (மோக்ஷயிஷ்யாமி) என்கிறவார்த்தை தப்பாது என்று விஶ்வஸ்தனுயிருக்கு மத்தனை வேண்டுவது, என்று நஞ்ஜீயரருளிச்செய்வர். (போர்த்தபிறப்பொடுநோயொடுமூப்பொடிறப்பவை - பேர்த்துப்பெருந்துன்பம் வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச் சேர்த்தியவன்செய்யுஞ் சேமத்தைஎண்ணித் தெளிவுற்று, தெளிவுற்றுவீவின்றி நின்றவர்க்கின்பக்கதிசெய்யும்) என்று - கீழருளிச்செய்த வார்த்தை யறிந்தவர்களுக்கு அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்தியன்றேஃலம், ஆயிருக்க அநிஷ்டநிவ்ருததிமாத்ரத்தையே ஃலமாகச்சொல்லுவானென், ஃஃவல்லாஃவியராமாக அநிஷ்ட நிவ்ருததிமாத்ரமே ஃலமாயிருப்பது ' கேவலனுக்கன்றே, முமுக்ஷுவானவிவ்வதிகாரிக்கு இரண்டும் ஃலமாய், அதுதன்னில் இஷ்டப்ராப்தி ப்ராதாநமான ஃலமாயிருக்கும். அத்தைச்சொல்லாதே தஅங்கதயா உபாஜேயமான ப்ரதிவந்யக நிவ்ருத்திமாத்ரத்தையே ஃலமாகச்சொல்லி விடுவானென்னென்னில்; விரோதிநிவ்ருத்தியும் ஃஃவத்ப்ராப்தியுமாகிற ஃலத்வயத்தை வைத்துக்கொண்டு ஒருஃலத்தைச்சொன்னல் ஃலாந்தரம் தன்னடையே வருகையாலே சொல்லிற்றில்லை. மாமேவைஷ்யஸிஸத்யந்தே என்று - கீழிலுபாயத்துக்குச்சொன்ன ஃலந்தானே இவ்வுபாயத்துக்கு ஃலமாய் வேறி

துக்கு ஃபலமின்றிக்கே யொழிகையாலே, ஃபலகதநம்பண்ணிற்றில்லை யென்னவுமாம். ஆனால்விரோதிநிவ்ருத்திதன்னைச்சொல்லுவானென்னென்னில்; (மாமேவைஷ்யஸி) என்று-ஸ்வப்ராப்திலக்ஷணமான ஃபலத்தையாய்த்து அங்குச்சொல்லிற்று; அதுக்குபூர்வபாவியாய்ப்ரதிபந்தகநிவ்ருத்தி பூர்வகமாயிருக்கிற ஃபலவிசேஷம் அங்கு அநுக்தமாகையாலே தாத்ருசமான ஃபலவிசேஷம் இவ்வதிகாரிக்கு அதிகமாகையாலும் இங்குச்சொல்லிற்று. இவனுக்கபிலஷிதமாய் ஸுகவஹ்நுஹவாதிரூபமாயிருக்கிறப்ரயோஜநஃபலம், திரோஹிதங்களாயிருக்கிற மணிதீபமணிதீபாதிகளினுடைய ப்ரகாசாதிகளைப்போலேஸ்வதஸ்ஸித்தமாய்ப்ரதிபந்தகநிவ்ருத்திஸாகாங்க்ஷமாயிருக்கையாலே நிவ்ருத்தப்ரதிபந்தகனானவிவனுக்குஸ்வதஏவஆவிர்பாவமாயிருப்பதொன்றாகையாலேதனித்துச்சொல்லவேண்டாவிறே. (வழித்தங்குவல்வினையை) என்றும (கண்ணபிரானைவிண்ணோர்கருமாணிக்கத்தையமுதை நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு) என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே - தேஹஸம்பந்த ப்ரமுகமான ப்ரதிபந்தகவர்கம் ஔபாதிகமாயிறேயிருப்பது; ஆகையாலே, வந்தேறியான விரோதிகழிந்தால் தன்னடையே வருகையாலே சொல்லிற்றில்லை. சரீரபாதஸமயத்தில் ஈச்வரஸ்ம்ருதிக்கு விஷயபூதனும்படியும், வாங்மநாதிலயப்ரகாரமும், உத்க்ரமணப்ரகாரமும், ஹார்தாநுக்ரஹகார்யமான மார்கவிசேஷப்ரகாசமும், ஹ்ருதயகுஹாநிர்கமமும், ஸூக்ஷ்மசரீரஸம்ஸர்கமும், அர்ச்சிர்வாஸரசுக்லபக்ஷோத்தராயணஸம்வத்ஸர வாயுபாஸ்கர சந்த்ரவித்யுத் வருணேந்த்ர ப்ரஜாபதிகளாகிற ஆதிவாஹிகர்களுடையசீலாவாவிசேஷங்கள், அண்டாவரணாதிக்ரமணமும், ப்ரக்ருதிலங்கநமும், விரஜாப்ராப்தியும், ஸூக்ஷ்மசரீரவிச்லேஷமும், அகாலகால்யதிவ்யதேசப்ராப்தியும், அபஹதபாப்மத்வாதிகுணகணப்ராதுர்பாவமும், ஸுகவத்ஸங்கல்பகல்பிததிவ்யதேஹப்ரவேசமும், அப்ராக்ருதஸம்பந்தமும, திவ்யாப்ஸரஸ்ஸங்கஸத்காரமும் அப்ராக்ருதமண்டலப்ராப்தியும் ஸுகவத்ஸௌரியாதிஸம்ஸர்கமும், அப்ராக்ருதகோபுரப்ராப்தியும், ஸூரிபரிஷத்ப்ரத்யுத்கமநமும், ராஜமார்ககமநமும், ப்ரஹ்மவேச்ம ப்ரவேசமும், ஸூரிபரிஷந்மண்டபப்ராப்தியும், ஸபத்நீகஸர்வேச்வரதர்சநமும், ஸூரிப்ரணமாஞ்ஜலிப்ரமுகஸம்ப்ரமாநுவர்த்தநமும் பரமாத்மஸமீப ப்ராப்தியும், பாதபீடபர்யங்காரோஹணமும், ஸுகவக்த்ஸங்கஸங்கமும், ஆலோகநாலாபாலிங்காதி ஸம்பவமும், ஸ்

வஸ்வரூப குணவிக்ரஹாத்யநுபவஜநித ப்ரீதிப்ரகர்ஷமும், நாநாவிதவிக்ரஹபரிக்ரஹபூர்வகஸர்வதேஶஸர்வகாலஸர்வாவஸ்தோசிதமான ஸர்வப்ரகார கைங்கர்யகரணமுமாகிற ப்ராப்திவிஶேஷங்கள் இதுக்கநந்தரத்திலே யநுஸந்தேயங்கள்.

மாஶுச:—கீழெல்லாங்கூட, ஶோகநிவ்ருத்திக்குவேண்டும் பரிஹாரங்களை விஸ்த்ருதமாகச்சொல்லிற்று; இப்பதம், ஶோகநிவ்ருத்தியைச்சொல்லுகிறது. ஸாதநாந்தர ஸம்பந்தமும், ஸுகரஸாதநாதர்ஶநமும், விரோத்யநுவ்ருத்தியுமிறே ஶோககாரணம். துஷ்கரங்களான ஸாதநாந்தரங்களை வாஸநாஸஹிதமாக த்யஜிக்கச் சொல்லுகையாலே, ஸாதநாந்தர நிபந்தநமாக ஶோகிக்கவேண்டா; க்ருபாதிகவத்ஸலனாய் ஸர்வஸ்வாமியாய் ஶீலவானாய் நிரபேக்ஷஸாதநபூதனாய் பரமகாருணிகனாயிருக்கிறதன்னை நிரபேக்ஷஸாதநமாக ஸ்வீகரிக்கச்சொல்லுகையாலே, ஸுஸாதநாதர்ஶநத்தாலே ஶோகிக்கவேண்டா; 'ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாய் அவாப்தஸமஸ்தகாமனாய் ப்ராப்தனாயிருக்கிறநான், ஸாம்ஸாரிகஸகலதுரிதங்களையும் ஸவாஸநமாகப்போக்கி, நிரதிஶயாநந்தயுக்தனும்படி பண்ணுகிறேன் என்கையாலே, விரோதிபாஹுள்யத்தை யநுஸந்தித்து ஶோகிக்கவேண்டா. உபாயஸ்வரூபத்தை யநுஸந்தித்தாலும் ஶோகிக்க யோக்யதையில்லை;, அதிகாரிஸ்வரூபத்தை யநுஸந்தித்தாலும்ஶோகிக்கயோக்யதையில்லை பலஸ்வரூபத்தை அநுஸந்தித்தாலும் ஶோகிக்கயோக்யதையில்லை;உபாயம் ஸுலபமாகையாலே உபாயத்தினுடைய துஷ்கரத்வ நிபந்தநமாக ஶோகமில்லை. அதிகாரிக்கு கர்த்தவ்யமில்லாமையாலே தந்நிபந்தநமாக ஶோகிக்கவேண்டா; ஸர்வபாபமோக்ஷத்தை பலமாகச்சொல்லுகையாலே பலஸ்வரூப ப்ரயுக்தமாக ஶோகிக்கவேண்டா; த்யாஜ்யங்களில் கிடப்பதொன்றில்லாமையாலே ஶோகிக்கவேண்டா; கர்த்தவ்யாகர்த்தவ்யமான ஸ்வவ்யாபாரமாத்ரமாகையாலே ஶோகிக்கவேண்டா; ப்ரதிபந்தகநிஶ்ஶேஷநிவ்ருத்தமாகையாலே தந்நிமித்தமாக ஶோகிக்க யோக்யதையில்லை. உபாயாந்தரஶ்ரவணத்தில் ஶோகியாதொழிகைக்குயோக்யதையில்லாதாப்போலே இவ்வுபாயஶ்ரவணத்தில் ஶோகிக்கயோக்யதையில்லை. ஸாதநாந்தர ஶ்ரவணத்தில் சோகாநுவ்ருத்தியும் ஜ்ஞாத்ருத்வ கார்யம். ஸித்தஸாதந ஶ்ரவணத்தில்

ஶோகாஹாவமும் ஜ்ஞாத்ருத்வ கார்யம் உபாயாந்தர ஶ்ரவணத்தில் ஶோகாஹாவமுண்டாய்த்தாகில் த்யாஜஸ்வீகாரங்களில் அந்வயமில்லை; ப்ரபத்த்யுபாய பரிக்ரஹத்துக்குப்பின்பு ஶோகாநுவ்ருத்தியுண்டாய்த்தாகிலும் த்யாஜஸ்வீகாரங்களிலந்வயமில்லை; ஸ்வாமிக்காய்த்து ஃபலித்வமுள்ளது; ஃபலியாயிருக்குமவனுக்காய்த்து உபாயாநுஷ்டாத்ருத்வமுள்ளது. ஸ்வாமிஸ்வமான வஸ்துவையிழந்தால்ஶோகிக்கும், ஃபலி ஃபலமில்லாதபோதுஶோகிக்கும், அநுஷ்டாதா அநுஷ்டாந விரோதம்பிறந்தால்ஶோகிக்கும்; மூன்றிலுமுனக்கந்வயமில்லாமையாலே ஶோகிக்கப்ராப்தியில்லை. முன்பு ஶோகித்திலனாகில் உபாயாதிகாரமில்லை, பின்பு ஶோகித்தானாகில் உபேயாதிகாரமில்லை. முன்பு ஶோகித்திலனாகில் உபாயாந்தர தோஷமறிந்திலனாம், பின்பு ஶோகித்தானாகில் உபாயகுணமறிந்திலனாம். ஶோகாநுவ்ருத்திக்கு ஹேது உபாயஜ்ஞாநம்.—ஶோகநிவ்ருத்தியையும், ஸர்வபாபவிமோசநத்தையும், அப்பாபங்களுக்காஶ்ரயமான சேதநனுடையஸ்வரூபத்தையும், அவற்றுக்கு நிவர்த்தகனான ஈஶ்வரனுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகுண விஶேஷங்களையும், அவைகார்யகரமாம்படிபண்ணக்கடவதாய் சேதநகதமாயிருக்கிற வ்யவஸாயவிஶேஷத்தையும், அதுக்கு அங்கபூதமான வ்யவஸாயாந்தரதத்பரிகரபரித்யாகத்தையும், அதுக்குயோக்யதாபாதகங்களான ததிதரங்களினுடைய த்யாகத்தையும்சொல்லித் தலைக்கட்டுகிறது.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பரந்தபடி

௩-வது த்வயப்ரகரணம்.

திருமந்த்ரத்தாலே ஸம்ஶிக்ஷிதமான பகவதநந்யார்ஹ ஶேஷத்வ ஜ்ஞாநத்தையுடையனாய், சரமஶ்லோகத்தாலே பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தி வ்யதிரேகேண விளம்ப வியஸாரமாய் ஸ்வரூபாநுரூபமாயிருப்பதொரு ஸாதநவிஶேஷமில்லையென்று நிர்ணயித்து

ப்ராபக ஸ்வீகாரபூர்வக ப்ராப்யத்தை லபிக்கவேணுமென்கிற கௌதுகத்தையுடையனுயிருக்கு மதிகாரிக்கு, ஸ்வசேஷத்வாநுரூபமான உபாயோபேயங்களை ப்ரதிபாதிக்கிறது த்வயம். ஜ்ஞாநத்துக்கு பலம் ததநுரூபமான வநுஷ்டாநமாகையாலே ரஹஸ்ய த்வயத்திலும் ப்ரதிபாதிதமான உபாயோபேய விஷயஜ்ஞாநம் அநுஷ்டாநசேஷமாயிறே யிருப்பது. ஆகையாலே உபாயவிஷய ஜ்ஞாநத்தினுடைய ஸாபல்ய ஹேதுபூதமான உபாயாநுஷ்டாநத்தை ப்ரதிபாதிக்கிறது பூர்வவாக்யம்; உபேயவிஷய ஜ்ஞாநஸாபல்ய ஹேதுவாயிருக்கிற உபேயாநுஷ்டாநத்துக்கு பூர்வபாவியாயிருக்கிற உபேயப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது உத்தரவாக்யம். இதில் ப்ரதிபாதிதமான உபாயாநுஷ்டாநமும் உபேயப்ரார்த்தனையு மில்லாதபோது இவ்வதிகாரிக்கு ஸாதகவ்யாவ்ருத்தியும் ஸாத்யாந்தரநிஷ்டாதி வ்யாவ்ருத்தியு மின்றிக்கேயொழியக்கடவது. ஆகையாலே, ஸ்வரூபாநுரூபமான ஸாதநஸாத்யங்களிரண்டையும் ப்ரதிபாதிக்கிறவாக்யத்வயமும் அநுஸந்தேயமாயிருக்கும். பூர்வவாக்யாநுஸந்தாநமில்லாதபோது ஸமவேக ஸாதநத்வலாபமில்லை; உத்தரவாக்யாநுஸந்தாநமில்லாதபோது ஸமவேகஸாத்யத்வலாபமில்லை உத்தரவாக்யாநுஸந்தாநம்ஸாதகனுக்கும்ஸாதாரணமாயிருக்கும்,பூர்வவாக்யாநுஸந்தாநம் அதிகாரித்வயஸாதாரணமாயிருக்கும்; ஆகையாலே, உபயாநுஸந்தாநமு முண்டானாலாய்த்து அதிகாரித்ரய வ்யாவ்ருத்தியுமுண்டாவது. வாக்யத்வயத்திலும்ப்ரதிபாதிக்கப்படுகிறஸாதநஸாத்யங்களையொழிந்த இதரஸாதந ஸாத்யங்களிரண்டுக்கும் ஸ்வரூபாநநுரூபத்வம் அவிசிஷ்டமா யிருக்குமாகையாலே, அவைத்யாஜ்யங்களாகக்கடவன; இவையிவனுக்கு ஸ்வரூபத்துக்கநுரூபங்களா யிருக்கையாலே அத்யந்த முபாதேயங்களாகக் கடவது ஸ்வரூபாநுரூபமாயிருக்கிற இந்த உபாயோபேயங்களிறேவேததாத்பர்ய விஷயம். (தஸ்மாதபிவர்யம் ப்ரபந்நநப்ரதிப்ரயச்சந்தி, தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:, ந்யாஸஏவாத்யரேசயத், யோப்ரஹ்மாணம், தமேவசரணம்வ்ரஜ:, ஸக்ருதேவப்ரபந்நாய, பர்யாஞ்ஜலிபுடம், மஹத்யாபதிஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்ய:, நமஸ்சக்ருர்ஜநார்தநம், அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே, யேநயேநயாதாகச்சதி, அநுஸஞ்சரந், அஹம்ஸர்வம்கரிஷ்யாமி,க்ரியதாமிதிமாம் வத,தந்நியுக்த: கரிஷ்யாமி) என்று இத்யாதிகளிற் சொல்லுகிற

படியே-இந்த உபாயோபேயங்கள்தான் ஶ்ருதிஸ்ம்ருதிசிஹாஸபாஷ்யங்களானவளவன்றிக்கே, (கழல்களவையே சரணாகக்கொண்ட, நாகணைமிசைநம்பிரான்சரணேசரண், அடிக்கீழமர்ந்துபுகுந்தேனே, நாயேன்வந்தடைந்தேன், உலகமளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன், த்வத்பாதமூலம்ஶரணம் ப்ரபத்யே, அநந்யஶரணஶ்ஶரணமஹம்ப்ரபத்யே, வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம், அடியேனையாட்கொண்டருளே, ஐகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி, நித்யகிங்கரோஹவாநி) என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே-ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அநுஷ்டித்ததும் ப்ரார்த்தித்ததும் இவற்றையே யாகையாலே, நமக்கு மிவையே உபாஷேயங்கள். ப்ராமாணிகத்வ முண்டேயாகிலும்ஆசார்ய ருசிபரிக்ருஹீத தத்வ மில்லாத போது ஆதரணீயத்வமில்லையிறே. ப்ராமாணிகத்வ முண்டாயிருக்கச் செய்தேயும், ஶிஷ்டர்களுடைய அநுஷ்டாநராஹித்யத்தாலேயிறே அஷ்டகையில்பஶுவிஶஸநம் அகர்த்தவ்யமாகிறது. (ஆசார்யவாந்புருஷோவேத, ஸவதஃ பரமோமதஃ, யர்மஜ்ஞ ஸமயஃ ப்ரமாணம். ஆசார்யநிஷ்டா மந்விஷ்ய) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே-ஆதரணீயதைக்கு ப்ரயோஜநஹேதுவான ஆசார்யருசிபரிக்ரஹம் இவற்றுக்குக்கனத்திருக்கையாலேஇவையேஆதரணீயங்கள்.பிள்ளை, ஜீயரை, 'ப்ரபத்திக்கு ருஷிஹ்ருந்தோதேவதாதிகள் அநுஸந்தேயங்களன்றிக்கே யொழிவானென்,ப்ரமாணம்சுருங்கியிருப்பானென்.அதிகாரிசுருங்கி யிருப்பானென்' என்றுகேட்க;'இதிலர்த்தத்துக்குக் கூட்டுவேண்டிலன்றோ இதுக்குக்கூட்டுவேண்டுவது, (ருஷ்யாதீம்ஶ்சகரந்யாஸமந்ந்யாஸஞ்சவர்ஜயேத்) என்றதிறேப்ரமாணம, (யோஸ்ரஹ்மாணம்விதயாதிபூர்வம்,நாராயண பரம்ஸ்ரஹ்மத த்வம்நாராயணஃபரஃ||, ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்சபத்ந்யள, தஸ்மாந்ந்யாஸமேஷாம்தபஸாமதிரிக்தமாஹு:. ந்யாஸஇத்யாஹுர்மநீஷிண:)ஏவமாதிப்ரமாணங்களுமுண்டு. என்பக்ஷத்தாலிதுக்கு ப்ரமாணாபேக்ஷையில்லை; ஸம்ஸாரிகீழ்கழிந்ததுமறியான், மேல்வருவதுமறியான்; வர்த்தமானத்திலும் ஸ‍ந்தாம்ஶமறியான், ஸவிஷ்யதம்ஶமறியான், இதிவன் நிலை; (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்,ஆநந்தோஸ்ரம்ஹ, ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸள)என்று நிர்தோஷப்ரமாணத்தாலேகேட்டிருக்குமீஶ்வரன்படியை. இருவர்ஸ்வபாவமும் ப்ரத்யக்ஷத்தாலும் நிர்தோஷஶாஸ்த்ரத்தாலும்அறிந்தபின்பு அவனையிவன்பற்றுகைக்கு(நிதீத்யாஸிதவ்யஃ என்றாப்போலே ஒருவிதிவேணுமோ, இந்நவநடையும்

க்கக்கேட்கையாலும், 'உபாயாந்தரங்களுக்கும் நானேப்ரவர்த்தகன், என்றருளிச்செய்யக்கேட்கையாலும். இந்த்ரியப்ராபல்யத்தை அநுஸந்தித்து அஞ்சுகையாலும், எல்லாவவஸ்தையிலும் ப்ரபத்தியையொழிய உபாயமில்லையென்னுமிடம் நிழலெழும்படி யருளிச்செய்யக்கேட்கையாலும், உபாயாந்தரங்கள் அநேகதோஷங்களோடேகூடியிருக்கையாலும், விரோதிதன்னால் கழித்துக்கொள்ள வொண்ணாமையாலும, ஜ்ஞாநவானாயிருக்கிறவிவனுக்கு ஶோகம்பிறக்கை ஸம்பாவிதமாகையாலே உபாயாந்தரங்கள் ஶோகஜநகங்களென்றென்கிறது அர்த்தமன்று. ஶாஸ்த்ராந்தங்கள் தன்னிலே உபாயாந்தரங்களை விட்டு ப்ரபத்தியைப்பண்ணுவானென்று சொல்லுகையாலும், இதுதான் ஸிந்நாதிகாரிவிஷயமாகையாலும், ஶாஸ்த்ராந்தரங்களுக்கும் பூர்வவசநங்களுக்கும் (வையர்த்தியமில்லை. அநந்யஸாத்யே, அஹமஸ்ம்யபராதாநாமாலயः) இத்யாதி ப்ரமாணங்கள் மோக்ஷஸாதநமாகச் சொல்லுகையாலே, ப்ரபத்திஸ்வதந்த்ர ஸாதநமன்றென்கிறது அர்த்தமன்று. இவ்வுபாயந்தான்ஜ்ஞேயஶுகமாயிருக்கையாலும்,ஶாஸ்த்ரம் இவன்நினைறநின்றவளவுகளுக்கீடாகவல்லது உபதேஶியாமையாலும், அரியவழியை யுபதேஶிக்கக்கூடாதென்கிறது அர்த்தமன்று. அர்ஜுநன் ப்ரதமத்திலே ஶரணம் புகுருகையாலும், பக்தியோகம் கேட்டவநந்தரம்கண்ணும்கண்ணநீருமாய்கையில்வில்லோடேகூடச் சோர்ந்துவிழுகையாலேஅவனையுளனாக்கவேண்டுகையாலும்,த்ரௌபதி குழலைமுடிக்கதுத் தன்ஸ்வரூபம் நிறம்பெறவேண்டுகையாலும், பரமரஹஸ்யத்தை மறையாமல்வெளியிட்டான். ப்ரதமத்திலே இத்தை உபதேஶியாதே உபாயாந்தரத்திலே பரந்தது இவன்னெஞ்சைச்சோதிக்கைக்காக. இதுக்கதிகாரி - இதுகேட்பதற்குமுன்பு அஞ்சுமவனும், பின்பு அஞ்சாதவனும். இதில் பூர்வார்த்தம், அதிகாரிக்ருத்யத்தைச் சொல்லுகிறது; உத்தரார்த்தம், ஈஶ்வரக்ருத்யத்தைச் சொல்லுகிறது.

ஸர்வதர்மாந் - எல்லாதர்மங்களையும், தர்மமாவது - ஶாஸ்த்ரவிஹிதமுமாய், பலஸாதநமுமாயிருப்பதொன்று; இங்கு, மோக்ஷபலஸாதநமான கர்மஜ்ஞாநபக்திகளைச்சொல்லுகிறது. ஸர்வஶப்தம்,அவற்றுக்கு யோக்யதாபாதகங்களானதர்மங்களைச்சொல்லுகிறது. ஸாதநத்யாகத்திலே யோக்யதாபாதக தர்மத்யாகமும் அ

ந்தர்ஹூதமாயிருக்கச்செய்தே தனித்துச்சொல்லுகிறது - ப்ரபத்திக்கு அவைவேண்டாவென்று தோற்றுகைக்காக. அல்லாதபோது, ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கு அதிகாரமில்லையிறே. பஹுவசநத்தாலே அவதாரரஹஸ்யம், புருஷோத்தமவித்யை, தேஶவாஸம், திருநாம ஸங்கீர்த்தநம் துடக்கமானவற்றைச் சொல்லுகிறது.— பரித்யஜ்ய-விட்டு. பரிஶப்தம், வாஸநாருசிகளோடே கூட விடவேணுமென்னுமிடத்தைச்சொல்லுகிறது. அவைகிடக்குமாகில் மேற்சொல்லுகிற வ்யவஸாயவிஶேஷத்திலந்வயமின்றிக்கே யொழியக்கடவது. 'அநாதிகாலம் அநுபாயங்களிலே உபாயபுத்தி பண்ணினோமென்று லஜ்ஜாபுரஸ்ஸரமான த்யாகத்தைச் சொல்லுகிறது' என்றாழ்வான் பணிக்கும். த்யஜித்தோமென்கிற புத்தியும் த்யாகத்தோடொக்கும். ல்யப்பு, உபாயாந்தரத்யாகம்மேல்பற்றப்புகுகிற உபாயத்துக்கு அங்கமென்னுமிடத்தைச் சொல்லுகிறது. 'ப்ரபத்தியாவது-ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றுகை' என்று அனந்தாழ்வான் வார்த்தை.—மாம் என்னை, த்வயத்தில் ப்ரதமபதத்திலே சொல்லுகிற அர்த்தவிஶேஷங்களெல்லாம் இப்பதத்திலே அநுஸந்தேயங்கள். அதாவது-ஶ்ரிய:பதித்வமும், வாத்ஸல்யாதிகுணசதுஷ்டயமும், திவ்யமங்களவிக்ரஹமும். (ஏஷநாராயண:ஶ்ரீமாந்) என்கையாலே ஶ்ரிய:பதித்வமநுஸந்தேயம்; அதர்மபுத்தியாலே தர்மத்தில் நின்றும் நிவ்ருத்தனான அர்ஜுநன் குற்றம்பாராதே அபேக்ஷிதார்த்தங்களைத் தானே யருளிச்செய்கையாலே வாத்ஸல்ய மநுஸந்தேயம்; தன்னுடைய பரத்வத்தைப் பலகாலு மருளிச்செய்த வளவன்றிக்கே அர்ஜுநன் ப்ரத்யக்ஷிக்கும்படி பண்ணுகையாலே ஸ்வாமித்வமநுஸந்தேயம்; (ஹே க்ருஷ்ணஹேயாதவ) என்று - அர்ஜுநன் தானே சொல்லும்படி அவனோடேகலந்து பரிமாறுகையாலே ஸௌஶீல்ய மநுஸந்தேயம்; அப்ராக்ருதமான திருமேனியைக் கண்ணுக்கிலக்காம்படி பண்ணுகையாலே ஸௌலப்ய மநுஸந்தேயம்; மாம் என்று காட்டுகிறது. ஸாரத்யவேஷத்தோடே நிற்கிற நிலையை யாகையாலே, திவ்யமங்களவிக்ரஹமநுஸந்தேயம்—ஏகம் - இவ்வுபாயத்தைச் சொல்லுமிடமெல்லாம் அவதாரணப்ரயோக முண்டாகையாலே, ஸ்தாநப்ரமாணத்தாலே, உகாரம்போலே இதுவும் அவதாரண வாசகமாய், வ்ரஜ என்கிற பதத்தில் சொல்லப்புகுகிற ஸ்வீகாரத்தில் உபாயபுத்தி நிவ்ருத்தியைச் சொல்லுகிறது. உபாயாந்தரோபகார ஸம்ருதி

யும் உபாயபரிக்ரஹமும் உபாயாந்தரத்தோடொக்கும். 'ஏகஶப்தம், உபாயோபேயங்களினுடைய ஐக்யத்தையும் உபாயப்ராதாந்ய த்தையும் சொல்லுகிறது' என்றுஞ் சொல்லுவர்கள்--ஶரணம்-உபாயமாக. உபாயமாகிறது - அநிஷ்டநிவாரகமுமாய் இஷ்டப்ராபகமுமாயிருக்குமது. வ்ரஜ-புத்தி பண்ணு. இந்த புத்தியாகிறது த்யாஜ்யகோடியிலும் அந்வயியாதே ப்ராபகாந்தரபரித்யாக பூர்வகமாய் ஸர்வரக்ஷகத்வாநுஸந்தாநரூபமாயிருப்பதொரு அத்யவஸாயாத்மக ஜ்ஞாநவிஶேஷம். இதுதான் உபாயாந்தரங்கள்போலே அஸக்ருத்கரணீயமன்று, கந்யகாப்ரதாநாதிகள்போலே ஸக்ருத்கரணீயம். அல்லாதபோது,முன்புத்தையதுகார்யகரமன்றிக்கேயொழியும்.

அஹம். ஸர்வஜ்ஞத்வாதி குணவிஶிஷ்டனான நான். மாம் என்கிறவிடத்தில், வாத்ஸல்யாதி குணங்களைச்சொல்லிற்று; இதில், ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களைச் சொல்லுகிறது. வாத்ஸல்யாதிகளில்லாதபோது உபாயபரிக்ரஹமன்றிக்கேயொழிகிறுப்பேஃலே, ஜ்ஞாநஶக்த்யாதிகளில்லாதபோது விரோதிநிவ்ருத்தியன்றிக்கேயொழியும். இங்குச்சொல்லுகிற ஶக்தியாவது - சேதநனுடைய அவிவாதி ஜநநத்துக்கும் விரோதிநிவ்ருத்திக்கு மடியான ஸாமர்த்யம்—த்வா-உபாயாந்தரங்களைவிட்டு என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை கீழில்பக்ஷத்தில், ஜ்ஞாநஶக்திகளும், ப்ராப்தியும், நிரபேக்ஷயமும் சொல்லிற்று. இங்கு, அஜ்ஞாநாஶக்திகளும், அப்ராப்தியும், ஆகிஞ்சந்யமும் சொல்லுகிறது—ஸர்வபாபேப்யஃ - எல்லாபாபங்களில் நின்றும். இங்கு பாபங்களாகச் சொல்லுகிறது - ஸர்வஸாதவிரோதிகளை (சார்ந்தவிருவல்வினைகளும்) என்று - முமுக்ஷுவுக்கு பாபத்தோபாதி புண்யமும் த்யாஜ்யமாகச் சொல்லுகையாலே புண்யபாபங்களிரண்டையும் பாபஶப்தத்தாலே சொல்லுகிறது. பஹுவசநத்தாலே - அவற்றினுடைய பன்மையைச் சொல்லுகிறது. அதாகிறது - அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தங்கள். ஸர்வஶப்தத்தாலே - கீழே த்யாஜ்யமாக விஹிதங்களாய் ஸோதியதா புத்தியாலே அநுஷ்டேயமான தர்மங்களில், ஸ்வார்த்ததா ப்ரதிபத்தியையும், உபாயபுத்தியையும், ஆவ்ருத்தப்ரவ்ருத்தியையும், ப்ராரப்தத்தையும், லோகஸங்க்ரஹார்த்தமாக அநுஷ்டேயமான கர்மங்களில், ஸ்வார்த்ததா ப்ரதிபத்தியையும், ஸர்வஸாமர்த்தவி

ஷயங்களில் உபசாரவ்யாஜயா பண்ணுகிற அபசாரங்களையும், பரி என்கிற உபஸர்க்கத்தாலும் ஏகஶப்தத்தாலும் த்யாஜ்யமாகச் சொன்னவற்றினுடைய அநுவ்ருத்தியையும், அவஶிஷ்டமான உத்தராவயத்தையும் சொல்லுகிறது. இப்படி கொள்ளாதபோது, மாஶுச: என்கிற விதிசேராது. பாபங்களிலே சிறிது கிடப்பது, அதிகாரி குறையாலேயாதல், ஈஶ்வரன் குறையாலேயாதலிறே. த்யாகஸ்வீகாரங்கள் பூர்ணமாகையாலே அதிகாரி பக்கல் குறையில்லை, ஜ்ஞானஶக்திகள் பூர்ணமாகையாலே ஈஶ்வரன்பக்கல் குறையில்லை—மோக்ஷயிஷ்யாமி-முக்தனாம்படி பண்ணக்கடவேன். (சுமமென்றே கைவிட்டோடி, காணேவொருங்கிற்றுங்கண்டிலமால்) என்கிறபடியே - அநாதிகாலார்ஜிதமான கர்மங்கள் உன்னைக்கண்டஞ்சி போனவிடம் தெரியாதபடி தன்னடையே விட்டுப்போம்படி பண்ணுகிறேன். விரோதிநிவ்ருத்தியும் அபிமதப்ராப்தியுமிரண்டும் ஃபலமாயிருக்க ஒன்றைச்சொல்லுவானென்னென்னில்; ஒன்றைச்சொன்னால் மற்றையது தன்னடையே வருகையாலே சொல்லிற்றிலை. (மாமேவைஷ்யஸி) என்று கீழ் உபாயத்துக்குச்சொன்ன ஃபலமொழிய இவ்வுபாயத்துக்கு வேறு ஃபலமில்லாமையாலே சொல்லிற்றில்லையென்னவுமாம். ஆனால் விரோதிநிவ்ருத்திதன்னைச் சொல்லுவானென்னென்னில்; அது அதிகமாகையாலே சொல்லிற்று. விரோதிநிவ்ருத்திபிறந்தால் ஃபலம் ஸ்வதஸ்ஸித்தமாகையாலே தனித்துச்சொல்ல வேண்டாவிறே.—மாஶுச: - ஶோகியாதேகொள். உபாயாந்தரங்களை விடுகையாலும் என்னையே உபாயமாகப் பற்றுகையாலும், விரோதியை நேராகப் போக்குகிறேனென்கையாலும், உனக்கு ஶோகிக்க ப்ராப்தியில்லை. உனக்கு கர்த்தவ்யமில்லாமையாலே உன்னைப்பார்த்து ஶோகிக்கவேண்டா, எனக்கு ஜ்ஞானஶக்தி கருணாதிகளில் வைகல்யமில்லாமையாலே என்னைப்பார்த்து ஶோகிக்கவேண்டா, விரோதியாகிறது என்னுடைய நிக்ரஹமாகையாலும் அதில் கிடப்பதொன்றில்லாமையாலும் அத்தைப்பார்த்து ஶோகிக்கவேண்டா. அநாதிகாலம் ஶோகியாதிருந்தாப்போலே யிருப்பதொன்று இப்போது நீ ஶோகிக்கையாவது, நீ ஶோகித்தாயாகில் உன்கார்யத்திலே நீ அதிகரித்தாயாவுதி, ஶேஷபூதனுடையபேறு ஶேஷியது, பேறுடையவனது இழவு, இழவுடையவனுக்கு ஶோகமுள்ளது, ஆனபின்பு ஶோகிக்கக்கடவையோ. தநத்தையிழந்தால் தநவானன்றோ ஶோகிப்பான், தநந்தான்

ஶோகிக்குமோ. 'ஸர்வப்ரகாரத்தாலும் நானுன்னைக் கைவிடேன்' என்று அச்சங்கெட்டிரு என்று, (வாரேற்றிளமுலையாய் வருந்தேனுன்வளைத்திறமே) என்கிறபடியே - அர்ஜுநன் கண்ணீரைத் துடைக்கிறான். (வார்த்தையறிபவர்) என்கிறபாட்டும், (அத்தனாகி) என்கிற பாட்டும் இதுக்கர்த்தமாக வநுஸந்தேயம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீய:பதிப்படி.

௩-வது. த்வயப்ரகரணம்.

அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமாயிருந்துள்ள வேதத்திலும் வேதார்த்தத்தை உபப்ருஹ்மிக்கக்கடவதான ஸ்ம்ருதிதிஹாஸ புராணங்களிலும் அவகீதமாக ப்ரஸித்தமாய், எம்பெருமானுடைய ஸர்வஸ்வமாய், ஆழ்வார்களுடையவும், ஆசார்யர்களுடையவும், தநமாய், பகவதநந்யார்ஹஶேஷபூதமான ஆத்மஸ்வரூபத்துக்கு அத்யந்தாநுரூபமாயிருந்துள்ள ஸாதநவிஶேஷத்தையும் ஸித்தி விஶேஷத்தையும் அடைவே வாக்யத்வயமும் ப்ரதிபாதிக்கிறது. பூர்வாசார்யர்கள் ரஹஸ்யத்ரயத்தையும் தங்களுக்கு தநமாக நினைத்துப்போருவர்கள். அதில் ப்ரதமரஹஸ்யமான திருமந்த்ரம்: ப்ராப்ய ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறது; சரமஶ்லோகம் ப்ராபகஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறது. அவையிரண்டிலும் ருசியுடையனான அதிகாரி அவற்றை விஶதமாக வநுஸந்திக்கிறபடியைச் சொல்லுகிறது த்வயம். இம்மூன்றையும் தஞ்சமாக நினைத்துப்போரா நிற்கச்செய்தேயும், ஸர்வாதிகாரமாகையாலும் ஆசார்யருசிபரிக்ருஹீதமாகையாலும், இத்தையே மிகவும் தஞ்சமாக நினைத்துப்போருவர்கள். புத்திபூர்வகமான வபசாரங்களுக்கும் பரிஹாரமாகையாலும், கர்மாவஸாநத்திலன்றிக்கே ஶரீராவஸாநத்திலே மோக்ஷமாகையாலும், இதுவே தஞ்சம். ரகுராக்ஷஸ ஸம்வாதம், வ்யாக்ர வாநர ஸம்வாதம், நஹுஷப்ருஹஸ்பதி ஸம்வாதம், கபோதோபாக்யாநம், மறவன் 'குரங்குக்குட்டியை விட்டுப்போந்தேன்' என்ன

அதுகேட்டு பட்டரருளிச்செய்தவார்த்தையும், ஸ்ரீபாஷ்யகாரர் சரமஸமயத்திலே 'எப்போதும் த்வயத்தை அநுஸந்திக்கை எனக்குப்ரியம்' என்றருளிச்செய்த வார்த்தையும், பெரியகோயில் நாராயணரைக்குறித்து ஶபதபுரஸ்ஸரமாக 'த்வயமொழியத் தஞ்சமில்லை' என்றருளிச்செய்தவார்த்தையும், ஸசேலஸ்நாத பூர்வகமாக ஆர்த்தியோடே உபஸந்நனான சிறியாச்சானுக்கு திவ்யாஜ்ஞையையிட்டு, 'த்வயமொழியத்தஞ்சமில்லை' என்று எம்பாரருளிச்செய்த வார்த்தையும், 'திருமந்த்ரத்திலேபிறந்து த்வயத்திலேவளர்ந்து த்வயநிஷ்டராவீர்' என்று நஞ்சீயரைக்குறித்து அனந்தாழ்வான் ப்ரஸாதித்த வார்த்தையும் தொடக்கமான பூர்வாசார்ய வசநங்கள், ருசிவிஶ்வாஸங்களுக்கு றுப்பாக இவ்விடத்திலே அநுஸந்தேயங்கள்.

இதுதான் பூர்வவாக்யம் மூன்றுபதமும் உத்தரவாக்யம் மூன்றுபதமும் ஆக ஆறுபதமாயிருக்கும். அதில் முதல்பதம், புருஷகாரபூதையான பிராட்டியுடைய நித்யயோகத்தையும் ஆஶ்ரயணீயனான வெம்பெருமானுடைய குணவிக்ரஹங்களையும் சொல்லுகிறது; இரண்டாம்பதம், அத்திருவடிகள் உபாயமென்னுமிடத்தைச் சொல்லுகிறது; மூன்றாம்பதம் அத்திருவடிகளை உபாயமாக பரிக்ரஹிக்கும்படியைச்சொல்லுகிறது; நாலாம்பதம், உபாயபரிக்ரஹபலமான கைங்கர்யத்துக்கு விஷயம் மிதுநமென்னுமிடத்தைச் சொல்லுகிறது; அஞ்சாம்பதம் அவ்வஸ்து ஸர்வஸ்வாமியென்னுமிடத்தையும் கைங்கர்யப்ரார்த்தனையையும் சொல்லுகிறது; ஆறாம்பதம், கைங்கர்யவிரோதி நிவ்ருத்தியைச் சொல்லுகிறது. அதில் ப்ரதமபதத்தில், ஸ்ரீஶப்தம், (ஶ்ரீயதே, ஶ்ரயதே) என்கிற வ்யுத்பத்தி த்வயத்தாலும் - பிராட்டி சேதநர்க்கு ஆஶ்ரயணீயையா யிருக்குமிருப்பையும், ஈஶ்வரனை யெப்போதுமொக்க ஆஶ்ரயித்துக்கொண்டிருக்கு மிருப்பையும் சொல்லுகிறது. ஶ்ரீயதே என்றது-ஆஶ்ரயிக்கப்படாநின்றாளென்றபடி. ஶ்ரயதேஎன்றது-ஆஶ்ரயியாநின்றாளென்றபடி. புருஷகாரமாம்போதைக்கு இருவரோடும் ஸம்பந்தமுண்டாகவேணும். சேதநரோடே மாத்ருத்வஸம்பந்த முண்டாயிருக்கும்; ஈஶ்வரனோடே மஹிஷீத்வஸம்பந்த முண்டாயிருக்கும். (ஶ்ருணோதி, ஶ்ராவயதி) என்கிற நிருக்தி விஶேஷங்களாலே - (ஶ்ரீயதே, ஶ்ரயதே) என்கிற வ்யுத்பத்தி த்வயத்தாலும் பலிதமான வர்த்தத்தைச் சொல்லுகிறது, ஶ்ருணோதி என்றது - கேளாநிற்கு மென்றபடி; ஶ்ராவயதி என்றது -

கேட்பியாநிற்குமென்றபடி. ஆஸ்ரயிக்கவிழிந்த சேதநன், தன்னபராயத்தையும் ஈஸ்வரஸ்வாதந்த்ர்யத்தையும் நினைத்தஞ்சி, இரண்டுக்கும் பரிஹாரமாக, பிராட்டியுடைய காருண்யாதி குணங்களையும் தன்னோடவளுக்குண்டான ஸம்பந்தவிஸேஷத்தையும் முன்னிட்டுக்கொண்டு, 'ஈஸ்வரன்பக்கல் புகலறுத்துக்கொண்ட எனக்கு அஸரண்யஸரண்யையான தேவரீர் திருவடிகளொழியப் புகலில்லை' என்று இவன் விண்ணப்பஞ்செய்யும் வார்த்தைகளைக்கேளாநிற்கும்; ஸர்வஜ்ஞனான வீஸ்வரனையுங்கூட நிருத்தரனும்படி பண்ணவற்றான தன்னுடைய வுக்திவிஸேஷங்களாலும் தன்னுடைய ஸௌந்தர்யதாப்ரகர்ஷத்தாலும் மற்றுமுண்டான உசிதோபாயங்களாலும், இவள் இவனபராதங்களை அவன் திருவுள்ளத்திலே படாதபடிபண்ணி இவன் விண்ணப்பஞ்செய்யும் வார்த்தையைக்கேட்கும்படி பண்ணாநிற்கும். சேதநனுக்கு இருவரோடு ஸம்பந்தமுண்டாயிருக்கச்செய்தேயும், மாத்ருத்வநிபந்தநமான வாத்ஸல்யாதிரேகத்தாலும், ஈஸ்வரனோபாதிகாடிந்யமார்தவங்கள் கலந்திருக்கையன்றிக்கே, இவள் பக்கலுள்ளது மார்தவமேயாய் இத்தலையில் கண்குழிவுகாண மாட்டாதபடி யிருக்கையாலும், தன்பக்கலிலே தீரக்கழியவபராதத்தைப்பண்ணின ராவணனுக்கு மசப்பட ஹிதோபதேசம் பண்ணும்படி குற்றங்கள் திருவுள்ளத்தில் படாதபடி யிருக்கையாலும், ராக்ஷஸிகள் அபராதத்தில் நின்றும் மீளாதிருக்கச்செய்தேயும் அவர்கள் அஞ்சினவவஸ்தையிலே (ஃபவேயம்ஸர்ணம்ஹிவஃ) என்று அபயப்ரதாநம் பண்ணும்படி யிருக்கையாலும், திருவடியோடே மன்றாடி அவர்களை ரக்ஷித்துத் தலைக்கட்டுகையாலும், நில்லென்ற பெருமாள் தாமே, பிராட்டி முன்னிலையாகப் பற்றுகையாலே, இளையபெருமாளைக் கூடக்கொண்டு போருகைபாலும், ஸ்ரீவிபீஷணப்பெருமாள் குடும்பவதிவாரா பிராட்டிக்கு ஆநுகூல்யத்தைப்பண்ணிப் பெருமாளை ஸரணம்புகுருகைபாலும், காகம் அபராதத்தைப்பண்ணிவைத்து பிராட்டி ஸந்நிதியாலே தலைபெற்றுப்போகைபாலும், அத்தனையபராதமன்றிக்கேயிருக்க, இவள் ஸந்நிதியில்லாமையாலே ராவணன் தலையறுப்புண்ணக் காண்கையாலும், மற்றுமிவை துடக்கமான ஸ்வபாவ விஸேஷங்கள் எல்லாவற்றாலும், ஈஸ்வரனை ஆஸ்ரயிக்கும்போது பிராட்டி புருஷகார பூதையாகக்கடவள். மதுப்பு புருஷகார பூதையான பிராட்டியுடைய நித்யயோகத்தைச்சொல்லுகிறது. (அகலகில்லேனிறையும்) என்கிறபடியே - இவளென்றுமொக்க வீஸ்வர

னைப் பிரியாதிருக்கையாலே, ஆஶ்ரயிக்கவிழிந்த சேதநனுக்கு இவள் ஸந்நிதியில்லையென்று பிற்காலிக்கவேண்டாதே ருசிபிறந்தபோதே ஆஶ்ரயிக்கலாம்படி யிருக்கும்.

நாராயணபதம், சேர்க்கக்கடவ பிராட்டிதானே * சிதகுரைத்தாலும், (செய்தாரேல் நன்றுசெய்தார்) என்று அவளோடே மறுதலைத்து நோக்கு மெம்பெருமானுடைய வாத்ஸல்யஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களாகிற குணங்களைச்சொல்லுகிறது—வாத்ஸல்யமாவது - வத்ஸத்தின்பக்கல் தேநு இருக்குமிருப்பு; அதாகிறது அதினுடைய தோஷத்தை போக்யமாகக்கொள்ளுகையும், க்ஷீரத்தைக்கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவர்களைக் கொம்பிலுங் குளம்பிலுங்கொண்டு நோக்குகையுமிறே; அப்படியே, ஈஶ்வரனும், இவனுடைய தோஷத்தை போக்யமாகக்கொண்டு, பாலேபோல்சீர்) என்கிறபடியே - குணங்களாலே தரிப்பித்து, அபயம் ஸர்வபூதேப்யஃ) என்கிறபடியே - அநுகூலர் நிமித்தமாகவும் ப்ரதிகூலர் நிமித்தமாகவும் நோக்கும்: ஸ்வாமித்வமாவது - இவன்விமுகனான தசையிலும் விடாதேநின்று ஸத்தையைநோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவாயிருப்பதொரு ஸம்பந்தவிஶேஷம்; அதாகிறது-உடையவனாயிருக்குமிருப்பு; அதிவேஷந்துடங்கி கைங்கர்யபர்யந்தமாக வுண்டான ஸ்வபாவவிஶேஷங்களையெல்லா முண்டாக்குகிறது இந்த ஸம்பந்தவிஶேஷமடியாகவிறே. ஸௌஶீல்யமாவது - உபயவிபூதி யோகத்தாலும் பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும் நிரங்குஶஸ்வதந்த்ரனாயிருக்கிற ஈஶ்வரனுடைய மேன்மையையும் தங்கள் சிறுமையையும்பார்த்து (அவனெவ்விடத்தான்யானார்) என்று பிற்காலியாமே எல்லாரோடுமொக்க மேல்விழுந்து புரையறக்கலக்கையும், அதுதன்பேறாக விருக்கையும், எதிர்த்தலையி லபேக்ஷையின்றிக்கே யிருக்கக்கலக்கையும்: ஸௌலப்யமாவது - கண்ணுக்கு விஷயமின்றிக்கே யிருக்கிறதான் கண்ணாலேகண்டு ஆஶ்ரயிக்கலாம்படி யெளியனாகை; அதினுடைய பூர்த்திபுள்ளது அர்ச்சாவதாரத்திலே யிறே; (மாம்) என்று காட்டின ஸௌலப்யம் பரத்வமென்னும்படியிறே அர்ச்சாவதார ஸௌலப்ய மிருக்கும்படி. அர்ஜ்ஜுநனொருவனுக்குமேயாய்த்து அந்தஸௌலப்யம், நீயெனக்கு வேண்டாவென்

* சிதகு - குற்றம்.

கிறவர்களையும் விடமாட்டாத ஸௌலப்யமிறேயிது. அதுகாதாசித்கம், இது எப்போதுமுண்டு.

சரணௌ-திருவடிகளை. ருசிஜநகமுமாம் ப்ராப்யமுமா யிருக்கிருப்போலே ப்ராபகமுமா யிருப்பது திருமேனியிறே. திருமேனியைச் சொல்லுகிறதாகில் திருவடிகளுக்கு வாசகமான ஶப்தத்தாலே சொல்லுவானென்னென்னில்; மேல்ப்ரபத்தி பண்ணப்புகுகிற வதிகாரி அநந்யார்ஹஶேஷத்வஜ்ஞாநத்தை யுடையவனாகையாலே, ஸ்வாமிஸந்நிதியி லிவன்பாசுரம் இப்படியொழிய விராமையாலே சொல்லுகிறது. (திருநாரணன்றாள்; திருவுடையடிகள் தம் நலங்கழல், கழல்களவையே சரணாகக்கொண்ட, நாகணைமிசை நம்பிரான் சரணேசரண், அட்ச்சீழமர்ந்துபுகுந்தேனே) என்று சொல்லுகிறபடியே - திருவடிகளிறே உபாயமாயிருப்பது.

ஶரணம்-உபாயமாக, உபாயமாகிறது-அநிஷ்டத்தைப்போக்கி யிஷ்டத்தைப் பண்ணித்தருமது. அநிஷ்டமாகிறது - அவித்யையும், அவித்யாகார்யமான ராகத்வேஷங்களும், புண்யபாபரூபமான கர்மங்களும், தேவாதி சதுர்விதஶரீரங்களும், ஆத்யாத்மிகாதி து:கபரம்பரைகளும்; இஷ்டமாகிறது - புண்யபாபநிவ்ருத்தியும், சரீரவிஶ்லேஷமும், அர்ச்சிராதிமார்க்ககமநமும், பரமபதப்ராப்தியும், பரமாத்மதர்ஶநமும், குணாநுபவகைங்கர்யங்களும், அதில்ப்ரதாநமாக இஷ்டமாயிருப்பது கைங்கர்யம்; அதுக்குறுப்பாகையாலே இஷ்டங்களாயிருக்கும் மற்றுள்ளவை.

ப்ரபத்யே - பற்றுகிறேன் - (பதல்கதௌ) என்கிற தாதுவுக்கு அர்த்தம் - கதி; இங்குகதியாக நினைக்கிறது-புத்தி விஶேஷத்தை இந்த புத்திவிஶேஷமாகிறது-அநந்யார்ஹ ஶேஷத்வஜ்ஞாநகார்யமாய், இதரோபாயவ்யாவ்ருத்தமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், ஸக்ருதநுஷ்டேயமாய், வ்யபிசாரவிளம்பவிதுரமாய், ஸர்வாதிகாரமாய், நியமஶூந்யமாய், அந்திமஸ்ம்ருதிநிரபேக்ஷமாய், ஸுகமாய், ஜ்ஞாநகர்பமாய், த்ருடாத்யவஸாயரூபமா யிருப்பதொரு ஜ்ஞாநவிஶேஷம், இஜ்ஞாநத்தில் ப்ரயோஜநாம்ஶமாயிருப்பது ஒரு விஶ்வாஸம். உக்த்யாபாஸ வசநாபாஸ பக்த்யாபாஸங்களாலும், ஈஶ்வர பரீக்ஷை துடக்கமான வற்றாலும், இவ்வத்யவஸாயவிஶே

ஷம் குலையாதிருந்தபோதாய்த்து ஃபலஸித்தியுள்ளது. இங்குச்சொல்லுகிறப்ரபத்தி கரணத்ரயத்தாலேயுண்டாகவுமாம், ஏககரணத்தாலேயுண்டாகவுமாம்; ஃபலஸித்தியில் குறையில்லை. இப்பக்ஷத்தில் வர்த்தமாந நிர்தேஶத்தாலே - காலக்ஷேபஹேதுவாகவும் போகஹேதுவாகவும் ஈஶ்வரப்ரீதிஹேதுவாகவும் யாவச்சரீரபாதம் இவ்வுக்தி விஶேஷம் அநுவர்த்திக்கு மென்னுமிடம் ஸூசிதமாகிறது (ஸக்ருதேவ) என்கையாலே - பலத்துக்கொருக்காலமையும்.

உத்தரவாக்யம், ப்ரபத்திகார்யமாய், ஸ்ரீய:பதி விஷயமாயிருந்துள்ளகைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறபடியைச்சொல்லுகிறது. கீழ்ச்சொன்னஸாதநம் ஃபலசதுஷ்டய ஸாதாரணமாயிருக்கையாலே, இவனுக்கபேக்ஷிதமான ஃபலவிஶேஷத்தை நியமிக்கிறது.—இதில்ப்ரதமபதம், கைங்கர்யப்ரதிஸம்பந்தி மிதுநமென்னு மிடத்தைச்சொல்லுகிறது ஶேஷத்வப்ரதி ஸம்பந்தி மிதுநமானல் கைங்கர்யப்ரதிஸம்பந்தியும் மிதுநமாயிறே யிருப்பது, (கோலத்திருமாமகளோடுன்னை, (ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே,) திருமாற்கரவு) என்கிறபடியே - தனித்திவர்களுக்கு ப்ராப்யத்வமில்லை. அல்லிமாமலராள் தன்னொடுமடியேன் கண்டுகொண்டு: என்கிறபடியே - இச்சேர்த்தியிலே பற்றினலிறே ஸ்ரீவிபீஷணப் பெருமாளைப்போலே உஜ்ஜீவித்துப்போகலாவது; அல்லாதபோது, ராவண ஶூர்ப்பநகிகளைப்போலே விநாஶமே ஃபலமாயிருக்கும். பூர்வவாக்யத்தில் மதுப்பு, ஆஶ்ரயிக்கு மவர்களை ஈஶ்வரனோடே சேர்க்கைக்காகப் பிரியாதிருக்குமிருப்பைச் சொல்லுகிறது; இந்த மதுப்பு, இவன் பண்ணும் கைங்கர்யத்தை ஈஶ்வரன் திருவுள்ளத்திலே ஒன்றுபத்தாகப்படுத்தி கைங்கர்யங் கொள்ளுகைக்காகப் பிரியாதிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது.—இரண்டாம்பதம், கைங்கர்யவர்த்தகமாக அநுஸந்தேயமாயிருந்துள்ள குணவிக்ரஹவிபூதி யோகத்தைச்சொல்லுகிறது. கீழ் உபாயபரிக்ரஹத்துக்கு ஏகாந்தமாகச்சொன்ன குணங்களும், இங்கே ப்ராப்யத்வேந அநுஸந்தேயங்கள். கீழில், மற்றை குணங்களிலுங்காட்டில் ஸௌலப்யம் ப்ரதாநமாயிருக்கும்; இங்கு, ஸ்வாமித்வம் ப்ரதாநமாயிருக்கும். இதில் சதுர்த்தீ, கைங்கர்யப்ரார்த்தநத்தைச்சொல்லுகிறது. (ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி - வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்) என்கிறபடியே - இச்சேதநன், அதிகவேஶாதிஶயத்தாலே தேஶகாலாவஸ்தாப்ரகார நியமவிதுரமாக

ப்ரார்த்திக்கக்கடவனா யிருக்கையாலே, ஸர்வதேஸ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகாரத்தாலும் பண்ணும் வ்ருத்திவிஸேஷத்தைச்சொல்லுகிறது. ஸேஷத்வ ஜ்ஞாநகார்யமான வுபாயபரிக்ரஹத்துக்கு அநந்தரம் ப்ராப்தமாயிருக்கையாலே, இந்த சதுர்த்திக்கு தாதர்த்யமர்த்த மாகமாட்டாது; உத்துங்க தத்வத்தைக்குறித்துப்பரதந்த்ரனான சேதநன்பண்ணுகிற வ்ருத்திவிஸேஷமாகையாலே, விஷயஸ்வபாவத்தாலும் ஆஸ்ரயஸ்வபாவத்தாலும் ப்ரார்த்தனையே அர்த்தமாகக்கடவது. நிரதிஸய போக்யமான பகவத் விஷயத்தை விஷயீகரித்திருக்கையாலும், நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகமான ஸ்வரூபத்தை ஆஸ்ரயமாக வுடைத்தாயிருக்கையாலும், அத்யர்த்த ப்ரியரூபமான கைங்கர்யத்தில் பாரதந்த்ர்யவிரோதியான ஸ்வயம்ப்ரயோஜநத்வ புத்தியைநிவர்த்திப்பிக்கிறது நமஸ்ஸு. பகவந்முகவிகாஸஹேதுவாகையாலே இது நமக்கு ஆதரணீயமென்கிற ப்ரதிபத்தியொழிய இதிலே போக்த்ருத்வ ப்ரதிபத்தியும் மதீயத்வப்ரதிபத்தியும் நடக்குமாகில் அபுருஷார்த்தமாயிறேயிருப்பது. ஸ்வரூபவிரோதியென்றும், ஸாதநவிரோதியென்றும், ப்ராப்திவிரோதியென்றும், ப்ராப்யவிரோதியென்றும், சதுர்விதமாயிருக்கும்விரோதி. அதில், திருமந்த்ரத்தில் உகாரத்தாலும் நமஸ்ஸாலும் - ஸ்வரூபவிரோதி நிவ்ருத்தியை ப்ரதிபாதிக்கிறது; சரமஸ்லோகத்தில் அர்த்தத்வயத்தாலும்-ஸாதந விரோதி நிவ்ருத்தியையும், ப்ராப்திவிரோதி நிவ்ருத்தியையும் ப்ரதிபாதிக்கிறது; ப்ராப்யவிரோதி நிவ்ருத்தியைச் சொல்லுகிறது - இந்த நமஸ்ஸு. அதாவது - ஏறாளுமிறையோனிற்படியே அவனுக்குறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யமென்கை. போகவிரோதியான ஸேஷத்வாநுஸந்தாநமும், ஆத்மஸமர்ப்பணம்போலே ஸ்வரூபவிருத்தம். புருஷார்த்த ஸ்வரூபத்தையும், புருஷகார ஸ்வரூபத்தையும், உபாயஸ்வரூபத்தையும், உபாயபரிக்ரஹத்தையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும், கைங்கர்யத்தையும், அதுக்கு விரோதியான அஹங்கார மமகாரங்களினுடைய நிவ்ருத்தியையும்சொல்லித் தலைக்கட்டுகிறது.

பூர்வவாக்யத்துக்கர்த்தமாக, (அகலகில்லேன்) என்கிறபாட்டை அநுஸந்திப்பது; உத்தரவாக்யத்துக்கர்த்தமாக, (சிற்றஞ்சிறுகாலே) என்கிறபாட்டை அநுஸந்திப்பது.

[* ப்ரணவத்தாலே - ஸ்வரூபஞ்சொல்லி, நமஸ்ஸாலே - ஸ்வரூபாநுரூபமான உபாயஞ்சொல்லி, நாராயணபதத்தாலே - ஹோமவிஶேஷஞ்சொல்லுகிறது. ப்ரணவத்தாலே - அநந்யார்ஹ ஶேஷத்வஞ்சொல்லி, நமஸ்ஸாலே - அநந்யஶரணத்வஞ்சொல்லி, நாராயணபதத்தாலே - அநந்யபோக்யத்வஞ்சொல்லுகிறது. ஶேஷத்வஜ்ஞாநமில்லாதார்க்கு ப்ரணவத்திலந்வயமில்லை; தேஹாத்மாபிமாநிகளுக்கு நமஸ்ஸிலந்வயமில்லை; கைங்கர்யத்தில் ருசியில்லாதார்க்கு நாராயணபதத்திலந்வயமில்லை. ஶேஷத்வ ஜ்ஞாநமிருக்கும்படியை இளையபெருமாளாசரித்துக்காட்டினார்; தேஹாத்மாபிமாநம் அஸஹ்யமென்னுமிடத்தை ஸ்ரீஹரதாழ்வானாசரித்துக்காட்டினார்; கைங்கர்யத்தில் நிஷ்டையிருக்கும்படியை ஸ்ரீஶத்ருக்நாழ்வானாசரித்துக்காட்டினார். இவ்வர்த்தம், நம்மாழ்வாரும், (கண்கள்சிவந்து, 'கருமாணிக்கமலை, நெடுமாற்கடிமை) என்கிற திருவாய்மொழிகளிலே அருளிச்செய்தருளினார். இவைகளையுடையவன், திருமந்த்ரநிஷ்டன். *]

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீயஃபதிப்படி ஸம்பூர்ணம்.

———:o:———

* இந்த வாக்யங்கள், கக, கச, பக்கங்களில் அச்சிட்டிருக்கிறபடி சிலயாத்ருச்சிகப்படி ஸ்ரீகோஶங்களிலும், இங்கு சில ஸ்ரீகோஶங்களிலும் காண்கிறது.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

தத்வசேகரம்.

பும்ஸ்பர்ஶக்லேஶஸம்பாவநாகந்தவிதூரமாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணவிலக்ஷணமாயிருந்துள்ள நிகிலவேதஜாதத்துக்கும் வேதோபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களுக்கும் க்ருத்யம் - ஸகலஸம்ஸாரிசேதநர்க்கும் தத்வஜ்ஞாநத்தை ஜநிப்பிக்கை. தத்வஜ்ஞாநமாவது - ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுக்கு ஸர்வப்ரகாரபரதந்த்ரரான ஸர்வாத்மாக்களினுடையவும்ஸ்வரூபத்துக்கநுரூப புருஷார்த்தமான கைங்கர்யத்தை அநாதியாக ப்ரதிபந்தித்துக்கொண்டு போருகிற கர்மஸம்பந்தத்தை நிவர்த்திப்பிக்குமுபாயம் (தச்சரணாரவிந்தஶரணாகதி) என்கிற நிரூபணவிஶேஷம்.

நாராயணன் ஸர்வஸ்மாத்பரனானபடி யெங்ஙனேயென்னில் பரத்வசிஹ்நங்களான ஜகத்காரணத்வ முமுக்ஷூபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வங்களுள்ளது இவனுக்கே யாகையாலே இவனேஸர்வஸ்மாத்பரன்; மஹோபநிஷத்தும், ஸுபாலோபநிஷத்தும், நாராயணோபநிஷத்தும், ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும், (ஏகோஹவை நாராயணஆஸீத், திவ்யோதேவ ஏகோநாராயண:, அதபுருஷோஹவை நாராயணோகாமயத, அபஏவஸஸர்ஜாதௌ, நாராயணோஜகந்மூர்த்தி:, விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம்) என்று - நாராயணாதி திவ்யஶப்தங்களாலே ஜகத்காரணத்வத்தைச் சொல்லுகையாலே இவனே காரணபூதன்.

சாந்தோக்யவாஜஸநேய கௌஷீதக்யைதரேயாதிகளில் (ஸத் ப்ரஹ்மா) இத்யாதி ஶப்தங்களாலேயும் சிலவஸ்துக்களைக் காரணமாகச் சொல்லாநின்றதே யென்னில்; பஶ்வதிகரணந்யாயத்தாலே ஸாமாந்யஶப்தம் விஶேஷபர்யவஸாயியாகையாலே, ஸதாதிஶப்தங்களும் இவனையே ப்ரதிபாதிக்கின்றன.

நநு, (ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே) (தாதா யதா பூர்வமகல்பயத்,) (ப்ரஜாபதி:ப்ரஜா அஸ்ருஜத அஜஸ்ய நாபாவத்யேகமர்பிதம்யஸ்மிந்விஶ்வாநி புவநாநி தஸ்து:) என்று ஹிரண்யகர்ப்பாதி

விஶேஷஶப்தங்களாலேசொல்லுகையாலே,ப்ரஹ்மாகாரணமாகக்குறையென்னென்னில்; அதுசொல்லவொண்ணாது; (யோப்ரஹ்மாணம்விதயாதிபூர்வம்,தத்ர ப்ரஹ்மாசதுர்முகோஜாயதா-நாராயணாத்ப்ரஹ்மாஜாயதேஸப்ரஜாப,திரேகபுஷ்கரபர்ணேஸமபவத், விராஜோஅயிபுருஷ:, யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதிர்விஶ்வஸ்ருக்விஶ்வரூப:ப்ரஹ்மணவ ப்ரஹ்மாணம் புஷ்கரேஸஸர்ஜ,ஹிரண்யகர்பம்பஶ்யதிஜாயமாநம்)என்று-ஸ்ருஜ்யனென்றும், (நப்ரஹ்மா,) (ப்ரஹ்மாதிஷுப்ரலீநேஷு) என்று ஸம்ஹார்யனென்றும், யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்யபத்மபூ: புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதிஶுஶ்ரும:-ப்ராஜாபத்யம் த்வயா கர்மபூர்வம்மயிநிவேஶிதம் - ததோவேதாஹ்ருதாஸ்ஸர்வேதாநவாப்யாம்பலாதித: -யஸ்மாதநபராயஸ்யஶிரச்சிந்நம்த்வயாமம) என்று - ஸர்வேஶ்வரஸமாராதநத்தாலே தன்பதம் பெற்றானென்றும், அஸுரர் கையிலே வேதங்களைப் பறிகொடுத்தானென்றும், ருத்ரனாலேபரிபூதனானானென்றும், இவனைக்கர்மவஶ்யனாகச்சொல்லுகையாலே,ஹிரண்யகர்பதாத்ருப்ரஜாபதி ஸ்வயம்புவாதிஶப்தங்கள், அபர்யவஸாந வ்ருத்தியாலேயாதல்,அவயவஶக்தியாலேயாதல்,நாராயணப்ரவ்ருத்தியாலேயாதல், நாராயணவாசகங்கள். அஜஸ்யநாபாவத்யேகமர்பிதம்' என்கிறவிடத்தில் அர்பிதம் என்றது ஆவிர்பூதம என்றபடி - ஏகம். என்றது புஷ்கரத்தை, (அஜஸ்ய நாபாவத்யேகம் யஸ்மிந்விஶ்வம் ப்ரதிஷ்டிதம்,புஷ்கரம் புஷ்கராக்ஷஸ்ய தஸ்மைபத்மாத்மநேநம:) என்று மஹாபாரதத்திலே வ்யாக்யாதமாகையாலே.

நநு (யதாதமஸ்தந் நதிவாநராத்ரி; நஸந்நசாஸச்சிவஏவகேவல:,காரணந்துத்யேய:, ஸர்வைஶ்வர்யஸம்பந்நஸ் ஸர்வேஶ்வரஶ் ஶம்புராகாஶ மத்யேத்யேய:) என்று - ஶ்வேதாஶ்வதர அதர்வஶிகாதிகளிலே ருத்ரனைக்காரணபூதனாகச்சொல்லாநின்றதேயென்னில்; அதுவுமநுபபந்நம்; (பாபபாலாத்ர்யக்ஷஶ்ஶூலபாணி: புருஷோஜாயத,) (நாராயணாத்ருத்ரோஜாயதே,) (லலாடாத்க்ரோதஜோருத்ரோஜாயத,)(த்ர்யக்ஷ:வண்டபரஶுமஜீஜநத்,) இந்த்ரோவருணஸ்ஸோமோருத்ர: பர்ஜந்யோயமோம் ருதயுரீஶாந:) (ப்ரஹ்மண:புத்ராய) என்று ஏவமாதிவாக்யங்களாலே மஹோபநிஷத்தும், நாராயணோபநிஷத்தும், ப்ருஹதாரண்யகமும் ஸ-

வாஜோபநிஷத்தும் அதர்வணமும் ஶதபதப்ராஹ்மணமும் ஸாமவேதமும் ஸ்ருஜ்யனாகவும் (தேஶாந:) என்று ஸம்ஹார்யனாகவும் சொல்லிற்று, ஶதபதப்ராஹ்மணத்திலே ஸம்வத்ஸரே குமாரோ ஜாயத, ஸோரோதீத், தம்ப்ரஜாபதிரப்ரவீத், குமாரகிம்ரோதிஷி, யச்ச்ரமாத்தபஸோதி ஜாதோஸீதி, ஸோப்ரவீத், அநபஹதபாப்மா ஹ்யஸ்மி) இத்யாதிகளிலே - ருத்ரன் உத்பந்நனானவளவிலே ரோதநம்பண்ண, அவனைப்பார்த்து ப்ரஜாபதி 'நீ அழுகிறதென்' என்று கேட்க, 'நான்பாப்மா, என்பாபங்கள் போம்படி யெனக்கு நாமகரணம் பண்ண வேணும் என்ன, இவனழுகையாலே 'உனக்கு ருத்ரனென்று பேராகக்கடவது' என்ன, 'எனக்கின்னமும் சில பேர்கள்வேணும்' என்ன, பவஶர்வேஶாந பஶுபதி பீமோக்ர மஹாதேவ ரூபமான நாமஸப்தகத்தையும் அஷ்டமூர்த்தித்வத்தையுங் கொடுத்தானென்று சொல்லிற்று. இதுதான், ஸ்கந்தபுராணத்திலே (உந்மத்தவதுந்மத்த: ப்ரஹஸ: ப்ரஹஸதாமபி - ராத்ரௌஶ்மஶாநேபர்யடஸி தத்கிமேதத்தமேஶ்வர) இத்யாதியாலே தேவி 'ஶ்மஶாந பர்யடநந்தொடக்கமான நிஷித்தவ்ருத்திகளை நீ அநுபவிக்கைக்கடியென்' என்று கேட்க, (அஹம்ஶோணித பங்காங்க: கராளவதநோம்பிகே - ரௌத்ரே முஹூர்த்தே ஸம்பூதோ ஹரேரோதிமிவிஸ்வரம்) இத்யாதியாலே - தன்னுடைய உத்பத்தியையும் ரோதநத்தையும் நாமஸப்தக மூர்த்யஷ்டகங்களையும் பெற்றபடியையுஞ்சொல்லி, (ரௌத்ரேமுஹூர்த்தேஜாதோஹம்ரௌத்ரகர்மாததோஸ்ப்யஹம்-யத்பவத்யுசிதம் கர்மபுருஷஸ்யஶிரேஸ்ஸதே, தத்தேநாவஶ்யகர்த்தவ்யம் ம்ருக்யநாயதிவேதரத் - ப்ரஜாபதேஶ்ச கஶ்ஶக்த ஆக்ஷேப்தும்கர்த்துமந்யதா) இத்யாதியாலே தன்னுடைய நிஷித்தாசரணஹேது கர்மமென்று சொன்னானென்றுவ்யாக்யாதமாய்த்து. இவ்விடத்திலே, (ஹரேரோதிமிவிஸ்வரம், ததோமாம் பாணிநாஸ்ப்ருஷ்ட்வாலோகேஶ: ப்ராஹகேஶவ:) என்று - ஹரிகேஶவஶப்தங்களாலே உபக்ரமித்து, ப்ரஜாபதிஶப்தத்தாலே உபஸம்ஹரிக்கையாலே, இந்த ஶ்ருதியில் ப்ரஜாபதிஶப்தம் நாராயணபர்யவஸாயியாகக்கடவது.

மார்க்கண்டேய வைஷ்ணவ புராணாதிகளிலேயும், (ருத்ரஸர்கம் ப்ரவக்ஷ்யாமிதந்மே நிகதத:ஶ்ருணு) என்றுஇவ்வர்த்தத்தைச் சொல்லிற்று. (அஸ்யதேவஸ்யமீடுஷ:) (மஹாதேவஸ்ஸர்வமேதே

மஹாத்மா, ஹத்வாத்மாநம் தேவதேவாஹவ) என்று இவனு டையபக்ஷம் கர்மாதீநமென்று சொல்லிற்று.

ஸ்ரீவராஹ புராணத்திலே, (தவவிஷ்ணோ:ப்ரஸாதே நமயாதத் த்ரிபுரம்ஹதம்-தஸ்யபாபஸ்யகோஷேண நஶக்நோமிவிசேஷ்டிதும்) என்று - த்ரிபுரதஹநத்தாலுண்டான பாபமடியாக, யோகமாயை, ஐஶ்வர்யநாஶம், ஹ்ருதயஸந்தாபம், நிஶ்சேஷ்டத்வங்கள் இவனு க்குண்டாய்த்ததென்றும் சொல்லிற்று—(ததோவாக்யாந் முநீந்த்ரஸ் யதேவோ பாலேந்துஶேகர:-ஶங்கரச்சிந்நலிங்கஸ்துகாநநேவிச சாரஹ - ஏவம்ஶா போயதாஸ்மாகம் தாஶீயாம் தக்ஷஸ்ய ரத்ருண: அவஶ்யகரணீயம்மே தயாகாஷ்டமயம்வபு:) என்று ஸ்ருமதத்பத்நீ ஶாபங்களாலே சிந்நலிங்கத்வ காஷ்டரூபத்வங்களு முண் டாய்த்தென்று ஸ்ரீராஹ்மபுராணத்திலே சொல்லிற்று.

வாயவ்யத்திலே, (ததோஹிவ்யா ஹ்ருதோதக்ஷோருத்ரம்ஸோ ஷியஶபத்புந: - யஸ்மாத்வம் மத்க்ருதேக்ரூரம் ருஷீந்வ்யா ஹ்ருத வாநஸி - தஸ்மாத் ஸார்தம் ஸுரைர்யஜ்ஞைர் நத்வாயக்ஷ்யந்தி வைதிகவிஜா: - ஹத்வாஹுதிம் தவக்ரூரா மபஸ்ப்ருஶந்து கர் மஸு) என்று - தக்ஷஶாபத்தாலே, (அப உபஸ்ப்ருஶ்யதிமேஶீ யத்வாய - நாந்வீக்ஷேத - யதந்வீக்ஷேத - சக்ஷுரஸ்ய ப்ரமாயுகம் ஸ்யாத் - தஸ்மாந்நாந்வீக்ஷ்ய: என்று ஶ்ருதியிலேபோலே - தக்ஷ ஶாபத்தாலே இஜ்யத்வாதி நிவ்ருத்தியைச் சொல்லிற்று. மாத்ஸ்ய புராணத்திலே, (யஸ்மாத நபராதஸ்ய ஶிரச்சிந்நம் த்வயாமம-தஸ் மாச்சாப ஸமாயுக்த: கபாலீத்வம் ஹவிஷ்யஸி - விஷ்ணுப்ரஸாதாத் ஸுஶ்ரோணி கபாலம் தத்ஸஹஸ்ரதா - ஸ்புடிதம் பஹுதாயாதம் ஸ்வப்நலப்தமிவாநகா) என்று ஸ்ரீஹ்மாவாலே யிவன்ஶா போபஹதனானபடியையும், ஸர்வேஶ்வரன் இவன்ஶாபத்தைப்போ க்கினபடியையுஞ் சொல்லிற்று.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே, க்ருஷ்ண வைபவமறியாதே, தன்னை யாஶ்ரயித்த பாணனை நோக்குகைக்காக ஸபரிகரனாய் வந்து க்ருஷ்ணனோடே யெதிரிட்டு, (ஜ்ரும்பாபி ஹதஸ்து ஹரோர யோபஸ்ய உபாவிஶத் - நஶஶாகததாயோத்தும் க்ருஷ்ணே நாக்லிஷ்டகர்மணா) என்று - தானும் பரிகரமும் தோற்றுத் தேர்த் தட்டிலே விழுந்துகிடந்து, க்ருஷ்ணக்ருஷ்ண மஹாபாஹோ ஜா

நேத்வாம் புருஷோத்தமம்) என்று பின்பு க்ருஷ்ணவைஹவத்தை யுணர்ந்து வாணனுடைய ப்ராணப்ரஜாநார்யமாக க்ருஷ்ணனை யிரந்தானென்றும்; ஸ்ரீவிஷ்ணு யர்மோத்தர ஸ்ரீராமாயணங்களிலே, (விஷ்ணோராயிக்யமங்விச்ஹ்ங் தஸ்ய மாயாவிமோஹித: - க்ருதவாநஸ்மிஷேவே ஶஷேவவாக்யே நவிதீ ரஹம்) என்று - ஹமவங் மாயாவிமோஹிதனுய் க்ருஷ்ணனேடே யெதிரிட்டு, (ஆரோபி தும்ந மேஶக்தி ஸ்ஸர்வயத்நேந சாஹவத்) என்று·அவன்கையில் வில்லை வளைத்து நாணிலேயேறிடவும்மாட்டாதே, (தஹாதுஜ்ரும்ஹிதம்ஶைவம் யநுர்வீமபராக்ரமம் ஹுங்காரேண மஹாதேவ ஸ்தம்ஹிதோ யத்ரிலோசந:) என்று - வில்லும் முறிந்துபோய் தானும் ஹுங்காராஹிஹூதனுய், (ததஶ்ச மதமோஹேந மயாஜ்ஞாதோ ஹரி:பர:·ஜ்ஞாத்வா விஸ்ருஷ்டசாபேநஸ்துதஶ்ச ஹமவாந்ஸ்தஹ்ா) என்று - பின்பு தெளிந்து ஸ்தோத்ரம் பண்ணினுனென்றும் இவனுடைய அஜ்ஞாநாஶக்திகளைச்சொல்லிற்று.

வ்ருகாஸுரன் இவனை யாராயித்து, 'யாவனெருவனுடைய தலையை ஸ்பர்ஶித்தேன் அவனுடையதலை ஶதயாவாகவேணும்' என்று அபேக்ஷிக்க; அவனும், அப்படியே வரங்கொடுக்க; அநந்தரம், ஸதஂவரபரீக்ஷார்யம் ஶம்ஹோர்மூர்யி நிகிலாஸுர : - ஸ்வஹஸ்தம் யாதுமாரேஹே ஸோஹிஹீயத் ஸ்வக்ருதாச்ஶிவ: தேநோபஸ்ருஷ்டஸ்ஸந்த்ரஸ்தஃ 'உபயாவங்ஸவேபயுஃ: - யாவதந்தம் திஶோஹுமே: காஷ்ஂநாம யராஹுவஃ) என்கிறபடியே - அவனத்தை பரீக்ஷிக்கைக்காக இவன் றலையைத்தொட, ஶோகஹீதனையிவனேட, அவன் கண்டவிடமெங்குந் துடர, ஓடிப் போக்கற்று, ஸ்ரீவைகுண்டத்தேறச்செல்ல, ஸர்வேஶ்வரன், இவனுடைய க்லேஶத்தைக்கண்டு,நடுவேவந்து ஆவிர்ஹவித்து, வ்ருகாஸுரனைப் பார்த்து, 'இவன் ஷீராந்தன், பொய்யல்லது சொல்லான், உன்தலை தன்னைத் தொட்டுப்பார்க்க மாட்டாயோ' என்ன, அநந்தரம் அவன் தன்னுடையதலையைத்தொட்டு ம்ருதனுய் விழுந்தானென்று - ஸ்ரீஹாமவதத்திலே (வ்ருகாஸுராய கிரிஶோவரம்ஜத்வாயஸங்கடம்) என்று துடங்கி, இவனுபந்நனனபடியையும் ஸர்வேஶ்வரனிவனுபத்தைப் போக்கினபடியையும், இவனுடைய வஜ்ஞாநாஶக்திகளையுஞ் சொல்லிற்று — அந்யகாஸுரனை நிரஸிக்கைக்காக மாத்ருமணங்களை ஸ்ருஷ்டிக்க, (த்ரைலோக்யே ஹக்ஷயமாணேது தயாமாத்ருமணே

நவை - ந்ருஸிம்ஹமூர்த்திம் தேவேஶம் ப்ரதுஷ்டி யௌஹமவாந்ஶிவ:) என்று அத்தாலே நோவுபட, தன்னாலே ஶமிப்பிக்க வொண்ணாமையாலே ஸர்வேஶ்வரனை த்யாநம்பண்ண, அவன் ஶமிப்பித்தானென்று மாத்ஸ்யபுராணத்திலே இவனுடையவஜ்ஞாநாஶக்திகளையுஞ்சொல்லிற்று. ஆக இப்படி ஸ்ருஜ்யத்வ ஸம்ஹார்யத்வகர்மவஶ்யத்வங்களைச் சொல்லுகையாலே இவனுக்கு காரணத்வங்கூடாது. ஆகையால், ஹிரண்யகர்பாதி ஶப்தங்கள்போலே ஶிவஶம்புவாதி ஶப்தங்களும் நாராயணபரங்கள்—ஶிவனென்றது - ஸர்வப்ரகார ஶ்ரேயனென்றபடி, ஶிவஶப்தம், (ஶிவமஸ்து ஸர்வஜகதாம், ஶிவாஸ்தேஸந்துபந்தாந:, ஶிவங்கர்மாஸ்து) என்று-ஶ்ரேயோமாங்கல்ய குணவிஶிஷ்ட வஸ்துக்களிலேயும் ப்ரயுக்தம். ஶம்புவென்றது, ஶம்-ஸுகம் பாவயதீதிஶம்பு: என்கிற வ்யுத்பத்தியாலே ஸர்வஸுகனென்றபடி த்ருஹிணனையுஞ்சொல்லும். (ஸர்வஶ்ஶர்வஶ்ஶிவஸ்ஸ்தாணு:ஸ்வயம்பூ ஶம்புராதித்ய:)என்றுமகுணவிவக்ஷையாலே'இவைதான் நாராயணன்பக்கலிலே ப்ரயுக்தங்கள். (யாநிநாமாநிகௌணாநி)என்கையாலே-இவைதான் யௌகிகங்கள், நாராயணஶப்தம் ருத்ரனைச்சொல்லமாட்டாது; இது தன்னைப் பல உபநிஷத்துக்களிலும் பலகாலுஞ் சொல்லிற்று. ஶிவஶப்தத்துக்கதில்லை. நநு,— (ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸர்வேஸம்ப்ரஸூயந்தே)என்று இவர்களோடோக்கநாராயணனும் பிறந்தானென்றும், ஸ்ரீராமாயணத்திலும் லைங்காதிபுராணங்களிலும் - ப்ருகுஶாபத்தாலே யிவனுக்கு து:க்கோபாநுபவமுண்டாய்த்தென்றும் சொல்லுகையாலே, இவனுக்கு கர்மவஶ்யத்வமுண்டேயென்னில்; அது சொல்லவொண்ணாது. (ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே) என்கிறவிடத்தில்-இவனை அவர்களைப்போலேபிறந்தானென்கிறதன்று, (ரக்ஷார்த்தம்ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜிஜிவாந்) என்கிறபடியே - ராகவயாதவஸஜாதீயனானாற்போலே ப்ரஹ்மருத்ரஸஜாதீயனாய்க்கொண்டு விஷ்ணுவாய்வந்தவதரித்தபடியைச் சொல்லுகிறது. (அஜாயமாநோபஹுதா விஜாயதே) என்று - ஶ்ருதிதானே கர்மமூலமான ஜந்மத்தை நிஷேதித்து ஐச்சிகமான ஜந்மத்தை விதித்தது. (ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா, ஸஏஷஸர்வேப்ய:பாபேப்ய:உதித:, அஸ்யதேவஸ்யமாஹாத்ம்யம் மஹிமாநஞ்சநாரத - ஶுபாஶுபைஃகர்மபிர்யோ நலிப்யேதகதாசந, ஸஸர்வபூதப்ரக்ரு

திம், ஶஹாஶைர்வி நிர்முக்தம் ஊர்மிஷட்காத்பரஂப்ரஹ்மதம் வைஷ்ய மமலம்விஷ்ணும் வஷாஶீயாயங்விமுச்யதே) என்று இவனை அகர்மவஶீயனாகச்சொல்லிற்று. (ஸர்வாவஸ்யேஷுவைவிஷ்ணோர் ஜநநம் ஸ்வேச்ஹயைவது - ஜரகாஸ்த்ரச்ஹலேனைவஸ்வேச்சயா மமநஂஹரேஃ ஜீவிஜஶாபச்சலேனைவ மவதீர்ணோபிலீலயா) இத்யாதியாலே ஜீவங்மாதிகள் தன்னிலே ஜநவஷிவதாரம் ஐச்ஹிகமென்று சொல்லிற்று. ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே, (தேவதிர்யங்மநுஷ்யேஷுஶரீரக்ரஹணத்மிகா-லீலேயம் ஸர்வஹுதேஷுதவசேஷ்டோபலக்ஷணா, நாகாரணாத்காரணாத்வா காரணாகாரணாந்நச, ஶரீரக்ரஹணம்வ்யாபிந் யர்மத்ராணாயகேவலம், இச்ஹாக்ருஹீதாஹிமதோருதேஹஃ, ஸமஸ்தஶக்திரூபாணி தத்கரோதிஜநேஶீவர-தேவதிர்யங்மநுஷ்யாவியா சேஷ்டாவந்திஸ்வலீலயா - ஜகதாமுபகாராய நஸாகர்மநிமித்தஜா) என்று-ஜகத்ரக்ஷணார்யமாகஇச்சையாலே யவதரிக்கிறான், ருஷிஶாபத்தை ஸர்வமர்யாதாஸ்யாபநார்யமாகத் தானுமநுவர்த்திக்கிறானத்தனையென்று சொல்லிற்று. (அஜோபிஸந்நவ்யயாத்மாஹுதாநாமீஶீவரோபிஸந்-ப்ரக்ருதிம்ஸ்வாம்யதிஷ்டாய ஸம்ஹவாம்யாத்மமாயயா, யதாயதாஹி யர்மஸ்யக்லாநிர்ஹவதிஹாரத-அப்யுத்யாநமயர்மஸ்யததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம், பரித்ராணாய ஸாயுநாம் விநாஶாயசதுஷ்க்ருதாம் - யர்மஸம்ஸ்யாபநார்யாயஸம்ஹவாமியுகேயுகே,,ஜந்மகர்மசமேதிவ்யம்) என்று தானுமருளிச்செய்தானிறே.

ஆகையாலிவன் கர்மவஶீயனன்று. நநுவ. புத்ரார்த்தியாய்கைலாஸத்திலே சென்று ருத்ரனை யர்ச்சித்து அவன் பக்கலிலே புத்ரனையபேக்ஷித்தான். அவனும்புத்ரனைக்கொடுத்தான். என்றுமஹாஹாரதத்திலே சொல்லுகையால் நாராயணனும் கர்மவஶீயனாய் ருத்ரனுக்கு குணபூதனாக வேண்டாவோவென்னில் அங்குச் சொல்லுகிற அர்ச்சன ப்ரார்த்தநாதிகள் கர்மவஶீயத்வாதிஸூசகங்களன்று;

வரப்ரதாநக்ருதஂ என்னுமத்தை (அந்யஂதேவ வரந்தேஹிப்ரவிஶீயஂ ஸர்வஜந்துஷுமர்த்யோ ஹுத்வாஹவாந்தேவமாமாராயய

கேஶவ,மாம்ஹஜஸ்வவ ஜெவெஶ வரம் மத்தோ க்ரஹாணவ-யெநா ஹ௦ஸர்வஹ-ஒதாநா௦ பூஜ்யாத்பூஜ்யதரொஹவ௦)என்று ருத்ரன் அபேக்ஷிக்க (ஞேவகார்யாவதாரேஷு மானுஷத்வ முபேயிவாந் - த்வாமே வா ராயயிஷ்யாமி மமத்வ௦ வரஷோஹவ.) என்று ஸர்வேஶ்வரனும் வரங்கொடுத்தானென்று வராஹபுராணத்தாலே சொல்லிற்று.

புத்ரப்ரஜாநாநந்தரம் ருத்ரன் ஞேவர்களேயும் ரிஷிகளேயும் பார்த்து கிருஷ்ணன் ஜமங்மோஹநார்த்தமாகட் புத்ரார்த்தியாய் வந்தானித்தனே, இவனேஸர்வகாரணபூதன், ஸர்வஸ்மாத்பரன் மோக்ஷப்ரஜனுமிவனே. இவனேயே யுபாஸித்து முக்தராகப்பாருங்கள் என்று உபஞேஶிக்கையாலும், இவன் பரத்வத்தை பஹுமுகமாக ஸ்தோத்ரம் பண்ணுகையாலும் புத்ரனேப்பெறுகைக்குப் பிறர்காலிலே விழுகிற கிருஷ்ணன்தானே வழியிலே கண்டாகர்ணனுக்கு மோக்ஷங் கொடுக்கையாலும் இவனுக்கு கர்மவச்யத்வாதி ஶ௦கையில்லே, லேங்காதி புராணங்களில், க்ஷேத்ர ப்ரக்ருதியோகிஶக்தி மாயாஶவீஜங்களாலே ருத்ரனேப்பார்க்க நாராயணனுக்குச் சொன்ன ம௦ணஹாவம், ருத்ராஜுத்பத்தி, மூர்த்தித்ரயாதீதஹஶிவபாரம்யம் துடக்கமானவை, ப்ரத்யக்ஷஶ்ருதி விரோயத்தாலும் ஹர்வ மீரங் யத்தில் பரஸ்பர விரோயத்தாலும் அத்ரேஶ்ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷுப்ரகீர்த்திதம் என்கிறபடியே, இவைதான் தாமஸபுராண ஷியயங்களாகையாலும், ஷிராந்திபரிகல்பிதங்கள்.

ஷிரஹ்மருத்ரங்களுடைய ஜங்மங்களும் ஸ்வேச்சையாலே யானுலோவென்னில்;அதுசொல்லவொண்ணுது, (ஆஷிரஹ்மஸ்தம்ஹபர்யந்த ஜமஜந்தர்வ்யவஸ்யிதாஃ ப்ராணிநஃகர்மஜநித ஹம்ஹாரவஶவர்த்திநஃ, ஷிரஹ்மாஜியா ஸ்ஸகலாஞேவாஃ மநுஷ்யாஃ பஶவஸ்தஜா விஷ்ணேர்மாயா மஹாவர்த்த மோஹாந்ய தமஸாவ்ரதாஃ) என்று இவர்களேக் கர்மபரதந்த்ரராகச் சொல்லுகையாலே, இப்படி நாராயணனே காரணஹ-ஒத னென்கிற விவ்வர்யத்துக்கு ந்யாயம்வேண்டாதபடி, அநந்தஶாவ நிகிலவேஜ நிமமநமாய், உபாஸநவிஶி விஶாரமாய், ஹமஸ்தபரவிஜியோபாஸ்ய விஶேஷ நிர்ணயகமாய், நிகிலவேஜாந்த நிர்வாஹகமா யிருந்துள்ள நாராயணநுவாகம், ஸர்வ வேஜாந்தங்களிலும் பரம்ஷிரஹ்ம பரந்தத்வ பரமாத்ம பரஞ்ஜ

யோநி:நாராயணபுருஷாக்ஷராச்யுத விஶ்வாத்மஶிவஶம்புப்ரமுக ஶப்தங்களாலே நிர்திஷ்டமான வஸ்துவை அவ்வோ ஶப்தங்களாலே யநுவதித்து நாராயணனென்று விஶேஷித்து, (ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ:) என்று - கார்யத்வேந ஸம்ப்ரதிபந்நனான இந்த்ரனோடே ப்ரஹ்மருத்ரர்களை ஸஹபடித்து, இவனுக்குக் கார்யபூதனாகவும் சொல்லிற்று. ஆக, இப்படி ந்யாயஸ்வபாவத்தாலும் ந்யாய நிரபேக்ஷமாக ஶ்ருதிதானே விஶேஷிக்கையாலும், (ஸநோ ஹரி:) என்று - ஹரிஶப்தத்தாலே உபஸம்ஹரிக்கையாலும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஸ்ருஜ்யத்வ ஸம்ஹார்யத்வ கர்மவஶ்யத்வங்களைச் சொல்லுகையாலும் நாராயணனே காரணபூதன்; (ஏநஜாதாநி ஜீவந்தி, ஏஷபூதபால:, பரித்ராணாய ஸாதூநாம், நஹிபாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம், ஸ ஏவ பாதி) என்கிறபடியே - ஸ்யாபகனுமிவனே (யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி. யேநேதம் விஶ்வம் பரிபூதம் ம்யஷிவஸ்தி, யஸ்ய ப்ரஹ்மசக்ஷத்ரஞ்ச உபே பவத ஓதநம், ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம், ருத்ரேஸத்ஸம்ஹாரஸமயே ஜகத்ஸர்வம் வராண்டவத் - லீலயாயஸ்து பகவாந் ஸ்தம்பச்ஶரணம் ஹரிம்-ஸம்பக்ஷயித்வா) என்கிறபடியே - ஸம்ஹர்த்தாவுமிவனே.

நநு, ருத்ரன் ஸம்ஹர்த்தாவென்னுமிடம் உபயவாதி ஸித்தமாயிருக்க, இவனே ஸம்ஹர்த்தாவென்னும்படி யென்னென்னில்; (கல்பாந்தே ருத்ரரூபீயோ ருத்ரஸதேத்வகிலம்ஜகத் - அநந்தம் புருஷம்விஷ்ணும் ப்ரணதோஸ்மி ஜநார்தநம், ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம், ஸஸம்ஜ்ஞாம்யாதி பகவாந் ஏகஏவஜநார்தந: ஸஏவஸ்ருஜ்யஸ்ஸசஸர்ககர்த்தா ஸஏவபாத்யத்திச பால்யதேச) என்கிறபடியே - ருத்ராந்தர்யாமியாய் நின்று இவனே ஸம்ஹரிக்கிறான் ஆகையாலே இவனேஜகஜ்ஜந்மாதி காரணபூதன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

உ-வது-ப்ரகரணம்.

(யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே, தத்விஜிஜ்ஞாஸஸ்வ, அஸத்வா இதமக்ர ஆஸீத்,ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி, தமேவம் வித்வாநம்ருத இஹபவதி, வித்யதேஹ்ருதயக்ரந்தி: த்வாமாராத்ய பரம் ப்ரஹ்ம யாதாமுக்திம்முமுக்ஷவ:,வாஸுதேவ மநாராத்ய கோமோக்ஷம் ஸமவாப்நுயாத், (ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் - விஷ்ணுபோதம் விநாநாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம், (ஸம்ஸார ஸாகரம்கோரம்,) ஸமஸ்தஜகதாம் மூலே யஸ்யபக்தி ஸ்திராத்வயி - தர்மார்த்தகாமை: கிந்தஸ்யமுக்திஸ்தஸ்ய கரேஸ்திதா) இதயாதியாலே - காரணவஸ்துவே உபாஸ்யம், மோக்ஷப்ரதம் முக்தப்ராப்யமென்கையாலே,முமுக்ஷூபாஸ்யனும் மோக்ஷப்ரதனும் முக்தப்ராப்யனு மிவனே.—நநுச, சாந்தோக்ய தஹரவித்யையிலேயும், தைத்திரீய தஹரவித்யையிலேயும், ப்ருஹதாரண்யத்திலும், அதர்வ ஸிகையிலும், (தஹரோஸ்மிந்நந்தர ஆகாஸ:, தஸ்மிந்யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்) என்றும், (தஹம்விபாபம்பரவேஸ்மபூதம் யத்புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் தத்ராபிதஹரம் ககநம் விஸோகஸ் தஸ்மிந்யதந்தஸ் ததுபாஸிதவ்யம்) என்றும், (யஏஷோந் தர்ஹ்ருதய ஆகாஸ:, தஸ்மிந்சேதே, ஸர்வஸ்யவஸீ ஸர்வஸ்யேஸாந:) என்றும் - (ஸம்பூஆகாஸ மத்யேத்யேய:) என்றும்-ஆகாஸஸப்தத்தாலேநாராயணனைச்சொல்லி;அதுக்கவ்வருகே ஸம்புஸிவ ஈஸாநமஹேஸ்வர ஸப்தங்களாலேருத்ரனே உபாஸ்யமாகச்சொல்லிற்று. (ஸர்வாணிரூபாணி விசித்யதீர:-நாமாநிக்ருத்வா) என்று - நாராயணனுக்கு அஸாதாரணமான நாமரூப கர்த்ருத்வத்தை, (ஆகாஸோஹவை நாமரூபயோர்நிர்வஹிதா) என்று சொல்லுகையாலே, சாந்தோக்ய தஹரவித்யையில் ஆகாஸஸப்தம் நாராயணபரம்; அத்தோடு ஏகார்த்தமாக வேண்டுகையாலே அல்லாதவிடத்திலும் ஆகாஸாதி ஸப்தங்களும் நாராயணபரங்கள்.

அதர்வஸிரஸ்ஸிலே, நாலுவண்டத்தாலே - ருத்ரனுடைய ஸர்வைஸ்வர்யத்தைச்சொல்லி, அஞ்சாம் வண்டத்தாலே தமாத்

மஸ்யம் யேநுபஸ்யந்தி யீராஸ்தேஷாம் ஸாந்திஸீஸாஸீவதி) நேதரேஷாம் என்று-ஷ்ருதயாந்தர்வர்த்தியானருத்ரனுடையஉபாஸந த்தையும், அதுக்குஃலம் மோக்ஷமென்னுமிடத்தையும்,(தஸ்யஹஸ் மம்த்ருஷீத்வாவிம்ருஜ்யாங்ஙாநிஸம்ஸ்ப்ருஸேத் - தஸ்மாத்வ்ருதமே தத்பாஸுபதம்பாஸவ்யமோக்ஷாய) என்று - பாஸுபதவ்ரதத்தைச் சொல்லுகையாலே, உபாஸ்ய மோக்ஷப்ரதத்வங்கள் கண்டோக்தம்; ஸீவேதாஸீவதரோபநிஷத்திலே (ததோயதுத்தரதரம்) என்று - நாராயணனில் பரத்வத்தையும், (யஏதத்விதுரம் ருதாஸ்தே ஸவந்தி) என்று - மோக்ஷப்ரதத்வத்தையும் சொல்லிற்று; (தஸ்மாத் ஸர்வமதஸீஸிவஃ) என்கையாலே - இதுதான்ருத்ரபரமென்னுமிடம்ஸித்யம்;(ருத்ரஸ்தாரகம்ஸீரஹ்மவ்யாசஷ்டே, யேநாஸர்வம்ருதித்வாமோக்ஷீஹவதி)என்கிறஜாபாலிஸீருதியாலும்மோக்ஷப்ரதத்வம்கண்டோக்தம். ஸ்ரீருத்ரத்வரிதபஞ்ச ருத்ரருத்ரபஞ்சரஸீரஹ்ம தந்த்ரங்களாலேயும் ருத்ரவைஹவத்தைச்சொல்லிற்று, ஆகையாலே ருத்ரனே உபாஸ்யனும் மோக்ஷப்ரதனுமாக வேண்டாவோவென்னில்; அது அநுபபந்நம்;— ஸாந்தோக்ய தஹரவித்யை தன்னிலே, (கிம்தத்ரவித்யதே, யதந்வேஷ்டவ்யம்) என்று - ஸீருதிதானே, சோத்யம்பண்ணி, (தஸ்மிந்காமாஸ்ஸமாஹிதாஃ. ஏஷஆத்மாபஹதபாப்மா) இத்யாதியாலே – தஹராகாஸத்திலே உபாஸ்யமாகச் சொல்லிற்று.அபஹதபாப்மத்வாதிகுணங்களென்னுஸமாதாநம்பண்ணிற்று; தைத்திரீயதஹரவித்யாவாக்யம் இத்தோடு ஏகார்த்யம்.(ய:)என்று அகாரவாச்யனைச் சொல்லுகையாலே, மஹேஸீவரஸஸீதம், அவயவஸக்த்யா ஸர்வநியந்தாவான நாராயணனைச்சொல்லிற்று. (அகாரோ விஷ்ணுவாசக:) என்கையாலே-அகாரவாச்யன் நாராயணன். ப்ருஹதாரண்யகத்திலும் அதர்வஸிகையிலும் சொன்ன ஆகாஸஸப்தம் பரமபுருஷபரமன்று, ஸர்வப்ரஸித்தியாகாஸம் தஹராகாஸாதிகள் போலே புருஷோத்தமனுக்கு அஸாதாரணமான தர்மமில்லாமையால், இவ்விடங்களில்ஈஸாநஸம்ஹுஸிவஸப்தங்கள், வஸித்வ ஜகத்காரணத்வாதிபரமாத்மஸாதாரணதர்மஸம்பந்தத்தாலே,(ஈஸாநஃ ப்ராணதஃ,ஸ்வயம்ஹுஸீஸம்ஹுஃ,ஸர்வஸீஸர்வஸீஸிவஃ) என்கிற ஸப்தங்களோடு பர்யாயங்கள். (காரணந்துதீயேயஃ) என்கிற வாக்யம், காரணத்வதீயேயத்வங்க ளிரண்டையும் விதிக்கிறதன்று; தீயானத்தை விதிக்கிறது. இரண்டையும் விதிக்கும்போது வா

க்யஷேகம் ப்ரஸங்கிக்கும். அநுவதிக்கும்போது அங்கஃப்ரவி யியமானத்தை அநுவதிக்க வேண்டுகையாலே, காரண வாக்யங்களில் காரணபூதனாகச் சொன்ன நாராயணனை அநுவதித்து, தத்யாநத்தை விதிக்கிறது. அதர்வஶிரஸ்ஸிலே ப்ரதம வண்டத்தில், (அஹமேகஃ ப்ரதமமாஸம் வர்த்தாமிச பவிஷ்யாமிச - நாந்யஃ கிஞ்சிந்மத்தோ வ்யதிரிக்தஃ) இத்யாதியாலே ருத்ரன் தனக்கு விஶ்வைஶ்வர்யத்தைச் சொல்லிற்று, (மத்தஸ்ஸர்வ மஹம் ஸர்வம் ஹம்மது ரஹவம்ஸூர்யஶ்சப்ராஞோஸ்மி ப்ரஜ்ஞாத்மாநம் மாமாயுரம்ருதமித்யுபாஸ்வ) என்று-ப்ரஹ்லாத வாமதேவேந்த்ராதிகளைப்போலே பரமாத்மபாவநா ப்ரகர்ஷபலத்தாலே யென்னுமிடத்தை, (ஸோந்தராதந்தரம் ப்ராவிஶத்) என்று - ஶ்ருதிதானே சொல்லிற்று. த்விதீயவண்டத்தில்சொன்ன தேவவாக்யம் ருத்ரவாக்யாநுவாதமாகையாலே தத்வாக்யதுல்யம். த்ருதீயசதுர்த வண்டங்களில் ஓங்காராதி ப்ரணவநாமங்களையும் தந்நிர்வசநங்களையுஞ் சொல்லுகிறது; பஞ்சமவண்டத்தில் சொன்னருத்ரோபாஸநம், மதுவித்யையிற்சொன்ன ஆதித்யோபாஸநம்போலே பரமாத்மோபாஸநம். இதிற்சொன்ன பஸ்மஸ்பர்ஶநம் ஸௌத்ராமணியிற்சொன்ன ஸுராத்ரஹணம் ஸர்வக்ரதுஸாதாரண மல்லாதாப்போலே ஸர்வோபாஸந ஸாதாரணமன்று. ஆகையாலேருத்ரபரங்களன்று; அந்தஶப்தங்கள்ப்ரணவவாச்ய நாராயணபரங்கள்.

ஶாந்தோக்யாதிகளில் (அஸதேவா இதமக்ர ஆஸீத்) இத்யாதிகளிலே பரமதோபந்யாஸம் பண்ணினாற்போலே, இவ்விடத்திலும் பரமதோபந்யாஸம்பண்ணுகிறது; லைங்கத்திலே- நந்த்யாதிதர்மாங்கமாகச் சொல்லுகையாலும், அதர்வஶிரஸ்ஸிற்சொன்ன மந்த்ரங்களை பஸ்மோத்தூளநத்திலேவிநியோகிக்கையாலும், அதர்வஶிரஸ்ஸிலும் லைங்கத்திலுஞ்சொன்ன பாஶுபத வ்ரதம் ஏகமாகையாலும்,(அர்ணைர்த ஶார்தஸம்யுக்தம்அஶுத்தஂப்ராஜ்ஞவிநிந்திதம்-வர்ணாஶ்ரம க்ருதைர்தர்மைர்விபரீதம் க்வசித்ஸமம்) என்று லைங்கந்தன்னிலே அவைதிகமாகச் சொல்லுகையாலும் அதர்வஶிரஸ்ஸில் அதிகாரஶ்ரவணத்தாலே விஶேஷேண ஸர்வாதிகாரத்வம் ப்ராப்தமாக ஸ்ரீவராஹ புராணத்திலும் ஆதித்யபுரா

ணத்திலும் வேதவாஹ்யாதிகாரமென்று ஸங்கோசிக்கையாலும், (ஸஸ்மச்ஶாநோ ஸஸ்மஶய்யாஶயாநஃ) என்று ஶாதாதபத்தில், தர்மஶாஸ்த்ரத்திலும் மஹாபாதகநிவர்த்தகமாகச்சொன்ன ஸஸ்மோத்தூளநம் ப்ராயஶ்சித்தவிஷயமாகையாலும் லோகப்ரஸித்தியி யாலும் இது அவைதிகமென்று சிலர் சொன்னார்கள். ஶ்வேதாஶ்வதரத்தில், நாராயணாத் பரத்வமும் மோக்ஷப்ரதத்வமுஞ்சொல்லுகிறதென்கிறதுவும் அநுபபந்நம்; (வேதாஹமேதம்) என்று துடங்கி (நாந்யஃபந்தா) என்று - மஹாபுருஷவேதநம் மோக்ஷஸாதநமென்றும், தத்வ்யதிரிக்தோபாயமில்லையென்றும், (யஸ்மாத்பரந்நாபரம்) இத்யாதியாலே - ப்ரஸ்துதபுருஷனேபரன், தத்வ்யதிரிக்தரடைய அபரரென்று சொல்லிவைத்து, அநந்தரம், வேறேயொருவஸ்துவைப் பரமென்றும் மோக்ஷப்ரதமென்றும் சொல்லுகையாகிறது ப்ரதிஜ்ஞாஹேது விரோதத்தாலே அஸங்கதமாகையாலும், மஹாந்ப்ரபுர்வைபுருஷஸ்ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தகஃ) என்று-ப்ரஸ்துதனானமஹாபுருஷனை ஸத்வப்ரவர்த்தகனாக சொல்லுகையாலும், ஸத்வப்ரவர்த்தகன்விஷ்ணுவென்னுமிடம்) அதயோஹவை வாவஏஷவாஸ்யஸாத்விகாம்ஶஃ ஸோஸௌப்ரஹ்மசாரிணோயோயம்விஷ்ணுஃ) என்கிற மைத்ராயணியோபநிஷத் ஸித்தமாகையாலும், ஸ்ரீபுருஷஸூக்த நாராயணாநுவாக ப்ரப்ருதிகளிற் சொன்ன (ஸர்வாநநத்வாதிகளை (ஸர்வாநநஶிரோக்ரீவஃ) இத்யாதிகளிற் சொல்லுகையாலும், இப்ரகரணம் நாராயணபரம் — (ததோயதுத்தரதரம்) என்கிறவிடத்தில் தச்சப்தம் ஹேதுபரம். அன்றிக்கே இதம் ஸர்வம் என்று கீழ்ச்சொன்ன ப்ரபஞ்சத்தை பராமர்சிக்கிறதாகவுமாம். சிவசப்தம் அவயவ சக்த்யா நாராயணபரம் ருத்ரஸ்தாரகம். இத்யாதிகளிற் சொல்லுகிறது மோக்ஷப்ரதத்வத்தையன்று, ஜ்ஞாநோபதேஷ்ட்ருத்வத்தை; (ஸநோதேவஶ்ஶுபயாஸ்ம்ருத்யா ஸம்யுநக்து என்கிறவிடத்திற் சொல்லுகிறதும் ஜ்ஞாநப்ரதத்வத்தை; (உபாயோஸ்மிஹரேஸ்ம்ருதௌ,ஈஶ்வராத்ஜ்ஞாநமந்விச்சேத்) இத்யாதிகளாலே-அவனுடையஜ்ஞாநோபதேஷ்ட்ருத்வமும்நாராயணனுடைய மோக்ஷப்ரதத்வமும் ஸித்தம். (தஸ்யைவதுப்ரஸாதேநவிஷ்ணுஸக்திஃப்ரஜாயதே) என்கிறபடியே ருத்ரன்ஸமவத்ஸக்தியை யுண்டாக்குமித்தனை. ஆகையாலேயிறே, ருத்ரபக்தனானவாணன், (நிர்வை

ரிதாசவிப்ரா்ஸைப்ர்விஷ்ணுஹக்திர நுத்தமா-வாஸுதேவாத்துமரணம் கல்பாங்தேகுபிதாத்புநஃ) என்று-ருத்ரன்பக்கலிலே ஸமவதி ஸக்தியை யபேக்ஷித்தது. ஸ்ரீருத் ராதிகளில்,பரத்வசிந்ஹமான ஜமத்காரணத்வ முமுக்ஷூபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வங்க ளில்லாமையாலும், ப்ர பலஸ்ருத்யந்தர விரோதத்தாலும், அநிசயநாதிகளிலே விதியுக் தங்களாகையாலும், ருத் ரபரத்வத்தைச்சொல்லுகிறனவன்று; ஆகை யாலே, ருத் ரனுக்குபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வங்கள் கூடாது.

கிஞ்ச,(யேஸ்வதர்மஸ் யிதாவர்ணு விப்ராதியாஃ குருநந்தந-விக ர்மஸுநிவர்த்தந்தேப்ரீதிமாம்ஸ்தேஷுகேஸவஃ,ஸ்ரீ ரஹ்மசாரீ நிருஹ ஸ்யாதியாஸ்தஸ் மாத்ப்ரியத்வம் க்ருஷ்ணஸ்யயேஷாம் நிவ்ருத்திஃ பாரிக்யே வேதாப்ரமாணம்ஸம்ருதயஃ, பரதி ரவ்யேஷுஜாத்யங்யாஃ பரதாரேஷ்வபும்ஸகாஃ-பரவாதேஷுயேமூகாஃ தேஸர்வேதயிதாமம, ஸ்ருதிஸ்ம்ருத்யுதிதம்கர்ம, தி விவியோஹுதஸர்நீமோயம தே வஆஸுரஏவச - விஷ்ணுஹக்திபரோதேவஃ விபரீதஸ்தயாஸுரஃ, ஸ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா) என்கிறபடியே - ஸ்ரீ விஷ்ணுயர் மவசநங்களாலும்,(வைத்யாநாம்வஹுமாநித்வம்மாத்ஸர்யம்மமஸத் க்ரியா - நிந்திதம்வேதஸாஸ்த்ராணும்ஹரிஹக்திரநுபமா)என்கிற ஸ்ரீவாமநபுராண வசநத்தாலும், (ஸுரபதிரஸுரைஸ்ஸதாஹியுக்தஃ பஸுபதிரப்யவநீதஸ்ருத்யவர்நிமஃ- ஸுரமருத்ருஶப்ரஸாத கர் த்தாஹரிசரணஸ்மரணுபவர்நிமஹேதுஃ) என்கிற ஸ்ரீநாரஸிம் ஹபுராணவசநத்தாலும், (விஷ்ணுஹக்திஸமாயுக்தம் ஸ்ரௌதஸ்மார் த்தப்ரவர்த்தகாந்-ப்ரியோஹவதியோதிருஷ்ட்வா வைஷ்ணவோஸஸ ப்ரகீர்த்திதஃ) என்கிறலைங்மவசநத்தாலும், (யேசவேதவிதோவிப்ராஃ, மஹாத்மா நஸ்துமாம்பார்த) என்கிறமஹாஹாரத வசநத்தாலும், ஸமவதி ஸக்தர்கள் ஸத்வப்ரக்ருதிகளாய் வைதிகராயிருப்பார்களெ ன்னுமிடம்ஸியியம்; ருதிரஹக்தர்கள் தமஃப்ரக்ருதிகளாய் அவைதிக ரா யிருப்பார்களென்றும்ஸியியம். (வாஸுதேவபராயத்ர வேத மார்நிமாநுஸாரிணஃ- ருதிரஹதாஸ்த்ர யீவாஹ்யாஃ ஸஸ்மோயா ளநவிரநிஹாஃ) என்கிறலைங்ம வசநத்தாலும் - ஹஸ்மோயதூளநம் ருதிரஹக்தர்களுக்கு லக்ஷணமென்னுமிடம் ஸியியமாய் நின்றது.

பஸ்மோத்தூளநந்தான் (தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந பஸ்மோத்தூளநவிக்ரஹா:, ஜடிநோமுண்டிநஶ்சைவ நக்நாநாநாப்ரகாரிண:- ஜடிலாமுண்டிதாவாபி) என்று லைங்கத்திலும்மஹாபாரதத்திலும்- நக்நத்வாதி தர்மஸஹசரிதமாகச் சொல்லுகையாலும்; (நபஸ்ம கேஶகரீஷகபாலாமேத்யாந்யபிதிஷ்டேத்)என்றுநிஷேத்யத்ரவ்யங்களோடே சேரவைக்கையாலும், பஸ்மந்தான் அஶௌசத்ரவ்ய மாகையாலும், (நக்நம்வாநுபவீதம்வா விப்ரம்த்ருஷ்ட்வா ப்ரமாதத: - ம்ருத்பிர்த்வாதஶபிஸ்ஸ்நாத்வா வாஸோபிஸ்ஸஹஶுத்யதி - தஸ்மாதேதாந்நரோநக்நாந் த்ரயீஸந்த்யாகதூஷிதாந் - ஸர்வதா வர்ஜ்ஜயேத்ப்ராஜ்ஞ ஆலாபஸ்பர்ஶநாதிஷு) என்று - நக்நத்வாதிகள் வேதபாஹ்யங்க ளாகையாலும், (கரிபுண்ட்ரதாரிணோநித்யம் பஸ்மோத்தூளநதத்பரா:-ஹவிஷ்யநீவம் த்ரயீபாஹ்யா: மித்யாஜ்ஞாநப்ரலாபிந:,த்ருஷ்ணம்மாயயாஸர்வ மிதிஸஞ்சிந்த்யதத்ர வை-ஶுஶாபதாந்ஜடாம்பஸ்மமித்யா † வ்ரதபராம்ஸ்ததா) என்கிற ஆதித்யபுராண ஸ்ரீவராஹபுராண வசநங்களாலும் - வேதபாஹ்ய லக்ஷணமென்கிறன. இப்படி வேதபாஹ்யலக்ஷணரான தாமஸபுருஷர்களாலே ஸேவ்யனாகையாலும் அஜ்ஞாநாதிகார்யங்களாலும் தேவதாத்வத்தாலும் ருத்ரனுக்கு ஸத்த்வகுண முண்டேயாகிலும், நதேஸ்தி ப்ரஸித்த்யம்வா, என்று குணத்ரயவஶ்ய நாகையாலும், தமோகுண முண்டாகையாலும், அதுதான் ப்ரஹ்மாதிகளுக்கு முண்டேயாகிலும் அவர்களிலுமிவனுக்கு அதிஶயித்திருக்கையாலே அபேக்ஷிதமான தாமஸத்வவ்யபதேஶம் யுக்தமாகையாலும, தானும் தாமஸபுருஷனாகையாலும், ஸாபேக்ஷத்வ ஸூசகங்களான ஜடாசர்மவஸநாதி ஸாதககர்மங்களோடே கூடியிருக்கையாலும், ருத்ரனுக்கு உபாஸ்யத்வாதிகள் கூடாது. ஸ்ரீபுருஷஸூக்த ப்ரக்ரியையாலும், நாராயணனுடையகாரணத்வமுமுக்ஷூபாஸ்யத்வமோக்ஷப்ரதத்வாதிகள் ஸித்தியங்கள். நநுவ இவனுக்கஸாதாரணங்களான வாஹநாயுத நாமஸ்ம்ருதிஸ்துதிகளிலே அந்யதமஸங்கீர்த்தந மில்லாமையாலும் ஈஶாநபதம் கிடைக்கையாலும் நாராயண பரமன்றேஎன்னில்; அது அநுபபந்நம்: ஸஹஸ்ரஶீர்ஷத்வாதிகளைச் சொல்லு

† இக்குள்ள த்ரந்யபாதம் கோஶாந்தரங்களிற் காண்க.

கையாலும், அவைதா னிவனுக்கு அஸாதாரணமென்னுமிடம் நா ராயணாநு வாகாதிஸித்தியங்க ளாகையாலும், லக்ஷ்மீபதித்வ லிங்கத் தாலும், நாராயணப்ரதிபாதக ஸப்ராலோபநிஷத்திலே (புருஷஏ வேதம்) என்று புருஷஸூக்த வாக்யத்தாலே நிகமிக்கையாலும், அதர்வணத்திலே (வைஷ்ணவ்யாம்புருஷஸூக்தம்) என்றுவைஷ் ணவ மஹாமந்த்ரமாக விநியோகிக்கையாலும், ஸாங்க்யாயன யத்திலே (ஏஷாவைவைஷ்ணவீநாமஸம்ஹிதா) என்கையாலும், ஸம வத்ஸமாராயந ரூபகர்மாதிகளிலே வேதாயநப்ரப்ருதி பரம ருஷிகளாலே விநியுக்தங்களாகையாலும், (புருஷஸ்யஹரேஸ் ஸூ க்தம் ஸ்வர்க்யம்யங்யம்யஶஸ்கரம்) என்கிற ஶௌநகவாக்யத்தாலும், பலவிடங்களிலும் புருஷஶப்தப்ரயோகம்பண்ணுகையாலும், புரு ஷன் நாராயணனே என்கிற ஸமாக்யையாலும் நாராயண பரமென் னுமிடம் ஸித்தியம். இவ்விடத்தில் ஈஶாநஶப்தம் நாராயணஶப் தம்போலே ஸம்ஜ்ஞையல்ல; (அம்ருதத்வஸ்யேஶாந:) என்கையா லே - புருஷஶப்த மிவன்பக்கலிலேரூடம். சேதநஸாமாந்ய வாசி யாகிற அவ்வளவால் ப்ரயுக்தமாகிறதன்று; ஸாலபாதபாதிஶப்தங் கள்போலே ஸாமாந்ய விஶேஷவாசியாயிருக்கும். முண்டோபநிஷ த்துதுடக்கமான பலவுபநிஷத்துக்களாலும்,(புருஷ:புண்டரீகாக்ஷ: ரூபந்தத்பரமாத்மந: ப்பரஹ்மாகமல மர்ப்பாபோருத்ர: காலாக் நிஸந்நிப: த்விர்த்வாதஶேஹ யஸ்த்த்வேஹ யுஃவீயாதோயம்பஞ்ச விம்ஶக: - புருஷோவாஸுதேவஶ்ச பரமாத்மேதிசோச்யதே, வித் யாத்துபுருஷம்பரம்) இத்யாதியுபஷ்ரும் ஹணங்களாலும், (அதா தோமஹாபுருஷஸ்யாஹரஹ: பரிசர்யாவிதிம்வ்யாக்யாஸ்யாம:என் கிறபோதாயநவசநத்தாலும், பரம: புமாநிவபதி:பத்யா: என்கிற அர் வாசீநப்ரஸித்தியாலும், புருஷஶப்தம் நாராயணபரமென்னு மிடம்ஸித்தியம். (தத்புருஷாயவித்மஹே மஹாதேவாயதீமஹி, புரு ஷோவைருத்ர:) இத்யாதி ப்ரதேஶங்களிலே ருத்ரனையும் புருஷ ஶப்தத்தாலே சொல்லாநின்றதே யென்னில்; அவ்வோவிடங்க ளில் நாமதயா ப்ரயுக்தமாகிறதன்று, நம்ஸ்கார்யத்வ ஹேதுவான பரமாத்ம ப்ரகாரத்வமடியாகவந்த த்ரிபுரதஹந பராக்ரமாதி குண யோகந் துடக்கமானவற்றாலே ப்ரயுக்தமாகிற தித்தனை.— ஆக, இப்படி பரத்வசிஹ்நங்களான காரணத்வ முமுக்ஷூபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வங்களுள்ள திவனுக்கே யாகையாலும்; (ஸர்வேவே

ஷாயத்பதிமாமந்தி: ஸர்வேவேதாயத்ராகம்ஹவந்தி, வசஸாம்வாச்யமுத்தமம்; யச்ஹுந்தஸாம்ருஷஹோர்விஶ்வரூப:) என்று - வேதந்தானே தனக்குப்ரதிபாத்யன் நாராயணனென்கையாலும்; (வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:) என்று - நானேவேத ப்ரதிபாத்யனென்று அவன்றானே சொல்லுகையாலும்; நாராயணபராவேதா: வேதேராமாயணே புண்யேஹாரதேஹரதர்ஷஹ - ஆதௌமத்யே தயாந்தேசவிஷ்ணு ஹஸர்வத்ர ரியதே, ஏநமேகேவதந்த்யக்நிம் மருதோந்யேப்ராஜாபதிம் - இந்த்ரமேகேபரே ப்ராணம் அபரேஷாஹ்மஶாஶ்வதம்) என்றிங்ஙனே ருஷிகளும் சொல்லுகையாலும், வேதஸியயாந்தமார்மேஷு. தந்நஜாநந்தி மோஹிதா: யஷேதத்பரமம் ஷ்ருஹ்மவேதவாஷேஷுப஠்யதே ஸஷேவ:புண்டரீகாக்ஷ: ஸ்வயம் நாராயண:பர: ஹஹவாந் வாஸுஷேவஶ்ச கிர்த்யதேத்ரஸ நாதந: ஸஹிஸத்தியவ்ருதம்சைவபவித்ரம் புண்ணிய மேவச (ஆலோஷ்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்யசபுந:புந: - இதமேகம்ஸு நிஷ்பந்நம்த்யேயோ நாராயணஸ்ஸதா - தத்வஞ்ஜிஜ்ஞா ஹமாநாநாம்ஹேது ஹிஸ் ஸர்வதோமுவை: - தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயண: பர: - ஶ்ருயதாந்துநரவ்யாஷ்ர வேதவேதாந்த நிஶ்சயம் - யஜ்ஞேஶோயஜ்ஞபுருஷ: புண்டரீகாக்ஷஸம்ஜ்ஞித:தத்விஷ்ணு: பரம்ஷ்ரஹ்ம யதோநாவர்த்ததேபுந: விஷ்ணுரேவபரம்ஷ்ரஹமத்ரிவேதமிஹபட்யதே - ஸஷேவு புண்டரீகாக்ஷஸ்ஸவயம் நாராயண-பர:) என்று - ப்ரமாணதர்க்கங்களையிட்டு ஆராய்ந்தவர்கள் இவனேயே பரத்வமென்று நிர்வஹிக்கையாலும்; அவற்றை யொழியவே, ஷ்ரஹ்ம விஷ்ணு ஶிவர்கள் மூவரிலும் அதிகாராரோவென்றுராய்ந்துவரவென்று ப்ருகுவைப்போகவிட்டு பரீக்ஷித்து, (தந்நிஶம்யாயமுநயோ விஸ்மிதாமுக்த்திஸம்ஶயா: - ஹுயாம்ஸம்ஶ்ரத்யுர்விஷ்ணும் யத:ஶாந்திர்ய தோஹயம் என்றுஶாந்தியாதிகுண யோகத்தாலே இவனையே அதிகனென்று நிர்ண்ணயிக்கையாலும், ஜ்ரும்ஹிதம்தத்யுநர்த்ருஷ்ட்வா ரௌவம் விஷ்ணுபராக்ரமை: அதிகம் மேநிரேவிஷ்ணும் ஷேவாஸ்ஸர்ஷி மணாஸ்ததா என்று ஷேவர்கள் பரிக்ஷித்து நிர்ணயித்தபடியை, ஶர்மவன் சொல்லுகையாலும் அவன் தான் ருத்ரன் பக்கலிலே செல்ல, அவன் அதியானபரனு யிருக்க நீ ஆரை யதியர்னம் பண்ணுகிறது, என்று அவனைக் கேட்க யோகீஶ்வரஞ்ஜஜமந்யம் விஷ்ணும் ஜிஷ்ணும் ஸநாதநம் பத்மநாபம்

விஶாலாக்ஷம் சிந்தயாமி ஜகத்பதிம் என்று ஜகத்பதியான ஸ்ரீமகாவிஷ்ணுவை த்யானம் பண்ணுகிறேனென்று சொல்லுகையாலும் நஹ்யேதஸ்மாதிதி, நேத்யந்யத்பரமஸ்தி நதஸ்யேஶே கஶ்சந, ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம், நாராயணாத்பரோதேவோ நபூதோ நபவிஷ்யதி - ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்ச ஸத்தம: நப்ரமாணம்மஹாபாஹோ: ஶக்யோஹாரதகேஶவ: - பாரேப்ய: பரமேதஸ்மாத் விஶ்வரூபாந்நவித்யதே) என்று-இவனிற்காட்டில்பரராயிருப்பாரில்லையென்கையாலும்; இவனே ஸர்வஸ்மாத்பரன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

———:o:———

ஸ்ரீமதேராமாநுஜாயநம.

௬ - வது. ப்ரகரணம்.

———:o:———

மாக நினைத்திருக்கு மர்யமிதுவேகாணென்று சொன்னான். அசலை யான ஶக்தியாலே ஆஶ்ரயிக்கப்பாராயென்று உபதேஶிக்கையாலே ஆசார்யருசி பரிக்ருஹீதமே ப்ரபலப்ரமாணம். ஸ்வஶக்தியால் பிறந்த ஜ்ஞானமின்றிக்கே நிர்ஹேதுக ஸுவத்ப்ரஸாதலப்தஜ்ஞானமுடையராய் நமக்கு பரமாசார்யர்களான ஆழ்வார்களும் ஸம்ஸாரஸயஹீதராய் ப்ரபத்தியைப்பண்ணுவது ப்ராப்யத்தில் த்வரையாலே ப்ரபத்திபண்ணுவர்கள். எங்ஙனே யென்னில் (நெறிவாஶல்தானேயாய் நின்றானை) என்றும் (மாலடியே கைதொழுவான்) என்றும் (நம்பரமொன்றில்லையடைய) என்றும் (தன்னிலங்கைவைத்தான்ஶரண்) என்றும் பொய்கையாழ்வார், (பனிமலராளங்கவலங் கொண்டானடியைப் பைங்கமலமேந்திப்பணிந்தேன்) என்றும் (அவரிவரென்றில்லையரவணையான்பாத மெவர்வணங்கி) என்றும் (அன்றிடர்கடுத்தவாழியான்பாதம் பணிந்தேனே) என்றும் பூதத்தார், (அரணம் நமக்கென்று மாழிவலவன்) என்றும் (ஶக்கரத்தான் தாள்முதலே நங்கட்குச்சார்வு) என்றும் பேயார், (பழகியான் தாளே பணிமின்) என்றும் அடைக்கலம புகுந்த வென்னை அஞ்சலன்ன வேணுடுமே யென்றும் திருமழிசைப்பிரான், திருப்பொலிந்த சேவடியென் சென்னியின் மேலப்பொறித்தாய்) என்றும் (உன்னருள் புரிந்திருந்து) என்றும் பெரியாழ்வார், (நாராயணனே நமக்கே பறைதருவான்) என்றும் (வேங்கடத்துச் செங்கண்மால் சேவடிக்கீழடி வீழ்ச்சி விண்ணப்பம்) என்றும் நாச்சியார், திருக்கமலபாதம் வந்தென்று திருப்பாணாழ்வார், (கற்றினம்மேய்த்தவெந்தை கழலிணைபணிமின்) என்றும் (சிலையினாலிலங்கைசெற்ற தேவனே தேவனாவான்) என்றும் (உன்கடைத்தலையிருந்துவாழும் சோம்பரையுகத்தி) என்றும் ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், (உன்சரணல்லால் சரணில்லை) என்றும் (உன்பற்றல்லால் பற்றில்லை) என்றும் (உன்னிணையடியே யடையிலல்லால்) என்றும் (மற்றாரும்பற்றிலே னென்றவனைத் தாள் நயந்த கொற்றவேற்றானை) என்றும் பெருமாள், (நலம்புரிந்திறைஞ்சும் திருவடியடைந்தேன்) என்றும் (நாயேன் வந்தடைந்தேன்) என்றும் (ஆற்றேன் வந்தடைந்தேன்) என்றும் (உலகமளந்த பொன்னடியே யடைந்துய்ந்தேன்) என்றும் (கண்ணனே களைகணியே) என்றும் (நின்னடியிணை பணிவன் வருமிடரகல மாற்றோ வினையே) என்றும் திருமங்கை யாழ்வார், (அலர்மேல் மங்கையுறைமார்பா) என்றும் (புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே) என்றும்

(நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு) என்றும் (முகில் வண்ணனடியை யடைந்தருள் சூடியுய்ந்தவன்) என்றும் (கழல்களவையே சரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்) என்றும் (ஆறெனக்கு நின்பாதமே ஶரணாகத் தந்தொழிந்தாய்) என்றும் (உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்) என்று (ஆத்தன்றாமரையடியன்றிமற்றிலமரணே என்றும் (ஆவிக்கோர் பற்றுக் கொம்பு நின்னல்லாலறிகின்றிலேன்) என்றும் நம்மாழ்வார், (மேவினேனவன் பொன்னடி) என்றும் (அன்பன் றன்னையடைந்தவர்கட்கெல்லாமன்பன்) என்றும் ஸ்ரீமதுரகவிகள். ஆக இவ்வாழ்வார்களைப் பின்சென்ற ஆளவந்தாரும் (நத⁴ர்மநிஷ்டோஸ்மி, அகிஞ்சநோநந்யகதி:, தவசரணயோ:) என்று (அஶரண்யஶரண்ய மநந்ய ஶரணஸ்ஶரணமஹம் ப்ரபத்³யே) லோகவிக்ராந்த சரணௌ ஶரணந்தே வ்ரஜம் விபோ என்றும் எம்பெருமானார். ஆக இப்படி வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் (லோகே ஸத்வம் பரோத⁴ர்ம:) என்றும் (ராமோவிக்³ரஹவான் த⁴ர்ம:) என்றும் (க்ருஷ்ணம் த⁴ர்மம் ஸநாதநம்) என்றும் விரோதி நிவ்ருத்தி பூர்வகமான நிரதிஶய புருஷார்த²மான கைங்கர்யத்தைப் பெற்று உஜ்ஜீவிக்கைக்கு இதுவல்லது ஸித்³தோபாயமில்லை. ஆதலாலிப்படி ப்ராமாணிகனான சேதநனுக்கு ப்ரபத்தியை பற்றவடுக்கு மென்றருளி யிட்டார்கள். நம்மாசார்யர்களுக் கிங்ஙனே யிருப்பதொரு நிர்வாஹ முண்டு. லோகயாத்ரையில் பரிமாற்றங்களுடைய வேஷயாத்ரையிலேசேர்த்து அநுஸந்திப்ப தொன்றுண்டு; அதெங்ஙனே யென்னில், பாதிரிக்குடியிலே, ஹட்டர் ஒரு வேடனகத்திலே வர்ஷத்துக்கொதுங்கி யெழுந்தருளியிருக்கச்செய்தேவேடனைப்பார்த்து இவ்விடங்களிலே விஶேஷமென்னென்று கேட்டருள, இங்கே புதுஶாக ஒருவிஶேஷங் கண்டேன், காட்டில் ஒரும்ருகம்பிடிக்கப் போனேன், அங்கே முயல்குட்டியை பிடித்துக் கூட்டிலே விட்டேன். இதினுடைய தாய் பலகாலம் தொடர்ந்துவர அத்தைப் பின்ஶாய்ந்து வுள்வாஶலளவும் வந்துபுகிறப் புக்கவாறே முன்னேவந்து உண்டணிட்டுக் கிடந்தது. பின்னையித்தை விட்டேனென்று இவ்விஶேஷத்தை விண்ணப்பம் ஶெய்தான். இத்தைக்கேட்டு ஹட்டரும் விஷயருளிச்செய்கிறார்

(மாமேகம் ஶரணம் வ்ரஜ) என்கிற ஜ்ஞாநம் முயலுக்கில்லை. (அரிப்ராணான் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய:) என்கிற ஜ்ஞாநம் வேடனுக்

கில்லை, இவையன்றிக்கே இருக்க ஶாதகனாயிருக்கிற விவனிது ஶெய்யக்கடவனானால், பரமசேதனனானவன் பக்கலிலே ப்ரபத்தியை உபபோஷித்தால் யென்னாகக் கடவனோவென்று விஷண்ணரானார், தானும் தன்னுடைய ஸ்த்ரீயுமாக ஒருகாட்டிலேயிருக்க நாம்ஶென்று புக்கவாறே துணுக்கென் றெழுந்திருந்து பஹுமாநங்களைப் பண்ணிச் செய்தானிவன். நம்வாஶியறிந்து செய்தானொருவனல்ல னிவன் ஜந்மமிது, பரஹிம்ஸைபண்ணி ஜீவிக்கும்வர்த்தம். இப்படியிருக்க இவன் நம்மைக் கொண்டாடிற்று தானபிமானித்த நிழலுக்குள்ளொதுங்கினோ மென்றிறே. இனிபரமசேதநனாய் பரமக்ருபாளுவான ஸவேஶ்வரனபிமாநித் துகந்தருளின திவ்யதேஶங்களைப்பற்றி வர்த்திக்கிற ஸ்ரீவைஷ்ணவர்க ளளவிலே யிவனென் னினைத்திருக்கிறானோ வென்று விஷண்ணரானார். மற்றைநாளையில் ப்ரயாணத்திலே தூரவெழுந்தருளினஆயாஸத்தாலே அமுதுசெய்துஜீயர்மடியிலே கண்வளர்ந்தருளினார். அப்போது வெடிந்தது கெட்டேனென்னை யெழுப்புற்றிலீர், கால்நடையே வழிநடந்த விடாயை மதியாதே-யென்பக்கலிலே யித்தனை பரிவராயிருந்த விடமுமக்கு நாம்ஶொன்ன த்வயத்தை விஶ்வஸித்த மனமிறே யென்றருளிச் செய்தார். பட்டர்தாம் எம்பாரோடே ரஹஸ்யங் கேட்டாராயிறே யிருப்பது, இப்படியிருக்கச் செய்தே எம்பெருமானார் இவர் பதஸ்யராகிறபோது யிவர்கையிலே புஸ்தகத்தைக் கொடுத்து ஶெவியிலே த்வயத்தைச்சொல்லி பெருமாள் திருவடிகளிலே கொண்டுபுக்கு நான் இவருக்குவேண்டும் வித்யை கொடுத்தேன் நீரிவருக்கு வேண்டுமாயுஸ்ஸை கொடுத்தருளவேணுமென்று பெருமாள் திருவடிகளிலே காட்டிக்கொடுத்து த்வயத்தைச்சொல்லி ஶரணம்புக்கார். சிறியாத்தான் எம்பார் ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் வாஶித்துச் சமைந்துபோகக் காலமானவாறே தீர்த்தமாடி யீரைப்புடைவையோடே தண்டனிட்டுக்கிடந்தான். இதுவென்[illegible], எழிந்திரா யுனக்கபேக்ஷை யென்னென்று கேட்டருளம்லேச்ச தேஶத் தேறப்போகப் போகாநின்றேன், அங்கு நமக்கு தஞ்சமாக ஒருவார்த்தை கேட்கலாவாரில்லை. திருவுள்ளத்தில் ப்ரியதமமாகவும், ஹிததமமாகவும் அறுதியிட்டிருக்கு மர்த்தத்தை எனக்கருளிச்செய்ய வேணுமென்ன, எம்பெருமானார் ஸ்ரீபாதமே பெரியபிராட்டியார் ஸ்ரீபாதமே பெருமாள் ஸ்ரீபாதமே த்வயத்தி லறுதியிட்டிருக்கு மர்த்தத்துக்கு மேற்பட ஶ்ரேஷ்டமாயிருப்பதொரு அர்த்தமில்லையென்றருளிச் செய்தார். சிறியாத்தானை யழைத்து "திருக்கண்ண

புரத்திலே ஆய்ச்சி ஸ்ரீபாதத்தேறப்போய் வரவல்லையே, உனக்குக் கூலி கொடுக்கும்" என்றருளிச் செய்தார். அப்படியே அவ்வருகே போய் ஆய்ச்சி ஸ்ரீபாதத்திலே ஸேவித்துவிடைகொண்டு போரப்புக் கவாறே சிறியாத்தானுக்கருளிச்செய்த வார்த்தை,—"எம்பெருமான் நாராயணனுயிருக்க அநாதிகாலம் அவ்வுறவையறுத்துக் கொண்டிருந்தசேதநனை யவன்திருவடிகளிலே பிணைக்கைக்கு பற்றுசு பிராட்டியுண்டென்று நிர்ஹரநாயிரு" என்றருளிச்செய்தார். இத்தை கேட்டருளி எம்பார் "தட்டுகூலிக்கு மவ்வருகே போய்த்தி" என்றருளிச் செய்தார்.

இப்படியே யிருப்பதொரு அர்த்தமில்லையாகில் ஸம்ஸாரிசேதநனுக்குள்ளதடைய எம்பெருமானுடைய நிக்ரஹத்துக்கு ஹேதுக்களாய்க்கிடக்க எம்பெருமானை ப்ராபிக்க வேறொரு பொருளில்லையென்றருளிச்செய்தார். பெற்றி ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தாளொரு கொற்றியம்மைக்கு குருபரம்பரை முன்னாக த்வயத்தை யருளிச் செய்துவிட்டார். அவள் சிறுதுநாள் கழித்தவாறே எனக்கு பிராட்டி திருமந்த்ரத்தை யருளிச்செய்ய வேணுமென்றுகேட்க, இவளுக்கினி பிராட்டி திருமந்த்ரத்தைச் சொல்லுவோமாகில், இன்னமொரு மந்த்ரத்தைச் சொல்லென்று இத்தை அநாதரித்துப் போமென்று பார்த்து, எல்லாமந்த்ரங்களி லுள்ளதெல்லா முண்டென்னும் நிஷ்டை பிறக்கைக்காக "பிராட்டி திருமந்த்ரமும் உனக்குசொன்ன த்வயத்திலந்தர்கதம். அங்கேசொன்னோம் காண்" என்று அருளிச்செய்தார். பிராட்டி திருமந்த்ரத்தை ஜபித்து, கொள்ளும் பலத்தை இது தன்னையே ஜபித்துக்கொள்ளென்று அருளிச்செய்தார். வீராணத்து அருளாளப்பெருமாளெம்பெருமானார், நஞ்ஜீயர் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயிக்கைக்கு நம்பிள்ளையை புருஷகாரமாகக் கொண்டுவந்தார். இவனைக் காட்டிக்கொடுத்து இவனுக்கு ஹிதத்தை யருளிச்செய்ய வேணுமென்ன ஸம்ஸாரிகளி லொருவர்க்கும் ஹிதம்சொல்லலாகாதென்று ஸ்வப்நம்கண்டேன். அவனுக்குநீர்சொல்லுமென்றருளிச் செய்தார். "ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயிக்க வந்தவனுக்கு, எழுந்தருளியிருக்கச்செய்தே நான் சொல்லுகையாவுதென், அவனுக்கு ஸ்ரீகோபால மந்த்ரத்தை யாகிலும் அருளிச்செய்ய லாகாதோ? ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தானாய்போந்தபடி." என்றுவிண்ணப்பம்செய்ய,ஆனாலப்படி செய்கிறோமென்று ஆயர்தேவன் திருவடிகளிலே கொண்டு குருபரம்பரை முன்னாக த்வயத்தை அருளிச்செய்தார், இத்தைக்

கண்டு "அருளிச்செய்யப்புக்கதொன்று தலைக்கட்டுற்று ஒன்றுயிருந்தது" என்ன, என்னை யொழியப்போமாகில் போகிறதென் றிருந்தேன், இனிநான் சொல்லவேண்டிலப்பின்பு நான் விஶ்வஸித்திருக்குமதொழிய வேறொன்றைச்சொன்னேமாகில் அவனை விப்ரலம்பித்தேனாகாதோவென் றருளிச்செய்தார். நம்பிள்ளை நஞ்ஜீயரை அல்லாத தர்ஶநங்களுக்கு அதிகாரிகளும் போரவுண்டாய் ப்ரமாணங்களும் போரவுண்டாயிரா நின்றது. நம்தர்ஶநத்துக்குப்ரமாணங்களும் சுருங்கி அதிகாரிகளும்சுருங்கியிருப்பானேனென்று கேட்க, அதிகாரிகளன்றியிலே பொழிந்து ஸம்ஸாரிகளஜ்ஞராகையாலே. எங்ஙனேயென்னில், ஜ்யோதிஷ்டோமாதிகளைப்பண்ணி ஸ்வர்கத்தை லபிப்பானென்று ஶாஸ்த்ரங்கள்சொன்னால் அவ்வளவும் போகாதெஜ்யோதிஷ்டோமாதிகள் பண்ணி புத்ரபஶுவந்நாதிகளை புருஷார்த்தமாகப் பற்றிப் போராநின்றார்கள்.

ஸ்வர்கந்தான் நரகஸ்தாநமென்னும்படியா யிருக்கிற *அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்துக்கு அதிகார முண்டாகப் போகிறது என்று * அருளிச்செய்தார். ப்ரபத்திக்கு ப்ரமாணாபேக்ஷையில்லை என்றிருப்பன் (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித், ஆநந்தோ ப்ரஹ்ம, ஸமஸ்த கல்யாண குணாத்மகோஸௌ) என்கிற நிர்தோஷ ப்ரமாணத்தாலே அவன் ஸர்வஜ்ஞன், ஸர்வஶக்தன், ப்ராப்தன், ஸமஸ்தகல்யாண குணாத்மகனென்னுமிடம் ப்ரஸித்தம். நாமஜ்ஞ ரஶக்தரென்னுமிடமும் நமக்கே தெரியும். ஆகையாலே அமிழ்ந்துமவன் நெடியவன் கையை பிடிக்கச்சொல்ல வேணுமோ தன்னுபத்தே யுபதேஶிக்குமென்றருளிச் செய்தார். எம்பெருமானார்க்கிங்ஙனே யிருப்பதொரு நிர்வந்தமுண்டு, எங்ஙனேயென்னில், கண்ணழிவற்றதொரு வைஷ்ணவனைக்கண்டா லவனுக்கு ப்ரீதிக்கு போக்குவீடாக ஒருரு த்வயத்தை யருளிச் செய்வர். பிறருடைய துர்கதியைக் கண்டால் திருவுள்ளந்தா னிரங்கி யருளிச்செய்வதும் த்வயத்தை. பெரியகோயில் நாராயணன் மகனை ஏகாயனரோடே கூடியிருக்கக்கண்டார், அவனை கைபிடித்துக்கொண்டு பெருமாள் திருவடிகளிலேபுக்கு நீ வேதலஜ்ஞனாகையாலே யுனக்கொரு ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கப் போகாது; நான் ஸகலவேத ஶாஸ்த்ரங்களையும் அளைந்து பார்த்தவிடத்தி லிவ்வாதமாவுக்கு தஞ்சம் த்வயத்துக் கவ்

* தோவென்று.

வருகு கண்டிலேன். நீயும் அத்தை விஶ்வஸித்திரு" என்று ஸ்ரீசம கோபனை யெடுத்து சூழறுத்துக் கொடுத்தார். அவருமன்றுதுடங்கி நீவயநிஷ்ட்ரராய்ப் போனார்.

எம்பெருமானார் வெள்ளைஸாத்திப் போஸல ராஜ்யத்தேற வெ ழுந்தருளி திருநாராயணபுரத்திலே யெழுந்தருளியிருக்கச் செய்தே அம்மங்கியம்மாள, பிரிவாற்றாமையாலே திருமேனியும் வெளுத்து வைதீயர்களும் பரிஹாரம்பண்ண வென்றுபக்ரமித்தவாறே "நிதாந மறிந்து பரிஹரிக்கவேண்டாவோஎம்பெருமானாரை, பிரிவாற்றாமை யாலே வந்தது. அவர் திருவடிகளிலே கொண்டுபோய் விடுங்கோள்" என்றார், அங்கேற நடந்தவிடத்திலே யெழுந்தருளியிருக்கச்செய்தே அந்தவிடத்திலே எம்பெருமானாரைக்கண்டு அவரணைத்துத் தழுவிக் கொண்டார். உடம்பில் ஶோகம்போய்த்து. என்னைப்பிரிந்துஉடம்பு வெளுத்து இத்தனை ஊரம் வந்தவருக்கு நாம் பண்ணுமுபகார மென்னென்று பார்த்தருளி முன்புசொன்ன நீவயத்துக்கு மேற் படக்கண்டிலோம் அது தன்னையே யின்னம் கேட்க்கலாகாதோ வென்று ஒருரு நீவயத்தை யருளிசசெய்தார்.

ஆழ்வான் பரமபதத்தேறப்போகைக்கு, பெருமாள்பாடே வீடு பெறற ஆழ்வான் கூட்டத்திலே வந்திருக்கச்சே "இனிப்பெருமாளை நம்மால் விலக்கப்போகாது. இனி அந்திமகாலத்திலே என்னையழை த்து வாருங்கோள்" என்று அந்திமஸமயத்திலே எழுந்தருளி ஆழ் வானுக்குச் செவியில் நீவயத்தை அருளிச்செய்தார். அருகிருந்த முதலிகள் இஸ்ஸமயத்திலே நீவயத்தைச்சொல்ல வேணுமோவென் று கேட்க, "ஆழ்வான் ப்ரக்ருதியறியீர்களோ இநீ ஊலையிலே நீவய த்தைச் சொன்னால் கர்ப்பூர நிகரத்தை நாவிலே யிட்டாப்போலே யிருக்குங்காண" என்றருளிச்செய்தார். எம்பெருமானாரந்திம ஊலை யிலே முதலிகளடையத் திரண்டிருந்து எங்களுக்கு தஞ்சமாய்த் திருவுள்ளத்துக்கு ப்ரியமா யிருப்பதொன்றை நாங்கள் விஶ்வஸித் திருக்கும்படி அருளிச்செய்ய வேணுமென்று கேட்க, எல்லாரும் ஹாஷயத்திலே வாஸனை பண்ணுகையே நமக்குப்ரியம், அதுக்குமா ட்டாதார் திருநந்தவநஞ்செய்து திருப்படிதாமம பறித்து திருமா லையெடுக்கையும் ப்ரியதரமாயிருக்கும் ; அதெல்லாருக்கு மொக்கச் செய்யப்போகாது, நீவயத்திலே வாஸனைபண்ணி விஶ்வஸித்திரு க்கைமிகவும் ப்ரியதமமாயிருக்குமென் றருளிச்செய்தார். அநந்தாழ்

வான் போஸலராஜ்யத்திலே எழுந்தருளினபோது ஜீயருடைய பூர்வ வாஸ்ரமத்திலைஸ்வர்யமு மிவர்செருக்கு மிருக்கும்படியை அநுஸங் யித்துப்போந்தானுய் ஜீயரிவைத்தையடையவிட்டு ஸங்யஸித்தெழுந் தருளினபோது அநந்தாழ்வான் கண்டு உன்னுடைய மார்ஜவமும், உன்னுடைய ஸெருக்கும் கிடக்கஸங்யஸித்தாயென் றருளிச்செய்து இனி செய்யலாவதில்லையிறேயென்று குளிரநோக்கி திருவேங்கட முடையானே இவனைப் பார்த்தருள வேணுமென்று வேண்டிக்கொ ண்டு திருமன்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயநிஷ்ட ஞவாயென்று வாழ்த்தினுன். கோயிலேறப்போனுலொரு மடமும் கா ர்யமுமாகக் கடவது, அப்போது ஹட்டரை த்ருஷ்டா த்ருஷடங்க ளிரண்டுக்கும் கடவரென்று நினைத்துப் போவதொரு போக்குண்டு: அதிலே ஒன்றைஹட்டரைக்கொண்டு கொள்வது, ஒன்றை பெருமா ளைக் கொண்டு கொள்வது. அங்ஙனே செய்யாதபோதுநீரொருகோ டி த்ரவ்யத்தை ஹட்டர்கையிலே கொடுத்தாலுமவர் சேருக்காலே அரைக்ஷணத்திலே யழித்துவிடுவர்,உம்முடைய காரியத்திலாராயாத போது நீர் ஹட்டரை வெறுப்புதிராகிலுமக்கு விநாஸமாம். பெருமா ளோடே வெறுத்தபோது ஹட்டரைக்கொண்டு தீர்த்துக்கொள்ளலா மென்று பணித்தான். சிறியாண்டானம்மாளன்திம உஸையிலே பணி த்தவார்த்தை, திருவேங்கடமுடையான் தன் ஸ்வரூபத்தை மறந்து என் ஸ்வரூபத்தை அநுஸங்யித்தானுகில் எனக்குப் பழைய நரகம் போராது. இன்னமும் சில நரகம் ஸ்ருஷ்டிக்கவேணுமென் றிரானின் றேன், என்ஸ்வரூபத்தை மறந்து தன் ஸ்வரூபத்தை யநுஸங்யித்தா ஞகிலெனக்குப் பழய திருநாடுபோராது, இன்னமும் சில திருநாடு ஸ்ருஷ்டிக்கவேணுமென் றிரானின்றேன். மருதூர்நம்பி அன்திமஉ ஸையிலே தம்முடைய ஊரிலே எம்பெருமானுரெழுந்தருளி யிருக் கச் செய்தே விண்ணப்பஞ்செய்த வார்த்தை: மூன்று ஜன்மம் திரு வடிகளிலே ப்ராதிகூல்யம்பண்ணின ஸிஸுபாலன் திருவடிகளைப் பெற அநேக ஜந்மமபராயத்தைப் பண்ணிப்போந்த நான் திருவடிக ளைப் பெருதொழிகைவழக்கோவென்ன, அப்போதே திருவடிகளைப் பெற்றுர். நம்பி, திருவழுதிவளநாடு தாஸர்க்கும், பிள்ளை திருநறையூ ரரையர்க்கும், ஹட்டரருளிச்செய்தவார்த்தை, "பொய்யேயாகிலு மவனுகந்தருளின தொருகோயிலிலே புக்குப்புறப்பட்டுத் திரியவே அந்திமஉஸையிலே எம்பெருமான் முகங் காட்டும்; அவன் முகங் காட்டவே இவ்வாத்ம திருந்துமென்று எம்பெருமானுக் கில்லாதது

மாய் இவ்வாத்மாவுக்குள்ளதுமாய் அவனைப் பெறுகைக்குப் பெருவிலையனுமாயிருக்குமுபாயம் அஞ்சலி" என்றருளிச்செய்தார். கருடமுத்ரைக்குபாம்பு அகப்படுமாப்போலே ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனும் (அஞ்சலிः பரமாமுத்ரா) என்கிறபடியே அகப்படும். ஆக இப்படி ஆசார்யருசி பரிக்ருஹீதமாயாய்த்திருப்பது த்வயம். இதினுடைய ஆநுபூர்வியைச் சொல்லி அதுக்குள்ளீடான அர்த்தத்தைச் சொல்லி விடவமையாதோ? இவ்விதிஹாஸங்களெல்லாம் திரள நீர் சொன்னதுக்கு ப்ரயோஜநமென்னென்னில், புறம்புள்ள ப்ரமாணங்கள்கிடக்கச்செய்தே இத்தனையும்ஆப்தர் பரிக்ருஹித்துப்போந்ததொன்றாகாதே யென்று கேட்கிறவனுடைய நெஞ்சிலே இதினுடைய வைபவம்பட்டு ருசிவிஶ்வாஸங்களுக் குறுப்பாக. திருக்கண்ணபுரத்திலே செருகமம்மானெல்லா வபராதங்களையும் க்ஷமஸ்வ என்று வேண்டிக்கொள்வதும்செய்தார். க்ஷமித்தோமென்று ஸமவஷேக்தியுமுண்டா யிருந்தது. (நக்ஷமாமிகதாசந)என்று என்னடியார் திறத்தில் அபராதம்பண்ணினவர்களை ஒருக்காலும் பொறேனென் றுண்டாயிருந்தது. சேருகிறபடி யென்னென்றுகேட்க ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்திலே அபசாரத்தைப் பண்ணிவைத்து தான் முன்னின்று ஶரணம் புகுமன்று பொறேனென்றது.

புருஷகாரத்தை முன்னிட்டுக்கொண்டு ஶரணம் புகுருகையாலே இவர்க்கு க்ஷம்ஸ்வவென்னத்தட்டில்லை, அவனுக்கும்பொறுத்தோமென்னத்தட்டில்லை. ஆகையாலே அஸஹ்யாபசாரத்துக்கு மிதுவே பரிஹாரம். ப்ரஜைபண்ணின குற்றம் தாய்பொறுத்தால் பின்னை யாராய்வாரில்லையிறே. பக்திநிஷ்஠னுக்கு கர்மாவஸாநத்திலே மோக்ஷமாவானேன்? ப்ரபந்நனுக்கு ஶரீராவஸாநத்திலே மோக்ஷமாவானேன்? என்னில் (தஸ்யதாவதேவசிரம்) அவனுக்கவ்வளவேவிளம்பம் (அதஸம்பத்ஸ்யெ) அநந்தரம் ஸம்பந்நனாகக்கடவன் என்கிறஶ்ருதி இருவர்க்கும் பொதுவன்றோ; கர்மமோக்ஷமென்னவுமாம்; ஶரீரமோக்ஷமென்னவுமாம் இத்தை நியமிப்பாராரென்ன. பக்திநிஷ்஠னுக்னுக்கிருக்க விருக்க உபாஸநம் பக்வமாகையாலே ஃபலமுண்டு, ப்ரபந்நனுக்கு கர்த்தவ்யமொன் றிலலாமையாலும் ஈஶ்வரனுக்கு அஜ்ஞாநாஶக்திகளில்லாமையாலும் இங்கொருப்ரயோஜநமில்லாமையாலும் ப்ரபந்நனுக்கு ஶரீராவஸாநத்திலே மோக்ஷம். ஆனால், ஜ்ஞாநம் பிறந்தபோதே ஶரீரம்போகாதொழிவானென் னெ

ன்னில், ஸம்ஸாரவத்விஷயத்திலே தீவ்ரஸம்வேகமில்லாமையாலே இவனுக்குள்ளமாத்ரந்தான் கர்மக்ஷயம் பிறந்தவாறே ஶரீரம்விடுமாகில் அனந்தரம் நரகமாயிருக்குமாகி லத்தைத்தப்பி எம்பெருமானைப் பெறலாயிருக்குமாகில் பெற்றாலாகாதோ வென்னென்றே இவனிருப்பது. இப்போதேப்ராக்ருதியை விடவேணுமென்னும் த்வரைப்ரபத்தி காலத்தில் பிறவாமையாலும், இவனிருந்தால் பின்னையுஞ்சில அநுகூலரைக்கிடைக்குமென்று ஈஶ்வரனுக்கு மிருக்கையாலே ப்ரியமாயிருக்கும். ஆனாலிருந்தந்தனை நாளும் ஸுவோத்தரமாக வையாதொழிவானென்னென்னில், து:கோத்தரமா யிருக்கச்செய்தேயும் இத்தை விடமாட்டாதவன் இதிலே அல்ப்பஸுகங் காணுமாகில் பின்னையவ்வருகுநினையானே. அவனுக்கு ஹிதமேபார்க்குமவனாகையாலே உபாஸகனுக்கு யிருக்க விருக்க விதிலே உபாஸநம்பக்வமாகிற வோபாதியிவனுக்கு மிருக்க விருக்க இதிலே நசிபிறக்கைக்குடலாம். நம்மையே உபாயமாகப் பற்றினானாகில் இனிமேலொரு போகியான வநுபவங்கொடுக்க விருந்தோமாகி வினி ஶரீரம்விடுந்தனையும் கர்மாநுகுணமாக ஜீவிக்கிறானென்று உதாஸீநனாயிருக்கும்.

நஞ்ஜீயர் உபாஸகனுக்குச்சொன்ன கர்மமடைய ப்ரபந்நனுக்கு தேஹயாத்ராஶேஷமாக ரஹஸ்யத்திலே யுண்டென் றருளிச்செய்வர். திருமன்த்ரத்தை யிடக்கைப்பத்துக்கொண் டெண்ணுகை கர்மயோகம், அதினுடைய அர்த்தாநுஸந்தாநம் பண்ணுகை ஜ்ஞாநயோகம், அவ்வர்த்தமிருக்கை பக்தியோகம், பக்திபரவஶராய் எம்பெருமானே நிர்வாஹகனென்று துணிகை ப்ரபத்தி. ப்ரபந்நர்தான் த்ரிவிதராயிறே யிருப்பது. பக்திபாரவஶ்யராய் ஸாதநாநுஷ்டாநக்ஷமரல்லாமையாலே ஶரணம் புகுவாரும் ஸ்வரூபஜ்ஞாநத்தாலே யவனைப்பற்றி யிருப்பாரும் இவை யிரண்டுமொழிய தந்தாமுடைய அஜ்ஞாநாஶக்திகளையும் அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகளையும் முன்னிட்டுக்கொண்டு ஶரணம் புகுவாருமாய் த்ரிவிதரா யிருப்பர். உபாயம் எம்பெருமானே. அங்கம் அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குணங்கள். திருமன்த்ரத்தை யொழிந்த ஶாஸ்த்ரங்களடைய சேதநனுடைய ஜ்ஞாந ஶக்த்யாதிகள் கொண் டெம்பெருமானைப் பெறலாமென்றது, திருமன்த்ர மிவனுடைய பாரதன்த்ர்யஜ்ஞாநத்தாலே பெறலாமென்றது. சரமஶ்லோ கமிவனுடைய பாரதன்த்ர்யமும் விலக்காமைக்குறுப்பா மித்தனை ஸம்ஸாரவத்ப்ரபத்தியே சரமமான

உபாயமென்கிறது (சரமஶ்லோகம்) த்வயத்திலிவனுக்குவிடச் சொன்னவர்யமு மழகியதாக விடவும் போகாது. பற்றச்சொன்னவர்த்தமும் அழகியதாகபற்றவும் போகாது. நாமோ அஜ்ஞர், அஶக்தர், அப்ராப்தர், ஈஶ்வரன் ஸ்வதன்த்ரன், நாமென்செய்யக்கடவோமென்று அஞ்சுவார்க்கு அஞ்சவேண்டாதபடி ஷோஷமேபச்சையாக, நின்றநிலையிலே பெறலாமென்கிறது. ஆகையாலே க்ரியையாலும், ஜ்ஞாநத்தாலும், துணிவினாலும், பெறவேணும். இதில் ருசிமாத்ரமுடையார்க்கு பாஶுரமாத்ரத்தாலே பெறலாமென்கிறது த்வயம். (மாதவனென்றதேகொண்டு)என்றும் (ஶரணமித்யபி வாசமுச்ரயன்) என்று சொல்லக்கடவதிறே. வாச்யங்களில் ஸர்வேஶ்வரனுக்கு அவ்வருகில்லாதாப்போலே உபாதேயமான வாசகஶப்தங்களில் த்வயத்துக்கவ்வருகில்லை. (மாசதிரிதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா) என்னக்கடவதிறே. தன்னாலே எம்பெருமானைப் பெறப்பார்க்கையிளிம்பு; தன்னைப்பொகட்டு எம்பெருமானைப் பெறப்பார்க்கை சதிர். இவனுடைய வபராயமு மீஶ்வரஸ்வாதன்த்ர்யமும் ஜீவியாதபடி பண்ணவல்ல பெரிய பிராட்டியார் ஸம்பந்தங்கொண்டே எம்பெருமானைப்பெறப்பார்க்கை மாசதிர். ஜ்ஞாந கர்மாநுநிர்வஹிதையான ஹக்தியோகத்தைமுமுக்ஷுவுக்கு ஹகவத்ப்ராப்திஸாதநமென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லாநிற்க, நம்மாசார்யர்களும், ஆழ்வார்களும் இவர்களுக்குள்ள ஜந்மவர்த்த ஜ்ஞாநங்களில் குறைந்தாபந்நராயிருப்பார்ரு மிப்ரபத்தியை விஶ்வஸித்து நிர்ஹரரா யிருக்கிறது என்கொண்டென்னில், அநாதிகாலம் பண்ணின ஸூக்ஷ்மயி பூர்வாபராயங்களுக்கு ப்ராயஶ்சித்த மாகையாலும், ஸர்வாயிகாரமாகையாலும், ஆசார்யருசி பரிக்ருஹீதமாகையாலும், கர்மாவஸாநம் பார்த்திராதே தேஹாவஸாநத்திலே மோக்ஷத்தைத் தருகையாலும், மற்றை யுபாயங்களுக்கு அங்கமாகவியித்து இவ்வுபாயத்துக்கு அத்தைத்தவிர்த்துக் கொடுக்கையாலும், விரோயியினுடைய ப்ராவல்யத்தாலும், தன்னுடைய ரக்ஷணத்தில் தனக்கு ப்ராப்தியில்லாமையாலும், ரக்ஷகனுக்கு ரக்ஷிக்கை முறைமையாகையாலும், நம்மாசார்யர்கள் த்வயத்தையே தஞ்ஜமாக நினைத்திருப்பர்கள். எம்பெருமானுடைய க்ருபை உபாயம். க்ருபைக்கடி இவனுடைய ஹதிஸௌஹ்ருத்யதை. இவனுடையஸுக்ருதமானாலோவென்னில் ஸுக்ருத துஷ்க்ருதங்களிரண்டு மப்ரயோஜகம். எங்ஙனேயென்னில் ருஷிகளையும் காகவிஹீஷணாதிகளையு மொக்க,ரக்ஷிக்கையாலே, திருமன்த்ரம் ப்ராப்ய

ப்ரதாநம், சரமஶ்லோகம் ப்ராபகப்ரதாநம் த்வயமிவை யிரண்டிலும் ருசியுடையா ரிவ்விரண்டையும் சேர வநுஸந்திக்கும்படி சொல்லுகிறது. திருமந்திரம் ஸ்வரூபம் சொல்லுகிறது. ஸ்வரூபாநுரூபமான உபாயவிதாநம் பண்ணுகிறது சரமஶ்லோகம். விஹிதமான உபாயத்தினுடைய வநுஷ்டாநம் த்வயம். திருமன்த்ரம் ஸ்வரூபம் சொல்லுகிற தென்கிறவிடம் ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறதே பரஸ்வரூபம் சொல்லுகிறதோவென்னில் பரஸ்வரூபம் ஸித்தமாகையாலே அதில் ஸாதிக்கவேண்டுவதில்லை. இவனுடைய ஸ்வரூபமிறே திரோஹிதமாய்க் கிடக்கிறது. அத்திரோதாயகம்போய் நிஷ்க்ருஷ்டவேஷமான ஸ்வரூப மின்னதென் றறியவேண்டுகையாலே ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறது.

பரஸ்வரூபஞ் சொல்லுகிறதென்றாலும் ஈஶ்வரஸ்வரூபம் ஸம்பாதிக்கிறதொன்றன்றிறே. அறியாதவனுக்குச் சொல்லுகிறதாகையாலே பரஸ்வரூபம் சொல்லுகிற திருமன்த்ரம் ப்ராப்யப்ராதாந்யமென்றபோதே ப்ராபக மப்ராதாந்யேந உண்டாகக்கடவது. எப்பதத்திலே என்னில் திருமன்த்ரத்தில் நமஸ்ஸிலே. மஃ என்று ஷஷ்டீவிபக்தி. எனக்கென்கையாலே, அத்தை நகாரம் நிஷேதிக்கையாலே தன்னோடு தனக்குண்டான அந்வயத்தைத்தவிர்க்கிறது. தான் என்று வைத்து தன்னோடு தனக்கந்வயமில்லையென்னுமிடத்துக் கருத்து என்னென்னில் தன்னோடு தனக்கந்வயமில்லையென்றவிடம் ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யத்தைச் சொன்னபடி, இப்பரதந்த்ரவஸ்துவுக்கு ஸ்வதந்த்ரன் ரக்ஷகனாக வேண்டுகையாலே அவ்வழியாலே ஈஶ்வரனுடைய உபாயபாவம் சொல்லிற்றாகக் கடவது. ஆர்த்தமாகவும் அங்கனன்றியே ஶப்தப்ரமாணத்தாலே ஶாப்தமாகவும், ஶப்தப்ரமாணங்கொண்டு ஶாப்தமாதல் ஆர்த்தமாதல்செய்யவேண்டுகையாலே அப்ராதாந்யேந ப்ராபகம். ப்ராப்யப்ரதாநமே திருமன்த்ரம். திருமந்த்ரம் ஸ்வரூபஜ்ஞாந வைஶத்யஹேது வென் றநுஸந்திக்கக்கடவோம். த்வயம் இவைத்தினுடைய அர்த்தாநுஸந்தாநமென் றனுஸந்திக்கக்கடவோம், சரமஶ்லோக மிவைத்துக்கு ப்ரமாணமென் றநுஸந்திக்கக்கடவோம். திருமன்த்ரம் ஸகலவேததாத்பர்யமென் றநுஸந்திக்கக்கடவோம்சரமஶ்லோகம் ஶரண்யனுக்கு அபிமதமென் றனுஸந்திக்கக்கடவோம். த்வயம் ஆசார்யருசி பரிக்ருஹீதமென் றநுஸந்திக்கக்கடவோம். ஆக எல்லாக்கு

மபிமதலாபத்துக்கும் அநபிமத நிவர்த்திக்கு மவனே உபாயமாக ஸ்வீகரிக்கை. இது தன்னில் நிஷ்டையி லருமையாலே யிதுதான் ரஹஸ்யமுமாய் அதிக்ருதாதிகாரமுமா யிருக்கும். த்வயமென்று திருநாமமானபடி எங்ஙனேயென்னில், உபாயோபேயமான அர்த்த த்வயத்துக்கும் வாசகமான வாக்யத்வயத்தை யுடையதாகையாலே. இத்தால் கர்மாத்யுபாயாபாஸங்களை நிவ்ருத்திபூர்வகமான உபாயத்துக்கும் ஐஶ்வர்யாத்யுபேயாபாஸ நிவ்ருத்திபூர்வகமான உபேயத்துக்கும் தன்த்ரேண புஷ்கலமாகச் சொல்லுகையாலே வாக்யத்வய மென்று திருநாமமாய்த்து. இதுதான் நம்மாசார்யர்களுக்கு நித்யாநுஸந்தாநமுமா யிருக்கும். இதுசொன்னவன் ஆசார்யனாகவும்கடவன். கேட்டவன் ஶிஷ்யனாகவும் கடவதா யிருப்பதொரு வ்யவஸ்தையுண்டு. இதுதான் வாக்யத்வயமென்று மந்த்ரத்வமுண்டு. திருமந்த்ரத்தினுடைய விஶதாநுஸந்தாநமாகையாலே மந்த்ரத்வமாவது:(மநநான் மந்த்ர மாதல். (மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:) ஆதல் யாவதாயுஷம் மநநம்பண்ணினாரையும் தரிப்பிக்குமதாகையாலே மந்த்ரத்வமுண்டென்கிறது. ஆக, ருஷிச்சந்தோதேவதைகளில்லையாவானேனென்று நஞ்சீயரைக்கேட்க இதுசொல்லுகிற அர்த்தத்துக்குக்கூட்டு வேண்டுமன்றன்றோ? இதுக்கு கூடவேண்டுவதென் றருளிச்செய்தார். த்வயத்தி லர்த்தத்தை வ்யக்திபண்ணி ஶப்தாந்தரத்தாலே திருமுன்பேவிண்ணப்பம்செய்யலாமோவென்று நஞ்ஜீயரைக்கேட்க, இஶ்ஶப்தந் தன்னாலே விண்ணப்பம் செய்யவேணுமென் றருளிச்செய்தார். இப்பாசுரத்துக்கு சுரக்கு மர்த்தம் வேறொரு பாசுரத்துக்கு சுரவாதுகாணென் றருளிச்செய்தார்.

அவதாரிகை முற்றிற்று.

இதுதான் ஆறுபதமாய் பத்தர்யமநுஸங்யேயமா யிருக்கும். ஸ்ரீமந்நாராயண சரணௌ என்று ஸமஸ்தபதம், மேலடைய வ்யஸ்த பதம். நாலிரண்டர்யம் சேர்ந்திருக்குமது ஸமாஸபதம், இது தன்னில் முதற் பதம் ப்ரக்ருதி ப்ரத்யயங்களா யிருக்கும் ஸ்ரீயென்றவிடம் ப்ரக்ருதி. மந் என்றவிடம் ப்ரத்யயம், ஸ்ரீ என்கிற திருநாமத்துக்கு ஶ்ரிங்ஸேவாயாம் என்கிற யாதுவிலேமுடிக்கையாலே ஸேவ்யமானை என்கிறது. ஆராலே ஸேவிக்கப்படும். ஆரைஸேவிக்குமென்னு மபேக்ஷையிலே (ஸ்ரீயதஇதிஸ்ரீ:) என்றும் (ஸ்ரயதஇதிஸ்ரீ:) என்றும் வ்யுத்பத்தியாய் இதில் ஸ்ரீயதேஎன்று தன்னையொழிந்த த்ரிவியாத்மவர்குக் தாலு மாஶ்ரயிக்கப்படுமவளென்கிறது. ஸ்ரயதேஎன்கையாலே இவள் தான் எம்பெருமானை யாஶ்ரயியானின்றுளென்று ஸ்ரீயென்னும் திரு நாமத்தை யுடையளா யிருக்கும். இத்தால் தன்னையொழிந்த த்ரிவிய சேதநருடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிவளுடைய கடாக்ஷாதீநமா யிருக்கு மென்னுமிடத்தையும், இவள் தன்னுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திக ளவனுடைய காடாக்ஷாதீநமா யிருக்கு மென்னுமிடத்தையும் சொல்லிற்று. ஆக இவர்களைக் குறித்து தான் ஸ்வாமிநியாய் அவனைக்குறித்து தான் பரதன்த்ரையாயிருக்கையே இவள் திவ்யாத்மஸ்வரூபத்துக்கு ஸ்திதியென்னுமிடத்தைச் சொல்லிற்று. இத்திருநாமந்தான் புருஷகாரத்தைக்காட்டுகிறது. தன்னையொழிந்தார்க்குத் தான் ஸ்வாமிநியா யவனைக்குறித்துபரதன்த்ரை என்றுங்காட்டில் புருஷகாரத்தைக் காட்டுமோ இஶீஶவீஷமென்னில் புருஷகாரமாவாருடைய லக்ஷணமிதுக்குண்டாகையாலே புருஷகாரமாவார்க்கு இரண்டிடத்திலும் குடல் துடக்குண்டாகவேணும் தன்னை யொழிந்தாரோடு தனக்குக்குடல்துடக்கில்லையாகில் கார்யம் நிரக்கழியச்செய்யக்கூடாது. கார்யம் கொள்ளுமிடத்தில் தனக்கு ப்ராப்தியில்லையாகில் கார்யம் வாய்க்கச் செய்விக்கக்கூடாது. ஆக விரண்டிடத்தில் ப்ராப்தியும்புருஷகாரமாவார்க்கு அபேக்ஷிதமாகையாலே இத்திருநாமந்தான் புருஷகாரத்தைச் சொல்லிற்று.

இன்னமும் நிருக்தத்திலே இவ்வர்யந் தன்னை மூக்தகண்டமாகச் சொல்லிற்றென்று நஞ்ஜீய ரருளிச்செய்வதொன்றுண்டு. அதாவது, ஶ்ருணோதீதிஸ்ரீ: ஸ்ராவயதீதிஸ்ரீ: என்னும் வ்யுத்பத்தியாலும் அதில் ஶ்ருணோதீதிஸ்ரீ: என்றுஸம்ஸாரபயபீதரான சேதநர்கள் தந் தாமுடைய ஆர்த்தியையு மபாராயத்தையு மீஶ்வரனுடைய ஸ்வாதன்த்ரயத்தையும் அநுஸந்தித்து இப்படிஇருக்கிறவெங்களை அவன்

திருவடிகளிலே சேர்க்கவேணுமென்று திருமுன்பே விண்ணப்பம் செய்தால் ஆஶ்ரூஷியம்பண்ணி செவிதாழ்த்து கேட்குமென்னு மிடத்தையும்ஶ்ராவயதீதிஶ்ரீ: என்று தான்கேட்டவார்த்தையை யவன் செவியிற் படுத்திப்பொறுப்பித்துச் சேர்க்கு மென்னுமிடத்தையும் சொல்லுகிறதென்பார்கள். இவ்வர்யம் வ்யுத்பத்தி ஸித்யமேயன்று ப்ரமாணஸித்யமும் (ஹ்ரீஶ்ச தேலக்ஷ்மீஶ்சபத்ன்யௌ, அஸ்யே சாநாஜமத:) என்று ஜமத்துக்கீஶானை என்கையாலே இவர்களைக் குறித்து ஸ்வாமிநியென்னுமிடத்தைச் சொல்லிற்று. (நித்யைவைஷா ஜமந்மாதா விஷ்ணோஶ்ரீ ஶ்ரீரநபாயிநீ, விஷ்ணுபத்நீ) என்கையாலே அவனைக்குறித்துப் பரதன்த்ரை யென்னுமிடம் சொல்லிற்று. இப்படியொழிய சேதநரோடு ஸமானை என்னுத லீஶ்வரனோடு ஸமானை என்னுதல் ஸொல்லுவது ஸேராது. ஆனால் (புംஸ்த்வப்ரயாநேஶ்வரேஶ்வரீ) என்று அவனிலுமிவளுக்கு ஆயிக்யஞ் சொல்லுகிற ப்ரமாணங்கள் ஸேருகிறபடியெங்ஙனேஎன்னில், அவளுடைய ஹோதீயதையிலுண்டான வைஹவத்தைப்பற்ற அவனுக்குண்டான ப்ரணயித்வ பாரதன்த்ர்யமா மித்தனை. (பித்தர்பனிமலர்மேற்பாவைக்கு) என்றும் (மலராள்தனத்துள்ளான்) என்றும் (மாமலர்மங்கை மணனோக்கமுண்டானே) என்றும் (அல்லிமாமலர்மகள்போக மயக்குக்க ...யும் நிற்குமம்மான்) என்றும் ஸொல்லுகையாலே தத்ஹோதீயதையாலேயவன் நெஞ்சைத்துவக்கிக்கொண்டாய்த்திருப்பது.அவன் ஸ்வரூபமெல்லைகாண வொண்ணுதவைஹவம்போலே இவளுடைய ஸ்வரூப மணுவாயிருக்கச்செய்தே இவளுடைய ஹோதீயதையிலுண்டான வைஹவஞ் சொல்லிற்றாகக்கடவது. அவன் ஸ்வரூபமெல்லைகாணிலும் காணவொண்ணுது.காணுமிவளுடைய ஹோதீய ...யி லேற்றமிருக்கும்படி, இவளுடைய ஸ்வரூபமணுவாயிருக்கச் செய்தே ஹோதீயதையாலே அவனதில்இவள் ஸ்வரூபத்துக்குவைஹவஞ் சொல்லலாமோவென்னில் முறுக்கம் பூவுக்கும் ஸெங்கழுனீர் பூவுக்கும் நிறமொத்திருக்கச்செய்தே தனக்கு விஶேஷணமான பரிமளத்தாலே ஸெங்கழுனீர் பெருவிலையனுயத் தென்றால் வேறொன்றாலே வந்த உத்கர்ஷமாகாதிறே. அப்படி இவள் ஸ்வரூபமு மவனுக்கு சேஷமாயிருக்கச்செய்தேயு மவனிலு மிவளுக்கு ஏற்றம் ஸொல்லிற்றென்றால் வேறொன்றாலே வந்த வேற்றமாகாதிறே. ஆகையாலே ஜமத்து இருவர்க்கும் ஶேஷமாயிருக்கையாலே ஜமத்துக்கு பூஜ்யையாயிருக்கும். ஸ்வரூபேண ப்ரணயித்வத்தாலே யவனுக்கு பூஜ்யை

யாயிருக்கும். (த்ரயாணாம்ஸரதாதீநாம் ப்ராத்ரூணாம் தேவதாசயா) என்றும் (தத்ரபூஜ்யபதார்த்தோக்தி பரிபாஷா ஸமந்விதஃ, ஶப்தோ யம்) என்று பூஜ்யவாசகமா யிருக்கையாலே (பூஜ்யை) என்கிறது இது ப்ரமாணஸித்தியமேயன்று லோகஸித்தியம், எங்ஙனேயென்னில், ப்ரஜைகளைக்குறித்துத் தாய்ஸ்வாமிநியாய், பர்த்தாவைக்குறித்துபரதன்த்ரையா யிருக்கச்செய்தேஇவள் ஸௌந்தர்யதையைப்பற்ற வவன்பரதன்த்ரனுனென்ன, அவளுடையஸ்வாதன்த்ர்யம் சொல்லாதிறே. இவன் ப்ரணயித்வமா மித்தனையிறே. இப்ப்ரணயித்வத்தாலேயிறே ப்ரஜைகளுக்கு ரக்ஷணமாய்த் தலைக்கட்டுகிறது. எங்ஙனேயென்னில், ஶாஸ்த்ராஶாஸிகள் பணிசெய்கைக்காகவும், புத்ராதிகளுடைய வ்யுத்பத்திக்காகவும் பிதாவானவன் நியமித்தால் மாதாவின் நிழலிலே யொதுங்கி நின்று அவனிவளுக்கும் உகவியனுனவளவிலே இவைத்தின் குற்றத்தைப் பார்க்கக் கடவதோ வென்று இவள் காட்டிக்கொடுக்கக் காணுனின்றேமிறே. ஆகையாலே புருஷகாரமும் லோகஸித்தியம், ஆகவிப்பதத்தால் புருஷகாரம் சொல்லிற்றிற்று.

ஆக இங்குத்தை ஶ்ரீமத்பதத்துக்கு அவனி லிவளுக்கு ஏற்றமென்னென்னில் ப்ராப்தி யிருவர்க்கு மொத்திருக்கச்செய்தே இவைத்தனுடைய வபராதங்களைப் பொறுப்பித்து அவன் திருவடிகளிலே சேர்ப்பிக்கு மேற்றஞ்சொல்லிற்று. இனிமேல் ப்ரத்யயம், ஶ்ரீயதே) என்கிற வர்த்தமாநத்தைவ்யாக்யாநம் பண்ணுகிறது.(மத்)என்று மதுப்பைச் சொல்லுகிறது. (நித்யயோகேமதுப்) என்னக்கடவதிறே (இறையுமகல கில்லேனென்றும், நித்யாநபாயிநீ) என்றும் சொல்லுகிறபடியே ஒருக்காலும் பிரியாதிருக்குமென்கிறது. இத்தால் ஸித்ததென்னென்னில் புருஷகாரபூதையான விவள் நித்யவாஸம் பண்ணுகையாலே ஆஶ்ரயிப்பார்க்குக் காலம் பார்க்க வேண்டாவென்கிறது. அதாவது, ஈஶ்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் தந்தாமுடைய ஸம்ஸாரித்வத்தையு மநுஸந்தித்து கைவாங்க வேண்டாதபடி யிருக்கை. அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் தந்தாமுடைய ஸாபராதத்வத்தையும் அநுஸந்தித்து இழக்கவேண்டாதபடி யிருக்கை. ஆகையாலே அவனும் ஸர்வகாலமு மாஶ்ரயணீயனுமா யிருக்கும். இவளுடைய ஸந்நிதியாலே ஸர்வகாலமு மாஶ்ரயிக்கலா யிருக்கும். ஏதேனும் காலமும், ஏதேனுமதிகாரமுமாம். ருசிபிறந்த போதே யிவர்களை யவன்திருவடிகளிலே சேர்ப்பிக்கும் பாஶுர

மென் னென்னில் ஒருதலை ஜந்மம். ஒருதலை மரணம்; நடுவே காமக்ரோத லோபமோஹ மதமாத்ஸர்யங்கள். தேவர்பெருமையிது. இவைத்தின் சிறுமையிது. உமக்கு ஸத்ருசமான பச்சை யிவர்களாலிடப்போகாது இவர்களிடும் பச்சைகொண்டு, வயிறுநிறையும் ஸாபேக்ஷரல்லர்நீர். ஆனபின்பு இவர்களைப் பார்த்தா லும்மைவந்து கிட்ட வொண்ணாது. உம்மைபார்த்தாலு மும்மை கிட்ட வொண்ணாது. நாமே இவைத்துக்கு விலக்கடிகளைப் பண்ணி வைத்து இவர்களை கைவிடுகையாவது, உம்முடைய நாராயணத்வமொருவாயா யும்முடைய ரக்ஷணஸ்வரூபத்தையு மிழக்கு மித்தனை காணும். உம்முடைய ஸ்வரூபஸித்யர்த்தமாக விவர்களைக் கைக்கொள்ள வேணும் காணும். உம்முடைய பேற்றுக்கு நான் காலைக்கட்டியிருக்கவேண்டிற்றோவென் றிவள்சொன்னாலவன் சொல்லுமதேதென்னில் (அதண்ட்யாந்தண்டயிந்ராஜா) அபராதரை தண்டிக்கச் சொல்லுகிற சாஸ்த்ரம் ஜீவியாதபடியோ நாம் ஸ்வரூபம் ஸம்பாதிப்பதென்னும். ஆனால் சாஸ்த்ரம் ஜீவிக்கவேணுமாகில் உம்முடைய க்ருபைஜீவிக்கும்படியென், அத்தைச்சொல்லிக்காணுமென்னுமிவள். ஆனாலும் சாஸ்த்ராநுவர்தநம் பண்ணவேணும் காணென்னுமவன். ஆனாலும்முடைய க்ருபையும் ஜீவித்து சாஸ்த்ரமும் ஜீவிக்கும்படி வழியிட்டுத் தருகிறேன் அத்தைச் செய்யப்பாருமென்னுமிவள், ஆனால் சொல்லிக்காணென்னுமவன். உம்முடைய பக்கலிலே வைமுக்யத்தைப்பண்ணி விஷயப்ரவணராயிருக்கிறவர்கள் பக்கலிலே தண்டிக்கச் சொல்லுகிற சாஸ்த்ரத்தை விநியோகம் கொள்வது, உம்முடைய பக்கலிலே ஆநுகூல்யத்தைப் பண்ணி என்னை புருஷகாரமாகக் கொண்டும்மை ஆச்ரயித்தவர்கள் பக்கலிலே உம்முடைய க்ருபையை விநியோகம் கொள்வதென்று அவனைக் கேட்பித்துச் சேரவிடும்.

இப்படி காரியப்பாடாகச்சொல்லி புருஷகாரமாகைக்காகவோ நித்யவாஸம் பண்ணுகிறது. அவனுக்கு போகரூபமாகவன்றோவென்னில், ஆம்; போகரூபமாகை யெங்ஙனேயென்னில், அவளோட்டை ஸம்ச்லேஷத்தாலே அவனுக்குப் பிறந்த ஹர்ஷத்துக்கு போக்குவீடாக இவளுக்கென்ன உபகாரத்தைப் பண்ணுவோமென்று தடுமாறுவதொரு தடுமாற்றமுண்டு. அதுதான் ப்ரணய கலஹத்தில் பரிமாறும் பரிமாற்றத்திலே யென்று தோற்றுமோபாதி இவன் தடுமாறி நோக்குமன்னோக்கிவள் கண்ணிலே தோற்றும். அப்போதைத் தடுமாற்றத்துக்குப் போக்கடி காட்டாதபோது அவனுடைய வாச்ரய

மிழக்க வருமென்னுமத்தாலே யிவைத்தினுடைய வபராயத்தைப் பொறுத்துக் கைக்கொள்ளீரென்று தன் திருப்புருவத்தாலே ஒரு நெளிநெளிக்கும். இவனவள்புருவம் நெளித்தவிடத்திலே குடநீர் வழிக்கு மவனுகையாலே இவைத்தையும் ரக்ஷித்து தானுமுளனும். இதுகாணுமிவளுக்கு மிவனுக்கு முண்டான ஸௌர்த்தியிருந்தபடி. ஆகையா லிரண்டு வகைக்கும் ப்ரணயித்வம் செல்லாநிற்கச் செய்தே இருவருடைய ஹர்ஷமும் வழிந்து புறப்பட்டு சேதநருடைய ரக்ஷணமாய்த் தலைக்கட்டும். ஆனாலிருவர்க்கும் ப்ரணயரஸமுண்டானபோது இவைத்தினுடைய ரக்ஷணமாய் அல்லாதபோது ரக்ஷணம் குறைந்தோ விருப்பதென்னில், இவளோட்டை ஸம்ஶ்லேஷம் நித்யமாகையாலே அநுபவம் நித்யமா யிருக்கும், அநுபவம் நித்யமாகையாலே ஹர்ஷமும் நித்யமாயிருக்கும். ஹர்ஷமும் நித்யமாகையாலே ஹர்ஷத்தால்வந்தநோக்கு நித்யமாயிருக்கும். அந்நோக்குநித்தியமாகையாலே ரக்ஷணமும் நித்தியமாயிருக்கும். இந்நித்ய ரக்ஷணம் மதுப்பில் நித்யயோகத்தாலே வந்த ரக்ஷணத்திலேற்றம். எங்ஙனேயென்னில், இதிறே ஸர்வாத்மாக்களுக்கும் பற்றுசு. அங்ஙனன்றிக்கே த்ரிபாத்விபூதியையும தன் ஸ்வரூபாநுரூபகுண விபூதிகளாலே யநுபவித்துச் செல்லாநிற்கச்செய்தே ஜகத் ரக்ஷணமும் திருவுள்ளத்திலேபட்டு நிர்வஹித்துக்கொண்டு போருகிறாப்போலே இவளுமவனுடைய ஹோத்ரீயதையை விளாக்கொலைக்கொண் டநுபவியாநிற்கச்செய்தேயும் ப்ரஜைகளுடைய ரக்ஷணமும் திருவுள்ளத்திலேபட்டு நிர்வஹித்துக்கொண்டு போரக்கடவதாய்த்து வஸ்துஸ்வபாவமிருக்கும்படி ப்ரஜைகள் விஷயத்தில் தான் (தேவதேவதிவ்ய மஹிஷீம்) என்கிறமேன்மை யநுவர்த்தியாது. ப்ராப்தியிறே யநுவர்த்திப்பது, எல்லார்க்குமொக்க வரையாதே தாயாயிருக்கும்.

பூர்வாவஸ்யையைப்பார்த்து அஞ்சவேண்டாதேமடியிலே சென்றணுகலாயிருக்கும் அஶரண்யஶரண்யையிறே. ஈஶ்வரவிஷயத்திலும், புறம்புகலார்க்கும் புகலாயிருக்குமந்த ஸர்வஸாதாரண மான ப்ராப்தியின்றியே, விஶேஷஸம்பந்தமுண்டு. (செய்தாரேல் நன்று செய்தார்) என்கிறவனுடைய கையும் வில்லுமாய்ச்சீறினுலுமிவள் திருவடிகளிலே புகலாயிருக்கும். ஆகையாலே ஜந்மவ்ருத்தங்களில் உத்க்ருஷ்டரோடு அபக்ருஷ்டரோடு வாஸியற நின்றநிலையிலே ஈஶ்வரஸமாஶ்ரயணம் பண்ணலாவது, இவளோட்டை ஸம்பந்தபத்தாலும், இவள் திருமார்பிலே நித்யவாஸம்பண்ணுகையாலுமிறே. ஆகை

யாலே ஸர்வாபராதிகாரம் ஸஹிப்பிக்குமது இப்படித்திலேயா யிருக்கும். ஆக இப்படித்தாலே புருஷகாரஞ்சொல்லி மதுப்பாலே யவனுக்கு மறுக்கவொண்ணாத புருஷகாரத்தினுடைய நித்யயோகஞ்சொல்லிற்று. இப்படி புருஷகார ஸஹிதையாயிருக்கிற விவள்தானொரு குறை சொல்லும்போதும், என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்) என்னும் வாத்ஸல்யாதிஶயத்தையுடையனாகையாலே, மேல் நாராயணனென்கிறது. (தன்னடியார் திறத்தகத்து) அவன் தன்னடியா ரென்கைக்குமிவள் சிதகுரைக்கைக்கும் ஒருசேர்த்தியில்லையிறே. பெற்றதாய் நஞ்சிடக்கூடாதிறே. இனி யிவளவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் இவற்றினுடைய ஸாபராதத்வத்தையு மநுஸந்தித்து இவற்றின் பக்கலிலென்னாய் விளைகிறதோவென்று அதிஶங்கைபண்ணி, யிவனைச்சோதிக்கிறாளிறே. அவனிவளுடைய மார்தவத்தையும்,ஔதார்யத்தையுமனுஸந்தித்து, இனி யிவளிவற்றின் பக்க லெவ்வளவா யிருக்கிறாளோவென் றிவளை அதிஶங்கைபண்ணுமவன். தன்னபேக்ஷைக்காக இவர்கள் ரக்ஷணம் பண்ணுகிறானோ தன் அபேக்ஷையில்லாதபோது ரக்ஷணம் திருவுள்ளத்தி லுண்டோ இல்லையோவென்று ஶோதிக்கிறாளாகவுமாம்.

ஆகவிப்படி யொருவரை யொருவரதிஶங்கைபண்ணி நோக்குமிருவருடைய நிழலையும் பற்றியிறே உபயவிபூதியுங் கிடக்கிறது. தன்னை புருஷகாரமாகக் கொண்டு அவனை யுபாயமாகப் பற்றின அநந்யப்ரயோஜநரை யொருவரை யொருவரதிஶங்கை பண்ணி நோக்கும்படியிறே. இனி யிவளவனை அதிஶங்கைபண்ணிச் சிதகுரைக்குமென்று நம்மைப்பற்றினார்க்கு அக்குறை யில்லை காணென்று அவனோடுங் கூடமன்றாடுங்ஸௌலப்யம் சொல்லுகிறது. அக்குற்றமென்கிறானிறே இவள சொன்னகுற்றம் தன்வாயால் சொல்லமாட்டாமையாலே. இல்லைநானிப்போது கண்டேனென்று ஸாக்ஷிபூர்வகமாகக் காட்டிக் கொடுத்தாலும் அவனால் தன்யர்மாயர்மங்களும், ஒருபரலோகமும், ஒருபரதேவதையும், இல்லையென்று செய்கிறார்களோ ப்ராமாணிகத்துக்கு நாமுளோமென்றன்றோ செய்கிறது. ஆனபின்பு கூட்டுகையுங்கள் தேவையாமித்தனை போக்கி ஒரு மியா

நத்துக்கு இவர்கள் குழைசரக்காயிருக்கப் பிரிக்கையுங்கள் தேவையோவென்று, கூட்டின ஸ்ரீவைஷ்ணவர்களோடும், கூட்டின பிராட்டியோடும் மறுதலித்து நோக்கும் குணாதிக்யம் சொல்லுகிறது. (நாராயண) வாத்ஸல்யஸௌஶீல்ய ஸௌலப்ய ஸ்வாமித்வங்கள், இவைநாராயண ஶப்தார்த்தம். ஆனாலு மிந்நாராயண ஶப்தத்துக்கு ஸௌலப்யத்திலே நோக்கு. வாத்ஸல்யமாவது வத்ஸத்தின் பக்கல் தாய் இருக்குமிருப்பை ஈஶ்வரன் ஆஶ்ரிதர் பக்கலிலே யிருக்குமென்கிறது. அதாவது சுவடுபட்டதரையில்புல்தின்னாத பசு தன்கடையாலே புறப்பட்ட கன்றினுடைய தோஷத்தைத் தன் வாயாலே வழும்பறநக்கித் தன் முலைப்பாலாலே தரிப்பிக்குமாபோலே ஆஶ்ரிதருடைய தோஷங்களைத் தனக்கு போக்யமாகவிரும்பித்தன் கல்யாணகுணங்களாலே அவர்களை தரிப்பிக்கை. எங்கே கண்டோமென்னில் (தஸ்யதோஷ: அவனுடைய தோஷமன்றோ ஶரணாகதனுடைய தோஷமன்றோ அது நமக்கபிமதவிஷயத்திலழுக்கன்றோ, (என்று) மேல்விழுந்து விரும்பும்படியிறே வாத்ஸல்யமிருப்பது. தமக்குப் பரிவரான மஹாராஜரையும் தம்பால்ஸக்தையான பிராட்டியையும் விட்டு அவன்தோஷமேதேனுமாகிலும் இன்று வந்த ஶரணாகதனை விடில் நாமுளோமென்று, அநுகூலரோடேயு மலைந்து ரக்ஷிக்கும்படியிறே வாத்ஸல்யகுண மிருப்பது. ஶீலம்ஹிநாம, மஹதோமந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷஸ்வபாவத்வம் ஶீலம். அதாகிறது, சிறியவனோடே பெரியவன் வந்து கலவாநின்றால் தன் பெருமை யிவன் நெஞ்சில் படாமே நம்மோட்டை யாவனொருவனென்று புரையறக்கலக்கலாம்படி யிருக்கை. அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கும் அவ்வருகாய் அப்ராக்ருதனாய் உபயவிபூதி போகத்தாலும் பெரிய வேற்றத்தையுடையனாய், (அவனெவ்விடத்தான்) என்னும்படி யிருக்கிறவன்நித்யஸம்ஸாரிகளுக்கு மவ்வருகே கழியப் போனானென்னும் இவனோடே வந்து கலவாநின்றாலிவனஞ்சி யிருக்கவேண்டாதபடி தானே மேல்விழுந்து புரையறக்கலக்கை ஶீலகுணமாவது. இப்படி கலக்கப் பெற்றது இவனுக்குக் கார்யஞ் செய்ததாக வன்றியே, அது தன் பேறாக நினைத்து இருக்கை ஸுஶீலம். ஸ்வாமித்வமாவது, கர்ஷகன் பயிரத்தலையிலே குடில்கட்டி நோக்குமாபோலே உடைமையுனக்கல்லேனென்று முடித்துக்கொண்டவன்றும் தன்னுடைமையான்று தோற்றத் தானிவற்றை விடமாட்டாதே இவற்றினுடைய ரக்ஷண

ஸிந்தை பண்ணியிருக்கிற விருப்பு. அதாவது இவனுக்குத்தன் ஸௌஹார்த்தாலே யாத்ருச்சிகஸுக்ருதத்தை யுண்டாக்கி, அதடியாக அத்வேஷத்தை யுண்டாக்கி, அதடியாக ஆபிமுக்ய முண்டாக்கி, அதடியாக ருசியை யுண்டாக்கி, அதடியாக ஸத்ஸம்பாஷத்தை யுண்டாக்கி, அதடியாக ஆசார்யஸமாஶ்ரயணத்தை யுண்டாக்கி, ஸம்யக் ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, ஸித்தஸாதநத்திலே நிஷ்டையைப்பிறப்பித்து, கண்ணழிவறப்ராப்யத்திலே ருசியைப்பிறப்பித்து, விரோதிநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுத்து அர்சிராதிமார்க்கப்ரவேஶத்தையுண்டாக்கி லோகப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து, ஸ்வரூபப்ரகாஶத்தைப் பிறப்பித்து, பரபக்திபரஜ்ஞாந பரமபக்தியையும் பிறப்பித்து, இவைதுடக்கமான பகவதநுபவத்தையும் இவ்வநுபவஜநிதமான ப்ரீதியாலே பண்ணப்படுவதான நித்யகைங்கர்யத்தையேவிக்கொள்வதாக வருமப்படிக்கு பரமஶேஷித்வம் ஸ்வாமித்வமாவது, ஸௌலப்யமாவது, அதீந்த்ரியமான பரமவஸ்து இந்த்ரியகோசரமாம்படி எளியஸம்ஸாரிகளுக்குங் கண்டாஶ்ரயிக்கலாம்படி தன்னை யெளியனாக்கிக்கொடுக்கை. அதாகிறது, "மாம்" என்றுகொண்டு ஸேநாதூளியும் கைம்முழவு கோலுமாய் ஸாரதியாய் நிற்கிறநிலையையிறே உபாயமாகப் பற்றென்று விதிவாக்யத்தில் சொல்லிற்று. அந்த ஸௌலப்யத்தை யாய்த்து இங்குச்சொல்லுகிறது. அதுதான் பரத்வம் என்னலாம்படியிறே இங்குத்தைநாராயணஶப்தத்தில் ஸௌலப்யம். எங்ஙனே யென்னில், அங்கு (மய்யாஸக்தமநா:பார்த) என்றுகொண்டு தனபக்கலிலே ஆஸக்தமான மநஸ்ஸையுடைய அர்ஜுந னொருவனையும் நோக்கியிறே ஸுலபனாய்த்து. இங்கு எல்லார்க்கு மொக்கஸுலபனாயிருக்கும். அங்குமுன்புமில்லை பின்புமில்லை. நாமறியாத நாளிலு முண்டாய், நாமறிந்தநாளிலு முண்டாயிருக்கிற வேற்றமிந்த ஸௌலப்யம். இதர குணங்களுண்டானாலும் கண்ணுக்கு விஷய மானாலல்லது போக்கி இதர குணங்கள் ஜீவியாமையாலே ஸௌலப்யம் ப்ரதாநமாகிறது. இதர குணங்களுபாயமா மிடத்தில். ஸௌலப்யம் எளியனான விவனளவிலே தன்னை யெளியனாக்குகையாலே. இவனே உபாயமென்கிறது. ஸுஶீலம், இப்படி கலக்கிற விது, தன் பேறாகக் கலக்கையாலே அவனே உபாயமென்கிறது. ஸ்வாமித்வம், ஸம்ஸாரிசேதநனை நித்யஸூரிகள் கோர்வையிலே கொண்டுபோய் வைத்தால் நிவாரகரில்லாத நிரங்குஶஸ்வாமித்வமுபாயமென்கிறது. ஆகவிங்கு சொன்ன

நாலு குணங்களும் பற்றுகைக்கு பற்றாசானவோபாதி ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களும் மோக்ஷப்ரதத்வத்திலே விநியோகம் எங்ஙனே யென்னில், இவனும் விடுமதறிந்து விடுகைக்கும் பற்றுமதறிந்து பற்றுகைக்கும் ஸர்வஜ்ஞனாகவேணும். ஜ்ஞாநமுண்டானாலும் ப்ரயோஜநமில்லை ஶக்தனன்றாகில். அது, அநாதிகாலார்ஜிதமானபாபங்களைத் துணித்துத்தாவி அக்கரைப்படுத்தும் போது, ஸர்வஶக்தியாகவேணும். ஶக்தனானாலும் ப்ரயோஜநமில்லையிறே நிரபேக்ஷனன்றாகில். நிரபேக்ஷனாகிலும் ப்ரயோஜநமில்லையிறே ப்ராப்தியில்லையாகில். ஆக ஸாவத்ஜ்ஞத்வமும், ஸர்வஶக்தித்வமும், அவாப்தஸமஸ்த காமத்வமும், ஸர்வஶேஷித்வமும், இவைநாலு குணமும், ஸர்வஸாதாரணமான ரக்ஷணத்துக்குடலா யிருக்கும். ஓரளவிலே ஆஶ்ரிதரதமோக்ஷப்ரதத்வத்துக்கு முடலாயிருக்கும். ஸஹாயாந்தரநிரபேக்ஷமாக ஃபலப்ரதனவனாகில் இவர்களுக்கு மவனுககும் ப்ராப்தியொத்திருந்ததாகில் புருஷகாராபேக்ஷை யென்னென்று நஞ்ஜீயர் பட்டரைக்கேட்க, "வாரீர்ஜீயரே அவள் ஸந்நிதிக்கும் அவன் ஸந்நிதிக்கு முள்ளவாசி அந்வயவ்யதிரேகங்களாலேகண்டு கொள்வீர்" என்று அருளிச்செய்தார். அதாவது, ஜநநிபக்கல் அபராதம் காகத்துக்கும் ராவணனுக்கு மொத்திருக்கச்செய்தே யவள்ஸந்நிதியுண்டாகையாலே அபராதத்தில் கைதொடனான காகம் ப்ரபந்நர்பெறும்பேற்றைப் பெற்றுப்போய்த்து. அத்தனை யபராதமின்றிக்கேகடக்கநின்று கதறிப்போந்த ராவணன், அவள் ஸந்நிதியில்லாமையாலே தலையறுப்புண்டான். இனிதான் மாத்ருஸந்நிதியிலே ப்ரஜைகளையழிக்கமாட்டாமையு மொன்றுண்டிறே பிதாவுக்கு. இனி (தமேவஶரணம்கத:) என்றதும (நமேயம்) என்றதும் அப்ரயோஜகம். எங்ஙனே யென்னில், காகத்துக்குதவுகிறபோது அகவாயில் நினைவு அதுவிறே. இல்லையாகில் (ஸ்வகமாலயம்ஜஹாம) என்று போகப்பொறானே. செயல் மாட்சியாலே விழுந்ததித்தனையிறே. இம்மாத்ரம் இராவணனுக்கு முண்டாயிருக்க அது கார்யமாய்த் தில்லையிறே இவள்ஸந்நிதி யில்லாமையாலே. இதுகாணும் அவள் ஸந்நிதிக்கு மவன் ஸந்நிதிக்கும் வாஶியென் றருளிச்செய்தார். மற்றும் பற்றினாரையடைய வாராய்ந்து பார்த்தவாறே இவள் முன்னாகவாயிருக்கும். மஹாராஜருள்ளிட்ட முதலிகளு மாழ்வார்களும் ஆசார்யர்களும் இவள் முன்னாகவாய்த்துப் பற்றிற்று. அந்வயவ்யதிரேகங்களில்ஃபலாஃபலங்களன்றியே ஆஶ்ரயித்த வேற்றமுண்டு, எங்ஙனே

யென்னில், அவனுடைய ஶீலாதிகுணங்களோடே ஹேயகுணங்கள் கலஶியிருக்குமாபோலே யல்லவாய்த்து இவளுடைய ஶீலாதிகுணங்க ளிருப்பது அவனுடைய நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யமும் (க்ரோதமாஹாரயத்தீவ்ரம்) என்று அழைத்துக் கார்யம் கொள்ளலாயிருப்பன சிலவுமுண்டிறே. அதுவு மில்லையிறே யிவளுக்கு. அதுண்டாகிலிவளுக்கு மொரு புருஷ காராபேக்ஷை வேண்டியிருக்குமிறே. அதில்லாமையாலே இவள் புருஷகார மாகவேணும். இல்லையாகில் பலஸித்தியில்லை. எங்கேகண்டோ மென்னில், ராவண கோஷ்டியிலே (ப்ரதீயதாம்தாஶரதாயமைதிலீ) என்று பிராட்டிக்காகப் பரிந்தும், தூதரை ஹிம்ஸிக்கலாகாதென்று திருவடிக்காகப் பரிந்துவார்த்தை சொன்னவனைத் துறந்து (த்வாந்துதிக்குலபாம்ஸநம்) என்று புறப்படவிட, ராவணபவநத்தில் நின்றும் புறப்பட்டுவந்து மநோவாக்காயங்கள் மூன்றாலும் ஶரணம் புகுந்த ஸ்ரீ விபீஷணாழ்வானைக்குறித்து (நத்யஜேயம்கதஞ்சந) என்று ரக்ஷித்த நீர்மையிறே பெருமாளுக்குள்ளது. இவளுக்கு அங்ஙனன்று. மநோவாக்காயம் மூன்றிலும் ராவணபயத்தையும் ஸ்வப்நம்கண்டோமென்று பயப்பட்டு த்ரிஜடை விண்ணப்பஞ்செய்ய அவளும் (அலமேஷாபரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோபயாத், ப்ரணிபாதப்ரஸந்நாஹி மைதிலீஜநகாத்மஜா) என்று நம்மாலே நலிவுபடுகிறவிவள்தானே நம்மை ரக்ஷிக்குங்காணுங்கோ ளென்றுசொல்லியும், இவ்வுக்தியேயன்றியே பிராட்டிதானு மிவர்கள் நடுவேயிருந்து (பவேயம்ஶரணம்ஹிவ:) என்றுநானுளளாக நீங்களஞ்சவேண்டாமென்று அருளிச்செய்தும் இவ்வுக்திமாத்ரமாய்ப் போகையன்றிக்கே, ராமவிஜயமுண்டாய் ராவணனும் பட்டான், மஹாராஜருள்ளிட்ட முதலிகளுக்கு மொருகுறையில்லை யென்று நம்மைதிலிக்குச்சொல்லிவாவென்றுதிருவடியைவரவிட, அவன்வந்துவிண்ணப்பஞ்செய்யஇதைக் கேட்டருளி ஹர்ஷத்தாலே இவனுக்குள்ள உபகாரத்தைப்பண்ணுவோமென்று தடுமாறுகிற வளவிலே "எனக்குப்பண்ணுமுபகார மாறதுஜேவர்விஷயத்திலே நலிந்தவிவர்களைவிட்டுக்காட்டித்தருகையே" என்ன, அதைக்கேட்டபின்பு அவர் பண்ணின உபகாரபரம் பரைகளையும் பார்த்திலள், இவர்கள் இப்போது நிற்கிற ஆர்த்தியே திருவுள்ளத்தில் பட்டு (கஃகுப்யேத்வாநரோத்தம) என்றும், (நகஶ்சிந்

நாபராதீயதி) என்றும், பெருமாளுக் கந்தரங்கபரிகரமான திருவடியோடே மறுதலித்து ரக்ஷித்தவிவள், நம்முடைய குற்றங்களைத் தன்சொல் வழிவரும் பெருமாளைப் பொறுப்பித்து ரக்ஷிப்பிக்கச் சொல்லவேணுமோ. இதிறே இவள்நீர்மையிருந்தபடி. இதுவேயன்று தன்பக்கலிலே அபராதத்தைப்பண்ணின ராவணனைக் குறித்து, (மித்ரமௌபயிகம்கர்த்தும்)என்றும், தேநமைத்ரீ ஹவதுதே)என்றும், அவனுக்கு (மாஶுச:) என்னும் வார்த்தை சொன்னவளிறே. கையாலே நித்யஸாபராத ஜந்துக்களுக்கு, நித்ய ஸஹவாஸம்பண்ணுமிவள் புருஷகாரமாக வேணும். கல்யாண குணவிஶிஷ்டனுமாயிருக்கிற ஈஶ்வரன் உபாயமாமிடத்தில், இப்புருஷகார ஹ௫ தையான விவள், இவனுடைய ஆஹரணங்களோபாதி அநந்யார்ஹ ஶேஷஹ௫தையாகில், இவள் புருஷகார மானாலல்லது ஃபலஸித்தியில்லை. ஃபலத்துக்குபூர்வக்ஷணவர்த்தியா யிருக்குமதிலேயிறே உபாய ஹாவமிருப்பது. ஆனலிப் புருஷகாரத்துக்கு உபாய ஶரீரத்திலே அந்தர்ஹாவ முண்டாக வேண்டாவோ வென்னில், குணங்களும் விக்ரஹங்களும் அசேதந மாகையாலே உபாயஸ்வரூபத்திலே அந்தர்ஹாவமுண்டு. குணநாமாஶ்ரய ஸ்வருப மாகையாலே இவளுக்கும் ஸ்வரூபாநு பந்தித்வமுண்டே யாகிலுமிவள் சேதநாந்தர ஶோவரையாகையாலே உபாய ஶரீரத்திலிவளுக்கு அந்தர்ஹாவமில்லை. இவள் புருஷகாரத்திலே ஸாயநஹாவம் கிடையாதே யாகிலும் இவள் ஸந்நிதியை அபேக்ஷித்துக் கொண்டாய்த்து உபாயம் ஜீவிப்பது. ஆகையாலிவள் பக்கல் ஸாயநஹாவம் கிடையாது. எங்ஙனேயென்னில். ராஜமஹிஷியைப்புருஷகாரமாகக் கொண்டு ராஜாவின் பக்கலிலே பலஸித்தி யுண்டாமென்று சென்றால், அவன் பக்க லிரக்கமில்லாதபோது புருஷகாரத்துக்கு பலப்ரதாநஶக்தி யில்லாமையாலே இப்புருஷகாரத்திலே ஸாயநஹாவம் கிடையாது. அந்ய நிரபேக்ஷமாகப் பலப்ரதனாகையாலே அவனே உபாயம். (வரணௌ) என்று (மாம்) என்கிறவிடத்தில் ஸாரஸ்யவேஷத்தோடே நிற்கிற விக்ரஹத்தையும் இப்பதத்திலே அநுஸந்தேயம். (வரணௌ) என்கிறவிது திருவடிக ளிரண்டையு மென்றபடி; ஸ்தநந்தய ப்ரஜைக்கு ஸ்தநம்போலே யடிமையிலே யபிகரித்தவனுக்குத்திருவடி களினுடையஉத்தேஶ்யதையைச் சொல்லுகிறது. ஶேஷஹ௫தன்ஶேஷிபக்கல் கணிசிப்பதுதிருவடிக ளிரண்டையுமிறே.

மாதாவினுடைய ஸர்வாவயவங்களிலும் ப்ரஜைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க விசேஷித்து உத்தேச்ய ப்ராப்திஸ்தநங்களிலே யுண்டாகிறது, தனக்கு தாரகமான பாலைமாறும ளுபகரிக்கையாலேயிறே. அப்படி, சேஷபூதனுக்கும் சேஷியினுடைய ஸாவாவயவங்களிலும் ப்ராப்தியுண்டாயிருக்க விசேஷித்து திருவடிகளிலுத்தேச்யப்ராப்தி, இவனுக்கு தாரகமான கைங்கர்யத்தை மாறாமல் கொடுத்துப் போருகையிறே. இத்தால் உபமங்கள விக்ரஹவைசிஷ்ட்யாவஞ் சொல்லிற்று. கீழ்ச்சொன்ன புருஷகாரமும் குணங்களும் இல்லையேயாகிலும்விக்ரஹந்தானேபோரும்உபாயமாகைக்கு.எங்கே கண்டோமென்னில், சிந்தயந்தி தன் ஸ்வரூபாநு ஸந்தாநத்தைப் பண்ணியன்றிறே முடிந்தாள். க்ருஷ்ணனுடைய ஸ்வரூபகுணங்களிலே யகப்பட்டவளன்று; காமுகை யாகையாலே யவன் விக்ரஹத்திலே யகப்பட்டாள். அவ்வடிவழகுதானே யவள் விரோதியையும் போக்கியவ்வருகே மோக்ஷத்தையும் கொடுத்ததிறே. (சிந்தயந்தி ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம், நிருச்ச்வாஸதயாமுக்திம் கதாந்யா கோபகந்யகா(என்கிறபடியே ஸ்வரூப ஸ்வபாவங்களறியாத சிந்தயந்தி யாகையாலே, விக்ரஹந்தானே ஸ்வரூபகுணங்களுக்கும் ப்ரகாசகமுமாய், ஸம்ஸாரிகளுக்கு ருசிஜநகமுமாய், முமுக்ஷுக்களுக்கு சுபாச்ரயமுமாய், நித்யர்க்கும் முக்தர்க்கும் போக்யரூபமுமாயிருக்கும், எங்கே கண்டோமென்னில்;(ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ:) என்று நெஞ்சுபறியுண்டு அகப்பட்டது விக்ரஹத்திலே.(ஏஷஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:)-தான் மதித்தார்க்குப்பரிசிலாகக் கொடுப்பது விக்ரஹத்தை. அங்குள்ளார் ஸுபாச்ரயந்தியிறே. ஆகஇவ்வுபாயத்துக்குமுறுப்பாயிருக்கையாலே அவற்றை யொதுக்கிக் கூற்றுத்து உபாயத்திலே நோக்கென்னுமிடம் தோற்றச் சொல்லுகிறது இச்சரணசப்தம்.

"உபாயே க்ருஹரக்ஷித்ரோச்சப்த: சரணமித்யயம், வர்த்ததே ஸாம்ப்ரதஞ்சைஷ உபாயார்த்தைக வாசக:" இச்சரணசப்தம், உபாயத்தையும் க்ருஹத்தையும் ரக்ஷிதாவையுஞ் சொல்லுகிறது. ரக்ஷகமென்றும் உபாயமென்றும் பர்யாயமென்று சொல்லிப் போருவர்கள். அங்ஙனன்றியே ரக்ஷகனும் வேறேயாய் உபாயமும் வேறேயா யிருக்கவேண்டி யிருந்தது இப்ப்ரமாணத்தால். ரக்ஷகனென்றால், ஸாதாரண ரக்ஷணத்துக்கு, உபாயஸகனுக்கும் ப்ரபந்நனுக்கும் பொதுவாயிருக்கும். உபாயமென்று விசேஷித்

தால் ப்ரபந்நனுக்குக வாயிருக்கும், எவ்வுபேயத்துக்காக வென்னில், இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக, அநிஷ்ட¶மாவது தேஹாத்மாபிமாநம் தொடக்கமாகக் கைங்கர்யத்தில் அஹங்கார மமகாரமீறாக நடுவுண்டான விரோதியான பாபங்கள். அவையாவன, அவித்யா கர்மவாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தங்கள், இவற்றின் கார்யமான, கர்ப்பம், ஜந்மம், பால்யம், யௌவநம், ஜரை, மரணம், நரகம், இவற்றோடொக்க அநுவர்த்தித்துப் போருகிற தாபத்ரயங்கள். இவற்றுக்குக் காரணமான அவித்யை. இவற்றினுடைய ஸ்வரூபமிருக்கும்படி யென்னென்னில்; அவித்யையாகிறது அஜ்ஞாநம். அதாகிறது அநாத்மந்யாத்மபுத்தியும், அஸ்வேஸ்வபுத்தியும்; அவையாகிறன தானல்லாதத்தைத்தானென்று ப்ரமித்தும, தன்னதல்லாதத்தைத் தன்னதென்கையும், ஈஶ்வரனை யுடைத்தான தன்னை அபஹரித்தும் விபூதியை யபஹரித்துக் கொண்டிருக்கையும். இதுக்குள்ளே யெல்லா விரோதியும் பிடிபடும்.

இது தன்னையுபதேஶத்திலே (நீர்நுமதென்றார்) எங்ஙனே யென்னில், அவித்யாவாஸநை, கர்மவாஸநை, தேஹவாஸநை; அவித்யாருசி, கர்மருசி, தேஹருசி யதாஜ்ஞாநம்பிறந்தவாறே அவித்யையைநஶிக்கும். புண்ய பாபங்கள ப்ரக்ருதியநுகூலமாயிருக்கையாலே அநுகூலங்கள் கண்டவாறே அவைநஶிக்கும். அநுகூலமாவது பகவத்பக்தியாகவுமாம். திருநாமஞ் சொல்லவுமாம். அன்றிக்கே அவன்தானே உபாயமாகவுமாம். இனி யிவற்றுக்கு அடியான ப்ரக்ருதியாகிறது இந்த ஶரீரம். நரகாத்யநுபவத்துக்கு வரும்யாதநா ஶரீரம். ஸ்வர்க்காத்யநுபவத்துக்கு வரும் புண்ய ஶரீரம். இவற்றுக்குக் கிழங்கான ஸூக்ஷ்ம ஶரீரமும் இவையித்தனையும் நஶிக்கை அநிஷ்டநிவ்ருத்தியாவது. இனிஇஷ்ட ப்ராப்தியாவது ப்ராப்யத்தைப்ராபிக்கை. அதாவது பரஹிம்ஸை நிவ்ருத்தி பூர்வகமாகக் கைங்கர்யமெல்லையாக ஸ்வரூபாநுரூபமாக இவ்வதிகாரிக்கு அவன் பிறப்பிக்கும் பர்வங்கள்; அவையாவன, தேஹாத்மாபிமாநத்தைப்போக்கி ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, உபாயாந்தர நிவ்ருத்தி பூர்வகமாக ஸித்தோபாயத்திலே நிஷ்டையைப் பிறப்பித்து, விஷயப்ராவண்யத்தைப்போக்கி, தன் பக்கலிலே ப்ராவண்யத்தை யுண்டாக்கி,

¶ அநிஷ்டநிவாரணமானது.

லோகப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து, ஸ்வரூபப்ரகாஶத்தையும் பிறப்பித்து பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தியையும் பிறப்பித்து, இவைபூர்வகமாக பகவதநுபவத்தையும் பிறப்பித்து, பகவதநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யத்தையுங் கொடுத்துவிடுகை, இவன் பற்றின உபாயத்தின் க்ருத்யம். (நிரஞ்ஜநஃ பரமம்ஸாம்யமுபைதி) என்கிறது இவற்றிலே அந்தர்கதம்; அபஹதபாப்மத்வாதி குணஸாம்யமும், ஜ்ஞாநபலைஶ்வர்யாதி குண ஸாம்யமும், போகஸாம்யமும், இவையிறே ஸாம்யாபத்திகள். (பரஞ்ஜ்யோதிருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே) என்கிறபடியே கைங்கர்யமும் அபஹத பாப்மத்வாதி குணங்களும் பரபக்த்யாதி குணங்களும் ஸ்வரூப ப்ராப்திகளிலே அந்தர்கதமாய் ப்ரகாஶிக்குமவை. இனி பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளும் நித்யமாயிருக்கும். ஸ்வரூபத்தோடே ஸஹஜமாயிருக்கையாலே. ஆனாலிவை நித்யமாகிறபடி யெங்ஙனே யென்னில், ஒருக்காலநுபவித்த குணங்கள் ஒருக்காலநுபவியா நின்றால் நித்யாபூர்வமாய் வருகையாலே பரபக்த்யாதி குணங்கள் நித்யமா யிருக்கும் ஸாலோக்ய ஸாரூப்ய ஸாயுஜ்யமானவை கைங் கர்யோபயோகியாகையாலே கைங்கர்யத்திலே அந்தர்கதம். (அப ஹதபாப்மா விஜரோவிம்ர்த்யுர் விஶோகோவி ஜிகத்ஸோபிபா ஸஸ்ஸத்யகாமஸ்ஸத்யஸங்கல்பஃ). அபஹதபாப்மா வென்றது போகப்பட்டபாபத்தை யுடையவன். விஜரஃ-விடப்பட்ட ஜரையை யுடையவன், விம்ர்த்யுஃ-விடப்பட்ட ம்ருத்யுவையுடையவன், விஶோகஃ-விடப்பட்ட ஶோகத்தை யுடையவன், விஜிக்த்ஸஃ-போகப்பட்ட பஶியையயுடையவன், அபிபாஸஃ- போகப்பட்ட பிபாஸையை யுடையவன், ஸத்யகாமஃ- நினைத்தவை அப்போதேயுண்டாயிருக்கை, ஸத்யஸங்கல்பஃ- உண்டானவற்றைக் கார்யங் கொள்ளுமாபோலே யில்லாதவற்றை யுண்டாக்கவல்லனாகை. இவைதான்ஸ்வதஃ அன்றிக்கே யிருக்கிற விஷயத்தைச் சொல்லுவா னென்னென்னில், கர்ம வஶ்யனுக்குள்ளது அகர்மவஶ்யனான ஈஶ்வரனுக்கில்லையென்று இவனுக்கு ஜ்ஞாநம்பிறக்கைக்காக. குணங்கள்தான் ஶேஷபூதனான சேதநனுக்கு முண்டாய் அவனுக்கு முண்டாயிருக்கும். இவை எட்டுகுணமும் சேதநனுக்கு உபாயகதம் நிஷ்க்ர்ஷ்ட வேஷத்தி லில்லை யென்கை. அவனுக்கு விநியோகம் ரக்ஷணத்திலே, சேதந னுக்கு ஸத்யஸங்கல்பங்களாகிறது அவன் நினைத்த கைங்கர்ய முண்

டாயிருக்கை. இனிஜ்ஞானஶக்த்யாதி குணங்கள் அவனுக்கு ஜகத் ரக்ஷணத்திலே, இவனுக்கு கைங்கர்யத்திலே அவனுக்கு ஜ்ஞானமாவது (யோவேத்தியுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண) என்கிறபடியே எல்லாவற்றையு மறிந்துகொண்டிருக்குமாபோலே யிவன் செய்யக்கடவ கைங்கர்யங்களை யொருபோகியாகவறிய வல்லனாயிருக்கும், பலமாவது - அவனித்தை யரித்து ரக்ஷிக்குமாகில் அவன் கைங்கர்யத்துக்கு தாரணஸாமர்த்யத்தை யுடையனாயிருக்கும். ஐஶ்வர்யமாவது - அவன் ஸ்வவ்யதிரிக்தங்களை நியமித்துக் கொண்டிருக்குமாகில் அவனுக்கு கரணங்களை நியமித்துக்கொண்டு அடிமை செய்ய வல்லனாயிருக்கும். அதாவது, கைங்கர்யத்துக் கநுரூபமாக அநேக ஶரீரபரிக்ரஹங்கள் நியமிக்க வல்லனாயிருக்கை. வீர்யவத்தை அவனிவற்றை ரக்ஷிக்குமிடத்தில் விகாரரஹிதனாய் ரக்ஷிக்குமாகில் இவனும் கைங்கர்யங்களைச் செய்யாநின்றால் ஒருவிகாரமின்றிக்கே யிருக்கை, ஶக்தி - அவன், சேராதவற்றைச் சேர்ப்பித்து ரக்ஷிக்குமாகில், இவனும் அநேகமடிமைகளை யெக்காலத்திலும் செய்யவல்ல அகடிதகடநா ஸாமர்த்யத்தை யுடையனாகை. தேஜஸ்ஸாவது-அவநபிபவநீயனாயிருக்குமாகில், இவனும் கைங்கர்யங்களை யொருபோகியாகச் செய்கிற தேஜஸ்ஸையுடையனாயிருக்கும். இனிவிக்ரஹத்திலவனுக்கு மிவனுக்கு மொக்கும். குணங்களும் அவனுக்கு மிவனுக்கு மொக்கும். ஜ்ஞானஶக்த்யாதிகளுமவனுக்கு மிவனுக்கு மொக்கும். ஆகையாலே பரமஸாம்யாபத்தியைப்பண்ணிக் கொடுக்குமென்கிறது, ஶேஷித்வஶேஷத்வங்கள் கிடக்கச்செய்தே ஸாம்யாபத்தியு முண்டாகிறது. ஸஜாதீயங்கலந்தாலல்லது ரஸவிஶேஷ முண்டாகாது. இரண்டு தலைக்கும் ஹோத்ரியம் பிறக்கைக்காக ஸாம்யாபத்தி யுண்டாய்த்தென்றால் ஶேஷஶேஷித்வங்களென்கிற முறைமாறாது. எங்ஙனே யென்னில், இவனை கிஞ்சித்கரிப்பித்துக் கொண்டு அவனுக்கு ஶேஷித்வம். இருவர்க்கு மிரண்டும் வ்யவஸ்திதம். அவனோடு ஸமமென்ன வொண்ணாது. இஷ்டப்ராப்தி பண்ணிக் கொடுக்கையாவது (இவன்) ஸ்வீகரித்த உபாயத்தில் நிலைநின்றவனுடைய வதிகாராநுகுணமாக அவன் பண்ணிக்கொடுக்குமவை. ஆக இந்த ஶரணஶப்தமும் உபாயபாவத்தைச் சொல்லுகையாலே கீழ்ச்சொன்ன நாராயண ஶப்தமுந்தொடங்கி இவ்வளவும் உபாயபரமாக வநுஸந்தேயம்.

யென்னையாள்வானே நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே) என்றருளிச்செய்தருளினார். மாம்) என்கிற நிலை தன்னிலே, யெல்லாமுண்டு; எல்லாருடையவும் கண்ணுக்கிலக்காய்ப் பாண்டவர்களுக்கு ஹவ்யனாய்நிற்கிற ஸௌலப்யமும், இவர்களில் அந்யதமனென்னலாம்படி ஸஜாதீயனாய்க்கொண்டுநிற்கிற ஸௌஶீல்யமும், (விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம்) என்று கையில் வில்லைப்புகட்டு யுத்யோபரதனைப் குதிரைக்குட்டியான அர்ஜுநனை யுத்தத்திலே மூட்டினபின்பு அவனுடைய விழவு பேறுதன்னதாம்படியான ஸ்வாமித்வமும், (மமப்ராணாஹிபாண்டவா:) என்று அவர்களையொழியத் தனக்குச் செல்லாதபடியான வாத்ஸல்யமும், தோற்றநின்று வ்யாபரிக்கையாலே.

ஃபலப்ரதாநத்துக்குபயுக்தமான குணங்களாவன: ஸர்வஜ்ஞத்வ, ஸர்வஶக்தித்வ, அவாப்தஸமஸ்தகாமத்வ, நிருபாதிகஶேஷித்வ, பரமதயாளுத்வங்கள். இவைஃபலப்ரதாநத்துக்கு பயுக்தமாகிறபடி எங்ஙனேயென்னில். ஸர்வஜ்ஞத்வமாகிறது, ஶரணாகதனுடைய இஷ்டாநிஷ்டங்களை யறியவல்லனாகை; ஸர்வஶக்தித்வமாவது, நித்யஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடே ஒருகோவையாக்க வல்லவனாகை; இது செய்யுமிடத்தில் ப்ரயோஜந நிரபேக்ஷமாகச் செய்யும்போது, அவாப்த ஸமஸ்தகாமனாகவேணும். தன்பேறாகச்செய்யும் போதைக்கு நிருபாதிகஶேஷியாகவேணும். இக்குணங்களெல்லாம் சுவர்த்தலையில் பூனைபோலே ஸம்ஸரிப்பிக்கைக குறுப்பாயிருக்கையாலே, இக்குணங்களிவனுடைய உஜ்ஜீவநத்துக் குறுப்பாம்போது பரமதயாளுவாகவேணும். ஆனபாலே க்ருபாஸஹக்ருதமானஜ்ஞானஶக்த்யாதிகளிவனுக்குஜ்ஜீவநமென்றதாய்த்து, (விதிவாய்க்கின்று காப்பாரார், சேமஞ்செங்கோனருளே, ஆழியானருளே, துணியேனினிநின்னருளல்லதெனக்கு, க்ருபயா கேவலமாத்மஸாத்குரு, கேவலம் மதீயயைவ தயயா)என்றாழ்வார்களோடு ஆசார்யர்களோடு வாசியறக்ருபாகுணத்தினுடைய ப்ராதாந்யம் அருளிச்செய்யப்பட்டதிறே. க்ருபாஸஹக்ருதஜ்ஞாந ஶக்த்யாதிகுணங்கள் ஶரண்யதைக் குபயுக்தமென்னுமிடத்தை (ஶக்தேஸ்ஸுபஸதத்வாச்ச க்ருபாயோகாச்ச ஶாஶ்வதாத், ஈஶேசிதவ்யஸம்பந்தாத் அநிதம்ப்ரதமாதபி; ரக்ஷிஷ்யத்யநுகூலாந்ந: இதி யா ஸுத்ருடா மதி:, ஸ விஶ்வாஸோ பவேச்சக்ர

ஸர்வது:க்கக்ருச்சநாஶந:) என்று ஹமவத் ஶாஸ்த்ரத்திலே சொல்லிற்று. (ஏவமவஸ்திதஸ்யாபி அர்த்தித்வமாத்ரேண பரமகாருணிகோ ஹமவாந் ஸ்வாநுபவ ப்ரீத்யோபநீதைகாந்திகாத்யந்திக கைங்கர்யைகரதிரூப நித்யதாஸ்யம் தாஸ்யதீதி விஶ்வாஸபூர்வகம் ஹமவந்தம் நித்யகிங்கரதாம் ப்ரார்த்தயே.) என்று எம்பெருமானாரருளிச் செய்தருளினார். (பாபமேவாபி ஶரணாகதிஸ்ஸர்வஜநார்த்தநோபேக்ஷணம் மமதவோவித ஶ்ரீவரஸ்ய, த்வதீஜ்ஞாநஶக்தி கருணாஸு ஸதீஷு நேஹ பாபம் பராக்ரமிதுமர்ஹதி மாமகீநம்) என்றாழ்வானு மருளிச்செய்தருளினார். நிருக்தமான குணங்களெல்லாம் ஶரண்யத்வோபயுக்தங்களா யிருக்கும். (மாம்-அஹம்) என்கிறபதங்களில் பிரித்தநுஸந்திக்கைக்குறைது, மாமென்கிறபதத்திற் சொல்லுகிற குணங்கள் (வ்ரஜ) என்கிறவிடத்திலதிகாரிக்ருத்யமான விஶ்வாஸ ஜநகமாத்ரமாயிருக்கையாலேயும், அஹமென்கிறவிடத்திற்சொல்லுகிற குணங்கள் விஶ்வாஸஜநகங்களாயிருக்கச்செய்தேயும் உபாயக்ருத்யமான பாபவிமோசநத்துக்கு பரிகரமாயிருக்கையாலே பாபவிமோசநத்தைச் சொல்லுகிற வாக்யஶேஷத்திலே அநுஸந்திக்க வேண்டுகையாலே நிருக்தமான குணங்களெல்லாத்தாலும் (வாரிகொண்டுன்னை விழுங்குவன் காணிலென்றார்வுற்ற வென்னையொழியவென்னின் முன்னம் பாரித்துத்தானென்னை முற்றப்பருகினான்) என்கிறபடியே ஒருவேதநைப் பெற்றானாகில் ஜீவித்தல் இல்லையாகில் நாவிலும் பல்லிலும் நீற்றுக்கிடக்கும்படியான வவனுடைய வ்யாமோஹ குணமேயிவனுக்கு தாரகம். (உய்வுபாயம்மற்றின்மைதேறி) என்றருளிச் செய்தருளினாரிறே ஆழ்வார்.

நாட்டில் ஶரண்யரைக்காட்டில் இவனுக்கு விஶேஷம், நிருபாதிகஸம்பந்தம். நிருபாதிகரக்ஷகத்வமும், இந்த குணவிஶேஷம் இவ்விடத்திலே, த்வயத்திலே வரண ஶப்தத்தாலே சொல்லப்பட்ட விக்ரஹத்தையுஞ் சொல்லுகிறது. அதாவது, ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும், கையும் உழவுகோலும், பிடித்தசிறுவாய்க் கயிறும், தேருக்குக்கீழே நாற்றின திருவடிகளும், திருச்சதங்கையுமாய்க் கொண்டிருக்குமிருப்பு.

இத்தால் ஶரண்யவஸ்து, ஸர்வரக்ஷகமுமாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகமுமாய், ஸவிக்ரஹமுமாயிருக்குமென்றதாய்த்து.

"ஸ்ரீமந்நாராயணசரணௌ" என்றிறே ஶரணாகதிமந்த்ரம். (அலர்மேல் மங்கையுறைமார்பா) என்றுதுடங்கி (அடிக்கீழமர்ந்து புகுந்தேனே) என்றிறே அபியுக்தர்வார்த்தையும்.

இத்தால் ஸ்வத்வாரகமாகவவனை பஜிக்குமுபாயாந்தரங்களில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது, உபாயாந்தரங்களிற் காட்டிலிவ்வுபாயத்துக்கைகாந்த்யமுண்டென்னுமிடத்தை த்யோதிப்பிக்கிறது. இத்தாலிவ்வுபாயம் ஸ்வரூபத்துக்கநுரூபமாகக்கடவது.

(ஏகம்) இந்த ஏக ஶப்தத்தை ஶரணஶப்தத்துக்கு விஶேஷணமாக்கி அத்விதீயமான உபாயமென்றபடியாய், அதாகிறது, ஸமாப்யதிகதரித்ரமென்று நம்மாசார்யர்களிலே சிலர் நிர்வஹிப்பர்கள்.

நஞ்ஜீயரிதுக்கு "அவதாரணத்தைச் சொல்லுகிறது" என்று, அருளிச்செய்வர். எங்ஙனேயென்னில், (த்வமேவோபாய பூதோமேபவ) என்றும், (தமேவஶரணங்கச்ச) என்றும் (மாமேவயேப்ரபத்யந்தே) என்றும், (தமேவசாத்யம் புருஷம்ப்ரபத்யே) என்றும் ஸ்யாநப்ரமாணஸித்தமாகையாலே.

ஆனாலிவ்வவதாரணத்துக்கு வ்யாவர்த்யமாவதேதென்னில், கீழே உபாயாந்தரங்களை த்யாஜ்யங்களாகச் சொல்லுகையாலே, அவற்றை வ்யாவர்த்திக்கிறதென்ன வொண்ணாது. மாமென்று அஸாதாரணாகாரத்தைக் கீழே சொல்லுகையாலே, தேவதாந்தரம் வ்யாவ்ருத்தமென்ன வொண்ணாது.

பின்னை ஏதாவதென்னில், இனியிங்குள்ளது ஸ்வீகார்யமும் ஸ்வீகாரமும் ஸ்வீகர்த்தாவுமாகவேணுமிறே. அதில், ஸ்வீகார்யனுபாயமாய்நின்றால், இனியுள்ளது ஸ்வீகாரமும் ஸ்வீகர்த்தாவுமிறே. அந்த ஸ்வீகர்த்தாவோபாதி ஸ்வீகாரமும், உபாயத்தில் புகாதென்கிறது. ஆவதென், (உபாயோபேயத்வே ததிஹ தவதத்வம் நதுகுணௌ) என்கிறபடியே உபாயத்வம் நித்யமேயாகிலும், இவனுடைய ஸ்வீகாராநந்தரமாகவன்றே உபாயமாகிறது; (யதநந்தரம் யத்பவதி தத்தஸ்யகாரணம்) என்கிறபடியே, இந்த ஸ்வீகாராநந்தரமாகவல்லது ஈஶ்வரனுடைய உபாயபாவம் ஸித்தியாமையாலே, இது உபாயமாதல் ஸஹகாரியாயாதலாக வேண்டாவோவென்னில், (மாமேகம்ஶரணம்வ்ரஜ) என்று உபாயஸ்வீகாரமாகச் சொல்லுகையாலே ஸாக்ஷாதுபாயத்வமில்லை,

இனி ஸஹகரிக்கையாவது, உத்பத்தியிலே ஸஹகரித்தல், ஃபல ப்ரதாநத்திலே ஸஹகரித்தல் ஆய்த்து. பக்த்யுபாயம் கர்மஜ்ஞாந ஸாத்யமாகையாலே, உத்பத்தியிலே, சேதந ஸாபேக்ஷம்; அசேதநமாகையாலே, ஃபலப்ரதாநத்தில் ஈச்வரஸாபேக்ஷம். இவ்வுபாயம் ஸித்தவஸ்துவுமாய் நிருபாதிக ஸர்வஸுஹ்ருத்துமாயிருக்கையாலே உத்பத்தி நிரபேக்ஷம். ஸர்வஜ்ஞத்வாதி குணவிசிஷ்டமாகையாலே ஃபலப்ரதாநத்தில் நிரபேக்ஷம்.

ஆனால், (யத்ஸாங்கம் தத்ஸாதநம்) என்கிறபடியே உபாயம்ஸாங்கமாயன்றோ யிருக்கவேணும். இவ்வுபாயம் ஸித்தமாயிருக்கிறபடியென்னென்னில், உபாயமாகில் ஸாங்கமா யிருக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. அவை ஸாத்யமுமாய் அந்யஸாபேக்ஷமுமா யிருக்கையாலே, ஸாங்கமாக வேண்டிற்றித்தனை. இவ்வுபாயம் ஸித்தமுமாய் அந்யநிரபேக்ஷமுமாயிருக்கையாலே, நிரங்கமாயிருக்கும்.

ஆனால், உபாயாந்தரங்களுக்கு முபாயத்வவ்யபதேசம் பண்ணுகிறது, ஃபலப்ரதைகளான தேவதைகளுக்கு ப்ரஸாதகங்களான முகத்தாலேயன்றோ, அவ்வோபாதி இவ்வுபாயமுமீச்வரப்ரஸாதகமானாலோவென்றில், தேவதைகளில் சேதநர்க்கு பூர்வமேஃபலத்தைக் கொடுப்பதாக நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே, இச்சேதநருடைய க்ரியையாய்த்து, அவர்கள் ப்ரஸாதத்தை ஜநிப்பிக்கிறது. ஈச்வரவிஷயத்தில் வந்தால், ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வரூபாவிர்ப்பாவத்தை யுண்டாக்குவதாக பூர்வமேவ ஸ்திதித்து அவஸரப்ரதீக்ஷகனாய்ப் போருகையாலே, அவனுக்குப்ப்ரஸாதஜநகமாகச் செய்ய வேண்டுவதொன்றில்லை. உண்டென்றிருக்கையாகிறது தன் ஸ்வரூப பாரதந்த்ர்யத்தையுமழித்து அவனுடைய ரக்ஷகத்வத்தையும் ஸோபாதிகமாக்குகிறானித்தனை.

ஆனால் மோக்ஷத்துக்கு, தன்னையொழிய உபாயாந்தரங்களை விதிப்பானென்னென்னில், இவைவிவாகளுக்கு ஹிதமாய் விதிக்கிறானல்லன், அபவர்கத்தின் பெருமையாலே, கோயிலங்காடியிலே யெல்லாச்சரக்கும் பாரித்து வைக்கிறாப்போலே, (த்ரைகுண்ய விஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந), (முத்திறத்து வாணியத்திரண்டிலொன்று நீசர்கள் மத்தராய் மயங்குகின்ற திட்டதி லிறந்துபோந்து) என்கிறபடியே சேதநருடைய ருச்யநுகுணமாகத் தன் செல்லாமையாலே விதிக்கிறானித்தனை.

புருஷோத்தமவித்யையில், புருஷோத்தமத்வ வேதநத்தாலல்லது வழியில்லை யென்கிறவிதுவும் அவனிட்டவழக்கு ஸர்வேஶ்வர னென்கிறவிதுவும் அந்த முவியாபாதிகாரிகளுக்கு. ருச்யநுகுணமான ஸாதநங்களில் இதல்லது போக்கில, அப்பவிஹித ஸாதநமொன்றில்லையென்று அல்லாத உபாயங்களிற் காட்டி லிவ்வுபாயத்தினுடைய வேற்றுமும் அல்லாத வதிகாரிகளில் காட்டில் இவ்வதிகாரியினுடை வேற்றுமும் சொல்லுகிறதித்தனை.

(மாமபேக்ஷ்யத்? காகுஸ்ய தத்கல்ப ஸத்ரீர்ஸம்ஹவேத்) என்றும் (முன்னின்றாய்) என்றும் (தோழிமார்களுமன்னையரும்) என்றும் (நிறைந்தவன்பழி நங்குடிக்கிவள்) என்றும் (இருநிலத்தோர்படைத்தேன்) என்றும், (சோம்பரையுகத்தி) என்றும் சொல்லுகிறபடியே பதிவ்ரதைக்கு பதியையொழிய தன்பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு வாயகமாக ஸ்வயத்நத்தாலே அர்யமார்ஜித்து ஸவதேஹபோஷணம் பண்ணுமாகில் அது தன் ஸவரூபத்துக்குச் சேராதே தன்னளவிலும் பர்யவஸியாதே, தன்ஹர்த்தாவுக்கு மவத்யாவஹமாயிருக்கும்.

தானொன்றுஞ் செய்யாதே, அவன் ரக்ஷிக்கக் கண்டிருக்குமாகில், அது இருவர் ஸ்வரூபத்துக்கும் நன்னிறமுண்டாக்கக்கடவது. அப்படியே தன்ஸ்வரூபத்தை யுணர்ந்து தன் ஸ்வரூபாநுரூபமாக அவனையே ப்ராப்யமும் ப்ராபகமுமாக நினைத்திருக்குமதிகாரிகளோடு ஸமராய்ச் சொல்லுகிறதல்ல, (ஸ்த்ரீகர்மந்த்ரதாஶீஸாக்ஷீயோ ஸ்ஸாங்கியபோமவிஜஸ்தயா, நார்ஹந்தி ஶரணஸ்யாஶ்யகலாம்கோடிதமிமபி: விஷ்ணூபாயோ யோந்யஃபலஸ்லோபம்பரிசிர்திதஃ, அந்யோபாயோ விஷ்ணுஃபலோ யஃ பரீக்ஷீர்த்தஃ, மாயவாங்ஷ்ரிஉவயோபாயோ மாயவாங்ரிப்ரயோஜநஃ, டஸ்ஸ ஏவோத்தமஃ ப்ரோக்தோ மாயவேணைவ தேநவை).

ஆனால் அவஶ்யகர்த்தவ்யமான உபாயஸ்வீகாரத்துக்கு வேஷமேதென்னில், அவித்யாவ்ருத்தி லக்ஷணமுமாய், ப்ரதிவந்யகநிவர்த்தகமுமாய். ஶிவஷித்தலயாயாகமுமாய் கிடக்கிறது. (ஊமவக்த ப்ரவ்ருத்திவிரோதி ஶிவப்ரவ்ருத்தி நிவிருத்திஃ ப்ரயத்நஃ) என்று ஸோமாசியாண்டானருளிச் செய்வர்.

இவ்வுபாயந்தான், ஒராகாரத்தாலே ஸாபேக்ஷமுமாய் ஒராகாரத்தாலே நிரபேக்ஷமுமாயிருக்கும். எங்ஙனேஎன்னில், ஆஶ்ரயண

காலத்தி லதிகாரிஸாபேக்ஷமுமாய், ஃபலப்ரதாநத்தில் நிரபேக்ஷமுமாயிருக்கும். ஆகையால் எம்பெருமான் நிருபாதிக ரக்ஷகனாகையாலும், ரக்ஷணஃபலம் தன்னதாகையாலும், (ஆள்பார்த்துழிதருவாய்) என்கிறபடியே பூர்வமேவ ஸ்ருஷ்ட்யவதாரங்களைப் பண்ணி சேதநருடைய விச்சைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்ப் போருகிறவனாகையாலும். அவனுடைய நிர்ஹேதுகமான க்ருபாப்ரஸாதங்களே உபாயம் என்றதாய்த்து.

(க்ருபயா கேவலமாத்மஸாத்குரு) (கேவலம் மதீயயைவ தயயா நிஶ்ஶேஷ விநஷ்ட ஸஹேதுக கேவலம் மதீயயைவ தயயாதிப்ரபுத்தய:) என்று ஆளவந்தாரும் எம்பெருமானாரும் ஸ்தோத்ர கத்யங்களிலே யிவ்வர்த்தத்தை யருளிச்செய்தருளினார்கள்.

“வ்ருத்தி ஸமேலவைக்கு ஃபலம் அவதாரணார்த்தமாகிறது” என்று பிள்ளையருளிச்செய்தருளுவர். இத்தாலும் இவ்வுபாயம் ஸ்வரூபத்துக் கநுரூபமாயிருக்குமென்றதாய்த்து.

(ஶரணம்) என்றது (உபாயே க்ருஹரக்ஷித்ரோஶ்ஶப்த ஶ்ஶரணமித்யயம், வர்த்ததே ஸாம்ப்ரதஞ்சைஷ உபாயார்த்தைகவாசக:) என்கிறபடியே, ஶரணஶப்தம், உபாயவாசகமாய், அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்திக்கவ்ய வஹிதோபாய மென்றபடி.

இஶ்ஶரணஶப்தம், அவ்யவஹிதோபாய மென்னுமிடத்தைக் காட்டுகிறபடி தானெங்ஙனேயென்னில், ஸ்மே ஹமவதீவ்யதிரிக்த ஸாங்க ஸகலதர்மத்தையும் விடச்சொல்லுகையாலே.

வ்ரஜ “வ்ரஜாமதேள” என்கிறதாதுவிலே, கத்யர்த்தமாய் கத்யர்த்தா புத்த்யர்த்தா:) என்கிறபடியே, “அத்யவஸி” என்றபடி. அத்யவஸாயமும் விஶ்வாஸமும் பர்யாயமாகையாலே, விஶ்வாஸத்தைச் சொல்லுகிறது. ப்ரபத்தி லக்ஷண வாக்யத்திலே “மஹாவிஶ்வாஸபூர்வகம்” என்று சொல்லுகையாலும், அநுஷ்டாந வாக்யத்திலுப் உபஸர்கத்தாலே மஹாவிஶ்வாஸத்தைச் சொல்லுகையாலும், இங்குமந்த விஶ்வாஸத்தையே விபித்ததாசக் கடவது.

மஹாவிஸ்வாஸமாவது-ஶங்காத்ரய ரஹிதமான விஶ்வாஸம். ஶங்காத்ரயமாவது;—உபாயஸௌகர்யத்வமும் உத்தேஶ்ய தௌர்லப்யத்வமும், ஸ்வக்ருத தோஷதர்ஶநமும்.

இவைபரிஹ்ருதமாகிற தெத்தாலேயென்னில், மாமென்கிற படித்திற் சொல்லுகிற குணவங்யங்களாலே.

ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஶக்தனுமாய் பரமகாருணிகனுமாய் பரமோதாரனுமா யிருக்குமென்கையாலே ஃபலகௌரவத்தால் வந்த ஶங்கைபரிஹ்ருதம்.

ஆஶ்ரிதவத்ஸல னென்கையாலே, ஸ்வக்ருத தோஷதர்ஶநமா கிறஶங்கை பரிஹ்ருதம்.

அஶரண்ய ஶரண்யனுமாய் அநாலோசித விஶேஷாஶேஷ லோகஶரண்யனுமா யிருக்குமென்கையாலே, உபாயலாகவமாகிற ஶங்கை பரிஹ்ருதம்.

ஆக இத்தனையாலும், குணவத் தாத்யவசாயஞ்சொல்லிற்று; இனிமேல் ஸ்வரூபாத்யவஸாயஞ் சொல்லுகிறது.

ஸர்வஸ்வாமி யென்கையாலே, உபாயலாகவமாகிற ஶங்கை பரிஹ்ருதம். ஸ்ரீமானென்கையாலே ஸ்வக்ருத தோஷதர்ஶநமாகிற ஶங்கை பரிஹ்ருதம். நாராயணனென்கையாலே ஃபலகௌரவமா கிற ஶங்கை பரிஹ்ருதம்.

ஆகவித்தால் தன்னுடையஸ்வரூபகுண ஸித்த்யர்த்தமாகவே ஶரணாகத ரக்ஷணம்பண்ணுமென்கிற மஹாவிஶ்வாஸம் ப்ரபத்தி யென்றதாய்த்து.

இதுதான் ப்ரார்த்தநா கர்ப்பமாயிருக்கும் "மஹாவிஶ்வாஸபூர்வகம், ததேக கோபாயதாயாசநா ப்ரபத்திஶ் ஶரணாகதிঃ" என்றும், (த்வமேவோபாயபூதோமேப தி ப்ரார்த்தநாமதிঃ, ஶரணாகதிঃ,) என்றும், லக்ஷணவாக்யங்களில் சொல்லுகையாலே, விஶேஷண ஶரணாகதியில் ப்ரார்த்தநமாவது அவனை உபாயத்வேந ஸ்வீகரிக்கை. அதாகிறது-நமக்கு உபாயமிவனே யென்றிருக்கை.

ஆக கர்மமு மின்றியிலே, கர்மஸாத்யமான ஜ்ஞாநமுமின்றி யிலே, ஜ்ஞாநஸாத்யமான பக்தியு மின்றியிலே, இவைத்தினுடைய த்யாகபூர்வகமுமாய், தாநுபாயமுமன்றிக்கே உபேயமும் அன்றிக்கே அதிகாரிக்கு விஶேஷணமாயிருப்பதோ ரத்யவஸாயாத்மக ஜ்ஞாந விஶேஷ மென்றதாய்த்து—இனிவாசிக காயிகங்களுண்டாகவுமா மில்லையாகவுமமென்கை.

இந்தவிஸ்வாஸாநுஷ்டாநத்துக்கு விஷயமேதென்னில் "ஸக்ருதேவ ப்ரபந்நஸ்யக்ருத்யம் நைவாந்யதிஷ்யதே, ப்ரபத்திர் விஶ்வாஸ: ஸக்ருதப்ரார்த்தநமாத்ரேண பேக்ஷிதஜ்ஞாஸ்யப்ரதிதிவிஶ்வாஸ பூர்வக ப்ரார்த்தநமிதியாவத்", என்கையாலே, இந்தவிஸ்வாஸாநுஷ்டாந மாகிற உபாயஸ்வீகாரம் ஸக்ருத்தென்னுமிடம்,ப்ரபத்திஶாஸ்த்ரங்களாலும் ப்ரபத்திவித்துக்களாலும் நிஷ்கர்ஷிக்கப்பட்டது.

இந்தவிஸ்வாஸவிஶேஷமானது, "மாஶுச:" என்கிறவிதிபலவத்ப்ராப்தியளவுமநுஷ்டேயம் ஆகாகிறது-இநிநமக்குகர்தவ்யாம்ஶங்களொன்றுமில்லை, ஃபலஸித்தியிலுமொருகுறையில்லை, என்று விமர்ஶதஶையில் பிறக்கும் விஶ்வாஸமாகையாலே, உபாயாநுஷ்டாநமும், அநுஷ்டிதோபாய பரிபாலநமும், கர்த்தவ்ய மென்றதாய்த்து.

(ஹேயஸத்வம்ஶ்ருணாஶங் க்ஷேபம் மநஸாயே நவ்யயா, ஶாஸ்த்ராவக்ருயத்நேநரக்ஷாவாட்யப்ரமாதிநீ.)

ஆகையால் உபாயஸ்வீகாரம் ஸக்ருத்தென்னுமிடமும்,ஸ்வீகார விஶேஷணமுமான விஶ்வாஸம் யாவத்ப்ராப்திபளவும் விமர்ஶதஶையிலு மநுவர்த்திக்க வேணுமென்னுமிடமுஞ் சொல்லிற்றாய்த்து.

ஸ்வர்க ஸாதநமான ஜ்யோதிஷ்டோமம் ஸப்தாஹஸ்ஸிலே விஹிதமாயிருக்கச் செய்தே அந்த யாமாநுஷ்டிதமான அக்நி ஹோத்ரமாப்ரயாணயமஹர ஹரநுஷ்டேயமாகிறாப்போலே இந்த அக்நி ஹோத்ரமநுஷ்டியாதொழிந்தால் ஃபலத்துக்கு விளம்பமுண்டாய் அநுஷ்டித்தால் ப்ரதிபந்தகமன்றிக்கே விஶேஷ ஃபலமுண்டாயிருக்குமாப்போலே, ஆவ்ருத்திரூபமான விஶ்வாஸமும் நிஷ்டாவான்களுக்கு நிஷ்டாப்ரகாஶகமுமாய் காலக்ஷேபமாகிற ஃபலத்தையுமுடைத்தாயிருக்கும். விஶ்வாஸத்தினுடைய ஆவ்ருத்திகள் கிணற்றுக்குள்ளே யிருந்து ஜீவிப்பாரைப்போலே யென்று பிள்ளை யருளிச் செய்தருளுவர்.

ஆக, ஸ்வீகாரத்துக்கு பாயாந்தரத்யாக மங்கமென்னுமிடத்தையும், த்யாக பூர்வகமான ஸ்வீகாரமதிகாரிக்கு விஶேஷமென்னுமிடத்தையும், ஸ்வீக்ருதனான வதிகாரிக்கு ஶரணவிஶிஷ்டனான விஶ்வாஸனுபாயமென்னு மிடத்தையுஞ் சொல்லித்தாய்த்து. ஆகையாலே, த்யாகவிஶிஷ்டம் ஸ்வீகாரம், ஸ்வீகாரவிஶிஷ்டம் அதிகாரம், ஶரணவிஶிஷ்ட உபாயம், என்றதாய்த்து.

ஆக, விதிக்குக்கீழே அதிகாரிக்கு கர்தவ்யஞ் சொல்லிற்று. இனி ஈஶ்வரனுக்கு கர்தவ்யஞ் சொல்லுகிறது.

(அஹம்த்வேத்யாதி) "மோக்ஷயிஷ்யாமி" என்கிற உத்தமனுக்கும் "மாஶுச:" என்கிற மத்யமனுக்கும், ப்ரதிஸம்பந்திதயா (அஹம்த்வா) என்கிற ஶப்தங்கள் தன்னடையே வருவதாயிருக்க, வாசிகமாகச் சொல்லுகிற விதிக்கு ப்ரயோஜநமென்னென்னில், சில அபிப்ராயத்தைப்பற்றச் சொல்லுகிறது. இதுதான், "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்கிற ஶரண்யாநுவாதமும், ஶரணாகதனுடைய அநுவாதமுமா யிருக்கிறது. அதாகிறது, "உனக்கு உபாயபூதனான என்னையே உபாயமாகப் பற்றிய உன்னை" என்றபடி.

ஜீவோஹமென்றால், ஜீவத்வத்தைக்காட்டிலும் ப்ரக்ருதிபுருஷவிவேகம்பண்ணினவன். "அஹம்" என்றால் ப்ரக்ருதே:பரனாய் பரமசேஷபூதனான ஆத்மாவைக்காட்டும். ஈஶ்வரன் "அஹம்" என்றால் உள்ளதெல்லாத்தையுங் காட்டுமிறே. இந்த (அஹம்) ஶப்தம், (மாம்) என்கிறத்தோடே சேர்ந்து அநுகுணமாய்த்து. மாமென்கிறவிடம் அதிகாரிக்ருத்யமான மஹாவிஶ்வாஸத்துக் குறுப்பாகச் சொல்லிற்று. அஹமென்கிறவிடம் ஈஶ்வரக்ருத்யமான பாபவிமோசநத்துக்குறுப்பாகச் சொல்லுகிறது. அதாகிறது, பந்தகனானவனே விமோசகனானால், நிவாரகருண்டோவென்கை. அதாகிறது, ஸமாப்யதிகதரித்ரனென்றபடி. இவ்விடத்திலே, விஶேஷித்து, ஃபலப்ரதாநத்துக்குபயுக்தமான குணங்கள், அநுஸந்தேயங்கள்.

(த்வா) "கீழ்ச்சொன்னபடியே ஸகலதர்மங்களையும் விட்டு என்னையே நிரபேக்ஷஸாதநமாகப்பற்றின உன்னை" என்றபடி. இத்தால், மேல்சொல்லப்புகுகிற ஶோகவிமோசநஹேதுவைச் சொல்லிற்று.

(அஹம்த்வா) வென்கிற விரண்டுபதத்தாலும், ஸ்வீகார்யமான உபாயவேஷத்தையும் ஸ்வீகர்த்தாவான அதிகாரிவேஷத்தையுஞ்சொல்லி நின்றது; இனிமேல் ஸ்வீகார்யமான ஈஶ்வரக்ருத்யத்தையும், ஸ்வீக்ருதோபாயனான அதிகாரிக்ருத்யத்தையும் சொல்லுகிறது.

(ஸர்வபாபேப்ய:) பாபமும் ஸஹவாஸநமும் ஸர்வஶப்தமுமாம் இதுவும் த்ரிப்ரகாரமாயிருக்கும்.

பாபமாவது, - அநிஷ்டமான ஃபலத்தைத்தருவதுமாய் இஷ்ட ஃபலத்துக்கு விரோதியுமா யிருப்பதொன்று. இங்குற்றைபாபமா

கிறது, அநிஷ்டமான ஸாம்ஸாரிக துஃகத்தையுண்டாக்கிக் கொடுப்பதாய், இஷ்டமானமோக்ஷத்துக்கு விரோதியுமா யிருப்பதொன்று.

பஹுவசநத்தாலே யவைத்தினுடைய பாஹுள்யத்தைச் சொல்லுகிறது. அதாகிறது, அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தங்கள்.

அவித்யையாவது, அந்யதாஜ்ஞாநமும், விபரீதஜ்ஞாநமும், ஜ்ஞாநாநுதயமும்.

கர்மமாவது; புண்யபாபம். மோக்ஷத்தைப்பற்ற, பாபத்தோபாதி புண்யமும்த்யாஜ்யம்; "புண்யபாபேவிதூய" என்னக்கடவதிறே.

வாஸனையாவது,-அஜ்ஞாநவாஸனையும், கர்மவாஸனையும், தத் விஷய ருசிவாஸனையும்.

ப்ரக்ருதிஸம்பந்தமாவது;—ஸ்தூலஸூக்ஷ்ம ரூபமாயிருந்துள்ள அசித்ஸம்பந்தம்.

இவ்வளவால், உபாஸகனுக்கும் ஸாதாரணமாக, ஈஶ்வரன் கழித்துங் கொடுக்குமாகாரத்தைச் சொல்லிற்று.

இனி, (ஸர்வ) ஶப்தத்தாலே ப்ரபந்நனுக்க ஸாதாரணமாகக் கழித்துக்கொடுக்கு மவற்றைச் சொல்லுகிறது. அதாகிறது. "தததிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ, தத்வ்யபதேஶாத், இதரஸ்யாப்யேவ மஸம்ஶ்லேஷ:பாதேது"* என்று பூர்வோத்தராகங்களாகிற புண்யபாபங்களுக்கு அஶ்லேஷவிநாசஞ் சொல்லி, "ஹோமேநத்விதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே" என்றுப்ராரப்தமநுபவ விநாஶ்யமென்னுமிடஞ் சொல்லித்திறே. இங்கு அப்படியிருப்பதொரு ஸங்கோசமில்லாமையாலே, அதுவும் ஶோகஹேதுவாமாகில் ஸர்வஶப்தத்திலே அந்தர்பூதமாகக் கடவது. எங்ஙனே என்னில், இதுக்கு ஸங்கோசகமாயிருப்பதொரு ஶப்தமிங்கில்லாமையாலே.

ப்ரபத்தி-ப்ராரப்தகர்மத்துக்கு விநாஶகி,என்னுமிடத்துக்கு ப்ரமாணமென்னென்று எம்பெருமானாரை ஆண்டான்கேட்க, "மாஶுச:" என்றதிறே என்றருளிச்செய்தருளினார்.

---

* ப்ரஹ்மஸூத்ரம் ச-க-கந, கச.

இதுதான் ப்ராரப்தத்தையும் போக்குமென்னுமிடத்துக்கு, கண்டோக்தமான ப்ரமாணங்களுமுண்டு. "ஸாயுஜ்யம்பகவத் ப்ராப்தௌஸ ஏவேதிஸ்ம்ராமதி:, ஸாமீப்யபக்திஸ் ஸம்ருதாஸைவ ப்ரபத்திரிதீர்யதே; உபாயோபக்திரேவதி தத்ப்ராப்தௌயாதுஸாமதி:- உபாயபக்திரேதஸ்யா: பூர்வோக்தைவஹரீயஸீ, உபாயபக்தி: ப்ராரப்த வ்யதிரிக்தாயநாஸநீ-ஸாத்யபக்திஸ் துஸாஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ" என்று ப்ரபந்நனுக்கு ஸரீராந்தர ஹேதுவான ப்ராரப்தஸேஷ மநுபவிக்கவேண்டுகிறது. ப்ராரப்த ஸரீரத்தில் ஸோகமில்லாமையாலே, "ஆரப்தகார்யாந்" என்று ப்ராரப்தமும் ப்ரபத்தியாலே "க்ஷந்தவ்யம்" என்று உடையவர் அருளிச்செய்தார்.

உபாஸகனுக்கு உத்தராயணத்துக்குச் சொல்லுகிற அஸ்லேஷமும் ப்ராமாதிகவிஷயமென்று உடையவர் பாஷ்யத்திலே யருளிச்செய்தருளினர். இப்படி அருளிச்செய்கைக்குஹேது, "நாவிரதோ துஸ்சரிதாந் நாஸாந்தோநாஸமாஹித:, நாஸாந்தமாநஸோவாபி ப்ரஜ்ஞாநேநைந மாப்நுயாத்" என்கிற வாக்யங்களோடு விரோதியாமைக்காகவும், "அபிவேத்பாத்கம் கிஞ்சித் யோகீ குர்யாத்ப்ரமாதத:யோகமேவநிஷேவேதநாந்யம்பத்நம் ஸமாசரேத்" என்று யோகிகளுக்கு ப்ராயஸ்சித்தத்தை விதிக்கையாலும்.

ப்ரபந்நனுக்கு உத்தராயணத்தில் வைஷீயபூர்வமும் ஸோகஹேதுவாமாகில் அந்த வைஷீயபூர்வத்துக்கும் பரிஹாரமாகக்கடவது. அதாவது, ஸரீரஸம்பந்தத்தோடே யிருக்கையாலே வாஸநையாலும் ப்ரபலகர்மத்தாலும் காதாசித்கமாக வைஷீயபூர்வகம் ஸம்பாவிதம். இவற்றையும் பொறுத்தருளவேணுமென்று பூர்வமேவ ப்ரார்த்தித்தானாகில் அவையும் பூர்வப்ராப்திதன்னாலே க்ஷந்தவ்யமாகக் கடவதென்கை. ஆகையிறே, "வர்த்தமாநம்வர்திஷ்யமாணஞ்ச" என்று உடையவ ரருளிச்செய்தது.

வைஷீயபூர்வகமான உத்தராயணத்தில் ஸோகித்து ஸரணம் புக்கானென்னுமிடம் அறியும்படியெங்ஙனேயென்னில், உத்தரப்ரவர்த்தியிலநுதாபம் நடக்கையும், பூர்வப்ரபத்தியை ஸ்மரித்து நிர்ஹவித்தனுகையும், இன்னமும் ஸ்ரீரேஷ்டராயிருப்பார்க்கு ஸிஷ்யபுத்ரர்களைப்

பற்ற விதியாதிக்ரமம் பண்ணியநுஷ்டிக்கவேண்டி வருவன சில பாபமுண்டு - அந்த பாபங்களைச் சொல்லுகிறது.

ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராயநுஷ்டித்தாலும் ஏறிட்டுகட்டி ஆகாஶத்திலே நில்லாதாப்போலே அவையுமொருவலத்தோடே ஸம்பந்திப்பிக்கக்கடவது, ஆகையாலே அவையும் பாபஶப்தவாச்யமாகக்கடவது.

கலங்கிய உபாய புத்தியாப்பண்ணும்ப்ரபத்தியும் பாபஶப்த வாச்யமாகக்கடவது.

ஆகக்கீழ், விரோதிவேஷஞ் சொல்லிநின்றது. (மோக்ஷயிஷ்யாமி) என்று விரோதிநிவ்ருத்தி ப்ரகாரஞ் சொல்லுகிறது.

"மோக்ஷயிஷ்யாமி" இவைத்திநின்றும் விடுவிப்பன்.

(இஷ்யாமி) என்கிற ணிச்சாலேயாவையாவை சிலபாபங்களைக் குறித்து நீ பயப்படுகிறாய், அவைதானே உன்னைக்கண்டு பயப்பட்டுப் போம்படி பண்ணுகிறேன்.

அவை தானேவிட்டுப்போம்படி பண்ணுகையாவது, இவை நமக்கு முன்புண்டாய்க் கழிந்ததென்று தோற்றாதபடி போக்குகை. இதாகிறது, இவைஸ்ம்ருதி விஷயமானாலும் தன்னுடையஸ்வாபாவிக வேஷத்தைப்பார்த்து ஸ்வப்நங்கண்டாப்போலே யிவைநமக்கு வந்தேறியாய்க்கழிந்ததென்றிருக்கையும், ஸ்ம்ருதியால் து:கமநுவர்த்தியாதிருக்கையும்.

கீழிவனை உபாயமாகப் பற்றிற்று அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்திக்காயிருக்க, அநிஷ்டநிவ்ருத்திமாத்ரத்தை பலமாகச் சொல்லுவானென்னென்னில்; "யதோதபாநகரணாத்க்ரியதே நஜலாம்பரம், ஸதேவநீயதேவ்யக்திமஸதஸ்ஸம்பவ: குத:; ததாஹேய குணத்வம்ஸா தவபோதாதயோ குணா: - ப்ரகாஶ்யந்தே நஜந்யந்தே நித்யாஏவாத்மநோஹிதே; ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்யதே" "மமஸஹஜகைங்கர்யவிதய:" என்கிறபடியே அநிஷ்டநிவ்ருத்தியுண்டானால், இஷ்டப்ராப்தி தன்னடையேயுண்டாமிறே.

ஆனால் அநிஷ்டநிவ்ருத்தி மாத்ரத்துக்கு ஈஶ்வரன் உபாயமாயிருக்கிறானோவென்னில்; இஷ்டப்ராப்தியாகிற அநவதிகாதிஶயாநந்த ப்ரஹ்மாநுபவத்துக்கு அர்ஹதையேயுள்ளது, இனி ஈஶ்வரனை

யநுபவிக்கும் போதாய்த்து, இவனுக் கநுபவிக்கலாவது; ஆகையிறே கைவல்யமாகிற மோக்ஷத்துக்கு அநிஷ்ட நிவ்ருத்தி யொழிந்திருக்கச் செய்தேயும், ஆத்மாநுபவமாத்ரமா யிருக்கிறது. இவ்வைஷம்யத்துக்கு ஹேது, உபாஸநதாரதம்யத்தாலே ஈஶ்வரனுக்குண்டான ப்ரஸாததாரதம்யமாகையாலே, வேதநன் புருஷார்த்தத்தைப்ப்ரார்த்திக்கும்போது இஷ்டப்ராப்திரூபமான கைங்கர்யத்தை ப்ராதாந்யேந ப்ரார்த்திக்கக்கடவன்,

இவனுக்கு, கைங்கர்யமாகிற புருஷார்த்தம் ஸஹஜமாயிருக்கையாலே தத்விரோதிநிவ்ருத்திமாத்ரத்தையே உபாயமான ஈஶ்வரக்ருத்யமாகச் சொல்லக்கடவது. ஆகையாலே பந்தப்ராதாந்யத்தைப் பற்ற விங்கருளிச்செய்கிறான்.

அநிஷ்டநிவ்ருத்தியும்இஷ்டப்ராப்தியும்ஈஶ்வரனுடைய க்ருபாப்ரஸாதக்ருத்யமாக கத்யத்திலே உடையவரருளிச் செய்தருளினார்.

ஆகையால் இப்படி ஶரண்யன் சொல்லுகைக்கடி இஷ்டப்ராப்திரூபமான கைங்கர்யமிவனுக்கு ஸ்வாபாவிகமென்னுமாகாரந் தோற்றுகைக்காகவும், அநிஷ்டநிவ்ருத்தியுண்டானபோதே ஸஹஜமான இஷ்டப்ராப்தியுமுண்டென்றும், அநிஷ்டநிவ்ருத்தியினுடைய ப்ராதாந்யத்தைப்பற்ற வருளிச்செய்கிறான்.

கீழ், (அஹம்) என்று உபாயக்ருத்யஞ் சொல்லிநின்றது. மேல், (த்வா) என்று நிக்ஷிப்தபரனானவதிகாரிக்ருத்யஞ் சொல்லுகிறது.

(மாஶுச:) ஶோகியாதே கொள்ளென்றபடி. "வ்ரஜ" என்கிற விதியோபாதி (மாஶுச:) என்கிறதும் விதியாகையாலே ஸ்வீகாரத்தோபாதி ஶோகநிவ்ருத்தியும் கர்தவ்யமென்கை. ஆகையாலே, ப்ரபந்நனுக்கு யாவத்பலப்ராப்தி, நிர்பரத்வாநுஸந்தாநம் கர்தவ்யமென்றதாய்த்து. ஸ்வீக்ருதோபாயனை பின்பு ஶோகித்தானாகில் ப்ரபத்திநிஷ்டைக்குஹாநியுண்டாய் அத்தாலே பலவிளம்பமுண்டாகக்கடவது.

"பலியாய்த்து - பலாலாபத்தில் ஶோகிப்பான். உபாயகர்தாவாய்த்து - உபாயமில்லையென்று ஶோகிப்பான். இவ்வுபாயத்தில் பலித்வக்ருத்ருத்வங்களிரண்டு முனக்கில்லை. இனி, நானே பலியுமாய் நானே கர்த்தாவுமாயிருக்கையாலே நீ ஶோகிக்கவேண்டா," வென்கை. "ஸக்ருதேவம்ப்ரபந்நஸ்ய க்ருத்யம் நைவாந்யதிஷ்யதே" என்கையாலே, கர்த்தவ்யாம்ஶமுண்டென்று ஶோகிக்கவேண்டா.

“(மாம்-அஹம்) என்கையாலே, உன்விலக்காமை பார்த்திருக்கிறோம் சிலராகையாலும், விரோதிநிரஸந ஸமர்த்தனாகையாலும்ஶோகிக்கவேண்டா, ஆனையாலே. உன்னைப்பார்த்தாலும் ஶோகிக்கவேண்டா, என்னைப்பார்த்தாலும்ஶோகிக்கவேண்டா நிர்பயனாயிரு” என்கை

“உடையவனாய்த்து க்ருஷிபண்ணுவான். கர்ஷகனாய்த்து ஃபலம் புஜிப்பான். ஃபலியாய்த்து ஃபலாலாபத்தில் ஶோகிப்பான் இவையித்தனையு முனக்கில்லாமையாலே ஶோகியாதே” என்றதாய்த்து.

இனிஶோகித்தாயாகில், உன்ஸ்வரூபத்தையுமழித்து, என்ப்ரபாவத்தையுமழித்தாயாமித்தனை. முன்ஶோகித்ததில்லையாகில் அதிகாரஸித்தியில்லை, பின்பு ஶோகித்தாயாகில் ஃபலஸித்தியில்லை.

இத்தால் “அதஸ்த்வம்தவதத்க்ருதோபாயஞ் ஜ்ஞாநதர்ஶநப்ராப்திஷு நிஸ்ஸம்ஶயஸ்ஸுகமாஸ்ஸ்வ” என்றபடி.

“துஷ்கரமுமாய் ஸ்வரூபவிரோதியுமான ஸாதநங்களைத் த்யஜிக்கையாலே ஶோகிக்கவேண்டா, ஸ்வீகரிக்கப்புகுகிற உபாயம் ஸுலபமாகையாலே ஶோகிக்கவேண்டா, அதுதான் நிரபேக்ஷமாகையாலே ஶோகிக்கவேண்டா, அவ்யவஹிதஸாதநமாகையாலே ஶோகிக்கவேண்டா, மாநஸவ்யாபார மாத்ரமாகையாலே வாய்நோவ உடம்புநோவ க்லேஶிக்க வேணுமென்று ஶோகிக்கவேண்டா, உபாயம் ஃபலப்ரதாநஸமர்த்தமாகையாலே ஶோகிக்கவேண்டா. இனி கர்த்தவ்யாம்ஶமுண்டென்று ஶோகிக்கவேண்டா, விரோதியம்ஶத்தில் ஶேஷிப்பதொன்றுண்டென்று ஶோகிக்கவேண்டா, விரோதி போமோ போகாதோவென்று ஶோகிக்கவேண்டா” வென்கிறது.

(௧) த்யாஜ்யஸ்வரூபஞ்சொல்லி, (௨) த்யாகப்ரகாரஞ்சொல்லி, (௩) உபாயஸ்வீகாரத்துக்கு த்யாகமங்கமென்னுமிடஞ்சொல்லி, (௪) ஸ்வீகரிக்கப்புகுகிற உபாயத்தினுடைய சீர்மைசொல்லி, (௫) அச்சீரியஉபாயம் நிரபேக்ஷமென்னுமிடஞ்சொல்லி, (௬) உபேயத்வம் நித்யம் உபாயத்வ மௌபாதிகமென்னுமிடஞ் சொல்லி, (௭) பற்றுமிடத்தில் மாநஸவ்யாபாரமே அமையுமென்னுமிடஞ் சொல்லி, (௮) உபாயத்தினுடைய சீர்மையைச் சொல்லி, (௯) அச்சீர்மையினுடைய பூர்த்திசொல்லி, (௰) விரோதிகளில் கிடப்பதொன்றில்லையென்னுமிடஞ்சொல்லி, (௧௧) அவையடையத்தானே போமென்னுமிடஞ்சொல்லி, (௧௨) “நிர்பரனாயிரு” வென்றான்.

ஆகவித்தால், (க) ஸ்வீகாராங்கங்களையும், (உ) த்யாஜ்யதர்ம விசேஷங்களையும், (ங) அந்த தர்மங்களினுடைய த்யாகப்ரகாரத்தையும், (ச) அந்த தர்மத்யாகபூர்வகமாகப் பற்றும் விஷயத்தினுடைய ஸௌலப்யாதிகுணயோகத்தையும், (ரு) தத்விசிஷ்டவஸ்துவினுடைய ஸஹாயாஸஹத்வ லக்ஷணமான நைரபேக்ஷ்யத்தையும் (சா) அந்த நிரபேக்ஷவஸ்துவினுடைய உபாயபாவத்தையும், (எ) அத்தை உபாயத்வேந ஸ்வீகரிக்கையும், (அ) ஸ்வீக்ருதோபாயனுடைய ஜ்ஞாநசக்த்யாதி குணயோகத்தையும், (கூ) தத்விசிஷ்டவஸ்துவில் ந்யஸ்தபாரனை அதிகாரியையும், (க0) தத்விரோதிபாபஸமூஹத்தையும், (கக) தத்விமோசநப்ரகாரத்தையும், கஉ) தத்விமோசநத்தைப்பற்றின அதிகாரியினுடைய நைர்பர்யத்தையுஞ் சொல்லிற்றாய்த்து.

ப்ரபத்தி, நிர்பரத்வாநுஸந்தாநஸிரஸ்கமாகையாலே, நிர்பரத்வாநுஸந்தாநம் ஸர்வதா கர்த்தவ்யமென்றதாய்த்து "வ்ரஜ" என்கிற ஸ்வீகாரத்துக்கு.

ஏகாதசே உத்தவம் ப்ரதி க்ருஷ்ண: — தஸ்மாத்வமுத்தவோத்ஸ்ருஜ்ய சோதநாம் ப்ரதிசோதநாம்-ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஸ்ரோதவ்யம் ஸ்ருதமேவச; மாமேகமேவ ஸரணமாத்மாநம் ஸர்வதேஹிநாம்—யாஹி ஸர்வாத்மபாவேந யாஸ்யஸே ஹ்யகுதோபயம்,

ஸ்ரீராமாயணே.

ஸக்ருதேவப்ரபந்நாயேத்யாதி. மித்ரபாவேநேத்யாதி.

ஸ்ரீவாராஹே.

ஸ்நிக்தேமநஸீத்யாதி.

ஊஷ்கராம்ஸதுஸாயநாம் ஊஸ்த்யஜம் வாமஹாக் பநாம் ஸ்ய ஸ்ஸங்கீர்த்திதோ பகவாந் ஸாத்வதாம்ர்ஷபோ ஹரி: ; ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகிந: நைவாஸ்தி கிஞ்சித் கர்த்தவ்யமஸ்தி சேந்ந ஸ தத்வவித்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஸரணம்.

ஜீயர் திருவடிகளே ஸரணம்.

தனிவரமம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

தனிப்ரணவம்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்டஜீவஜீவாதவே நம:

ஸகலவேததாத்பர்யமாய் ஸகல ஶாஸ்த்ரஸங்க்ரஹமாய், ஸகலபலப்ரதமாய், ஸகலமந்த்ரங்களிலுமதிகாரமான, திருவஷ்டாக்ஷரமான, திருமந்த்ரத்துக்கு, நம்பூர்வாசார்யர்கள், "ஸ்வரூபஞ் சொல்லுகிறதென்றும், ப்ராப்யஞ் சொல்லுகிறதென்றும், இரண்டு படியாக்யார்யும்!" என்றருளிச்செய்வர்கள்.

இம்மந்த்ரந்தான் "ஓம்" என்றும், "நம:" என்றும், "நாராயணாய" என்றும், மூன்றுபதமாயிருக்கும்.

இதில் முதல்பதம், ப்ரணவமென்று திருநாமமாய், அகாரமென்றும், உகாரமென்றும், மகாரமென்றும், மூன்று பதமாயிருக்கும்.

இம்மந்த்ரத்துக்கு நம்பிள்ளை யருளிச்செய்த தாத்பர்யம்:—(க) ஆஶ்ரயியையும், (உ) ஆஶ்ரயியினுடைய வைஶத்யத்தையும், (ங) ஆஶ்ரயத்தையும், (ச) ஆஶ்ரயத்தினுடையவைஶத்யத்தையும் (ரு) ஆஶ்ரயணீயவைவஹத்தையும், (சா) ஆஶ்ரயணபலத்தையும், சொல்லுகிறதென்று.

இங்கு ஆஶ்ரயியென்கிறது ஶேஷத்வத்தை; இதுப்ரதமாக்ஷரமான அகாரத்திலே சொல்லுகிறது.

ஸ்ரீ ப்ருஹ்மவாசியான அகாரத்தை ஶேஷத்வவாசியாக்கினபடி யென்னென்னில், இப்பதம் ஸ்ரீ ப்ருஹ்மப்ரதாநமன்றியிலே ஸ்வரூப ப்ரதாநமாகையாலே,

இங்கு ஸ்ரீ ப்ருஹ்மவாசகம் வந்தது,—அந்த ஸ்வரூபத்துக்கு, அந்தரங்கநிரூபகமான ஶேஷத்வம், ப்ரதிஸம்பந்தி ஸாபேக்ஷமாகையாலே.

இதில், விபக்தியில் ஶேஷத்வஞ்சொல்லுகிறது; பதந் தன்னாலே ப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிறது.

ப்ரதிஸம்பந்திவேஷமிருக்கும்படி யென்னென்னில், ஸகல ஜகத்காரணமுமாய், ஸகலஜகத் ரக்ஷகமுமாய், அகிலஹேயப்ரத்ய

நீகமுமாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகமுமாய், நிருபாதிகஸர்வ ஶேஷியுமாய், ஸலக்ஷணகமுமாயிருக்கும் வஸ்து வென்று, இவ்வக்ஷர ஸ்வபாவத்தாலும், தாதுஸ்வபாவத்தாலும் இந்த தாத்வர்த்தஸ்வபா வத்தாலும், விபக்திஸ்வபாவத்தாலும், இவ்வஸ்துஸ்வபாவத்தாலும், சொல்லிற்று.

ஸகல ஜகத்காரணத்வம் இவ்வக்ஷரஸ்வபாவத்தாலே சொல்லு கிறது; எங்ஙனேயென்னில், இந்த ப்ரஹ்ம வாசகமான அகாரம் ஸகல வாசகங்களுக்கும் காரணமாகையாலே வாச்யமான ப்ரஹ் மம் ஸகலவாச்யங்களுக்கும் காரணமாகக்கடவதென்று, வாச்ய வாசகஸம்பந்தத்தாலே சொல்லிற்று.

இன்னமுமிவ்விடத்திலே காரணத்வமநுஸந்திப்பதொரு வழி யுண்டு; எங்ஙனேயென்னில், வாசகங்களோடு வாச்யங்களோடுவாசி யற ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தத்துக்கும் இவ்வகாரமாகிறவாசகமே கார ணமாகக்கடவதென்றார்கள். அப்படியென்னென்னில், "இவ்வகார மாகிறேன்நான்" என்று அவன்தானே யருளிச்செய்கையாலும், இவ் வாசகம் காரணமென்கிறவிடத்தில் வாச்யங்களுக்கு காரணமென் கிற நிஷேதவிதியில்லாமையாலும், இவ்வாசகமே காரணமாகவற் றென்னலாம்; இவ்வாசகப்ரபாவஞ் சொல்லிற்றாய்த்து.

இன்னமு மிவ்விடத்திலே காரணத்வமநுஸந்திப்பதொருவழி யுண்டு; எங்ஙனேயென்னில்; இது ஈஶ்வரவாசகமாகையாலும், ஈஶ் வரத்வமாகிறது-ஆபத்ரக்ஷணம்பண்ணுகையாலும், ஆபத்ரக்ஷணத் தில் ப்ரதானம்-அகரணரானசேதநரை ஸகரணராக்குகையும், அஸம் ஸ்தாநரூபமான வசித்தை ஸம்ஸ்தாந ரூபமாக்குகையும் இத்தால் காரணத்வஞ் சொல்லிற்றாய்த்து.

ஈஶ்வரனென்றபோதே, ஜகத்காரணவஸ்து வென்றதாய்த்தெ ன்றார்கள். இத்தால் வாச்யலக்ஷணஞ்சொல்லிற்றாய்த்து. எங்ஙனே யென்னில்; இவ்வாச்யமான ஈஶ்வரத்வம் மோக்ஷப்ரதவஸ்துவுக் கொழியவில்லாமையாலும், மோக்ஷப்ரதத்வமுள்ளது ஜகத்காரண வஸ்துவுக்கேயாகையாலும், ஈஶ்வரனென்றபோதே ஸகலஜகத்கார ணமென்றார்கள்,

இப்படிப்ரமாணோபபத்திகளாலே, இவ்வகாரத்தில் சொன்ன காரணத்வத்தை, நம்மாசார்யர்கள் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபேண

பலவகையாலும் அநுஸந்தித்து உபதேசித்துப் போருவர்கள். அவைகளெவையென்னில்;

இக்காரணத்வந்தான்—

(க) ஔபாயிக காரணத்வமென்றும்,

(உ) நிருபாயிக காரணத்வமென்றும்,

(ந) ஸத்வாரகௌபாயிக காரணத்வமென்றும்,

(ச) அத்வாரகௌபாயிக காரணத்வமென்றும்,

(ரு) ஸத்வாரக நிருபாயிக காரணத்வமென்றும்,

(சா) அத்வாரக நிருபாயிக காரணத்வமென்றும்.

(க) ஔபாயிக காரணத்வமாவது:—பூர்வபூர்வ யுகங்களிலே சேதநர் சரீரங்களாலே பண்ணின புண்ய பாபங்கள் ஹேதுவாகஸ்ருஷ்டிக்கை.

(உ) நிருபாயிக காரணத்வமாவது:—அநாதியாக அவிஜ்ஞாதமதராய் அசரீரிகளாய்த்திரிகிற சேதநர்க்கு நிரவதிகக்ருபையாலே சரீராதிகளைக் கொடுக்கை.

(ந) ஸத்வாரகௌபாயிககாரணத்வமாவது:—புண்யபாபங்களை நிறுத்து, அவற்றின் வழியே தேவாதிசதுர்விய சரீரங்களையும் ஸ்ருஷ்டிக்கை.

(ச) அத்வாரகௌபாயிக காரணத்வமாவது:—புண்யலேசமுடையயர்களுக்கும், ஸஹஜகாருண்யத்தாலே விலக்ஷண ஸ்ருஷ்டியைப்பண்ணியும் பாபமேயானவர்களையும் ஸத்தாஹாநிபிறக்குமளவில், ஸம்பந்தமேபற்றாசாகவங்கீகரித்து ஆஹிமுவிய ஜநகமான ஸ்ருஷ்டியைப்பண்ணுகை.

(ரு) ஸத்வாரகநிருபாயிக காரணத்வமாவது:—இப்படி ஸ்ருஷ்டிப்பதாகப்புரிந்த ஈச்வரன், ப்ரஹ்மாதிகளை காரணமாக்கிக்கொண்டு ஸ்ருஷ்டிக்கை.

(சா) அத்வாரகநிருபாயிக காரணத்வமாவது:— காருண்யாதிகளே காரணமாகத்தானே ஸ்ருஷ்டிக்கை.

இவ்வகாரத்தால் அப்படி ஜகத்காரணத்வஞ் சொன்னபோதே, இவனுடைய ஸர்வஸ்மாத்பரத்வமும், அதளவ அகிலஹேயப்ரத்யநீகத்வமும், அநுஸந்யேயம்,

உடையவர்க்குத் திருக்கோட்டியூர்நம்பி, காரணத்வம் அருளிச்செய்யச்செய்தே, "பெற்றதாயை யறியாமல்பிறந்து வளருவாரைப் போலேயிறே-காரணத்வம் காணாமல் கண்டநுஸந்திக்கும் ஜர்ஸநார்த்தங்களெல்லாம்" என்றருளிச்செய்தாராம்.

பட்டர் நஞ்சீயர்க்கிவ்வர்த்தமருளிச் செய்யச்செய்தே, "ஜகத் காரண நிரூபணம்பண்ணுமவனுக்கு, மோக்ஷத்திலேயொழிய அந்வயமில்லை" என்றருளிச்செய்தார்.

நம்பிள்ளை, பின்பழகிய பெருமாள் ஜீயர்மடத்திலே யெழுந்தருளியிருக்கச்செய்தே, "ஈஶ்வரபரத்வத்தை யநுஸந்திக்கையாவது-ஜகத்காரணத்வத்தை யநுஸந்திக்கை" என்றருளிச்செய்தாராம்.

ஆச்சான்பிள்ளை, நடுவிற்றிருவீதிப்பிள்ளையை, "பகவத்குணங்களெல்லாம் சேரவநுஸந்திக்கலாந்துறையேது" என்றுகேட்க; "ஜகத்காரணத்வத்தை யநுஸந்திக்கவே, எல்லாகுணங்களையு மநுஸந்திக்கலாம்" என்றருளிச்செய்தாராம்.

பிள்ளை யெங்களாழ்வான், நடாதூரம்மாளுக்கு இவ்வர்த்தமருளிச்செய்யச்செய்தே, "ஜகத்காரண நிரூபணம் பண்ணினவனுக்கு, நிதித்யாஸநத்திலந்வயமில்லை" என்றருளிச் செய்தார்.

அநந்தரம், ஜகத்காரண வஸ்துவினுடைய ரக்ஷகத்வஞ் சொல்லுகிறபடி யென்னென்னில், இது "அவ-ரக்ஷணே" என்கிற தாதுவையுடைத்தாகையால், ஸாப்தமாகச் சொல்லிற்று.

இன்னமுமிவ்விடத்திலே ரக்ஷகத்வமநுஸந்திப்பதொருப்ரகாரமுண்டு. எங்ஙனேயென்னில்; ஜகத்காரணத்வஞ் சொன்னபோதே ரக்ஷகத்வமுஞ் சொன்னதாகலாம். ஆகிறபடி யென்னென்னில்; "குடற்றுடக்குடையவர்களை ரக்ஷிக்கை குணப்ரயுக்தம்" என்கிறந்யாயத்தாலே.

ஜகத்தில் குடற்றுடக்குடையவர்களெல்லாம் ரக்ஷிக்கிறார்களோவென்னில்; ஜகத்திலுள்ளார் அந்யோந்யம் அஸ்நேஹிகளுமாய் அஸ்வதந்த்ரருமாய் அப்ராப்தருமாகையாலே ரக்ஷிக்கமாட்டார்கள், இங்கு ஜகத்காரணபூதன் ஸ்நேஹியுமாய் ஸ்வதந்த்ரனுமாய் காருணிகனுமாய் ப்ராப்தனுமாகையாலே "இவனையொழியரக்ஷகரில்லை" என்கிறந்யாயத்துக்குக் குறையில்லை.

நம்பிள்ளை யிவ்வர்த்த மருளிச்செய்யச்செய்தே "அயிற்றுப்பா விக்குப்பொகடப்போம்" * என்றருளிச்செய்தாரிறே.

இன்னமுமிவ்விடத்திலே ரக்ஷகத்வமநுஸந்திப்ப தொருவழி யுண்டு, எங்ஙனேயென்னில்; இப்பதம் விஷ்ணுவாசகமாகையாலும், விஷ்ணுவாகிறான்-வ்யாபநசீலனாகையாலும், வ்யாப்தியாவது -ஸவ வ்யதிரிக்தஸகலத்திலுடையவும் ஸத்தாஸம்ரக்ஷணங்களாகையாலும், ரக்ஷணப்ரகாரத்தில் ப்ரதாந ரக்ஷணமிதுவேயாகையாலும், இவ்வழியாலேவரும் ரக்ஷகத்வத்துக்கும் குறையில்லையென்றார்கள்.

இன்னமு மிவ்விடத்திலே ரக்ஷகத்வ மநுஸந்திப்பதொரு வழி யுண்டு. எங்ஙனே யென்னில்; இப்பதம் ஈஶ்வரவாசக மாகையாலும், ஈஶ்வரத்வமாவது ஸமஸ்த ஜகத்துக்கும் தாரகனுமாய், நியந்தாவுமா யிருக்கையாகையாலும், ஈஶ்வரனென்றபோதே ரக்ஷகத்வத்துக்குக் குறையில்லை யென்பர்கள் நம்பூர்வாசார்யர்கள்.

இந்த ரக்ஷகத்வந்தான், (க) ஔபாதிக ரக்ஷகத்வமென்றும், (உ) நிருபாதிக ரக்ஷகத்வமென்றும், த்விவிதம்.

க. இதில் ஔபாதிக ரக்ஷகத்வந்தான் (க) ஸத்வாரகௌபாதிக ரக்ஷகத்வமென்றும், (உ) ஸத்வாரகௌபாதிக ரக்ஷகத்வ ப்ரகார மென்றும், (௩) அத்வாரகௌபாதிக ரக்ஷகத்வமென்றும், (௪) அத்வாரகௌபாதிக ரக்ஷகத்வ ப்ரகாரமென்றும்.

உ. நிருபாதிக ரக்ஷகத்வந்தான், (க) ஸத்வாரக நிருபாதிக ரக்ஷகத்வமென்றும், (உ) ஸத்வாரக நிருபாதிக ரக்ஷகத்வ ப்ரகார மென்றும், (௩) அத்வாரக நிருபாதிக ரக்ஷகத்வமென்றும், (௪) அத்வாரக நிருபாதிக ரக்ஷகத்வ ப்ரகாரமென்றும், பலவகையா யிருக்கும். இதில்,

க. ஔபாதிக ரக்ஷகத்வமாவது—எதிர்த்தலையில் அபேக்ஷை கண்டு ரக்ஷிக்கை.

உ. நிருபாதிக ரக்ஷகத்வமாவது—அபேக்ஷா நிரபேக்ஷமாக ரக்ஷிக்கை.

க. (க) ஸத்வார கௌபாதிக ரக்ஷகத்வமாவது—ஏதேனு மபேக்ஷிக்க ஏதேனும் ஃபலங்கொடுக்கை யன்றிக்கே,

*இவ்வாக்கியத்தை கோஶாந்தரங்களில் கண்டுகொள்க.

அபேக்ஷா ப்ரகாரங்களுக்குத் தகுதியாக ஃபலங் கொடுக்கை.

(உ) ஸத்வாரகௌபாயிக ரக்ஷகத்வ ப்ரகாரமாவது—தன்னை யபேக்ஷித்தவர்களுக்கே யன்றிக்கே, தன் ஶரீரங்களான ப்ரஹ்மருத்ராதிகளை யபேக்ஷித்தவர்களுக்கும் அவர்களுக்குள்ளீடாய் நின்று அபேக்ஷித்த ஃபலங்களைக் கொடுக்கை.

(௩) அத்வாரகௌபாயிக ரக்ஷகத்வயாவது — எதிர்த்தலையில் ஆபிமுக்யம்பற்றாசாக, அபூர்ணோபாயர்க்கும் பூர்ணஃபலங்களை கொடுக்கை.

(௪) அத்வாரகௌபாயிக ரக்ஷகத்வ ப்ரகாரமாவது—தன்னளவில் ஆபிமுக்யமின்றிக்கே கீழ்ச்சொன்ன தேவதைகள் பக்கலிலே ஆபிமுக்யம் பிறக்கிலும், அவர்களுக்குள்ளீடாய் நின்று அவர்களபேக்ஷிதங்களைக் கொடுக்கை.

(உ) (க) ஸத்வாரக நிருபாயிக ரக்ஷகத்வமாவது—ஃபலாபேக்ஷையுடையராய் ஃபலப்ரதவிஷய மறியாதவர்களுக்கும் அத்வேஷமே பற்றாசாகத் தானேயறிந்து ஃபலப்ரதானம் பண்ணுகை.

(உ) ஸத்வாரக நிருபாயிக ரக்ஷகத்வப்ரகாரமாவது—துஷ்கரங்களுமாய் ஸ்வரூபவிருத்தங்களுமான உபாயாந்தரங்களிலே மண்டினவர்களுக்கும் உபாயபூர்த்தியைப் பிறப்பித்து மோக்ஷப்ரதானம்பண்ணுகை.

(௩) அத்வாரகநிருபாயிக ரக்ஷகத்வமாவது—ஃபலாபேக்ஷையில்லாதவர்களுக்கும் ஸ்வைர்யமே பற்றாசாக ருசியை விளைத்து ஃபலத்தைக்கொடுக்கை.

(௪) அத்வாரகநிருபாயிக ரக்ஷகத்வ ப்ரகாயாவது—தனக்கு நிலைநின்றவடிவான மோக்ஷப்ரதானம் பண்ணுமிடத்தில், சேதந மத வ்யாபார ஸாபேக்ஷனாயிருக்கையன்றிக்கே, சேதந விஷய ஸாபேக்ஷனாய்க் கொண்டு மோக்ஷம் கொடுகை.

இத்தால், வேதநமதமான உபாயஸ்விகாரமும் உபகாரஸ்ம்ருதியும், வைதந்யக்ருத்ய பென்றதாய்த்து.

இத்தால்—நிருபாதிகரக்ஷகத்வத்துக்கு லக்ஷணஞ்சொல்லிற்றாய்த்து. இந்த லக்ஷணமாகிறது-இப்படி ரக்ஷியாதபோது தன்ஸத்தையில்லையாம்படியா யிருக்கையிறே.

ஆக, இவ்வகைகளெல்லாம் இவ்வகாரம்.

ரக்ஷகத்வத்துக்குல்வஹாவம் விஷ்ணுவாவகயாகையாலே, ஸ்வவ்யாதிரிக்தஸமஸ்தத்துக்கும் ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வரக்ஷகனென்று நிர்ணயித்ததாய்த்து.

இவ்விடத்தில் இந்தரக்ஷகத்வப்ரயுக்தங்களான (க)ஸர்வஜ்ஞத்வ (உ)ஸர்வஶக்தித்வ-(ங)பரமகாருணிகத்வ-(ச)பரமோதாரத்வ - (ரு) ஆஶ்ரிதவத்ஸலத்வ-(சா) அஶரண்யஶரண்யத்வ- (எ) அநாலோசித விஶேஷாஶேஷ லோகஶரண்யத்வ-(அ)நிருபாதிக ஸர்வஸ்வாமித்வ - (கூ) ஸ்ரீயஃபதித்வ - (க0) நாராயணத்வங்களாகிற ஸமஸ்த கல்யாணகுணங்களு மநுஸந்தேயம். என்செய்வானென்னில் ;

(க) ரக்ஷிக்கும்போது ஸர்வத்தையும் அறியவேண்டுகையாலே ஸர்வஜ்ஞத்வஞ் சொல்லிற்று.

(உ) அஶக்தனுக்கு ரக்ஷகத்வமில்லாமையாலே ஸர்வஶக்தித்வஞ் சொல்லிற்று.

(ங) அகாருணிகனுக்கு ரக்ஷகத்வமில்லாமையாலே பரமகாருணிகத்வஞ் சொல்லிற்று.

(ச) லுப்தனுக்கு ரக்ஷகத்வமில்லாமையாலே பரமோதாரத்வஞ் சொல்லிற்று.

(ரு) தோஷாஸஹனுக்கு ரக்ஷகத்வமில்லாமையாலே ஆஶ்ரிதவாத்ஸல்யஞ் சொல்லிற்று.

(சா) தன்னையொழிய ரக்ஷிப்பாரில்லாமையாலே அஶரண்யஶரண்யத்வஞ் சொல்லிற்று,

(எ) சிலரை ரக்ஷிக்கிறோம், சிலரை ரக்ஷியோம் என்னவொண்ணாமையால், அநாலோசித விஶேஷா ஶேஷ லோகஶரண்யத்வஞ் சொல்லிற்று.

(௮) ரக்ஷிக்கை தன்பேறாகையாலே நிருபாதிகஸர்வஸ்வாமித்வஞ் சொல்லிற்று.

(௯) ரக்ஷிக்கும்போது சேரவிடுவார் வேண்டுகையாலே, ஸ்ரீயஃபதித்வஞ் சொல்லிற்று.

(௧௦) ரக்ஷியாதபோது தானில்லாமையாலே, நாராயணத்வஞ் சொல்லிற்று.

இப்படி ஸர்வரக்ஷகன் ஸமஸ்தகல்யாண குணாத்மகனென்றபோதே, காரணத்வோபயுக்தமான அகிலஹேயப்ரத்யநீகத்வஞ் சொல்லிற்று.

அகிலஹேயப்ரத்யநீகத்வமாவது-தன்னையொழிய ஸகலசேதநாசேதநங்களோடு தானிருக்கச்செய்தே, சிறைக்கூட்டத்திலே சிறையனோடே கூடப்படையிலானும் வர்த்திக்கச்செய்தேயும், சிறையில் துஃகம்படையிலானுக்கு வாராதாப்போலே, ஶரீரத்தில் ஆத்மாவோடே ஈஶ்வரனும் வர்த்தியாநிற்கச்செய்தேயும் ஆத்மாவினுடைய துஃகங்கள் ஈஶ்வரனுக்கு வாராதிருக்கை.

ஆக, காரணத்வ ரக்ஷகத்வோபயுக்தங்களாகிற உபயலிங்கத்வமுஞ் சொல்லிற்று. அநந்தரம், இப்பதம் சதுர்த்யந்தமாகையாலே, நிருபாதிகஸர்வப்ரகார ஸர்வஶேஷித்வமுஞ் சொல்லிற்று.

இப்பதத்திலே லக்ஷ்மீஸம்பந்தமும் அநுஸந்தேயம். எங்ஙனே

(௧) ஸகல ப்ரமாணங்களும், லக்ஷ்மி-தர்மம், ஈஶ்வரன்-தர்மி, என்று சொல்லுகையாலும்,

(௨) கீழ்ச்சொன்ன காரணத்வ ரக்ஷணங்களும் லக்ஷ்மீப்ரேரிதங்களாகையாலும்,

(௩) இவனுடைய ஸ்வரூபநிரூபகங்களான ஸமஸ்த கல்யாண குணங்களிலும் ப்ரதாநம்-லக்ஷ்மீஸ்வரூபமாகையாலும்,

(௪) இப்பதவிவரணமான நாராயணபதத்தில் நாரபதத்திலே லக்ஷ்மீஸ்வரூபம் வ்யக்தமாகச் சொல்லுகையாலும்,

(௫) மேற்சொல்லுகிற ஶேஷத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியொருமிதுநமாக வேண்டுகையாலும்,

(௬) இவனுக்கு தேவதாந்தரவ்யாவ்ருத்திலக்ஷணங்களிலே ப்ரதாநம்-லக்ஷ்மீபர்த்ருத்வமாகையாலே இவனுடைய ஸ்வ

ரூபரூப குணவிபூதிகளெல்லா மிவளோட்டை ஸம்பந்தத்தாலே நிறம்பெறுகையாலும்.

ஆகவிப்படி யிவளுடைய ஸ்வரூபம், ப்ரத்யக்ஷாதிப்ரமாணநிர்தேஶாநர்ஹமாயல்லதிராமையால், இவ்விடத்திலே பெரியபிராட்டியாருடைய ஸ்வரூபம் ஆர்த்தமாகவநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்கக் கடவது என்று பிள்ளையருளிச்செய்வர்.

இன்னமும் சில ஆசார்யர்கள் இங்ஙனே யருளிச்செய்வர்கள். எங்ஙனேயென்னில்; "அபத்நீகனுக்கு யாகத்திலே அந்வயமில்லாதாப்போலேயும், ப்ரதாநமஹிஷீவ்யதிரேகேண ராஜாவுக்கு அபிஷேகமில்லாதாப்போலேயும், இவனுடைய ரக்ஷகத்வ ஶேஷித்வங்கள் லக்ஷ்மீவ்யதிரேகேணவில்லை" என்று.

நஞ்சீயர், இவ்வர்த்தமருளிச் செய்யச்செய்தே, "பிராட்டிக்கு ஸத்தாஸித்தி யெம்பெருமானாலே, எம்பெருமானுக்கு நிரூபகஸித்தி பிராட்டியாலே" என்றிறே யருளிச்செய்தது.

ஆக இப்பதத்தில், ஶேஷத்வப்ரதிஸம்பந்தியான ஶேஷி, ஸகலஜகத்காரணபூதனாய், ஸர்வஸ்மாத்பரனாய், அதஏவ அகிலஹேயப்ரத்யநீகனாய், ஸர்வவிஷயஸர்வப்ரகார ரக்ஷகனாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், நிருபாதிகஸர்வப்ரகார ஸர்வஶேஷியாய் ஸ்ரிய:பதியாயிருக்கு மென்றதாய்த்து.

இவ்வகாரத்தில் மியமநஶேஷத்வஞ்சொல்லுகிற சதுர்த்தீவிபக்தியை நிரூபித்தவிடத்தில், லுப்தமாய்க்கிடந்தது. லுப்தமென்றது- ஏறிக்கழிந்ததென்றபடி. ஆனால் கழிந்து போனவிபக்தியை, சதுர்த்தீவிபக்தியென்றறிந்தபடி யென்னென்னில்; இதினுடைய விவரணமான நாராயணபதத்திலே சதுர்த்தியேறிக்கிடக்கையாலே, அதினுடைய ஸங்க்ரஹமான விதிலும் சதுர்த்தியாகக்கடவது.

இச்சதுர்த்த்யர்த்தமான ஶேஷத்வந்தானிருக்கும்படி யென்னென்னில்,

க்ருஹ க்ஷேத்ர தர்மதார புத்ராதிவத் ஶேஷமென்றார்கள்.

சிலர் பார்யாவத் ஶேஷமென்றார்கள்.

சிலர் ஶரீரவத் ஶேஷமென்றார்கள்.

இவையித்தனையும் பார்த்தவிடத்தில், இது தாதர்த்யசதுர்த்தியாகையாலும், தாதர்த்யத்துக்கு அர்த்தம் ஸமஸ்தஸ்வவ்யதிரிக்தத்துக்கும் ப்ரத்யக்ஷஸித்தி ப்ரயோஜநநிர்த்தேசத்துக்கு யோக்யதையில்லையென்கையாலும், இந்த சொன்ன தேஹ க்ஷேத்ர க்ருஹ தாரபுத்ரா ஸர்வசரீரங்களுக்கு ப்ரத்யக்ஷஸித்தி ப்ரயோஜநநிர்த்தேசத்துக்கு யோக்யதையுண்டாகையாலும் இவ்வௌபாதிகமான சேஷத்வம் அர்த்தமாகமாட்டாது.

இவ்விபக்திதாதர்த்ய சதுர்த்திக்கர்த்தம் - ஸர்வவிஷயமாய் ஸர்வசேஷத்வமே யாகக்கடவது.

இத்தால், அகாரவாச்யனான பரப்ரஹ்மம், ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டமானபோது காரணமாயும், ஸ்தூலசிதசித் விசிஷ்டமானபோது கார்யமாயுமிருக்குமென்றதாய்த்து.

இவ்வர்த்தமிவ்விடத்தில் சொல்லுகிறபடியென்னென்னில், ஸ்வவ்யதிரிக்தஸகலத்தினுடைய சேஷத்வமுமிங்கு சொல்லுகையாலே.

ஆக, சதுர்த்தீவிபக்தியால் சேஷத்வஸித்தியும், சேஷத்வலாபமும், சொல்லிற்றாய்த்து.

இந்த சேஷத்வஸித்தியாகிறது - பாரதந்த்ர்யத்தை, ஸ்வாதந்த்ர்யத்தை. சேஷத்வலாபமாகிறது ஸ்வவ்யதிரிக்தஸகலத்துக்குமீச்வரசேஷத்வமொழிய ஸத்தையில்லையாயிருக்கை.

ஆக அகாரார்த்தம் தீர்ந்தது.

அநந்தரம், அவ்யயபதமாய் அவதாரணார்த்தமான உகாரமும்; கீழ் தாதர்த்யஸித்தியான சேஷத்வலாபம்-ஸ்வலாபமோ பரலாபமோவென்கிற சங்கையிலே, ஸ்வலாபமன்று, பரலாபம், என்கிறது.

இவ்வவதாரணார்த்தத்துக்குச் சொல்லும் ப்ரமாணங்களெல்லாம் அவனுக்கேயென்றிறே கிடப்பது.

இவ்விடத்திலே ததீயசேஷத்வமும் அநுஸந்தித்துப் போருவாருமுண்டென்றருளிச்செய்வார்கள். எங்ஙனேயென்னில்; இப்பக்ஷம் (க) சேஷத்வவைசத்யப்ரதிபாதகமாகையாலும், (உ) இச்சேஷத்வத்துக்கு வைசத்யம் ததீயபர்யந்தமேயாயிருக்கையாலும்.

(௩) ததீயசேஷத்வவிதானம் பண்ணுமிடத்தில் இவ்வவதாரணத்தாலே ஈச்வரன்பக்கல்கொள்ளும் சேஷத்வமே ஸ்வரூபப்ரயுக்தமாயிருக்கையாலும், (௪) மேல் ப்ரதிபாதிக்கப்படுகிற வஸ்து ததீயசேஷத்வத்துக்கு ஆச்ரயமாக வேண்டுகையாலும், (௫) இப்பதந்தான் ததீயசேஷத்வப்ரதிபாதகமான மத்யமபதஸங்க்ரஹமாகையாலும் இவ்விடத்தில் ததீயசேஷத்வாநுஸந்தானஞ் சொல்லுகையில் விரோதமில்லை.

“இப்பதம் - ஸம்பந்தயாதாத்ம்யஜ்ஞாந ப்ரதிபாதகம்” என்றருளிச் செய்வர்கள். இப்பதத்தில், ப்ரதமசரமங்களிரண்டிலே ஜீவபரர்களைச்சொல்லி, நடுவே அவதாரணங்கிடக்கையாலே, இது ஸம்பந்தவாசியாகக்கடவது.

ஆக, அவதாரணார்த்தமான உகாரத்தாலே - ஸ்ரீயப்பதிசேஷத்வலக்ஷணமும், சேஷத்வபூர்த்தியும், சேஷத்வஜ்ஞாநயாதாத்ம்யமும் சொல்லிற்றாய்த்து.

அன்றியிலே, சில ஆசார்யர்கள், இச்சப்தத்தையும் — தாத்பர்யவிஷயபேதமாய், அவதாரணத்தை அர்த்தமாக்கி, இவ்வுகாரம் லக்ஷ்மீவாசகமென்றார்கள்.

ஆக, உகாரார்த்தம் தீர்ந்தது.

அநந்தரம், தாதர்த்யஸித்திரூபமாய் அவதாரணஸித்தமுமான சேஷத்வத்துக்கு, ஆச்ரயம் சொல்லுகிறது - ப்ரக்ருதிபரனாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமான ஆத்மாவை.

இம்மகாரத்தில், ப்ரக்ருதிபரத்வமும் ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வமும் சொல்லுகிறபடி யென்னென்னில்; இம்மகாரத்தில் சொல்லுகிற ப்ரமாணங்களிலே ப்ரக்ருதிபரத்வம் சொல்லிற்று. இதில் தாதுவாலே - ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வம் சொல்லிற்று. இந்த தாது - “மந-ஜ்ஞாநே” என்று ஜ்ஞாநமாத்ரப்ரதிபாதகமாயிருக்க, ஜ்ஞாதாவைச் சொல்லுகிறபடி என்னென்னில், குணத்தைச் சொன்னபோதே குணியையும் சொல்லிற்றாமென்று வேதார்த்தஸங்க்ரஹத்திலே.

கீழ்ச்சொன்ன சேஷத்வம் - சேதநாசேதநஸாதாரணமாயிருக்க, இங்கு சேதநைகாந்தமான மகாரத்தைப் ப்ரயோகிப்பானென்னென்னில்;

(க) சேஷத்வஜ்ஞாநம்பிறப்பது சேதநனுக்கேயாகையாலும்,

(௨) ஶேஷத்வஜ்ஞாநப்ரதிபந்தகமான ஸ்வாஹங்காரமமகார நிவ்ருத்தியுள்ளதும் வேதநனுக்கே யாகையாலும்,

(௩) ஶேஷத்வஜ்ஞாநகார்யாந்வயமுள்ளதும் வேதநனுக்கேயாகையாலும்,

(௪) தத்ஸாதந ஸ்வரூபஸமர்ப்பண கர்த்ருத்வமுள்ளது வேதநனுக்கே யாகையாலும்,

(௫) தத்அநந்தரத்தில் ஸ்வரூபாநுஸந்தாநத்தாலே லஜ்ஜாபயங்களுண்டாவதும் வேதநனுக்கேயாகையாலும்,

(௬) அகாரத்தில்சொன்ன ஸ்வாமித்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியான தாஸத்வமுள்ளதும் வேதநனுக்கேயாகையாலும்,

(௭) தத்அநந்தரத்தில் இப்படிதான் ப்ரணவத்துக்கு த்ருதீயாக்ஷரம் மகாரமாக வேண்டுகையாலும்.

ஆக, இப்படி ஶேஷத்வாஶ்ரய ப்ரதிபாதக பதம் வேதநைகாந்தமான மகாரமாகவேணும்.

ஆனாலிங்கு அவித்ஶேஷத்வம் சொல்லுகிறபடி யெங்ஙனே யென்னில்,

(௧) இவ்வாத்மாவைச் சொல்லுகிறபோது, ப்ரக்ருதேःபரன் என்று அவித்தைச் சொல்லிஅநந்தரம் சொல்லுகையால், இப்படிகள் போலேசொன்னவிடத்திலே அவித்தையும்சொல்லிற்றாகக் கடவது.

(௨) ஆஶ்ரயியாய் ஆநந்தத்தைமுந்தறச் சொல்லுகிறந்யாயத்தாலும், அவித்ஶேஷத்வமுமிவ்விடத்திலே சொல்லிற்றாகக்கடவது.

இத்தால், அநந்யார்ஹதாஶ்ரயம்-ஜ்ஞாந ஸ்வரூபஜ்ஞாநகுணகனான வாத்மாவென்றதாய்த்து ; ஆஶ்ரயியான ஶேஷத்வத்தை முதல் சொல்லி ஆத்மாவைச் சொன்னபோதே, ஆஶ்ரயியான ஜ்ஞாநாநந்தத்தைப்பின்பு சொல்லுவானென்னென்னில்,

(௧) ஆஶ்ரயியான ஶேஷத்வத்தை யொழிய ஜ்ஞாநாநந்தம் அஸந்நேவ வாய்க்கிடக்கையாலும்,

(௨) புஷ்பத்துக்கு பரிமளத்தாலேஶ்லாக்யதை யானாப்போலே இவ்வாத்மாவுக்கும் ஔஜ்வல்யம் ஶேஷத்வத்தாலேயாகையாலும்,

(௩) நெருப்புப்பட்டவகத்திலே யகப்பட்டு நின்றவனை நீரைச் சொரிந்துகொண்டு புறப்படுத்துமாப்போலே, அஹங்காரமா

ற அழுக்கிலே பகப்பட்டுருவழிந்து கிடக்கிற வாத்மாவை அடியானென்றே யுணர்த்திக்கொண்டு அறியவேண்டுகையாலும்,

(௪) தன்னுண்ணிப்பப்போலே அநுராயமான ஆத்மாநுபவ மாத்ரமான படுகுழியிலே விழாமைக்காகவும்.

ஆக, இப்படி; ஆஶ்ரயியான்ஶேஷத்வத்தையொழிய, ஆஶ்ரயமான ஜ்ஞாநஸ்வரூபனாய் ஜ்ஞாநகுணகனான வாத்மாவுக்கு ஸத்தையில்லாமையாலே, இவ்வந்தரங்கமான ஶேஷத்வத்தையே முற்படச் சொல்லிற்று.

இஶ்ஶேஷத்வாஶ்ரயமான ஆத்மாவினுடைய ஸ்வரூபம்— (௧) ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶமுமாய், (௨) ஆநந்தாத்மகமுமாய், (௩) ஸங்கோசவிகாஸாயோக்யமுமாய் (௪) அணுவாயிருக்குமென்னுமிடமும்; ஸ்வபாவம்— (௧) பரஸ்மைஸ்வயம்ப்ரகாஶமுமாய், (௨) ஆநந்தஜநகமுமாய், (௩) ஸங்கோசவிகாஸயோக்யமுமாய், (௪) அவிபுவாயிருக்குமென்னுமிடமும்; இதினுடைய உபவிரஹ்மணங்களிலே கண்டுகொள்வது.

இந்த குணங்கள், மற்றுமிவ்வாத்மாவுக்குச்சொல்லும் குணங்களெல்லாவற்றுக்கு முபலக்ஷணம்.

இதில் ஏகவசநம்—ஜாத்யேகவசநமாய், த்ரிவித ஆத்மவர்கத்தையும் சொல்லுகிறது.

ஆக, இம்மகாரத்தால்—ப்ரக்ருதேபரனாய், ஶேஷத்வாஶ்ரயமாய், ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய், ஜ்ஞாநகுணகனான வாத்மாவைச் சொல்லுகிறது.

"மூன்றெழுத்ததனை" இத்யாதிப்படியே-அக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவத்தில், ப்ரதமசரமங்களினாலே ஜீவபரர்களைச்சொல்லி நடுவே அவதாரணத்தைச் சொல்லுகையாலே ஜீவபரர்களிருவரையும் ஏகதத்வமென்னலாயிருக்கப்பிரியச்சொன்னபடி யென்னென்னில் ஏகாக்ஷரமான ப்ரணவத்தை அக்ஷரத்ரயாத்மகமாக ப்ரமாணங்களில் பிரித்தாப்போல, "ஏகதத்வம்போலே யிருக்கிறவிவர்களையும் ப்ரமாணங்களாலே பிரிக்கக்கடவதித்தனை.

இப்படி, ஸ்வஸ்வரூபத்தை ஸாவதப்ரஸக்தி ய விஶேஷணமென்றிருக்கையே ஸ்வரூபப்ராப்தம்; இந்தஜ்ஞானமே மோக்ஷவிஷய யோக்யம்.

இத்தால்—ஸ்வரூபவிஷயாந்யதாப்ரதிபத்திநிவ்ருத்தியென்றது- அபஹாரநிவ்ருத்தியைச் சொன்னபடி.

இத்தால்—ஆத்மஸமர்ப்பணம் சொல்லிற்றுய்த்து; ராஜஹண்டாரத்துள்ளறையிலே களவுகொண்டு உபகரிப்பாரைப்போலேயிறே.

இத்தால்-பழைய ஸௌர்யமழகியதென்னும்படியிறே ஆத்மஸமர்ப்பணப்ரகார மிருக்கும்படி.

ஆனால், ஸமர்ப்பணம் கூடும்படியென்னென்னில்; இருக்கிற ஸம்ஸாரத்தில் கொடுமையாலும், பேற்றில் த்வரையாலும், ஸமர்ப்பணம்பண்ணி யல்லது நில்லாதிறே வைதந்ப்ஸ்வபாவம்.

ஆனால் ஸ்வரூபவிரோதமான ஸமர்ப்பணம் பண்ணினவன், ஸ்வரூபஜ்ஞானம் பிறந்தால் ப்ராயஶ்சித்தம்பண்ணவேண்டாவோவென்னில்; வேண்டா. எங்ஙனேயென்னில்: அந்யதாப்ரதிபத்தியான ஆத்மாபஹாரம் பண்ணினவன் ஸர்வபாபமும் பண்ணி தன்னையுமழித்துக்கொண்டாப்போலே. யதாவத்ப்ரதிபத்தியான ஆத்மஸமர்ப்பணம் பண்ணினவனுக்கு ஸர்வப்ராயஶ்சித்தமும்கூடி. ஸர்வப்ராயஶ்சித்தமும் பண்ணினானாகக்கடவன்.

அன்றியே, ஸ்வர்ணாபஹாரம் பண்ணினவன் அபஹரித்த ஸ்வர்ணத்தைக்கொண்டு அத்தால் தானுண்டாகையாலே ப்ராயஶ்சித்தப் பண்ணலாம்; இங்குகொடுத்தது தன்னையாகையாலே ப்ராயஶ்சித்தம் பண்ணுகைக்கு தானில்லாமையால் ஸர்வப்ராயஶ்சித்தமும். ஸ்வரூபலாபமும், ஆத்மஸமர்ப்பணமென்னுமிடமும் ப்ரமாணாந்தரங்களிலே கண்டுகொள்வது.

ஸ்வரூபலாபமே புருஷார்த்தமாகையாலே யிவ்விடத்திலே புருஷார்த்தஸ்வரூபம் சொல்லிற்றாய்த்து.

ஆக, ப்ரணவத்தால்-ஆத்மயாதாத்ம்யம் சொல்லித் தலைக்கட்டிற்று. ஆத்மயாதாத்ம்யம் வந்தபடி யென்னென்னில்; நிருபாதிக ஶேஷிதா பரமாத்மா, நிருபாதிகயாஜீவ ஆத்மா, நிருபாதிகமுக்த்ரஃப்ரணவஃ, நிருபாதிகயாம ஆத்மலாபஃ, என்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே.

ஆக, பதத்ரயாத்மகமான ப்ரணவத்தால் -அகாரவாச்யமான பரப்ரஹ்மத்துக்கு மகாரவாச்யமான ஜீவஸ்வரூபம் அநந்யார்ஹ ஶேஷமென்றதாய்த்து.

இனி. மந்த்ரஶேஷமுமிப்பதத்திலே விவ்ருதம்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

தனிப்ரணவம் முற்றிற்று.

அஷ்டாதஶ
ரஹஸ்யங்கள்
முற்றிற்று.